
VARMA CŪTTIRAM

A TAMIL TEXT ON MARTIAL ART



INSTITUTE OF ASIAN STUDIES
Chemmancherry, Chennai-600 119
India

வர்ம சூத்திரம்

VARMA CŪTTIRAM

(A TAMIL TEXT ON MARTIAL ART FROM PALM-LEAF MANUSCRIPT)

General Editors

Dr. SHU HIKOSAKA
Asst. Prof. NORINAGA SHIMIZU
Dr. G. JOHN SAMUEL

Editor

Dr. P. SUBRAMANIAM

Translation

Dr. M. RADHIKA

INSTITUTE OF ASIAN STUDIES

Chemmancherry, Chennai-600 119

India

Silver Jubilee Celebration Series – 21

VARMA CŪTTIRAM – A Tamil Text on Martial Art

Editorial Assistance – English – Dr. M. Bhoopathi

Second Edition 2007, pp. xxii + 402

Publication No. 31

Price: Rs. 450/- US $ 50

Copies can be had from

Publications Division,
Institute of Asian Studies,
Chemmancherry,
Chennai – 600 119.
India.
Phone: (Off.) 24501851, 24500831, 24502212
(Res.) 24964831
Fax : 91-44-24964831
E-mail: ias@xlweb.com
World Wide Web site : http : // xlweb.com/heritage/asian

Composed by
Institute of Asian Studies, Chennai – 600 119.

Printed at Student Offset Services, Chennai - 1, ✆42052908

பொருளடக்கம்

வர்மங்கள் (நூலுள்)

Contents

VARMAS

(Numbers - Varma numbers - given in the beginning)

Ataippu Varmam	26
Ataippu Varmam	47
Ani Varmam	70
Annāma Kālam	13
Atticcurukki Varmam (ciṟiyatu)	48
Atticcurukki Varmam (Valiyatu)	49
Amirta Kalam	30
Amirtalāntai Varmam	15
Araca Varmam	77
Arali Varmam	71
Alli Varmam	74
Aḻal Varmam	78
Aṉiyanta Varmam	69
Aṉumāṉ Varmam	44
Aṉṉa kālam	54
Antai Varmam	95
Iratta Varmam	23
Irutiṟai Varmam (Kutirai Varmam)	93
Utira Kālam	32
Uḷḷellu Varmam	75
Uḷ Varmam	79
Uṟakka Kālam	34

Uṟumīk kālam	46
Ettellu Varmam	64
Enti Varmam	43
Ottu Varmam	31
Kaṇkalaṅki Varmam	28
Katirkāma Varmam	39
Katir varmam	38
Karak kūttu Kālam (Kākkattai Kālam)	35
Kāri varmam (kirayel)	94
Kallitaik kālam	65
Kāmpūrik Kālam	11
Kiḷippiṟa Varmam	62
Kilimēka Varmam	37
Kūmpu Varmam	57
kaikeṭṭik Kālam	63
Kontaik kolli Varmam	1
Kompa kuṟṟik Kālam	56
Koḻuntu Varmam	45
Catappiṟa kālam	61
Catti Varmam	41
Cimai Varmam	36
Cilli Varmam	96
Ciṟuṅkolli Varmam	2
Cuntōtaṟi varmam	87

சுருக்க விளக்கம்

அகம்	–	அகநானூறு
ஆய்வேடு	–	ஒடிமுறிவுசர சூத்திரம் நூல்பதிப்பும் (ஆய்வும்)
ஒடிமுறிவு	–	ஒடிமுறிவுசர சூத்திரம் நூல்பதிப்பும் (ஆய்வும்)
ஒடிவுமுறிவு	–	சித்த மருத்துவத்தில் அகத்தியர் ஒடிவுமுறிவுசாரி நிகண்டகராதி – 1200
கம்ப. பால	–	கம்பராமாயணம்,பாலகாண்டம்
கையடை	–	கையடைப்படலம்
தொடுவர்	–	தொடுவர்மத்திரட்டு
தொல். பொருள்	–	தொல்காப்பியம் - பொருளதிகாரம்
படுவர்	–	படுவர்மத்திரட்டு
பட்டினப்	–	பட்டினப்பாலை
பதிற்றுப்	–	பதிற்றுப்பத்து
புற. பொ. வெ. மா	–	புறப்பொருள்வெண்பாமாலை
வர்ம சூத்	–	வர்மசூத்திரம்
வர்மசூத். 131	–	வர்மசூத்திரம் 131.

பதிப்புரை

"நாதவிந்தால் உற்பவித்த மனிதர்க் கப்பா
நயந்ததொரு தத்துவத்தின் கருத்தின் வாறாய்ப்
பூதமுதல் கருவிதொண்ணூற் றாறும் வீறாய்ப்
புலப்படவே விவரமதாய்ப் பிரித்துச் சொன்னோம்
நீதமாம் அங்கத்தின் பதமோ டுள்ள
நிறையளவு தொகைக்குறிப்பை நினைவாய்ச் சொன்னோம்
பாதமுதல் சிரசுவரை யடங்கு வர்மம்
பலனறிய நாமுமதைப் பகரு வோமே."

(வர்மக்கண்ணாடி, பா.2)

உலகவாழ்க்கையில் எந்த ஒரு செயலையும் திறம்படச் செய்ய வேண்டும்; முழுமையாகச் செய்யவேண்டும்; பயன்படுமாறு செய்ய வேண்டும் என்பன யாவருக்கும் உரிய நோக்கங்களாகும். திறமையாகச் செய்வதையும் கண்ணுங் கருத்துமாகச் செய்வதற்கு உடலும் உள்ளமும் உறுதியாதல் வேண்டும். இந்த அடிப்படையில் உடலையும் உள்ளத்தையும் பக்குவப்படுத்தி வளர்க்கப் பல வகை விளையாட்டுகள் பயன்படுத்தப்பட்டன. அந்த விளையாட்டுகளில் வீர விளையாட்டு என்பது ஒருவகை. இது செயலாற்றலோடு விழிப்புணச்சியையும் வளர்க்கும் ஒரு விளையாட்டாகும். மிக நுட்பம் வாய்ந்த ஒரு கலையாக வளர்ந்துவந்த வீரவிளையாட்டு `வர்ம அடி' என அச்சத்தையும் வியப்பையும் உண்டாக்கும் சொல்லால் குறிப்பிடப்பட்டது. இன்று, அடிப்பதைக் காட்டிலும் அடிபட்டு விழுந்தவரைக் காப்பாற்றுவதற்குரிய தற்காப்புக் கலையாக மட்டுமே அது பயன்படுத்தப்பெறுகிறது. அதுவும் சுவடி வடிவிலேயே கிடைக்கிறது. வர்மஅடி என்பது மாறி வர்மசாத்திரம், வர்மசூத்திரம், வர்மநூல் என்னும் பெயர்களைப் பெற்றுவிட்டது. வர்ம நூல்கள் பல அச்சிடப்பெறாமல் சுவடிவடிவில் உள்ளன. அவற்றுள் `வர்மசூத்திரம்' என்னும் இந்த நூல் பதிப்புக்குரிய சுவடியும் ஒன்று.

Kyoto International Institute of Asian Studies, Kyoto, 619-02, JAPAN என்னும் நிறுவனத்திலிருந்த `வர்மசூத்திரம்' என்னும் ஓலைச்சுவடி படியெடுக்கப்பட்டு ஆசியவியல் ஆய்வு நிறுவன நிர்வாக இயக்குநர் டாக்டர் ஷு. உறிகோசகா அவர்களால் நிறுவனத்திற்குக் கொண்டுவரப்பெற்றது.

சுவடி

வர்மசூத்திரம் என்னும் இந்தப் பதிப்புச்சுவடியில் முதல் ஏடு காணப்பெறவில்லை; இரண்டாம் ஏடுமுதலே படியெடுக்கப் பெற்றுள்ளது. இதனால் நூலின் முதல் இரண்டு பாடல்களும் மூன்றாம் பாடலின் முதல் அடியும் படியில் இடம் பெறவில்லை. முதல் அடியின் ஈற்றுத் தொடராகிய `தெளிந்து கேளு' என்பது முதலே கிடைத்துள்ளது. ஏடுகளுக்கும் பாடல்களுக்கும் எண் கொடுக்கப்பெற்றுள்ளது. அவை மலையாள எண்கள். ஏட்டு எண் இரண்டு என்பது முதல்ஏட்டில் இருப்பதால் முதல் ஒன்று என்னும் எண்ணுள்ள ஒரு ஏடுமட்டுமே காணப்படவில்லை என்று கொள்ளலாம். முதல் இரண்டு பாடல்கள் அந்த ஒரு ஏட்டில் எழுதப் பெற்றவை. இரண்டாவது ஏட்டில் மூன்றாவது பாடலுக்குரிய எண் இருக்கிறது. ஒரு ஏடு மட்டுமே இல்லை என்று கொண்டால் வர்மநூல் அமைப்பின் வழக்கத்திற்கு மாறாக இந்த நூலில் இறைவணக்கம், குருவணக்கம், நூலில் சொல்லப்பெறும் செய்திகளைக் கூறும் `நுதலிப்புகுதல்' என்னும் கருத்து, வர்மங்களைப் பற்றிய பொதுக்கருத்து, வர்மவகை, வர்ம எண்ணிக்கை, ஆசிரியரைப்பற்றிய செய்தி போன்றவற்றுள் எதுவுமே சுவடியில் எழுதப்பெறவில்லை என்ற நிலைமை உருவாகிவிடுகிறது. ஏட்டு எண் கொடுக்காமலே ஒன்றிரண்டு ஏடுகளில் இறைவணக்கம் போன்ற பிற செய்திகளை எழுதி நூல் தொடக்கத்திலிருந்து ஏட்டு எண் கொடுத்து எழுதும் முறையைக் கையாண்டிருக்கவும் வாய்ப்பு உண்டு. அந்த ஏடுகளும் கிடைக்காமலிருக்காலம். இந்தக் குறையினால் ஆசிரியர் வரலாறு முதலியனவற்றிற்கு இடமில்லாமற் போயிற்று.

ஜப்பானிலுள்ள மூலச்சுவடி, கிடைக்காத முதல் ஏட்டுடன் சேர்த்து நாற்பத்தெட்டு ஏடுகளையுடையது. நூற்று ஐந்து பாடல்களால் ஆனது; பாடல்கள் மட்டுமே இடம் பெறுவது; தொண்ணூற்று ஆறு வர்மங்களை விளக்குவது; பிற வர்மங்களையும் கூறுவதாகக் குறிப்பிடுகிறது; ஆனால் அவை இச் சுவடியில் இடம் பெறவில்லை. சுவடி குறையாக உள்ளது என்று குறிப்பிடவும் முடியாது. ஏனெனில்

நூற்று ஐந்தாவது பாடலாகிய இறுதிப் பாடலின் ஈற்றடி,

"தேறுமடா உள்ளுவர்மம் ஆறுஞ் சொல்வேன்"

என்று முடிகிறது. இது இனி உள்ளுவர்மம் ஆறையும் சொல்லத்தொடங்குகிறேன் என்ற குறிப்பை உணர்த்துவதாகும். தொடர்ந்து அவை பாடப்பெறவில்லை என்பதை ஈற்றிலுள்ள,

"வர்மம் முற்றும்", "குருபாதமே துணை"

என்னும் தொடர்களால் அறியமுடிகிறது.

எடுத்துக்கொண்ட செயல் இனிதே நிறைவுறுதல் பொருட்டு இறைவனை வணங்கித் தொடங்குதல் தமிழ் மரபு. அந்த மரபைத்தழுவி இந்தப் பதிப்பிலும் 'வருமசூத்திரம் 131' என்னும் நூலிலிருந்து எடுத்த மூன்றுபாடல்கள் சேர்க்கப் பெற்றுள்ளன. 'ஒடிமுறிவு சரசூத்திரம்' என்னும் சுவடிப் பதிப்பு ஆய்வேட்டின் பாடல்கள் இந்தத் தொடக்கப்பகுதிக்குப் பொருத்தமுடையவை. அவற்றைத் தொடக்கத்தில் சேர்க்க வாய்ப்பில்லாமற்போயிற்று.

38-41, 53, 76, 77, 93, 105 என்னும் எண்களையுடைய ஒன்பது பாடல்களும் பொதுச் செய்திகளைக் கூறுகின்றன. பிறவாகிய தொண்ணூற்றாறு பாடல்களுள் ஒவ்வொருபாடலும் ஒரு வர்மத்தின் பெயரைக்கூறி, அந்த வர்ம நோயினால் உடலில் ஏற்படும் குணம், குறிகளை மட்டுமே கூறுகின்றன. சில இளக்க வேண்டிய கால அளவையும் குறிப்பிடுகின்றன. இவற்றைத்தவிர வேறு செய்திகள் நூலில் இடம் பெறவில்லை. ஆனால் பதிப்பில் பல்வேறு செய்திகள் சேர்க்கப்பெற்றன.

முதலில் பாடலை உரைநடையில் தெளிவுபடுத்திக் கூறவேண்டிய நிலை ஏற்பட்டது. உரைவிளக்கத்தில்,

1. தலைப்பு விளக்கமாக வர்மத்தின் பெயர், அதன் பொருள், அந்தப் பெயர் தோன்றியதற்குரிய காரணம் ஆகியவை எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன.

2. அந்த வர்மம் உடலில் எந்த இடத்தில் நிலைபெறுகிறது என்ற வர்மத்தானம் எடுத்துக் காட்டப்பெறுகிறது.

3. குறிப்பிட்ட வர்மத்தானத்தில் அடிபட்டால் உடலில் ஏற்படும் மாற்றங்களாகிய குணம், குறிகள் விளக்கப்பட்டன. இந்த விளக்கத்திற்கு உரியவை இந்த நூலின் பாடல்களாகும்.

4. இளக்க வேண்டிய காலவரையறைகள் சுட்டப்பெற்றன.

5. சிலவிடத்துச் சிறப்பு இளக்கு முறைகள் கூறப்பெற்றன.

6. பாடலில் இடம்பெறும் சில கடின சொற்களுக்கு இறுதியில் விளக்கம் தரப்பட்டது.

உரைவிளக்கத்தில் வர்மத்தானத்தை அறிந்து சுட்டச் சில சுவடிகளும் நூல்களும் துணையாயின. அவற்றின் தொகுப்பு சுவடிவாரியாக இணைப்பில் இடம்பெறுகிறது. வர்மத்தின் குணம் குறிகளைச்சுட்டும் பிறவர்ம நூல் பாடல்களும் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன.

பதிப்பில் பாடவேறுபாடுகள் பல சுட்டப்பெற்றுள்ளன. அவை அடிக்குறிப்பில் இடம் பெறுகின்றன. அந்த வேறுபாடுகளைக்காண `ஒடிமுறிவுசாரி' என்னும் சுவடிப்பதிப்பு ஆய்வேடு துணையாயிற்று. வேறு நூல் எதுவும் ஒப்புமையுடைய பாடல்களாகக் கிடைக்கவில்லை. வேறுபாடுகளைக் காணும் போது சிறந்த பாடத்தை, உண்மையான பாடத்தைப் பதிப்பித்துவிட்டு, அல்லாததை அடிக்குறிப்பில் தருவது வழக்கம். அதுவே தூயபதிப்பாகக் கொள்ளப்பெறும். இது வெளி நாட்டிலிருந்து கொண்டுவரப்பெற்ற சுவடியின் பதிப்பு ஆதலின் இயன்றவரை சுவடியில் உள்ளதைப் பதிப்பித்து வேறுபாடுகள் அடிக்குறிப்பில் சுட்டப்பட்டன என்றாலும் வேறுபாடுகளுள் எது சரியான பாடம் என்பது காரணத்தோடு உரைப்பகுதியில் விளக்கப் பெற்றுள்ளது.

வர்மஎண் 12இல் மூர்த்திகாலமும், எண் 17இல் திலதவர்மமும் விளக்கப் பெற்றுள்ளன. இவை முறையே 58 இலும் 92 இலும் மீண்டும் இடம் பெறுகின்றன. வர்ம குணங்களையும் பாடவேறுபாடுகளையும் ஒப்பிட்டு நோக்க இவை இரண்டும் முறையே மூத்திரகாலம், தீதவர்மம் என்பனவாகும் என்ற செய்தி புலப்பட்டது என்றாலும் சுவடியில் உள்ளவாறு தலைப்பில் கொடுத்து, உண்மைத்தொடரை உரை விளக்கத்தில் கொடுக்கலாம் என்ற நிலையில் அவை அவ்வாறே கொடுக்கப் பெற்றன. இவ்வாறே பெரும்பான்மையான பாட வேறுபாடுகள் இடம் பெற்றுள்ளன. மாறாக அமைவனவும் உண்டு.

நூலில் இடம்பெறும்,

1. உவமை, உருவகம், தற்குறிப்பு போன்ற **அணிநலன்கள்,**
2. வர்மக்கலைக்கே உரித்தான சிறப்புச் சொற்கள், சிறந்த இலக்கியச் சொற்கள், பிறமொழிச் சொற்கள், கொச்சைச் சொற்கள், எளிய சொற்கள், பொருளற்ற வெற்றுச் சொற்கள், பிழையான சொற்கள் போன்ற **சொல்லாட்சி முறைகள்,**
3. எதுகை, மோனைகள்; சீர், தளை, தொடை, பா, பா இனம் முதலான யாப்பமைதிகள் போன்ற இலக்கிய ஆய்வுகளுக்கு நூலில் இடம் உண்டு. வர்மக்கலை என்னும் பொருளுக்கு இவை மிகையாகும் ஆதலாலும் விரிவு அஞ்சியும் இவ்வாய்வுப் பொருள்கள் கைவிடப்பட்டன.

நூலின் இறுதியில் நூலுக்கு உரை எழுதவும் ஆய்வுரை எழுதவும் பயன்படுத்தப் பெற்ற சுவடிகள், நூல்கள், ஆய்வேடு, கட்டுரை ஆகியவற்றின் முறையான பட்டியல் ஒன்று இடம்பெறுகிறது. தொடர்ந்து சொல்லடைவு இடம் பெறுகிறது. இதில் பாடலில் உள்ள சொற்கள் மட்டுமே இடம் பெறுகின்றன.

வர்மப் பெயர்களின் பட்டியல் பொருளடக்கத்தில் அமைவதால் வர்மப் பெயர்கள் சொல்லடைவில் சேர்க்கப்பெறவில்லை. அதே காரணத்தால் பாடல் முதற்குறிப்பும் அவசியமில்லையாயிற்று.

வர்மப் பெயர்களையும் வர்மத்தானங்களையும் அறிவதற்குப் பயன்பட்டவற்றுள்,

1. ஒடிமுறிவுசாரி
2. வர்மக்கண்ணாடி
3. வர்ம பீரங்கி
4. தொடுவர்மத்திரட்டு
5. படுவர்மங்கள்
6. சித்தமருத்தவத்தில் வர்மப் பரிகாரம்

என்னும் ஆறு சுவடிகளிலும் நூல்களிலுமுள்ள பாடல்களின் தொகுப்பு ஒன்று இணைப்பு ஒன்றில் கொடுக்கப்பெறுகிறது.

பதிப்பில் ஆங்காங்கு அடிக்குறிப்பில் காட்டப்பெற்றுள்ள பாட வேறுபாடுகளின் பட்டியல் ஒன்று ஆய்வாளர்களுக்குப் பயன்படும் நோக்கில் இணைப்பு இரண்டில் அளிக்கப்பெறுகிறது.

வர்ம அடியால் ஏற்படும் உடல் வேறுபாடுகளை அறிவதற்குத் துணையாக அமையும் வகையில் வர்ம அறிகுறிகளாகிய வர்ம நோய்களின் பட்டியல் ஒன்று இணைப்பு மூன்றில் இடம் பெறுகிறது.

சில அளவைப் பெயர்களுக்கும் இன்றியாமையாத சொற்களுக்கும் உரிய விளக்கம் நான்காவது இணைப்பாக அமைகிறது.

வர்ம ஆய்வுக்குத் துணையாகும் என்னும் நோக்கில் கிடைத்தவரையிலான வர்மப் பெயர்களும், அவை இடம்பெறும் நூல்களும் அடங்கிய 295 வர்மங்களுக்கான பட்டியல் ஒன்று இணைப்பு ஐந்தில் கொடுக்கப்பெறுகிறது.

வர்ம சூத்திரம் என்னும் இந்தத் தமிழ்ச்சுவடி அச்சுவடிவம் பெற வேண்டும் என்றும், அது வழக்கம்போலத் தமிழரிடையே மட்டுமின்றி உலகளாவிய நிலையில் பரவவேண்டும் என்றும் திட்டமிட்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றுமாறு என்னைப் பணித்தவர்கள் ஆசியவியல் ஆய்வு நிறுவன இயக்குநர், வணக்கத்திற்குரிய டாக்டர் ஜி. ஜான்சாமுவேல் அவர்கள். அவர்களுக்கு என் நன்றிகலந்த வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.

இந்தச் சுவடியைத் தமது நிறுவனத்தின் வழி வெளியிட்டுப்பரப்ப வேண்டும் என்ற பெருநோக்குத்தோடு தங்கள் நாட்டிலிருந்து படியெடுத்துக் கொண்டுவந்து உதவியவர்கள் நிறுவன நிர்வாக இயக்குநர், டாக்டர் ஷூ. உறிகோசகா அவர்கள்.

பதிப்புப்பணியில் இடையீடு எதுவும் ஏற்படாவண்ணம் துணை புரிந்தவர்கள் நிறுவனச் சுவடி இயல் துறைத்தலைவர் டாக்டர் ஆ.தசரதன் அவர்கள். நண்பர் டாக்டர் கி. ஜெயக்குமார் அவர்களால் அறிமுகப்படுத்துப் பெற்றுத் தங்கள் ஆய்வேட்டினை ஒப்பிட்டுப்பார்க்க அளித்து உதவியவர்கள் டாக்டர் தே.ஜேம்ஸ் தேவகமல அருமைராஜ் அவர்கள். தங்கள் சுவடிஇயல் பதிப்பு ஆய்வேட்டினை அளித்து உதவியவர்கள் அன்பு மாணவர் செல்வி அ.அன்பெழில் அவர்கள்.

நூலகச் சுவடிகள் பலவற்றை ஒப்பிட்டு நோக்க இசைவு தந்து சுவடிகளையும் பார்வைக்குக் கொடுத்து உதவியவர்கள் சென்னை, அரசினர் சுவடி நூலகக் காப்பாட்சியர், நூலக நண்பர்கள், உலகத் தமிழ்ஆராய்ச்சி நிறுவன நூலகர்கள் ஆகியோர்.

ஆங்கில எழுத்துப் பெயர்ப்பிலும், அச்சுப்படி திருத்தத்திலும் உழைப்பை நல்கியவர்கள் டாக்டர் கே. ஜெயக் குமார், திரு. D. பூமிநாகநாதன், செல்வி. இராதா செயலட்சுமி, டாக்டர் எம். ஹேமப் பிரபா ஆகியோர். வண்ணப்படமும் வரிப்படங்களும் ஓவியவர் திரு. A. நடராசன் அவர்களின் உருவாக்கம். நூலின் தட்டச்சுப் பணிகளை மேற்கொண்டவர் திருமதி N. உமாராணி அவர்கள்.

அழகுற அச்சிட்டு உதவியவர்கள் அக்ஷரா அச்சக உரிமையாளர் அவர்கள், சென்னை.

அனைத்துப் பெருமக்களுக்கும் அன்பர்களுக்கும் பெரிதும் நன்றியுடையேன்.

பூ.சு.

Preface

Life achieves meaning and significance only when one's actions are directed towards a well-determined goal. Excellence and Efficiency in action presuppose a sound mind and a healthy body. Among the exercises devised for keeping the body trim, pride of place goes to the so-called marital arts. Besides instilling in the practitioner a sense of fortitude, marital arts like Varma Aṭi improve one's powers of concentration and targeting and result in a new awakening of the mind. The man becomes a better doer of things.

Today, the art is seldom employed to subdue an opponent. On the other hand, it is practiced as a technique of defence. It is also used to help the injured. The art goes by other names such as Varma Sastram, and Varma Sutram which do not carry the odium attached to Varma Aṭi. Most of the literature on Varma Sootram is in the form of Palm leaf manuscripts and is yet to see the light of day.

We owe the present book, based on a palm-leaf manuscript, to the munificence of Dr. Shu Hikosaka of the International Institute of Asian Studies, Kyota, Japan.

About the Manuscript

It is a pity that the first leaf of the palm leaf manuscript of Varma Soothram is missing. obviously, the work as reproduced here, begins with the second leaf, So the first two verses and the first line of the third verses could not be included. The printed version begins with a fragment of the last line of the Third verse. To be more specific, it begins with the words 'தெளிந்து கேளு' The numbering of the leaves and the verses has been done in Malayalam, a language spoken in the neighbouring state Tamil Nāṭu, Kerala. Since the first page available to us has been numbered as page two, we can safely surmise that only one leaf is missing and that it contained the first two verses. This also leads us to conjecture that the writer has

flouted the conventions observed by writers of similar works who invariably preface their work with an invocation, salutation to the master, a synopsis of the work, details pertaining to the subject on hand and an account of the author. It is also quite possible that these items were there on the unnumbered pages. Who knows, those pages were also perhaps lost! At any rate, we are left without any knowledge of the author.

The original manuscript consists of forty seven leaves including the one that is missing. It is believed to consist of 105 verses explaining ninety six varmas. It is also believed to contain information about the other varmas. The present manuscript is incomplete because it ends with the explicit words வர்மம் முற்றும் (the account of varmam is coming to a close or ending) and குருபாதமே துணை (I seek refuge at the feet of the master). The last two expressions are usually used in the concluding part of any work to indicate quite categorically that the thesis has come to an end.

Lines

To accomplish anything in a successful manner Tamil custom demands an invocation. This tradition has been followed in this work also by including three verses from 'Varma Soothram 131'. It would have been appropriate if this particular manuscript called "ஒடி முறிவு சரசூத்திரம்" which includes verses from the thesis, had been included in the introduction but it was not possible to do so.

The nine verses numbering 38-41, 53, 76, 77, 93, 105 give general information. Each one of the remaining 96 verses mention the name of a particular varmam, the indications and symptoms of that particular varma disease. It also mentions the period within which it has to be cured. Apart from this, there is absolutely no other information. The editor have therefore included many relevant details and rendered the verses in their prose order.

Explanation

1. The name of the varma, its meaning, and its etymology have been given.

2. The place where the particular varma is situated in the body is explained.

3. Explanation as to what would happen if an injury is caused to a particular varma and the disease and symptoms arising out of this have been elucidated.

4. The remedy to be provided within a certain period is indicated.

5. Some of the important treatments to be given are also mentioned.

6. A Glossary has been provided at the end of the Text.

7. Manuscripts and books which were helpful in describing the varmas are mentioned in the foot notes. The variations have been explained. Other books which provide the various symptoms and attributes of the varmas also find a place here. 'Odimurivu Sari', a treatise on varma, has been used for reference

We have painstakingly followed the original version brought from Japan and the variations have been indicated in the foot notes. Some of the important verses have been exhaustively annotated.

It is concluded that Mūrthi Kālam and Thilada Varma are actually known by the name Mūthrakālam and Tida Varmam but the names found in the manuscript have been retained in the introduction with the intention of explaining them later. This applies to the variations as well.

Similes, metaphors, technical terms relevant to varmam, literary words, words borrowed from other languages which figure in the text and offer scope for research have not been dealt with.

Similarly not much of importance has been given to prosody since the emphasis is here on Varma Kalai.

An exhaustive bibliography on varmam is appended. As the list containing the names of the varmams is found in the contents, it does not find a place in the word index.

I am highly thankful to Dr. G. John Samuel, Director for Research Programmes of the Institute for having given me an opportunity, to publish this Tamil manuscript 'Varma Soothram' which is a useful contribution to knowledge.

I am greatful to Dr. Shu Hikosaka, Director for Administration of the Institute, for having brought the manuscripts from Japan. His eagerness to disseminate knowledge is commendable.

I am also indebted to Dr. A. Thasarathan for his unstinted co-operation, and Dr. D. James Deva Kamala Arumairaj for enabling me to compare this work with his thesis "Odimurivu Sạra Soothram". I express my gratitude to A. Anbezhil who helped me with her dissertation.

I wish to thank the Librarian and staff of the International Institute of Tamil Studies and Government Oriental Manuscript Library; Dr. K. Jayakumar, Mr. D. Boominaganathan, Selvi R. Jayalakshmi for having helped me with transliteration work & proof reading; I thank Dr. M. Hemaprabha for her help with the English Version. Thanks are due to Thiru. A Natarajan for the cover design and the illustration charts, to the typist Mrs. N. Uma Rani and the Akshara Press for their untiring help.

P.S.

வர்ம ஆய்வு

அ. வர்மம்-சொல்

உயிர்நிலை

"உடலுயிர் பரவுஞ் சக்தி
ஓர்ந்தவோர் தாக்கல் தன்னால்
பரவிடும் விரவெ மூச்சி
பற்றியே மிகுதி யாக்கல்
உடலுயிர் நாடி சுட்டின்
உயிர்த்தொழி லென்றும் பன்னா
உடலுயிர் மூச்சின் வேகம்
ஊர்ந்தேறு மிடங்கள் வர்மம்".

(தமிழும் வர்மக்கலையும், பக்.2)

என்னும் பாடல் 'வர்மம்' என்பதன் பொருளை விளக்குகிறது.

1. பேசிகள் எனப்பெறும் உடல் தசைகள்
2. நரம்புகள்
3. எலும்புகள்
4. உட்துளைகளாகிய தசிரங்கள்
5. பொருத்துகள் எனப்பெறும் மூட்டுகள்
6. விசிகள் எனப்பெறும் நரம்பு முடிச்சுகள்

ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து நிற்கும் இடங்கள் பல. எலும்பும் நரம்பும் தசைகளால் மூடப்பெற்று உடல் முழுமையும் பரவியுள்ளவையாகும். இவை உடலுக்குரிய தாதுப்பொருள்களுள், நீர்த்தவடிவமுடைய (திரவ வடிவம்) இரசமும் இரத்தமும் உடலில் பரவுவதற்கான உட்துளைகளாகிய தசிரங்களைப் பெற்றவை. எலும்புகளும் எலும்புகளாலாகிய மூட்டுகளும் மிகக் கடினமானவை. அந்தக் கடினப்பொருள்களோடு நரம்புகளும் நரம்பு முடிச்சுகளும் பிணைந்திருக்கும் மைய இடத்தில் சிறு அடிபட்டாலும் கீழே கடினப்பொருள் தாங்கியிருப்பதால் நரம்புகள் நசுங்கி, இரத்தநாளங்களைத் தாக்கும். அதனால் இரத்த ஓட்டம் எளிதாகப் பாதிக்கப்பட்டுவிடும். உடனே வலியும் மயக்கமுமாகிய

பல வேறுபாடுகள் தோன்றும். அடி பலமாயின் உயிரைப் பாதிக்கும் நிலைமையும் தோன்றக்கூடும். எனவே அந்த நரம்பு மையங்கள் (Nurve centres) உயிர் நிலைகள் (Vital points) எனப்படுகின்றன.

மர்மம்

1. *உயிர்நிலைகளானவை, தோலால் மூடப்பெற்று மறைபொருள்களாக உள்ளவை.*
2. *பின்னிப்பிணைந்து நிற்கும் இடங்கள் எவை என்பதை எளிமையாக அறிய முடியாதவாறு மறைபொருளாகச் சிற்சில இடங்களில் மட்டுமே நிலைபெற்றுள்ளவை.*
3. *அந்தச் சிலவும் எல்லோராலும் அறிய முடியாத நுட்பம் வாய்ந்தவை.*
4. *அந்த உயிர்நிலைகளில் அடிபட்டால் ஒருசிறு வெளிக்காயமோ வேறு அறிகுறியோ இல்லாமல் உடனடியாக வலியையும், உடலிற் பலவகை வேறுபாடுகளையும், இறக்கும் அளவிலான பல நோய்களையும் உண்டாக்கிவிடக் கூடியவை.*
5. *அந்த உயிர்நிலைகளில் அடிபடுவதால் உடலில் தோன்றும் பலவகை வேறுபாடுகளுக்குரிய காரணத்தை எளிமையாக அறிய முடியாத மர்மம் உடையவை.*

இவ்வாறு நிலைபெறும் இடத்தாலும், அடிபட்டபோது உடலில் தோற்றுவிக்கும் பலவகைப் பண்புகளாலும் மிகவும் மர்மமான தன்மையைப் பெற்றிருப்பதால் இந்த நரம்பு மையங்களை 'மர்மம்' என்று குறிப்பிட்டனர். இந்த நரம்பு மையங்கள் நிலைபெறும் இடங்களை 'மர்மஇடம்' அல்லது 'மர்மத்தானம்' என்றனர்.

"வெங்கண் முரசதிரும் வேலமருள் வில்லுதைப்ப
எங்கும் ***மருமத்*** திடைகுளிப்ப"

(பு.பொ.வெ.மா.7-23)

"எண்ணிலா வருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த . . . ."

(கம்ப.பால.கையடை.11)

என்னும் பாடலடிகளில், எறியப்பெற்ற அம்பானது மார்பாகிய உயிர் நிலையிடத்தே பாய்ந்தது என்னும் பொருளில் மார்பாகிய உயிர்நிலை 'மருமம்' என்றே குறிப்பிடப்பெறுகிறது.

வர்மம்

"உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி . . . ."

என்பதுபோல உடலுக்குள்ளேயே இருந்துகொண்டு உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் இந்த மர்மத்தை `உட்பகை' என்னும் பொருளில் `வர்மம்' என்றனர். இதே பொருளில் வருமம், வன்மம் எனவும் வழங்கப்பட்டது. வர்மம் என்ற சொல்லே சுவடிகள் பலவற்றிலும் ஆளப்பெறுகிறது.

வர்மம் என்பது காற்று அல்லது உயிர் தங்குமிடமாகும்; இந்த உயிர் நிலையின் ஓட்டம் தடைபடும்போது உணர்வு கெடுகிறது. உடலில் நூற்று எட்டு உயிர் நிலைகள் உள்ளன. அவற்றில் தாக்கம் மிகுதியானால் இறப்பு நிகழ்வதும் உண்டு. தாக்கத்தின் அளவு (மாத்திரை) மிகாமல் இருந்து, அடிபட்டபின் நாழிகையும் மீறாமல் இருந்தால் மாற்று வர்மங்களைப் பயன்படுத்துவதன்வழி, ஓட்டம் தடைபட்ட உயிர்நிலையில் காற்று ஓட்டத்தை உண்டாக்கிக் குணமாக்கிவிட முடியும். வர்மம் பற்றிய இச்செய்திகளை,

"வர்மமென்ற தலங்களெல்லாம் வாசித் தானம்
வாசிநிலை தடுத்ததனால் மயக்க மா்ச்சு
உள்ளபடி நூற்றெட்டுத் தலமுஞ் சாவும்
உணர்வாகி யத்தலங்கள் சுகமுங் காணும்
உள்ளுணர வத்தலங்கள் வாசி யேற
லுற்றதனால் அத்தலங்கள் உறுதி சேரும் . . . ."

(ஆய்வேடு, பக்.V.)

என்னும் பாடலும் உணர்த்துகிறது.

வர்மத்தின் வேறு பெயர்கள்

வர்மம் என்பது அருவம், ஆக்கிராணம், ஆவி, உயிர், ஒளி, கந்தம், கலை, காலம், காற்று, சரம், சர்வாத்மாவாழும்வீடு, சீவன், சுவாசம், சைவம், பரசிவம், பரம், பிராணன், புரவி, மாய்கை, மூச்சு, யோகம், வாசி, வாயு என்னும் இருபத்து மூன்று பொருள்களில் மாற்றுப் பெயர்களைப் பெறுகிறது. இதனை,

"சரமென்றும் உயிரென்றும் வாயு வென்றும்
சர்வாத்மா வசித்ததொரு கலைய தென்றும்
புரவியென்றுங் காலமென்றும் பிராண னென்றும்
பிரகாச மானகாற்று சீவ னென்றும்

பரமென்றுஞ் சுவாசமென்றும் மூச்ச தென்றும்
பரசிவமாக் கிராணகெந்த மாவி யென்றும்
பிரசித்த சைவமென்றும் வர்ம மென்றும்
பிசகாத வருபியென்றுஞ் சரத்தின் பேரே"

(ஞான ஒடிமுறிவுப் பெருநூல் எ.கா. ஆய்வேடு, பக்.VI)

"வர்மமென்றும் வாசியென்றும் புரவி யென்றும்
காற்றென்றும் உயிரென்றும் மாய்கை யென்றும்
பிராணனென்றுங் கலையென்றுஞ் சுவாச மென்றும்
சரமென்றும் யோகமென்றும் பரமம் என்றும்
சிவமென்றும் இவையெல்லாஞ் சொல்ல லாகும்"

(மேல் ஆய்வேடு, பக்.VI.)

என்னும் பாடல்கள் உணர்த்துகின்றன. இவற்றுள் வர்மங்களின் பெயர்களைக் கூறும் சுவடிகள் அனைத்தும் வர்மம், காலம் என்னும் இரண்டு சொற்களைமட்டுமே ஆளுகின்றன.

அடைப்புவர்மம், அணிவர்மம், கதிர்வர்மம், கதிர்காமவர்மம் என்பன போன்று பெரும்பான்மையானவை வர்மம் என்றே பெயர்பெற்றுள்ளன. அமிர்தகாலம், அன்னகாலம் உறக்ககாலம், உறுமிக்காலம் என்பன போன்று சில வர்மங்கள் காலம் என்ற சொல்லால் பெயர்பெற்றுள்ளன.

"எட்டான கலையுடனே பிராணன் நாலும்
ஏகினதால் ஈராறு கலையா மென்ன" (ஒடிவுமுறிவு – பா.15).

மனம், அகங்காரம், புத்தி, வித்தை, வாக்கு சத்தி, கன்மம், ஞானம் என்னும் எண்வகைக் கலைகளும், காற்று, சீவன், சுவாசம், பெலன் என்னும் நால்வகைப் பிராணன்களும் ஒடுங்குமாறு ஏற்படும் கலைகள் பன்னிரண்டாகும் எனச்சுட்டுவது இப்பாடலடி. இதில் ஈராறு கலை என்றது பன்னிரண்டு படுவர் மங்களையாகும்.

"உள்ளபடி நூற்றெட்டுத் தலங்க ளாகும்
உணர்வாகும் அத்தலங்கள் உயிரும் ஆகும்
உள்ளுணர்ந்த அத்தலங்கள் வாசி யேறல் . . . ."

(மேல் நூல், பா.81).

இவ்வடிகளில் உள்ள உயிர், வாசி என்னும் சொற்களும் வர்மத்தைக்

குறிப்பனவாகும். வர்மஇடம் என்னும் பொருள் தரும் தலம் என்பதும் வர்மத்தைக் குறிக்கிறது. இது மாற்றுப் பெயர்ப்பட்டியலில் இடம் பெறாதது. இதேபோல, சூட்சம், அடவு, ஈடு என்பனவும் ஆளப்பெற்றுள்ளன.

"சூட்சாதி சூட்சமதைக் கண்டு நீயும்
தொகையான விபரமெல்லாம் ஆய்ந்து பாரு"

(மேல் நூல், பா.13).

"இயம்பினார் இன்னமொரு அடவு கேளு" (வர்மகண்டி, பா.5)

"விதவிதமாய் அகத்திடும் மாறிப் போகும்" (மேல் நூல், பா.11)

என்னும் அடிகளில் முறையே சூட்சம், அடவு, ஈடு என்னும் சொற்கள் வர்மத்தைக் குறித்து வந்தவையாகும். மிக நுட்பமாக அறியக்கூடிய ஒன்று என்பதனால் வர்மம், சூட்சம் எனப்பட்டது. இது உயிர்நிலை யடங்கியது ஆதலின் அடவு (அடைவு) எனப்பட்டது. அடக்கம் என்றும் இதைக்குறிப்பர். தற்காப்புக்குரிய கவசம் ஈடு எனப்படும். வர்மக்கலை தற்காப்புக்குரிய கவசமாகப் பயன்படுதலின் ஈடு எனப்பட்டது.

ஆ. வர்மவரலாறு – வர்மத் தோற்றம்

தங்கள் சக்திக்கு மேலானதொரு சக்தி உண்டு; அந்தச் சக்தியே இறை என்பதை உலகம் என்றுமே நம்புகிறது; ஏற்கிறது; அந்தச் சக்தியைப் போற்றுகிறது. இக்கொள்கைக்கு நம் நாடு விதிவிலக்கு அன்று. அந்தச் சக்தியைப் பெண்பாலாக உருவகித்துப் போற்றுவது நம்நாட்டின் தனிப்பெருஞ் சிறப்புகளுள் ஒன்று. அன்பு, அருள், இரக்கம், பொறுமை முதலான மிக உயர்ந்த மனிதப்பண்புகளைப் பெண்களிடமே காணமுடிகிறது என்பதே காரணம். அந்தச் சக்திக்கும் தலைவன் ஒருவனைப் படைத்துக் காண்பது அடுத்த நிலை. இதுவே ஒரு குடும்பப் பாங்காகிறது. மக்கட் குடும்பத்திற்கெல்லாம் முன்னோடியாக நிற்பது அந்தத் தலைமைக் குடும்பம் எனக் கருதி மகிழ்கிறது நாடு; அவ்வழியில் செயலாற்றவும் விரும்புகிறது. மொழி முதலான அனைத்து ஆக்கப்பொருள்களும் அந்தக் குடும்பத்தால் உருவானவையே என்று கற்பித்துப் போற்றுகிறது. நம் நாட்டில் இந்தக் கொள்கை வர்மவரலாற்றிலும் இடம் பெற்றுள்ளது.

"அரனாரும் உமையவளும் வனத்தில் ஏகி
அன்றன்றாய் அளவுதப்பித் திரிந்த காலம்
சிவகிரியாம் மலைதனிலே சென்ற போது
சிறப்பான வேடனுமே மயக்கங் கொண்டு
மரமதிலே ஏறினதால் விழுத லானான்

வேகமுற்று மயங்கியவன் மூர்ச்சை யுற்றான்
ஒருவருமே காணாமற் கிடந்த தாலே
கண்டவுடன் அரனாரும் காணா மற்போய்
கறுக்கெனவே போகுமந்த வேளை தன்னில்
உமையவளும் சொன்னமொழி யேதோ வென்றால்
பொன்னரனே இந்தவிதம் கருதா தென்று
போகவிடை செய்யரனே இவனை விட்டுத்
திரும்பிநின்று அரனாரும் அருளிச் செய்தார்
தீவினைகள் மனுவோர்கள் செடத்துக் குள்ளே
வர்மமென்றும் அடங்கலென்றும் இரண்டுண் டப்பா
வகைவிவரம் இன்னதென்று கண்டு கொள்ளே
உமையவள்தான் சொன்னமொழி மனத்தில் தேர்ந்து
கட்கத்தில் இருந்ததொரு பொற்பி ரம்பைக்
கரமதிலே அரனாரும் எடுக்க லுற்றார்
ஹரியென்ற அட்சரத்தை வர்ம மாக்கி
ஸ்ரீயென்ற அட்சரத்தால் தட்டி னாரே.
உமையவளும் கொடுத்ததொரு நீரை வாங்கி
எறிந்துவிட்டார் முகமதிலே விஷங்கள் நீங்க
எழுந்திருந்தான் வேடனுந்தான் இசல்வாய்த் தானே
தானாக இருவருமே போக லுற்றார்
தாரணியில் வர்மமென்று தெளிந்த வாறே".

(ஒடிமுறிவு – ஆய்வேடு, பக்.XIII)

வேடன் ஒருவன் மரத்திலிருந்து விழுந்து மயங்கிக் கிடக்கிறான். அவனைக் கண்டுகொள்ளாமற் செல்லும் இறைவனை உமையவள் இடைமறித்து அவனை எழுப்பித்தருமாறு வேண்டுகிறாள். இறைவனும் இணங்கி ஹரி என்ற எழுத்தை வர்மமாகவும், ஸ்ரீ என்ற எழுத்தை வர்ம அடங்கலாகவும் ஆக்கி அம்மந்திரத்தைக் கூறிப் பிரம்பால் தட்டுகிறார். பிறகு இறைவன் கொடுத்த நீரை வாங்கி உமையவள் வேடன் முகத்திலே அடிக்கிறாள். வேடனும் மயக்கம் நீங்கி எழுகிறான் என்னும் கருத்துடைய இப்பாடல் வர்மமும், வர்ம அடங்கலாகிய இளக்குமுறையும் இறைவனால் தோற்றுவிக்கப்பெற்றவை என்ற கருத்தைத் தருகிறது. இக்கருத்து வர்ம சாத்திரத்தின் சிறப்புகருதிக் கூறப்பெற்றதாகக் கொள்ளலாம்.

போர்க்கலை

மனித வாழ்க்கையின் தொடக்கத்திலேயே காட்டு மிருகங்களிடமிருந்தும் பிறமக்களிடமிருந்தும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் மனிதன் ஒவ்வொருவனுக்கும் ஏற்பட்டிருந்தது. முதலில் அந்த எதிரிகளின் கண்ணிற்படாமல் பதுங்கி வாழத் தொடங்கினான். மீறி எதிரிகளின் பார்வையில் பட்டுவிடும்போது அவர்களிடமிருந்து தப்ப அவர்களை எதிர்த்துப் போரிடவேண்டிய கட்டாயம் அவனுக்கு ஏற்பட்டுவிடுகிறது. இந்தத் தற்காப்புக் கொள்கைகளும் தற்காப்புக் கலைகளும் போர்க்கலையின் தொடக்க நிலைகளாகின்றன.

நம்நாட்டில் நாகரிக மரபுவழிப்பட்ட கலைகள் பல தோன்றிய காலத்தில் பழைய தற்காப்புக்கலை வளர்ந்து போர்க்கலை வடிவம் பெற்றுள்ளது.

போர் நெறி

போர் மேற் செல்லுங்கால் ஆநிரை கவர்தலும் அதை மீட்டலும் என்னும் அறநிலை மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து மதிலை முற்றுகையிடுதலும் அதைக் காத்தலும், பகைவர் நாடு கொள்ளுதலும், தன் நாடு காத்தலும், வீரங்குறித்துப் போரிடுதலும் வெற்றி பெறுதலும், நிலையாமை பற்றிக் கூறுதலும் என்னும் பலதிறப்பட்ட அறநெறிகளை வகுத்தது தமிழ்மரபு. இந்நெறிகளுக்கு இலக்கணமும் கண்டது தமிழ் மொழி.

"வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி யொருவன்
தான்மீண் டெறிந்த தார்நிலை . . . . ." (தொல்.பொருள்.72)

என்பது போர் இலக்கணத்துறைகளில் ஒன்று. அதாவது, தன் படைகளுக்கு முன் சென்று வேல்கொண்டு போர்செய்யும் வேந்தனைப் பகைவர்கள் சூழந்துகொள்ள, அது அறிந்து வேறோரிடத்துப் போரில் ஈடுபட்டுள்ள தானைத்தலைவனாயினும், தனக்குத்துணையாக வந்த அரசனாயினும் தங்கள் போரைக் கைவிட்டு வந்து வேந்தனொடு பொருகின்றாரை எதிர்த்துப் புறமுதுகிடச் செய்கின்ற தார்நிலை என்னும் முறை ஒரு நெறியாகும். இது போன்று பல ஒழுங்கு முறைகளைத் துறைகளாகக் கொண்டது அப்போர் நெறி.

"மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
கையினுங் கலத்தினும் மெய்யுறத் தீண்டிப்
பெருஞ்சினத்தால் புறக்கொடாது
இருஞ்செருவின் இகல்மொய்ம்பினோர்" (பட்டினப், 69-72)

என்பது போர்ப் பயிற்சியைச் சுட்டுவதாகும். காவிரிப்பூம் பட்டினம் என்னும்

நகரமானது போர்ப்பயிற்சிக்கான அகன்ற மன்றத்தையுடையது. அம்மன்றத்தில் பலரும் ஒருங்கு திரண்டு போர்ப்பயிற்சியில் ஈடுபடுவர். அப்போது ஒருவரோடொருவர் கையோடு கைபிணைத்துப் போரிடுவர்; படைக்கலந்தாங்கி ஒன்றோடொன்று தாக்கிப் போரிடுவர்; உடம்போடு உடம்பு உரசியும், கட்டிப்பிடித்து இறுக்கியும் ஆடுவர். எல்லா வகையிலும் ஒருவருக்கொருவர் பின்னடையாது பெருஞ்சண்டையிடுவர் என்னுங் கருத்துகளைத்தரும் பட்டினப் பாலை ஏறத்தாழ கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளுக்கு உட்பட்டதாகிறது. இந்த இலக்கியத் தோற்றத்திற்கு முன்பே மக்களிடையில் போர்ப் பயிற்சியானது இடம்பெற்றிருந்தது என்பதும், அதற்குரிய போர்மன்றங்கள் வானத்தைப்போல மிகப் பரந்து ஆங்காங்கு இடம்பெற்றிருந்தன என்பதும் தெளிவாகின்றன.

போர்வீரர்கள் பகைவரால் அழித்தற்கரிய படையணிகள் பலவற்றை அணிந்திருந்தனர். தோல்பரிசையென்னும் கேடயம், ஒளி மிக்க வேற்படை, வாட்படைகளையும் தாங்கிப் போர் செய்தனர்.

(பதிற்றுப், 66)

இளைஞர்பலரும் இப் படைக்கலப் பயிற்சி பெற்றனர். படைக்கலம் பயின்ற இளைய வீரரை அரங்கேற்றுவிக்கும் விழாக்கள் நடைபெற்றன. அவ்விழா பூந்தொடை விழா எனப்பட்டது (அகம், 187). இப்போர் முறைகள் அனைத்தும் தனிப்பட்டவர்கள் தம்மிடையே கொண்ட பகையினாலோ பொறாமையினாலோ நிகழ்த்தப் பெற்றவை அல்ல. நாடுகாத்தற் பொருட்டு, பகைநாட்டவரோடு நிகழ்த்தப்பெற்ற போர்; தங்கள் மன்னவனின் சிறப்புகருதி நிகழ்த்தப்பெற்ற போர் என்பன குறிப்பிடத்தக்க போர்ப்பண்புகளாகின்றன.

போர்க்களரியும் பயிற்சியும்

போர்க்கலைகள் மன்னர்களைச் சார்ந்து விளங்கின என்றாலும் நாட்டுப்புறங்களிலும் அக்கலைக்குரிய பலதிறப்பட்ட பயிற்சிகள் நடைபெற்று வந்தன. அப்பயிற்சிகளுக்கான களரிகளும் மன்றங்களும் இருந்தன என்பதை,

"முதுமரத்த முரண்களரி
வரிமணல் அகன்திட்டை . . . .
மலர்தலை மன்றத்து . . " (பட்டினப். 57-70)

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. அம்மன்றங்களிலும் களரிகளிலும் பொழுதுபோக்காக இக்கலைகள் பயிலப்பெற்றன. ஆண்டுதோறும் கிராமங்களுக்கிடையே அக்கலைப் போட்டிகள் நிகழ்ந்துவந்தன. இன்றும் தமிழகத்தில்,

1. கிராமதேவதை எனப்பெறும் சிறுதெய்வ வழிபாட்டுவிழாக் காலங்களில் சிலம்பப்போட்டி, ஒயிலாட்டம், தேவராட்டம், கோலாட்டம் போன்றவை நிகழ்த்தப்பெறுகின்றன.

2. பொங்கற்பண்டிகை காலத்தில் நிகழ்த்தப்பெறும் மஞ்சுவிரட்டுப் போட்டி.

3. கார்த்திகைத் தீபவிழாக் காலத்து நிகழும் மாவளிப்போட்டி.

4. தீபாவளித் திருவிழாக்காலத்தில் நிகழும் வாணப்போட்டி ஆகியவையும் போர்க்கலைப் போட்டி வகையைச் சார்ந்தவையாகும். இவை தனிப்பட்டவர் களுடைய அல்லது ஒவ்வொரு குழுவினுடைய போர்த்திறனை வெளிப்படுத்தும் போட்டிகளாகும். கேரளமாநிலத்தில்,

'ஆண்டுதோறும் ஓணம் பண்டிகையின்போது போர்க்கலை சார்ந்த போட்டிகள் பல நிகழ்வது உண்டு. ஒவ்வொரு இனத்தவரும் தங்களுக்குள் இரண்டிரண்டு குழுக்களாகப் பிரித்துக்கொண்டு, ஒரு பொதுவிடத்தில் தங்கள் போர்த்திறனைக் காட்டுவர். இளைஞர்களுக்குப் பன்னிரண்டு வயது முதலே இக்கலைக்கான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.'[1]

சிற்றரசர்கள், குறுநிலமன்னர்கள் ஆகியோரின் பாதுகாப்புப் படைகளுக்காக வீரர்களை உருவாக்கும் பணி கேரளமாநிலத்தில் மிகுதியாக நடைபெற்று வந்துள்ளது.

'திருவிதாங்கூர் இராச்சியத்தில் சான்றோர்குல சத்திரிய வகுப்பைச் சார்ந்த பலர் போர்க்கலை, வானசாத்திரம், மருத்துவம் ஆகியவற்றில் தேர்ச்சிபெற்று விளங்கினர். அத்தகு சான்றோர்குல மக்களுக்கு அந் நாட்டு மன்னர்கள் ஆசான், நாடார், பணிக்கர் என்னும் பல பட்டப்பெயர்களைக் கொடுத்துச் சிறப்பித்து வந்தனர். அவர்கள் சிறந்த போர்வீரர்களாகவும், போர்ப் பயிற்சியளிக்கும் ஆசான்களாகவும் விளங்கினார்கள்.'[2]

பலவகைக் கலைகளில் பயிற்சியும், மன்னர்களின் பாராட்டுதலும் பெற்ற ஆசான்கள் களரிப்பயிற்று, சிலம்பம், வர்மம், பிடி ஆகியவற்றில் இளைஞர்களுக்குப் பயிற்சியளித்தார்கள். பயிற்சியில் ஒருவரை வீழ்த்தியாக வேண்டும் என்பது கட்டாயம். அதற்கான பலவகை ஒப்பந்தங்களோடு பயிற்சியைத் தொடங்குவர்.

---

1. History of Kerala, p.470.

2. மாவீரன் அனந்தபத்மநாபன், முன்னுரை, பக்XV.

1. நீட்டிய கையைத் தொடுமாறு காலைத் தூக்குதல்
2. நிலத்திற்படியுமாறு குப்புறப் படுத்துத் தலையைத் தூக்குதல்; அந்த நிலையில் ஆசான் காலால் தேய்த்துவிடுதல்
3. படுத்து எழுந்து மீண்டும் குப்புறத்தரையில் விழுதல்

போன்ற பலவகைக் கடினப்பயிற்சிக்காலத்தில் இளைஞர்களுக்கு ஏற்படும் பிடிப்புகள், ஒடிவு முறிவுகள் ஆகியவற்றைக் குணப்படுத்த வர்ம முறைகளைக் கையாண்டனர். இதனால் களரிப்பயிற்று முறையில் போர்ப்பயிற்சியும் வர்மக்கலைப் பயிற்சியும் இணைந்தே கற்பிக்கப்பெறும் நிலை உருவாயிற்று. களரிப்பயிற்று முறையில் உள்ளவாறு போர் வீரர்களுக்கு ஏற்படும் ஒடிவு, முறிவு, பிடிப்புகளைக் குணப்படுத்தி மீண்டும் போருக்கு அனுப்பும் பொறுப்பும் ஆசான்களைச் சார்ந்ததாயிற்று.

வடக்கன்-தெற்கன் களரிப்பயிற்று

நம்நாட்டில் வடக்கன் களரிப்பயிற்று, தெற்கன் களரிப்பயிற்று என்ற இருவகை முறை நடைமுறையில் உள்ளன. வடக்கன் களரிப்பயிற்றில் கடா அல்லது சுவடு என்பது மூச்சையடக்கிவிடும் யோகமுறைப் பயிற்சியாகத் தொடங்குகிறது. இது உடலை உறுதியாக்கும் 'வச்சிரதேகன்' பயிற்சியாகும். அறுப்புகை, பிள்ளை, தங்கை எனப்படும் நடைமுறைப்பயிற்சிகளும் வடக்கன் பயிற்சியில் அடங்குவனவாகும். நீண்ட கம்புடன் ஆடப்பெறும் சிலம்பம், உயர்ந்த முறை மர்ம அடி ஆகியவையும் இடம்பெறுகின்றன. என்றாலும் வடக்கன் பயிற்சி பிற்காலத்தது செப்பமுறாதது முதிராது என்பர்.[3] மேலும் இது அறுபத்து நான்கு நரம்பு மைய நுட்பங்களைக் கொண்டது; மாவீரர் இனத்தைச் சேர்ந்த பணிக்கர் குருக்களால் கற்பிக்கப்படுவது. எனவே இது 'குருபோர்' முறை எனப்படுகிறது.

தெற்கன் களரிப்பயிற்று மிகப் பழமை வாய்ந்த ஒன்று. இது தமிழகத்தில் களரிப்பயிற்சி எனவும், கேரள நாட்டில் களரிப்பயிற்று எனவும் வழங்கப்படுகிறது. போர்க்களப்பயிற்சி என்பதே இதன் பொருள். தஞ்சையில் குத்து வரிசை எனவும், கன்னியாகுமரியில் அடிமுறை எனவும் வழங்கப்படுகிறது. இவை வர்ம அடியை அடிப்படையாகக் கொண்டவை. முழுப் போர்ப்பயிற்சி முறையாகக் கேரள மாநிலத்தில் நெய்யாற்றங்கரைப் பகுதியைச் சேர்ந்த பல கிராமங்களிலும், கல்குளம், வளவங்கோடு ஆகிய இடங்களிலும் வர்மமும் களரியும் என்ற பெயரால் இக்கலை விளங்கிவருகிறது. இதுவே முதல் போர்க்கலை என்கின்றனர்.

3. Journal of Japan, Essay Moses Thilak, Marmam, p.61.

வர்மக்கலை

மனித உடலமைப்பையும் உள்ளப்பாங்குகளையும் முன்றயாக அறிந்திருந்த பேரறிஞர்களாகிய முனிவர்கள் நாகரிக மரபுவழிப்பட்ட போர்க்கலையின் ஒருபகுதியாக வளர்ந்த வர்மக்கலையை ஏட்டில் எழுதிவைத்தனர். அக்கலை அவர்களுக்கே உரிய பாட்டு நடையில் வடிவெடுத்தது. நம்நாட்டோடு வாணிகத் தொடர்பு கொண்ட வெளிநாட்டினர் பலர் இங்கிருந்த பலவகைக் கலைகள், நாகரிகப்பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை நன்கு அறிந்து, அவற்றில் ஈடுபாடு கொண்டனர். அவற்றைத் தங்கள் நாட்டிற்கும் கொண்டு செல்லத் தொடங்கினர். அந்த முறையில் இங்கு நன்கு வளர்ந்திருந்த மிக உயர்ந்த, பண்பட்ட போர்க்கலையையும் கொண்டு சென்றனர். மூலச்சுவடிகளே இங்கிருந்து கொண்டு செல்லப்பெற்றுள்ளன என்பதற்கு ஜப்பான் நாட்டிலிருந்து படியெடுத்துக் கொண்டுவரப்பெற்று, நூலாகப் பதிப்பிக்கப் பெறும் வர்மசூத்திரம் என்னும் இச்சுவடியே ஒரு எடுத்துக்காட்டாகும்.

சைனாவும் ஜப்பானும்

போர்க்கலையைக் கொண்டுசென்ற நாடுகளுள் சைனாவும் ஜப்பானும் முதலிடம் பெறுகின்றன. காஞ்சிபுரத்திலிருந்த இந்திய பௌத்தத் துறவியருள் ஒருவரான போதிதர்மர் என்பவர் புத்தமதத்தைப் பரப்பும் பணியை மேற்கொண்டு கி.பி.520இல் சீனாவுக்குச் சென்றார். அங்குள்ள ஷாவோலின் துறவியர் மடத்தில் தங்கி, புத்தமதக் கொள்கைகளைப் பரப்பினார். அப்போது இந்த வர்மக்கலையின் நுட்பத்தையும் முழுமையாகக் கற்பித்தார் என்பது அந்த நாட்டு வரலாறு கூறும் செய்தியாகும்.[4]

இக்கலை பெரும்பான்மையான மாற்றம் பெற்றுச் சீனாவில் ஷாவோலின் போக்சிங் என்றும், கங்பூ என்றும் நடைமுறையில் வழங்கிவருகிறது; ஜப்பானில் கராத்தே என்றும் ஜூடோ என்றும் வழக்காற்றில் நடைபெற்றுவருகிறது. தெற்கன் முறையிலுள்ள 'நூற்று எட்டு' என்ற வர்மமுறை சீன வர்ம முறையிலும் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

நம்நாட்டில் இன்று இக்கலை மிக விரைவாக மக்களிடையே பரவிவருகிறது. அகில இந்தியக் களரிப் பயிற்று நிறுவனம் என்னும் ஓரமைப்பு 1976இல் தோன்றியிருப்பது இக்கலையைக் கற்கப் பலர் முன்வந்துள்ளனர் என்பதைப் புலப்படுத்துகிறது.

---

4. The way of Warrior pp.58-85. (ஒடிமுறிவு ஆய்வேடு, பக்.XIII-XVIII.)

இ. வர்ம நூல்கள் தரும் செய்திகள்

திரட்டித் தொகுக்கப்பெற்ற வர்ம நூல்களுள் கிடைக்கும் செய்திகளை வகைப்படுத்தும் போது வர்மநூல்கள் தரும் செய்திகள் ஓரளவு புலப்படுகின்றன. அவற்றுள் 1. இறை வாழ்த்து 2. குருவணக்கம் 3. வர்மவகை 4. வர்ம நூல்கள் தரும் செய்திகள் 5. வர்மக்கலையும் வர்மாணியரும் 6. நூலுள் இடம்பெறும் வர்மங்கள் 7. வர்மப்பெயர்களுக்கான காரணங்கள் 8. வர்ம இடங்களைக் குறிக்கும் படங்கள் 9. வர்மக்கலை பரவிச் சிறப்படையாமை என்னும் ஒன்பது செய்திகள் இங்கு ஆய்வு செய்யப்பெறுகின்றன.

இறை வாழ்த்து

எடுத்துக்கொண்ட செயல் இனிதே நிறைவுற இறைவனை வழுத்தித் தொடங்குவது தமிழ்மரபு. வர்ம நூலாசிரியர் பலரும் இக்கருத்தில் முன்னணியில் நிற்கிறார்கள். நூலின் தொடக்கத்தில்,

"ஆதியாம் சத்தி பாதம் அரன்திருப் பாதம் போற்றி
நீதியாம் தொடுவர் மத்தின் நிதானத்தைப் புகல வேண்டி
சோதியாம் முகவன் தானும் துணைவனாம் கந்தன் மாலும்
ஓதிய வாணி மாதும் உமைமகன் கணேசன் காப்பே"

(தொடுவர். 1)

"ஆதியென்ற மூலவட்டக் கணபதியே காப்பு
. . . .
பரப்பிரம்ம ஆதாரப் பரமே காப்பு" (வர்ம சூத்.1)

என்பன போன்று ஏற்புடைக் கடவுள், வழிபடு கடவுள் என்னும் இருதிறக் கடவுள் வணக்கப் பாடல்களில் ஒன்றையோ பலவற்றையோ அமைத்தே நூலாசிரியர் பலரும் தங்கள் நூலைத் தொடங்குகிறார்கள். மேலும்,

"ஓங்கியே வந்தபிணி யெல்லாந் தீரும்
ஓங்காரச் சக்திபூசை செய்து கொள்ளே"
"பூசைசெய்து கொள்ளயிலே தர்மம் வேணும்
பூசுரரைக் கொண்டிருத்தித் தானம் ஈந்து
பூசை செய்து கொண்டாக்கால் வர்மம் தீரும் ." (படுவர். 75-76)

என ஆங்காங்குச் சுட்டவும் அவர்கள் மறப்பதில்லை. வர்ம நோய்களை இளக்கும் பொழுதும், அவற்றிற்கு மருந்து முதலியன கொடுக்கும் பொழுதும், மருத்துவர் கொடுத்த மருந்தைப் பயன்படுத்தும்பொழுதும் பூசை செய்தல் வேண்டும்

என்பதை வற்புறுத்துகின்றனர். சிவபூசை, சக்திபூசை, பூசுரர்பூசை போன்ற பலவகைப் பூசைகளைச் செய்வதோடு பெரியோரை வணங்கி, மருத்துவருக்கு வேண்டிய பொருளைக் கொடுத்துப் பிறகே மருந்தை உண்ணவேண்டும் எனவும் கூறுவர்.

"ஆரடா ஆனாலும் காலம் கொண்டால்
அப்பனே குருபரனைத் தேட வேணும்
பாரடா அனுமாரைப் பூசை வேணும்
பத்திரமாய் அஞ்செழுத்துப் பூசை வேணும்
சேரடா அட்சரத்தை எழுதி வைத்துச்
சிருலகில் அஞ்செழுத்தால் தியானம் செய்யே" (வர்ம சூத்.7)

என்பது, வர்மநோய் ஏற்படுமேயானால் யாவரேயானாலும் குருவைத் தேடி மருத்துவம் பெறவேண்டும்; 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை எழுதி வைத்து, முறையாக உச்சரித்துத் தியானம் செய்ய வேண்டும்; அதேபோல அனுமாரையும் பூசிக்க வேண்டும் என்னும் கருத்துகளைத் தரும் பாடலாகும். மேலும், மருத்துவம் செய்யும்போது வர்ம முறைகளை அறிந்து ஏற்ற மருந்துகளைத் தேடிக் கொடுத்தால் மட்டும் போதாது. மருந்துகளாகப் பயன்படும் மூலிகைகளை எடுக்கும் போது மந்திரம் செபித்தல், தூபதீபங்கள் காட்டுதல் முதலியவற்றால் அவற்றைத் தூய்மையாக்கி எடுக்க வேண்டும் என்று கூறும் கருத்து எதையும் இறைபக்தியோடு செய்ய வேண்டும் என்பதாகவே அமைகிறது. இக்கருத்து,

"செய்யப்பா மூலியெல்லாம் சாபம் தீர்த்துச்
செயலான வசனத்தால் உண்டு பண்ணு" (வர்ம சூத்.8)

என்னும் பாடலடியால் வெளியாகிறது.

குருவணக்கம்

மருத்துவ நூலாசிரியர்களைப்போலவே வர்ம நூலாசிரியர்களும் குருபக்தியில் மிகுந்து விளங்குகிறார்கள். மருத்துவக் கலையையும் வர்மக் கலையையும் படித்துக் கற்பதைக் காட்டிலும், செய்துகற்கும் முறையிலேயே மிகுதியான கலையறிவும் அனுபவமும் ஏற்படுகிறது. சொல்லி அல்லது எழுதி விளக்கினால் முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாத பல கலைநுட்பங்களைச் செய்முறையில் எளிதாகப் பயின்று தேர்ச்சிபெறவும் முடிகிறது. ஒவ்வொரு வர்மப் பயிற்சியும் அந்தந்த வர்மநோய் ஏற்பட்டவர்களுக்கு நேரில் சிகிச்சை அளிக்கும்போதுதான் முழுமையடைகிறது. குறிப்பிட்ட சிறிது காலத்திற்குள் பலவகை வர்ம நோய்க்கு ஆளானவர்களைக் கண்டு அவர்களுக்கு

வர்மச்சிகிச்சையளிக்கும் வாய்ப்பு ஏற்படுவதில்லை. ஆகவே எல்லா வகை வர்மங்களிலும் செய்முறைப் பயிற்சிபெற நீண்டகாலம் ஆவது இயல்பு. எனவே இக்கலைகளைப் பயில்வோர் பல ஆண்டுகள் குருவினிடம் பயிற்சி பெற வேண்டியவர்களாகிறார்கள்.

பன்னிரண்டு ஆண்டு காலம் மாணவனாக இருத்தல் வேண்டும்; அப்போதும் அம்மாணவனிடம் உண்மையான குருபக்தி இருக்கிறதா என்பதைச் சோதித்து அறிய வேண்டும்; பிறகு மிகுந்த பொருளைப் பெற்றுக் கொண்டு வர்மக்கலையை முழுமையாகக் கற்பிக்க வேண்டும் என்பனவற்றை வர்ம நூலாசிரியர்களே வகுத்துக் காட்டுகிறார்கள்.

"திறமான நூலவற்கு வெளியி டாதே
சீடனென்று பன்னிரண்டு வருடம் காத்தால்
அறிவான பக்தியவற் கிருந்த தானால்
அப்பனே பொருள்வாங்கி நூலை ஈயே" (வர்ம சூத்.3)

என்பது நூலாசிரியர் கூற்று. குருவினிடம் பல ஆண்டுகள் பயபக்தியோடு இருவென இருந்து. சொல்லெனச் சொல்லி, செய்யெனச் செய்து பழகிய காரணத்தால் எந்தவகை மருந்தைச் செய்தாலும் பயன்படுத்தினாலும் இறைவனை வணங்கித் தொடங்குவது போலவே குருவையும் உள்ளத்தில் நினைத்து வணங்கித் தொடங்குவதை வழக்கமாகக் கொண்டனர். நூல்களும்,

"ஊன்றிநீ குருபதத்தை மனத்தில் வைத்து
உத்தமனே கொடுத்துவிடு மாறிப் போமே" (படுவர், 53)

"தேனென்ற சிவபதத்தைத் தினமும் போற்றி
சிற்பரமாம் சற்குருவைச் சிந்தை கூர்ந்து" (வர்ம சூட்சம், 16)

எனக் குருவணக்கத்தை வற்புறுத்துகின்றன.

பதிப்பிக்கப்பெறும் 'வர்மசூத்திரம்' என்னும் இந்தச் சுவடியில் நூலின் மூன்றாவது பாடல், முதலே காணப்பெறுவதால் தொடக்கத்தில் அமையும் இறைவணக்கப் பாடல், குருவணக்கப் பாடல்கள் யாவை என்பதை இங்கு எடுத்துக்காட்ட இயலவில்லை.

வர்ம வகை

பலவாறு தொகுக்கப்பெற்ற வர்மம் பற்றிய செய்தியை விளக்கும்போது படுவர்மந்தொடங்கி நோக்குவர்மம் ஈறாக அறுவகைப்படும் எனத் தொகுத்துச் சுட்டுவதும், அவை ஒவ்வொன்றும் இவ்விவ்வாறு, இத்தனை வகைப்படும் என

வகுத்துக்காட்டுவதும், அவற்றைப்பற்றி விரித்துக்கூறுவதும் முறையாகும். ஆனால் வர்ம நூல்கள் பலவும் தொகுத்துக்காட்டுவதிலும் வகுத்துக்கூறுவதிலும் பலவாறு வேறுபடுகின்றன. மேலும் நூல்கள்,

"வகையதுவே இருவகையாம் சொல்லக் கேளு. . . .
தொகையதுவே படுவர்மம் பன்னி ரண்டும்"
"தொகையான நூற்றெட்டும் சூழு கின்ற" (வர்மசூத். 3)

எனப் பெரும்பகுதிகளை வகையாகவும், அவற்றின் உட் பிரிவுகளையும் எண்ணிக்கைகளையும் தொகையாகவுமே குறிப்பிடுகின்றன ஆதலின் இங்கு வகை என்னும் ஒரே தலைப்பில் தொகை, வகை, விரிகள் எடுத்துக்காட்டப் பெறுகின்றன.

இயங்கிக்கொண்டிருக்கும் உயிர்க்கலையை அல்லது உயிர் ஓட்டத்தைத் தடைசெய்து ஒடுக்குகின்ற இடம் உயிர்நிலை எனப்பட்டது. அந்த நிலை மர்மமுடையது ஆதலின் மர்மம் எனவும், வன்மமுடையது அதலின் வர்மம் எனவும் பெயர்பெறுகிறது. அந்த உயிர்நிலைகளில் அறிந்தோ அறியாமலோ, தெரிந்தோ தெரியாமலோ, நேராகவோ மறைமுகமாகவோ, இயற்கையாகவோ செயற்கையாகவோ அடி, இடி, உதை, குத்து, தட்டு, தாக்கு முதலியவை ஏற்பட்டால் உறுப்பு நிலைகள் தன்னிலை கெடுகின்றன. தன்னிலை மாற்றத்தினால் உடலில் ஏற்படும் பலவகை மாற்றங்களை அல்லது நோய்களைக் கண்டறிந்து அந்த உயிர்களின் இன்னலைப் போக்கப் பயன்படுவதே வர்மக்கலை எனப்படுகிறது. வர்மக்கலை வல்லுநர்களாகிய வர்மாணிகள், வர்மத்திற்கேற்ற இளக்கு முறைகளையும் மருத்துவ முறைகளையும் பயன்படுத்த வேண்டும் என்ற கலை நோக்குடன் மனித உடலில் ஏற்படும் வர்மங்களை வகைப்படுத்தி அவற்றின் தன்மைகளை ஆய்ந்துள்ளனர்.

1. படுவர்மம் (varmam due to violent injur)
2. தொடுவர்மம் (varmam due to violent touch)
3. தட்டுவர்மம் (varmam due to violent blow)
4. தடவு வர்மம் (varmam due to violent massage)
5. நக்குவர்மம் (varmam due to violent licking)
6. நோக்குவர்மம் (varmam due to violent sight)

என்று வகைப்படுத்திக்காட்டுவார் எஸ். இராசாமணி அவர்கள்[1]. படுவர்மம், தொடுவர்மம், தட்டுவர்மம், தூண்டுவர்மம், குடோரிவர்மம் என வகைப்படுத்து

1. சித்தமருத்துவத்தில் வர்மப் பரிகாரமும் சிகிச்சைமுறைகளும், பக்.5

வார் எஸ். சிதம்பரதாணுப்பிள்ளையவர்கள்.[2] படு, தொடு, தட்டு என்னும் மூன்றோடு உள்வர்மம், நோக்குவர்மம் அல்லது மெய்தீண்டாக்காலம், சர்வாங் கவர்மம் என்னும் மூன்றைச் சேர்த்துவகைப்படுத்துவார் எம். மரியலாரன்ஸ் அவர்கள்[3]

"வகையதுவே இருவகையாம் சொல்லக் கேளு
வழுத்துவார் படுவர்மந்தொடு வர்ம மென்ன
தொகையதுவே படுவர்மம் பன்னி ரண்டும்
சொல்லரிய தொடுவர்மம் தொண்ணூற் றாறும்
நகைபுரிய ஒருநூற்றெட் டல்லா துண்டோ
நவிலுவார் உள்வர்மம் ஆறுண் டென்ன
பகையறவே திசைபேதம் நூல்கள் தோறும்
பலவிதமாய் வர்மமது பகர்வார் காணே". (வர்மசூட்சம், 3)

என்பது, படுவர்மம் பன்னிரண்டு, தொடுவர்மம் தொண்ணூற்றாறு என்ற வகையையும், அவற்றின் தொகையையும் தெளிவுபடுத்துவதோடு உள்வர்மம் ஆறு உண்டு என்பாரும், மேற்கூறிய இரண்டு வகையைத் தவிர பலபிரிவுகள் உண்டு என்பாருமாக நூலாசிரியர் பலரும் பல வகையாக வேறுபடுகின்றனர் என்ற கருத்தையும் வெளிப்படுத்துகிறது. `படுவர்மம், தொடுவர்மம், தட்டுவர்மம் என்று வர்மத்தை மூன்று வகையாகக் கூறுகிறார்கள் என்பர் தேவசகாயம் அவர்கள்.[4]

"பூணுகின்ற பிராணகலை நாலு மூன்றில்
மூன்றுபுகப் படுவர்மம் பன்னி ரண்டாம்
வேணுமென்ற பதினெட்டு வர்மம் ஒன்றில்
விபரமுடன் இரட்டையாய் வந்த தென்ன?"

(ஒடிவு முறிவு, 17)

"நீங்கிடுநீ படுவர்மம் பதினெட் டுக்கும்
நிலையான தொடுவர்மம் தொண்ணூற் றாறும்"

(மேல் நூல், 59)

2. தொடுவர்மத்திரட்டு, பக். 4.
3. வர்மம், கட்டுரை இந்திய மருத்துவக் கல்லூரி ஆண்டுமலர்.
4. சித்த வைத்தியத்தில் வர்மப்பரிகாரம், கட்டுரை.

படுவர்மம் பெயரளவில் பன்னிரண்டு என்றாலும் எண்ணிக்கையால் பதினெட்டாகும் என்பதை இப்பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

"பாரப்பா படுவர்மம் பன்னி ரண்டும்
பாங்கான தொடுவர்மம் தொண்ணூற் றாறும்
வேரப்பா மெய்தீண்டாக் காலம் ஒன்றும்
வெற்றியென்ற பச்சிலையும் விளம்பக் கேளு" (வர்ம சூத், 6)

என்பது படுவர்மம், தொடுவர்மம் ஆகிய இரண்டு வகையோடு மெய்தீண்டாக் காலம் என்பதைச் சேர்த்துக் கூறுகிறது. ஆனால்,

"எட்டான கலையுடனே பிராணன் நாலும்
ஏகினதால் ஈராறு கலையாம் என்ன
கட்டான ஈராறு வழியெட் டாகி
கருதினதால் தொடுவர்மம் தொண்ணூற் றாறாம்
நெட்டுறவே இவையெல்லாம் நூற்றெட் டாதி
நேர்ந்ததினால் நூற்றெட்டு வர்ம மாகும்." (ஓடிவுமுறிவு, 15)

என்பது நூற்றெட்டு வர்மங்களை மட்டும் உறுதிப்படுத்துகிறது. வர்ம நிலைகளைக் கூறுவதில் இந்நூல் உடல், உயிர் ஆகியவற்றின் அமைப்பை இருவகைக் கலைகளாகக் கொள்ளுகிறது. அதாவது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும், இடகலை, பிங்கலை, சுழிமுனை என்னும் திரிநாடிகளும் ஆகிய எட்டும் உடற்கலையாகும். மலம், மூத்திரம், சுக்கிலம், கருவிழி ஆகிய நான்கும் உயிர்க்கலையாகும். இவற்றுள் உடற்கலைகளில் ஏற்படும் தூண்டுதல்களால் உயிர்க்கலைகள் பாதிக்கப்பட்டு வெளிக்காட்டுகின்றன. இந்தப்பன்னிரண்டு அமைப்புகளை அடிப்படையாகக் கொண்டவை பன்னிரண்டு படுவர்மங்களாகும். அவை ஒவ்வொன்றும் எட்டுஎட்டு என்றாகி அவற்றின்வழித் தோன்றும் வர்மங்கள் தொண்ணூற்று ஆறு ஆகின்றன. இவை தொடுவர்மம் எனப்பெறுகின்றன. உடற்கலைகளில் அடிபட்டு உயிர்க்கலைகள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுத் தோன்றுதலின் படுவர்மம் (கலைகளின் வழிப்படுவன) எனப்பட்டது. அந்தப் படுவர்மங்களைத் தொட்டுத்தொடர்தலின் தொடுவர்மம் எனப்பட்டது. இப்பொருள் விளக்கத்தை இந்தப் பாடலடிகள் உணர்த்துகின்றன.

படுவர்மம்

படுவர்மம் பன்னிரண்டு, தொடுவர்மம் தொண்ணூற்றாறு என்னும் வகைப்பாட்டில் நூலாசிரியர் எவரும் மாறுபடவில்லை. இந்த அடிப்படையில் வர்மத்தொகையையும் வரையறுக்கலாம். இந்த இருவகை மட்டுமே சிறப்பாக

இங்கு எடுத்துக்காட்டப்பெறுகின்றன. அவற்றுள் இது படுவர்மம் பற்றிய விளக்கமாக அமைகிறது.

"படுவர்மம் குறிப்பிட்ட சில இடங்களில் அடிபட்டு அதாவது மாத்திரைக்கு அதிகப்பட்ட வதைகாயத்தால் முறிவுண்டு சாதல், முறிவில்லையானால் உணர்விழத்தல். இது அசாத்தியமும் சாத்தியமுமான வர்மம்....படுவர்மத்தையும் தொடுவர்மத்தையும் வேறு படுத்திக் கூறவேண்டுமானால் படுவர்மம் ஏதாவது அசம்பாவித விபத்து முதலியவற்றால் ஏற்படுவது என்றும், தொடுவர்மம் நமக்குத் தெரியாமலே பிறரால் ஏற்படுவது என்றும் கொள்ளலாம்"[5]

"படுவர்மம் என்ற சொல் காரணப்பெயர். அது எவ்வாறெனில் மர்மப்பகுதிகளில் அடியோ...தாக்கோ படுமானால் ஏற்படும் வர்மமே படுவர்மம் ஆகும். படு என்ற சொல் அதிகம் என்ற பொருளையுங்குறிக்கும். படுவேகம் என்றால் அதிக வேகம் என்பது போல. இந்தப் படுவர்மப் பகுதிகளில் அடிபட்டால் அதிக ஆபத்துகள் நேரிடும். இதனாலும் இதனைப் படுவர்மம் எனக் கூறினர் எனலாம்"[6]

"படுவர்மங்களில் வர்மங்கொண்டால் உயிருக்குக் கெடுதல் உண்டாகும். உயிர்க்கலைகள் நான்கான கருவிழி மேலேவாங்கிக் கண்ணீர் வருதல், மலம், மூத்திரம் போகாமலிருத்தல்...விந்து வெளி வந்துவிடுதல் ஆகிய இவைநான்கும் கண்டால் அசாத்தியக் குறி குணங்களாகும்"[7] வர்ம வகைகளைப் பலவாறாகக் கூறவது போலவே ஒவ்வொரு வகையைப்பற்றிய எண்ணிக்கை, பெயர்கள், அப் பெயர்களுக்குக் காரணம் ஆகியவற்றையும் நூலாசிரியர் பலரும் பல வகையாகக் கூறுகின்றனர். அவற்றுள் படுவர்மம் என்பதற்குத்தரும் விளக்கங்களும் அமைகின்றன.

எதிர்பாராத விபத்துகளால் ஏற்படுவது, அதிக ஆபத்துகளை விளைவிப்பது என்பன தொடுவர்மத்திற்கும் உரியவையாகும். எனவே உயிர்க்கலைகளைப் பாதிப்பனவே படுவர்மங்களாகும் என்னும் ஒடிவு முறிவுப்பாடலின் (15) கருத்தே பொருத்தமுடையதாகிறது. படுவர்மங்களின் பெயர்களைச் சுட்டுவதிலும் நூலுக்குநூல் (சுவடிக்குச் சுவடி) வேறுபடுகின்றன. அவை முறையே பட்டியலிட்டு விளக்கப்படுகின்றன.

5. வர்மம், கட்டுரை. 6. வர்மசூத்திரம், பக். 21 7. ஒடிவுமுறிவு, பா.14 உரை.

வரிசை எண்	படுவர்மப் பெயர்கள்	படுவர்மத்திரட்டு	வர்மசூட்சம்	வர்ம சூத்திரம்	வர்ம சூத்திரம் (பதிப்பு நூல்)	வர்மக்கண்ணாடி	வர்ம சூட்சம் (சுவடி)	வர்மகண்டி
		1	2	3	4	5	6	7
1.	அடைப்பு வர்மம்		✓	✓	✓		✓	✓
2.	அத்திச்சுருக்கி – சிறியது		✓	✓	✓	✓	✓	✓
3.	அத்திச்சுருக்கி – வலியது		✓	✓		✓	✓	✓
4.	அரிவர்மம்	✓						
5.	உருத்திரவர்மம்	✓						
6.	உறக்க காலம்		✓	✓	✓	✓	✓	
7.	உறுமிக் காலம்		✓	✓	✓	✓	✓	✓
8.	கல்லடைக் காலம்		✓	✓	✓	✓	✓	✓
9.	கொழுந்து வர்மம்	✓			✓			
10.	சங்குவர்மம்	✓						
11.	செவிக்குத்திக் காலம்		✓	✓	✓	✓	✓	✓
12.	திலதவர்மம்	✓	✓	✓	✓	✓	✓	✓
13.	திவளை வர்மம்		✓		✓	✓		✓
14.	தும்மிக் காலம்			✓	✓	✓ மீனம்		
15.	நட்சத்திர காலம்		✓	✓	✓	✓	✓	✓
16.	நாடிவர்மம்	✓					✓	
17.	நுனிவர்மம்	✓						
18.	நேர் வர்மம்		✓	✓		✓	✓	✓
19.	பிடரி வர்மம்		✓	✓		✓	✓	✓
20.	பிரம்ம வர்மம்	✓						
21.	மூத்திர காலம்		✓		✓	✓	✓	✓
22.	லிங்க வர்மம்	✓						
23.	வருண வர்மம்	✓						
24.	வாடை வர்மம்	✓						
25.	வாயு வர்மம்	✓			✓			
		12	13	12	13	13	13	12

படுவர்மப் பெயர் வேறுபாடுகள்

படுவர்மப் பெயர்களைச் சுட்டுவனவாக இந்தப் பதிப்புச் சுவடி உட்பட ஏழு நூல்கள் எடுத்துக்கொள்ளப்பெற்றுள்ளன. அவற்றுள்,

1. படுவர்மத்திரட்டு, 2. வர்ம சூட்சம், 3. வர்மசூத்திரம் 4. வர்மசூட்சம் (சுவடி), 5. வர்மகண்டி என்னும் ஐந்து நூல்களும் படுவர்மங்களைத் தனித்துக்கூறுகின்றன. வர்மக்கண்ணாடியும் வர்மசூத்திரம் என்னும் இங்குப்

பதிப்பிக்கப்பெறும் நூலும் நூற்று எட்டு வர்மங்களையும் தொகுத்துக்கூறு வனவாகும். அவற்றிலிருந்து பிற நூல்கள் கூறும் படுவர்மப்பெயர்களை மட்டும் எடுத்துப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. படுவர்மம் பன்னிரண்டு என்பதை ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு பெயரால் சுட்டுவதைப் பட்டியலில் காணலாம். ஒரு நூலை அடிப்படையாக வைத்துக்கொண்டு அது கூறும் எந்தெந்தப் பெயர்களைப் பிற நூல்கள் வேறுபெயரால் குறிப்பிடுகின்றன என்பதை வரையறுத்துக் கூறவும் இயலவில்லை. காரணம் அவை கூறும் வர்மங்களுக்குரிய வர்மத்தானத்தை அவை கூறுவதில்லை.

படுவர்மத்திரட்டு என்பது தனியே படுவர்மங்களைமட்டும் தொகுத்துக் கூறுவது. பிறநூல்கள் குறிப்பிடாத அரிவர்மம், உருத்திரவர்மம், நுனிவர்மம், பிரம்மவர்மம், லிங்கவர்மம், வருணவர்மம், வாடைவர்மம் என்னும் ஏழு பெயர்களைப் புதியதாகக் குறிப்பிடுகிறது. அந்த வர்மங்கள் எங்கேநிலை பெறுபவை என்பதையும் சுட்டவில்லை. அவற்றின் அறிகுறி, அவற்றிற்கு மருத்துவமுறை என்பனவற்றை மட்டுமே கூறுகிறது. அந்தக் குறிகுணங்களும் பிறநூலில் கூறுப்பெறும் குறிகுணங்கள் அனைத்திற்கும் ஒத்து வருவதில்லை.

வர்மசூட்சம் என்னும் நூல் படுவர்மம் பன்னிரண்டு என்று குறிப்பிட்டுப் பாடலில் பதின்மூன்று பெயர்களைச் சுட்டி அவற்றிற்கு விளக்கமும் தருகிறது. வர்மக்கண்ணாடி என்னும் சுவடியில் நூற்றெட்டு வர்மப் பெயர்களும் அவற்றின் இடமும் குணமும் இடம் பெறுகின்றன. அவற்றுள்ளும் பதின்மூன்று படுவர்மப் பெயர்கள் இடம்பெறுகின்றன. ஆனால் எவற்றையும் படுவர்மம், தொடுவர்மம் என்று அந்நூல் சுட்டிக் கூறவில்லை. பிற நூல்கள் குறிப்பிடும் உறுமிக்காலம் என்பதை வர்மக்கண்ணாடி `பன்றிவர்மம்' என்கிறது. நட்சத்திரக்காலத்தை வர்ம சூட்சம் என்னும் சுவடி மீனவர்மம் எனச்சுட்டுகிறது. வேறு பெயர்களாக அவை சுட்டுவதைப் பெயர்ப் பொருளாலும் அவற்றின் பொதுப்பண்பாலும் அறிய முடிகிறது.

திட்டமான உறுமியதின் காலங் கொண்டால்
நட்டமாய்க் கொண்டவுடன் உறுமு மப்பா

(வர்மசூத். பதிப்பு நூல், 48)

நாடியதோர் உறுமிவர்மங் கொண்டு தானால்
ஓடியதோர் காகமது கமறும் போலே
உறுமியே விழியிரண்டும் விழித்தி ருக்கும் (வர்மசூட்சம், 55)

"அறிவான பன்னிபோல் உறுமிச் சீறி
அமருவது கடிகையது இருபத் தெட்டாமீ"

(வர்மக்கண்ணாடி, 63)

இவற்றில் உறுமுதல் என்ற பொதுப்பண்பானது பன்றிபோல் உறுமும், காகம் கமறுவதுபோல் உறுமும் என்னும் உவமைகளோடு எடுத்துக்காட்டப்பெறுவதால் இந்த வேறுபட்ட பெயர்கள் ஒரே வர்மத்தைக் குறிக்கின்றன என்பதை உறுதிசெய்ய முடிகிறது.

மீனம் என்ற சொல் நட்சத்திரத்தைக் குறிக்கின்றது. மேலும்,

"சொன்னதோர் நட்சத்திரக் காலம் தன்னைத் . . . . .
தவறாமல் முகங்கோணி உடல்ந டுங்கும்"

(வர்ம சூத். பதிப்புநூல், 8)

"தானென்ற நட்சத்திரக் காலங் கொண்டால்
தவறாமல் கண்சிறிச் சிவந்து போகும்
ஆனென்ற முகங்கோணும் இன்னங் கேளு" (வர்ம சூட்சம், பா.28)

இவற்றில் கண், முகம், உடல் ஆகியவற்றின் பண்புகள் ஒத்துவருவதால் மீனவர்மம் என்ற சொல் நட்சத்திரக்காலத்தைக் குறிப்பது என்று உறுதிப்படுத்தலாம். இவ்வாறு பிறபெயர்களை ஒப்பிட்டு அறிவது கடினமாகிறது. படங்களின் துணை கொண்டு சிலவற்றின் இடஅமைப்பால் அவை பெறும் வேறு பெயர்களை ஓரளவிற்கு எடுத்துக் காட்டலாம். வர்ம சூட்சம் என்னும் நூல், தான் கூறும் பதின்மூன்று பெயர்களையும் அடிப்படையாகக்கொண்டு படுவர்மத் தானங்கள் இருபது என்பதையும் தெளிவுபடுத்துகிறது. அதாவது திலதம், திவளை, நேர், பன்றி, பிடரி, மூத்திரம் ஆகிய ஆறும் ஒவ்வொரு இடத்திலேயே நிலைபெறுகின்றன. ஆனால் அடைப்பு, உறக்கம், கல்லிடை, சிறிய அத்திச்சுருக்கி, செவிக்குத்தி, நட்சத்திரம், வலிய அத்திச்சுருக்கி ஆகிய ஏழும் இரண்டிரண்டு இடத்தில் நிலைபெறுவனவாகும்; அவையும் உடலின் முன்பக்கத்தில் ஐந்து, பின்பக்கத்தில் ஒன்று, இடப்பக்கம் ஏழு வலப்பக்கம் ஏழு என இருபது இடங்களில் அமைகின்றன என்பது நூல்தரும் விளக்கம்.[8]

"நாணுகின்ற தொகையதுதான் இருப தாச்சு
நல்குபதி னெட்டெனவே நவில்வார் பாரு" (வர்மசூட்சம், 10)

என்பது படுவர்மத்தானங்கள் பதினெட்டு என்று கூறுவோரும் உண்டு என்கிறது. இதேகருத்தை,

8. வர்மசூட்சம், பா. 9-10

"புக்கினதால் படுவர்மம் பன்னி ரண்டாம்
வேணுமென்ற பதினெட்டு வர்ம மென்னில்
விபரமுடன் இரட்டையாய் வந்த தென்னே" (ஒடிவுமுறிவு-17)

என்னும் அடியும் கூறுகிறது. படுவர்மம் பன்னிரண்டில் ஒரு சில இரட்டையாவதை நோக்கப் படுவர்மத்தானங்கள் பதினெட்டாகும் என்பது இதன் கருத்து. இக்கருத்து அத்திச்சுருக்கி என்னும் வர்மத்தை ஒன்றாகக் கொண்டு (சிறிய அத்தி, வலிய அத்தி என்னாமல்) அது இரண்டு இடத்தில் நிலைபெறும் என்று கொண்டதால் ஏற்பட்ட வேறுபாடாகும்.

தொடுவர்மம்

இங்குப் பதிப்பிக்கப்பெறும் சுவடியில் இறைவணக்கம், குருவணக்கம் ஆகியவை இல்லாதது போலவே படுவர்மம், தொடுவர்மம் என்னும் பகுப்பு பற்றிய செய்தியும் இடம் பெறவில்லை. எனவே இந்த நூலின் தொடுவர்மப்பெயர்களை முதன்மையாகக் கொண்டு பிற நூல்களை ஒப்பிட்டுக்காட்ட இயலவில்லை. கிடைத்துள்ள வர்மம்பற்றிய அச்சு நூல்களும், அச்சிடப்பெறாத சுவடிகளும் தொடுவர்மத்தை ஒரேமாதிரியாகக் கூறவில்லை.

தொடுவர்மத்திரட்டு என்பது ஒரு தனிநூல். அதுவும் சுவடிப்பதிப்பே. அது தொடுவர்மம் தொண்ணூற்றாறு என்று கூறி அவற்றின் பெயர்களைப் பாட்டு வடிவில் அமைத்துக்காட்டுகிறது[9]. அந்தத் தொண்ணூற்றாறு பெயர்களில் சங்கு, செவிக்குத்தி, தும்மி, பிடரி, அத்திச்சுருக்கி, நுனி ஆகிய வர்மங்களும் இடம்பெறுகின்றன. இவை படுவர்மப் பெயர்களில் இடம்பெறுபவையாகும். இத்தகு காரணங்களால் தொடுவர்மத்தின் பெயர்களைத் தனித்துத் தொகுக்க இயலவில்லை. கிடைத்த அனைத்து நூல்களும் தரும் பெயர்களைத் தொகுத்து அகரவரிசைப்படுத்திப் பட்டியலாகக் காட்டப்பெற்றுள்ளது.[10]

வர்மங்கள் நூற்றெட்டு என்று கூறும் நூல்களும் சுவடிகளும் பலவேறுபட்ட பெயர்களைச் சுட்டுகின்றன. அவ்வாறு பெயரளவில் காணப்பெறும் வர்மங்களின் எண்ணிக்கை 'இருநூற்றுத் தொண்ணூற்றைந்து' என்ற நிலையை உருவாக்க முடிகிறது. படுவர்மப் பட்டியலில் இடம்பெறும் இருபத்தைந்து பெயர்களை நீக்கிக்காண இருநூற்று எழுபது வர்மப்பெயர்கள் கிடைக்கின்றன.

வர்ம நூல்களில் தொடுவர்ம வேறுபாடுகள்

தொடுவர்மங்களைமட்டும் திரட்டிக்கூறும் 'தொடுவர்மத்திரட்டு' என்னும்

9. தொடுவர்மத்திரட்டு, பா. 3-7
10. இணைப்பு 5இல்.

நூல், அறுபத்து ஒன்பது வர்மப் பெயர்களைச் சுட்டுகிறது. அவற்றுள் ஆதாரக் காலம், உள்வர்மம், ஒடுக்கிவர்மம், பேய்பூதவர்மம் என்னும் நான்கும் ஆறு, ஆறு வகைகளாக நிலை பெறும் எனவும், தட்டுவர்மம் என்பது எட்டு நிலைகளையுடையது எனவும் சுட்டுகிறது. இவற்றால் இருபத்தேழு வர்மத்தானங்கள் கூடுதலாகக் கிடைக்கின்றன. எனவே அறுபத்தொன்பதும் இருபத்தேழும் சேர்ந்து தொண்ணூற்றாறு வர்மம் என்பது நிறுவப்படுகிறது. இவற்றுள் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறும் ஆதாரம் ஆறு என்பதற்கான பெயர்களாகக் கிடைக்கின்றன (தொடுவர்மத்திரட்டு இதை விளக்கவில்லை). இவை முறையே குதம் (மலவாயில்), குய்யம் (குறி), நாபி (கொப்பூழ்), இதயம், அடிநா, நெற்றி ஆகிய இடங்களில் நிலைபெறும் வர்மங்களைக் குறிப்பனவாகும்.

தட்டுவர்மம் எட்டுநிலைகளையுடையது என்று கூறும் தொடுவர்மத்திரட்டு அந்த எட்டின் பெயர்களைச் சுட்டவில்லை. ஆனால்,

"உண்ணுகின்ற தட்டுவர்மம் எட்டுஞ் சொல்வேன்
உகந்தஇடம் எதுவென்று கேட்பா யானால்
கண்ணுகின்ற செவிக்குத்தி உறக்க காலம்
சடுதியாக ஆமைவர்மம் நேர்வர் மந்தான்
கண்ணுகின்ற உறுமிவர்மம் அடைப்பக் காலம்
கடியதொரு அத்தியென்ற சுருக்கி ரெண்டும்
மண்ணுகின்ற எட்டுவர்மத் திரமும் சொன்னேன்
மகத்தான அத்திவரு மாணி செய்யே"

(வர்மசூத்திரம் 131, பா. 127)

என்னும் பாடல் தட்டுவர்மம் எட்டையும் எடுத்துக்காட்டுகிறது. இவற்றில் செவிக்குத்தி வர்மமும் ஆமைவர்மமும் தொடுவர்மத்திரட்டு கூறும் அறுபத்து ஒன்பதில் அடங்குகின்றன.

வர்மக்கண்ணாடி, வர்மபீரங்கி ஆகிய நூல்கள் கூறும் வர்மப் பெயர்களுக்குரிய (பட்டியல் இணைப்பில் கொடுக்கப்பெற்றுள்ளது) அடிப்படையில் நோக்க வர்மப் பெயர்களும், அவற்றின் எண்ணிக்கைகளும் பலதிறப்படுவதை உணரலாம். வர்மக் கண்ணாடி என்னும் நூல்,

"பார்த்தபடி படுகாலம் தொடுகா லங்கள்
பண்பாக வேகலப்பாய்க் கண்டம் அய்ந்தாய்
உகந்துஅதை வெவ்வேறாய்ப் பிரித்துச் சொல்ல" (பா. 3)

என்று தொடங்குகிறது. இக்கூற்றின்படி அந்த நூலில் அடங்கும் ஐந்து பகுதிகளாவன–

1. "ஊனுதொகை கழுத்தின்மேல் இருபத் தைந்து
சிறக்கவே நாமிதுவே தெளிவாய்ச் சொன்னோம்" (பா. 5)

2. "சீராகக் கழுத்தின்கீழ் நாபி மேலே
. . . .
எடுத்ததொகை நாற்பதுவாம் எனவுஞ் சொன்னோம்" (பா. 9)

3. "நன்றேதான் நாபிமுதல் மூல மட்டும்
நாட்டத்தொகை ஒன்பதையும் நயந்து கேளே" (பா. 9)

4. "சிறியான கரமதிலே ஏழுஞ் செப்ப
. . . .
நாடியதோர் கரமதிலே எனவுஞ் சொன்னோம்." (பா. 10)

5. "குன்றாத காலதனில்மூ வைந்துஞ் சொல்ல" (பா. 11)

இந்த ஐந்து பகுதிகளில்,

1.	கழுத்துக்குமேல் உச்சிவரை	–	25	101
2.	கழுத்தின் கீழ் நாபிவரை	–	45	
3.	நாபிமுதல் மூலம் வரை	–	9	
4.	கையில்		7	
5.	காலில்		15	

என்னும் அளவில் நூற்றுஒரு வர்மத்தானங்களே இடம்பெறுகின்றன என்னும் பொருள் கிடைக்கிறது. ஆனால்,

"தொகையான நூற்றெட்டுஞ் சூழு கின்ற
தென்றபடு காலமொடு தொடுகா லங்கள்" (பா.13)

என்னும் அடிகளில் படுகாலம், தொடுகாலம் ஆகிய இருவகை வர்மங்களுஞ் சேர்ந்து நூற்றெட்டாகும் என்று முடிக்கிறது. வர்மப் பெயர்களையும் அவற்றின் இடங்களையும் முறைப்படுத்திக்கூறும் பாடல்களில் தொண்ணூற்றெட்டு பெயர்கள் இடம்பெறுகின்றன. இவற்றின் விளக்கம் அடிக்குறிப்பு பன்னிரண்டில் இடம் பெறுகிறது.

வர்மபீரங்கி என்னும் நூலிலும் இத்தகு வேறுபாடுகள் அமைகின்றன. இந்நூல் வர்மம் பற்றிய செய்தியைச் சொல்லும்போது,

"
. . . .
தாகுமே வர்மமொரு நூற்றெட் டுக்கும்
தலமதனைப் பிரித்துரைக்கும் சார்பைக் கேளு" (பா. 7)

என்று தொடங்குகிறது. தொடர்ந்து,

1.	கண்டத்தின் மேல்	25
2.	கண்டத்தின் கீழ் (நாபி வரை)	45
3.	நாபி முதல் மூலமட்டும்	9
4.	கையில்	10
5.	காலில்	11 – ஆகிய நூறு வர்மங்களை

எடுத்துரைப்பதாகக் கூறுகிறது.

"தவறாமல் நூற்றெட்டுத் தலமும் கண்டு
கோலமுடன் வகுத்துரைத்த பீரங்கி நூற்றில்
கூறுமது காலத்தின் குணங்கள் தன்னை" (பா. 19)

இவை நூறு வர்மங்களை மட்டுமே விரித்துரைப்பதாகக் கூறும் அடிகளாகும். வகுத்துக் கூறப்பெறும் வர்மப் பெயர்களைப் பட்டியலிடும் போது எண்பத்தொரு வர்மங்களே கிடைக்கின்றன.

வர்ம சூத்திரம் (பதிப்பு நூல்)

பதிப்பிக்கப்பெறும் இந்த நூலுக்கான சுவடி நேரே கொண்டைக்கொல்லி வர்மச்செய்தியைச் சொல்லத் தொடங்கிவிடுகிறது. ஒடிமுறிவு என்னும் சுவடி, நூலின் முன்னும் பின்னும் உள்ள செய்திகளையறியத் துணை செய்கிறது.

"செய்யவே வர்மமது நூற்றெட் டாகும்
செயலான கண்டமஞ்சு ஆதார மாறு
வையவே உட்கருவி முப்பத் தாறு
வகையான புறக்கருவி இருபத் தஞ்சு
துய்யவே மண்டலமூன்று தோஷம் மூன்று
தொகையானது உள்வர்மம் ஆற தாகும்
பையவே மானிடர்கள் அறிய வேண்டி
பகருவேன் இந்நூலில் பகர்ந்து பாரே" (ஒடிமுறிவு, 17)

"பகருவேன் நூற்றெட்டின் விவரம் சொல்லப்
பதிப்பான கழுத்தின்மேல் முப்பத் தேழு
நுகருவேன் கழுத்தின்கீழ் மூலா தாரம்
நுணுக்கமாய் வர்மம்முப் பத்து நாலு
தகரவே புறமுதுகில் பதினா றாகும்
தப்பாது காலில்வர்மம் பதினொன் றாகும்
இகரவே கையதிலே ஈரஞ் சாகும்
எண்ணிப்பார் வர்மமது நூற்றெட் டாச்சே" (ஒடிமுறிவு, 18)

என்பன வர்மத்தின் தொகை கூறும் பாடல்களாகும். இவற்றுள், கண்டம் ஐந்து – சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன; ஆதாரம் ஆறு – மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பன.

உட்கருவி முப்பத்தாறு – ஐம்பூதம், ஐம்பொறி, ஐம்புலன், கன்மேந்திரியம் ஐந்து, சிவதத்துவம் ஐந்து, உட்கரணம் நான்கு, மாயையும் மாயையால் தோன்றுவனவுமாகிய ஏழு ஆகிய முப்பத்தாறு என்பனவாக உரை கூறிச்செல்லுகிறார் ஒடிமுறிவு நூலின் ஆய்வாளர் அவர்கள்[11]. உட்கருவி முப்பத்தாறு என்பதை மேலே குறிப்பிட்ட ஏழுவகையாகப் பிரித்துக்கூறவில்லை. தொடர்ந்து முப்பத்தாறு கருவிகளின் பெயர்களை மட்டுமே குறிப்பிடுகிறார். ஆனால் வர்மசூத்திரம் குறிப்பிடும் கண்டம் ஐந்து என்பது முதலான எண்ணிக்கைகள் வேறுவகையில் இடம் பெறுகின்றன என்பதை அறிய முடிகிறது.

கண்டம் ஐந்து – நூற்றெட்டு வர்மங்களை விளக்கிச்சொல்ல விரும்பிய ஆசிரியர்,

1.	உச்சிமுதல் கழுத்துவரை (கழுத்தின்மேல்)	–	முப்பத்தேழு (37)
2.	கழுத்து முதல் மூலாதாரம் வரை	–	முப்பத்து நான்கு (34)
3.	முதுகில்	–	பதினாறு (16)

11. ஐம்பூதம் – ஆகாயம், காற்று, நிலம், நீர், நெருப்பு. ஐம்பொறி – கண், செவி, மூக்கு, மெய், வாய் (ஞானேந்திரியம் ஐந்து). ஐம்புலன் – ஊறு, ஒளி, ஓசை, சுவை, நாற்றம். கன்மேந்திரியம் ஐந்து – வாக்கு, பாதம் (கால்), பாணி(கை), பாயு (குதம்). உபத்தம். (தொடை) சிவதத்துவம் ஐந்து – ஈச்சுரம், சத்தி, சாதாக்கியம், சிவம், சுத்தவித்தை, உட்கரணம் நான்கு – மனம், புத்தி, சித்தம், ஆங்காரம், மாயை. மாயையில் – தோன்றுவன ஏழு - மாயை, இராகம், கலை, காலம், நியதி, புருடன், வித்தை.

4. காலில் – பதினொன்று (11)

5. கையில் – பத்து (10)

என வர்ம நிலைகளை ஐந்து பிரிவுகளாகப் பகுத்துக்கூறுகிறார். இதையே கண்டம் ஐந்து என்பர். (கண்டம் – பகுதி, பிரிவு, எல்லை.)

"பகர்ந்தபடி படுகாலம் தொடுகா லங்கள்
பண்பாக வேகலப்பாய்க் கண்டம் ஐந்தாய்
உகந்துஅதை வெவ்வேறாய்ப் பிரித்துச் சொல்ல"

(வர்மக்கண்ணாடி, 3)

என்னும் அடிகளும், படுவர்மம், தொடுவர்மம் ஆகிய இரண்டு வகையில் அடங்கும் நூற்றுஎட்டு வர்மங்களையும் ஐந்து கண்டங்களாகப் பிரித்துச் சொல்லலாம் என்றே கூறுகின்றன. இவ்வாறு கூறிய வர்மக்கண்ணாடி என்னும் நூல், 1. கழுத்தின் மேல் 2. கழுத்தின் கீழ் நாபிவரை 3. நாபிமுதல் மூலம் வரை 4. கையில் 5. காலில் என்னும் ஐந்து பகுதிகளிலும் அடங்கும் வர்மங்களைப் பகுத்துக்கூறுகிறது.[12] இதுவே கண்டம் ஐந்து என்பதை உணர்த்துவதாகும். இந்த ஐந்து பிரிவுகளில் வர்ம எண்ணிக்கை தெளிவுபட அமையவில்லை. எனினும் ஐந்து கண்டங்களாகப் பிரித்துத் தொகுத்துக் கூறியுள்ள பாடலில் (பா.18) நூற்றுஎட்டு வர்மங்களும் நிறைவாக உள்ளன என்பதை மேலே குறிப்பிட்ட பாடலிலும் அதன் விளக்கத்திலும் காணலாம்.

ஆதாரம் ஆறு – நூற்றெட்டு வர்மங்களை உடலின் ஐந்து பெரும் பகுதிகளில் அமைத்துக் காட்டியது போல அவை நிலைபெறும் இடங்களையும் பகுத்துக் குறிப்பிடுகிறது இந்நூல். அந்த அடிப்படைத்தானங்களையே ஆதாரம் என்ற சொல்லால் குறிப்பிடுகிறது; அந்தத் தானங்களை ஆறு வகைப்படுத்துகிறது. அவை,

அடிநா, இதயம், குதம் (மலவாயில்), குய்யம் (குறி), நாபி (கொப்பூழ்), நெற்றி என்பனவாகும். இவற்றை மூலாதாரம் (குதம்), சுவாதிட்டானம் (குய்யம்), மணிபூரகம் (நாபி), அநாகதம் (இதயம்), விசுத்தி (அடிநா), ஆக்கினை (நெற்றி) என்னும் சொற்களால் குறிப்பிடுவர்.

உட்கருவிகள் – வர்ம அமைப்பைக் கண்டம் ஐந்தாகவும் ஆதாரம் ஆறாகவும் பிரித்துக்கூறிய நூலாசிரியர், வர்மத்தானங்களில் அடிபட்டு நோயுற்ற

12. ஐந்துகண்டங்களிலும் 101 வர்மங்களே அடங்குகின்றன. கழுத்தின் கீழுள்ள 45இல் ஒன்று குத்துவர்மம் என்று கூறி, அது ஒரு பக்கத்திற்கு நான்காக இருபுறமும் எட்டாகிறது என்கிறது. இதனால் ஏழு வர்மங்கள் கூடுதலாகி 108 என்பது நிறைவு பெறுகிறது.

போது, நோயின் உண்மையறிந்து குணப்படுத்துவதற்குரிய அடிப்படைக் கொள்கைகளையும் வகுத்துக்காட்டுகிறார். அக்கொள்கைகளுக்குரிய கருவிகள் உட்கருவி, புறக்கருவி என இருவகைப்படும். அவற்றுள் உட்கருவி முப்பத்தாறு, புறக்கருவி இருபத்தைந்து என்பது ஆசிரியர் கூற்று. ஐம்பூதம் முதலான முப்பத்தாறினை உரையாசிரியரும் காட்டியுள்ளார் (அடிக்குறிப்பு, 11). ஆனால், நோயையறிதற்குரிய கருவிகளாக அவற்றைப் பயன்படுத்துவது இயலாத ஒன்று. எனவே,

1. நாடியும் பிறவும் உட்கருவிகள்
2. குறிகுணமும் பிறவும் புறக்கருவிகள்

எனக்கொண்டு வர்மநோயைக் குணப்படுத்த முயற்சிசெய்வதே முறையாகுமாதலின் நாடி முதலியன, குறிகுணம் முதலியன என்பவற்றை முறையே உட்கருவி, புறக்கருவிகளாகக் கொள்ளலாம்.

"நீங்கிடுநீ படுவர்மம் பதினெட் டுக்கும்
நிலையான தொடுவர்மம் தொண்ணூற் றாறும்
வாங்குகின்ற தலங்களெல்லாம் அறிந்து போகும்
வகையறிந்து செய்தாலோ நன்மை யாகும்
ஆங்குகின்ற இடகலையும் சுழிமு னையும்
அறிந்தேநல் வழியறிந்து தேர்ந்து செய்தால்"

(ஒடிவுமுறிவு சாரி, 60)

என்பது நாடிகளை அறிவதே முதற்கருவி எனச்சுட்டுகிறது. நாடிகள் உடலின் உட்புறத்து அமைதலின் அவை உட்கருவியாயின.

புறக்கருவிகள்

வர்மநோய் ஏற்பட்டதன் அறிகுறிகளைக்கண்டு மூவகை நாடிகளின் மிகை, குறைகளால் ஏற்படும் குணம், குறிகளோடு ஒப்பிடும் போது இந்த நாடியைச் சார்ந்த வர்மத்தானத்தில் அடிபட்டுள்ளது என்பதை உணர்ந்து ஏற்ற இளக்குமுறைகளைக் கையாளலாம். அந்தந்த வர்மங்களுக்கேற்ற குணம், குறிகள் ஆங்காங்கு இடம் பெறுகின்றன. இந்தக் குணங்குறிகளை அறிவதற்கு ஏற்றவாறு ஒவ்வொரு வர்மத்தின் உட்பிரிவுகளையும் அறிய வேண்டியுள்ளது. அதாவது ஒரே பெயரையுடைய, ஒரே குணத்தையுடைய வர்மம் ஒன்றுக்குமேற்பட்ட இடத்திலும் அமைவது உண்டு. அதாவது சிலவர்மங்கள் உடலில் ஒரே இடத்தில் அமைகின்றன; சில இரண்டிடங்களில் அமைகின்றன. சான்றாக,

பிடரிவர்மம் என்பது கழுத்தின் பின்புறம் பிடரிக்குழியாகிய ஒரே இடத்தில் அமைகிறது. எனவே இது ஒற்றை வர்மம் எனப்பெறும். ஆனால் செவிக்குத்தி வர்மமானது இருபுறச் செவிகளின் பின்புறக்குழிகளில் இடம்பெறுகிறது. எனவே இது இரட்டை வர்மம் ஆகிறது. பதிப்பு நூலில் குறிப்பிடப்பெறும் நூற்றுஎட்டு வர்மங்களும் இவ்வாறு இட அமைப்பால் நூற்று எழுபது என்ற அளவைப் பெறுகின்றன. நூலில் கூறியபடியான ஐந்து கண்டங்களில் இடம்பெறும் வர்மங்களும் அவற்றில் அமையும் ஒற்றை, இரட்டை வர்மங்களின் எண்ணிக்கையும் கீழ்க்காணும் எண்ணிக்கையில் அடங்குகின்றன. அவை:

வர்மங்கள் – ஒற்றை, இரட்டை

		வர்மங்கள்	ஒற்றை	-	இரட்டை		மொத்தம்
1.	கழுத்துக்கு மேல் (உச்சி முதல் கழுத்துவரை)	37	17 (17	– +	20 40)	=	57
2.	கழுத்துக்குக்கீழ் மூலாதாரம் வரை	34	8 (8	– +	26 52)	=	60
3.	முதுகுப்புறம் (கழுத்து – மூலாதாரம்)	16	4 (4	– +	12 24)	=	28
4.	காலில்	11	9 (9	+ +	2 4)	=	13
5.	கையில்	10	8 (2	– –	2 4	=	12
	மொத்தம் –	108	46 (46	– +	62 124)	=	170

நூலுள் இடம் பெறுவன

இட அமைப்பால் எந்தெந்த வர்மங்கள் எங்கெங்கு அமைகின்றன என்பதைக் குறிப்பிடும் பாடல்களில் நூற்று எட்டு வர்மங்களின் பெயர்கள் கிடைக்கின்றன. அவற்றின் அடிப்படையில் இந்த நூற்று எழுபது என்ற தொகை கணக்கிடப்பெற்றது. ஆனால் இந்த நூலுள் இடம்பெறும் நூற்று ஐந்து

பாடல்களில் தொண்ணூற்று ஆறு வர்மங்களே இடம்பெறுகின்றன.[12அ] இரண்டாவது பகுதியில் இடம்பெற வேண்டிய இடம்புரி வர்மம், முதுகுப் பகுதியில் குறிப்பிடப்பெற வேண்டிய எல்முடிச்சு வர்மம், கையில் இடம்பெறும் பத்து வர்மங்கள் ஆகிய பன்னிரண்டும் நூலில் விடுபட்டவையாகும்.

மும்மண்டலம்

சந்திர, சூரிய, அக்கினி மண்டலங்கள் மும்மண்டலம் எனப்படும். மூலாதாரம் தொடங்கி தலையுச்சிவரை பரந்து ஒளிதருவது சந்திரமண்டலமாகும். சூரிய மண்டலம் என்பது மார்பினிடத்தே அறுகோண வடிவில் இடம்பெறுவது. காற்றும் நீரும் சேர்ந்தவிடத்தில் நாற்சதுர வடிவில் நிற்பது அக்கினி மண்டலம் எனப்பெறும். இவை முறையே இடத்தாலும் செயலாலும் பொருந்தும் வர்மத்தானங்களையும், வர்மக்குறி குணங்களையும் குறிப்பிடுவனவாகும்.

முத்தோஷம்

முத்தோஷம் என்பது வாத, பித்த, சிலேத்துமங்களாலாகிய முப்பிணிகளையே குறிப்பதாகும். இவையும் வர்ம நோய்களையறியத் துணைபுரிகின்றன.

உட்கருவி, புறக்கருவி என்னும் இரண்டுவகைக் கருவிகளுக்கும் சில கருத்துகள் துணை நிற்கின்றன.

"ஐந்துருவும் மூன்றுருவும் ஒன்றாய்க் கூடி
அதனாலே இரண்டுருவுங் களங்க மின்றி
தோய்ந்ததுதான் அண்டபகி ரண்ட மெல்லாம்"

என்றபடி நிலமும் நீரும் நெருப்பும் வளியும் வெளியுமாகிய இயற்கையின் அடிப்படையை மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளுக்கு இணையாக்குவர்; சூரியனும்—சந்திரனும், அக்கினியுமாகிய ஒளிகளை, இடகலை, பிங்கலை, சுழிமுனை என்னும் கலைகளுக்கு இணையாக்குவர்; ஐந்தும் மூன்றுமாகிய இவற்றின் சேர்க்கையால் உருவானதே விந்தும் நாதமும் இணைந்த உடல் என்பர். இப்பொருத்தங்கள் அனைத்தும் ஆசான்கள் எனப்பெறும் வர்மாணிகளால் வர்மநிலைகளோடு பொருத்திக் காட்டப்பெறுவனவாகும்.

ஈ. நாடிகள்

நாடி – உடல்நிலையை நாடி (ஆய்ந்து) அறிய உதவுதலின் இது நாடி எனப்பட்டது. நாடிகள் உந்திச்சுழியிலிருந்து தோன்றிக் கீழும் மேலுமாக உடலிற்

12அ. விளக்கம் நூலுள் இடம் பெறும் வர்மங்கள் என்னும் தலைப்பில் (ஏ) சுட்டப் பெற்றுள்ளது.

பரவிச் செல்லுவனவாகும். இவ்வாறு உடல் முழுமையும் பரவிப் பற்றி நிற்பன உண்மையில் நாடிகள் ஆகா; நாடியோட்டமுடைய நரம்புகளேயாகும். இருதயத்தின் இடதுப்புறச் சடரமாகிய வயிறு குவியும்போது இரத்தமானது நரம்புகளின்வழி ஓடிப் பல நரம்புகளிலும் பரவும். அப்போது நரம்புகள் விரிவடையும். மீண்டும் சடரப்பகுதி விரியும்போது நரம்புகளில் இரத்தம் குறைந்து நரம்பு சுருங்கும். இவ்வாறு நரம்புகள் விரிவதாலும் சுருங்குவதாலும் ஏற்படும் துடிப்பாகிய நடையே நாடி நடை எனப்படும். இந்தத் துடிப்பாகிய நடை இரத்த ஓட்டத்திற்கு ஏற்ப பலவகையாக அமையும். இந்த நாடியோட்டத்திற்குரிய நரம்புகளையே உடலுறுப்புகளில் மிகச் சிறப்புவாய்ந்தவையாகக் கருதுவர். எல்லா நோய்களுக்கும் ஏதேனும் ஒரு வகையில் நரம்புமண்டலங்களே காரணமாகின்றன என்பதே அதற்குக் காரணமாகலாம்.

"அரும்பு கோணிடில் அதுமணங் குன்றுமோ
கரும்பு கோணிடில் கட்டியும் பாகுமாம்
இரும்பு கோணிடில் யானையை வெல்லலாம்
நரம்பு கோணிடில் நாமதற் கென்செய்வோம்"

என்னும் பழம்பாடல் ஒன்று நரம்பின் வலிமையை எடுத்துகாட்டுவதாகும். நாடியோட்டத்திற்குரியனவாகிய நரம்புகளை எழுபத்திரண்டாயிரம் என்று கணக்கிடுவர். அவற்றுள்,

1. உயிரும் உயிர்ப்பும் இயைய, பிராணவாயு பரவிய பெருநாடிகள் 513
2. அமிழ்தஆறு எனப்பெறும் தலையில் நிலைபெறும் நாடிகள் 1305
3. இட, வல மூச்சினுள் அடங்குவன 1051
4. திருவருள் ஆற்றலால் உயிர்க்கும் நாடிகள் 56
5. திருவருள் முதல்வியுடன் உயிர்ப்பன 539
6. சிவபெருமான் ஆணைவழிச் செல்லுவன 233

என்பனவற்றைப் பெருநாடிகளாகக் காட்டுவர் திருமூலர்[13] நாடி, நாடிநரம்பு என்பனபற்றிய ஆழ்ந்த, தெளிவான கருத்துகளைப் பெற்றிருந்தனர் தமிழ்ப் பேரறிஞர்கள் என்பதற்குத் திருமூலரின் இந்தக் கருத்து எடுத்துக்காட்டாகிறது.

நோயறியும் நாடிகள் (தச நாடிகள்)

பலதிறப்பட்ட நாடிகள் மிகப்பலமாக மனித உடலிற் பின்னிப் பிணைந்து

13. திருமந்திரம் 674 – 681

கிடப்பினும் நாடியை அடிப்படையாக்கொண்ட மருத்துவ முறையில் நோயறியும் நாடிகளாகத் தசநாடிகள் என்ற பெயரில் பத்து நாடிகளையே வழக்காற்றில் கொண்டுள்ளனர்.

1.	இடகலை	–	இடது பக்க நாடி
2.	பிங்கலை	–	வலது பக்க நாடி
3.	சுழுமுனை	–	நடு நாடி
4.	சிகுவை	–	உள்நாக்கு நாடி
5.	புருடன்	–	வலக்கண் நாடி
6.	காந்தாரி	–	இடக்கண் நாடி
7.	அத்தி	–	வலச்செவி நாடி
8.	அலம்புடை	–	இடச்செவி நாடி
9.	சங்கினி	–	கருவாய் நாடி
10.	குரு	–	எருவாய் நாடி

என்பன தசநாடிகளும் அவற்றின் இட நிலைகளும் ஆகும். இவை நிலைபெறும் இடங்களை,

1.	சுழிமுனை	–	ஆதாரம் ஆறையும் பற்றி நிற்பது.
2.	இடகலை பிங்கலை	–	ஆகிய இரண்டும் உடல் முழுவதும் மாறிமாறிப் பின்னி நிற்பனவாகும்.
3.	காந்தாரி குரு	–	ஆகிய இரண்டும் நாபியில் நிலைபெறுவனவாகும்.
4.	அலம்புடை, புருடன்	–	ஆகிய இரண்டும் காதுகளிலும்,
5.	அத்தி, சிகுவை	–	ஆகிய இரண்டும் கண்களிலும் இடம் பெறுவனவாகும்.
6.	சங்கினி	–	உபத்தம் எனப்படும் குறியில் உறைவதாகும்.

என்னும் முறையில் விளக்கம் தருகிறது அபிதான சிந்தாமணி. இவற்றுள் முதல் மூன்று நாடிகளாகிய இடகலை, பிங்கலை, சுழுமுனை (சுழிமுனை) என்பன திரிநாடிகள் எனப்படும். இவற்றை முறையே வாதநாடி, பித்தநாடி, சிலேத்துமநாடி எனவும் வழங்குவர். இம்மூன்று நாடிகளுமே உடல்நிலையை அறிய மிகுதியாகப் பயன்படுத்தப்பெறுகின்றன. இவற்றுள்,

இடகலை

இடகலை (வாதம்) என்பது நாபி என்னும் கொப்பூழின் கீழ் இடுப்பு, தொடைகளில் மிகுதியாகப் பற்றி நிற்கும்நாடி. இது பல நோய்களுக்குக் காரணமான ஒருவகை வாயு; உயிருக்குத் தொல்லைதரும் உயிர்வேதனை பன்னிரண்டில் ஒன்று.[14] இது உடலுக்குத் தேவையான வெப்பத்தையும் குளிர்ச்சியையும் முறையாக அளித்து, மூச்சுவிடுவதையும் மூச்சு ஒடுக்கத்தையும் (சுவாசஒடுக்கம்) முறைப்படுத்தி, உள்ளத்தை உற்சாகப்படுத்தி உடலை வளர்ப்பது. இது அதிகமானால் உடல் நடுக்கம், இளைப்பு, ஓய்ச்சல் (அசதி) வயிறு உப்புதல், பலம்குறைதல் ஆகியவை உண்டாகும்; குறைந்தால் மறதி, காதடைப்பால் பேச முடியாமை, உடல் இளைத்துப்போதல் ஆகியவை உண்டாகும்.

பிங்கலை

பிங்கலை (பித்தம்) என்பது உந்தி, கண், நாக்கு, உதிரம் ஆகியவற்றைப் பற்றி நிற்கும் நாடியாகும். இது சீரணம், சுவை, தாகம், பசி, ஆகியவற்றை உணரச்செய்து, நினைவாற்றலையும் பார்வையையும் வளர்க்கும் தன்மையுடையது; உடலில் உள்ள ஒருவகை வெப்ப நீராகும். இது அளவுக்கு அதிகமானால் மலமும் சிறுநீரும் மிகுதியாகக் கழியும்; அதிக பசியும் தாகமும் எடுக்கும்; வயிறு எரிச்சல் உண்டாகும்; குறைந்தாலோ சீரணம் ஆகாது; புளிச்ச ஏப்பமும் மந்தமும் ஏற்படும்; அடிக்கடி மூர்ச்சை உண்டாகும்.

சுழிமுனை

சுழிமுனை (சிலேத்துமம்) என்பது ஆதாரம் ஆறையும் பற்றி நிற்கும் நாடியாகும். உடலில் உள்ள சிலேத்துமச் சத்து கோழையாகும். இது மூட்டுக் கீல்களுக்கு உறுதி அளித்து உடலை வளர்ப்பது. இது அதிகமானால் வாயில் நீர் ஊறுதல், உடல் வெளுத்தல், சில்லிட்டுப்போதல் ஆகியவை உண்டாகும்; குறைந்தால் மயக்கம், வியர்த்தல், மூட்டுகளில் வலி முதலியன அதிகமாகும்.

14. உயிர் வேதனை12 - அசனி (இடி), அனல், ஆயுதம், சீதம், தாகம், பசி, பிணி, புனல், மருந்து, முனிவுஅறாமை, வாதம், விஷம் என்பன.

உ. இளக்குமுறை

வர்மத்தில் அடிபட்டவர்களுக்குச் செய்யும் தொடக்க மருத்துவ முறையை வர்மாணியர் இளக்குமுறை என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றனர். இளக்குதல் என்னும் சொல் தணித்தல், தளர்த்துதல், மிருதுவாக்குதல் என்னும் பொருள்களில் குணமாக்குவதைக் குறிக்கிறது. வர்மத்தில் ஏற்படும் அடியால் நரம்புகள் இழுத்துக் கொண்டு உடற்பகுதிகளில் பிடிப்பை ஏற்படுத்துவது இயல்பு. அதனால் சில உறுப்புகள் அசைக்க முடியாத நிலையில் திடப்பட்டு விடுவதுண்டு. அந்த உறுப்புகளிலும் பிற பகுதிகளிலும் பலவகை வேறுபாடுகளும் தோன்றும். இவ்வாறு திடப்பட்ட (கெட்டியாகிவிட்ட) நிலையைத் தளர்த்தி இளகச் செய்வதையே இளக்குதல் என்பர். நோயைக் குணப்படுத்தி உறுப்புகளைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவது என்பதே இளக்கு முறை என்பதன் பொதுப் பொருளாகிறது. இந்த இளக்குமுறை பல வகைகளில் மேற்கொள்ளப்படுகிறது. என்றாலும் இதனை இரண்டு பெரும் பிரிவுகளில் அடக்கலாம். அவ்வ ஒவ்வொன்றும் பல வகைச் செயல்முறைகளை உடையவையாகும்.

இந்த இளக்கு முறைகளில் ஒன்றையோ பலவற்றையோ கையாண்டு வர்ம நோயை இளக்க முற்படுமுன் இந்த நோய் இளக்கக்கூடிய நிலையில் உள்ளதா, இளக்கு இயலாத நிலையை அடைந்துவிட்டதா என்பதை அறிய வேண்டும். முதலில் மேற்கொள்ளப்பெறும் இந்த ஆய்வு முறையை, இயலும் பண்பு, இயலாப்பண்புகளை (சாத்தியநிலை, அசாத்திய நிலைகளை) அறிதல் என்பர். இவற்றுள் இயலாப் பண்புகளை மட்டும் பகுத்து உணர்தல் போதுமானதாகும். அது அல்லாத நிலை அனைத்தும் இயலும் பண்புகளாகக் கொள்ள முடியும்.

இயலாப்பண்பு (அசாத்தியநிலை)

அடிபட்ட இடத்தில் வியர்வை தோன்றும்; தொட்டால் சில்லெனவும் இருக்கும்; மூச்சுவாங்கவும் விடவும் முடியாதநிலை காணப்பெறும். இவற்றை நுணுக்கமாகப் பார்த்து, இந்த வர்மத்தில் அடிபட்டுள்ளது என்பதை உறுதிப் படுத்துதல் வேண்டும். பிறகு அடிபட்ட நேரம், உடலிற்காணும் அறிகுறிகள் ஆகியவற்றை ஆய்ந்து இந்நோயைக் குணப்படுத்த முடியும் அல்லது முடியாது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அடிபட்டுள்ள இடத்தை அறியும் முறையை,

"ஆச்சரிய மாகஇந்தத் தலங்கள் கண்டால்
அதுவேர்வை குளிர்ந்திருக்கும் அறிந்து பாரு
பாய்ச்சலுடன் அத்தலத்தில் பிராண வாயு
பற்றியே சிக்கலொன்று பூண்ட தென்று

இளக்குமுறை

- 1 அடங்கல் முறை (மாற்று வர்ம முறை)
  - 1. அடித்தல்
  - 2. குத்துதல்
  - 3. தடவுதல்
  - 4. தட்டுதல்
- 2 மருத்துவ முறை
  - 1 மந்திரம்
  - 2 நசியம் (ஊதுதல்)
    - உணவு (கஞ்சி)
  - 3 மருந்துகள்
    - ஒத்தடம்
      - ஒத்தடம்
      - தொக்கணம்
      - பொட்டணம்
      - வேது
    - மருந்து
      - உள்ளுக்கு
        - இலேகியம்
        - எண்ணெய்
        - கியாழம்
        - நெய்
        - பொடி
        - மாத்திரை
      - பூசுதல்
        - தடவுதல்
        - தேய்த்தல்
        - நீவுதல்
        - முழுகுதல்
    - கட்டு

மாட்சிமையாய் நீயறிந்து தலத்தைத் தேர்ந்து
வலுவாக இருவினையும் வகுத்துப் பாரே"

(ஒடிவுமுறிவு, பா.13)

என்னும் அடிகளும் உணர்த்துகின்றன.

கருவிழி, சுக்கிலம், மலம், மூத்திரம் என்னும் நான்கும் உயிர்க்கலைகள் ஆகும்.

"தொகுப்பாகப் பிராணகலை என்னும் நாலும்
தோன்றினதால் பிராணனுக்குக் குற்ற மாகும்"

(ஒடிவுமுறிவு பா.14)

என்பது இந்த உயிர்க்கலைகளுக்கு ஆபத்து ஏற்பட்டு இவற்றின் செய்கையில் மாற்றம் ஏற்பட்டால் அது குணப்படுத்த இயலாத நிலையைக்குறிக்கும் எனச் சுட்டுகிறது. அதாவது வர்மத்தில் அடிபட்டதால்,

1. கருவிழி பிதுங்கி வெளியில் தோன்றக் கண்ணீர் வடிதல்
2. விந்து வெளியாதல்
3. அடிபட்ட உடனே மலம், மூத்திரம் ஆகியவை வெளியாதல்
4. சிறிது நேரத்திற்குப் பிறகு மலம், மூத்திரம் கழியாமல் இருத்தல் ஆகிய அறிகுறிகள் தோன்றுமானால் அந்த வர்மநோயைக் குணப்படுத்த முடியாது என்று உணரலாம் என்கிறது. மேலும்,

வர்மஅடிபட்ட இடத்தில் வீக்கமும் வலியும் காண்பதாலும் வர்மத்தானத்தை அறியலாம். பலத்த அடியாயின் ஐம்பொறிகளும் பாதிக்கப்பட்டு ஐம்புலன்களிலும் மாற்றம் ஏற்படக்கூடும். இதனை,

"தெரிந்தவரை மனம்பணிய தலமும் காணும்
செங்கதிரில் மதிப்பொடுங்கி ஒன்றாய்க் காணும்"
"கதிர்குலைகள் நொறுக்குண்டு நிறம்வே றாதல்
நேயமுடன் நூலற்றுச் சங்கி தாழ்தல்
நொடிக்குள்ளே நெட்டீழ்தல் சலவாய் பாய்தல்
தூயதலை யுருட்டிடுதல் பிரண்டு உருண்டல்
துணிந்துகண் விழித்துக்கை பார்த்துச் சீறல் – "

(ஒடிவுமுறிவு பா. 16, 20)

என்னும் பல பாடலடிகள் தெளிவுபடுத்துகின்றன. இப்பாடல் அடிகள்,

வர்ம நோயால் பய உணர்வோடு கூடிய மனக்கலக்கம் உண்டாகி விடுகிறது; உள்உணர்வு குறைய, ஐம்புலன்களும் தம் செயலிழக்கின்றன. இதயபாகத்தில் வர்ம நோய் ஏற்படுவதால் குரல்வளை நெருக்கப்பட்டு விடுகிறது; உள்நரம்புகளில் அழுத்தம் மிகுதியாகிவிடுகிறது; கை மூட்டுகள் (பொருத்துகள்) நழுவிவிடுகின்றன; இவற்றால் வாயில் இடைவிடாது நீர்பாயத்தொடங்கிவிடும்; தலை இரண்டுபக்கமும் மாறிமாறி உருட்டுதல், அங்குமிங்குமாகப் புரளுதல் ஆகிய கடுஞ்செயல்களால் கண்கள் சூரியனின் செங்கதிர் போலச் சிவந்து போகும்; கை கால் சேட்டை, சீற்றம், மாறிமாறிக் கருடனைப்போல் பார்த்தல், உடல் விறைத்துப்போதல் . . . போன்ற கடுமையான, அஞ்சத்தக்க அறிகுறிகள் காணப்படும்; இவை அனைத்தும் குணப்படுத்த இயலாப் பண்புகளாகும் என்பதைப் புலப்படுத்துகின்றன.

இயலும்பண்பு (சாத்தியநிலை)

வர்ம நோயுற்றவரின் குறிகுணங்களை அடிப்படையாகக் கொண்டு,

1. அடிபட்ட வர்மத்தானத்தைக் கண்டறிதல்
2. நாடிகளைச் சோதித்து வர்மத்தால் நேர்ந்துள்ள நாடித்துடிப்பின் மாற்றங்களை உணர்தல்
3. சரநிலை எனப்படும் உணர்வுநிலை எவ்வாறு உள்ளது என்பதை அறிதல்
4. வர்மநோய்க்கு ஏற்ப நாழிகை கடக்காமல் (அதிகமாகாமல்) இருக்கிறதா என அறிதல்
5. உட்காயம், வெளிக்காயங்களைக் காணுதல்

போன்ற எல்லா அடிப்படைகளையும் துணையாகக்கொண்டு இயலும் நிலையை (சாத்தியநிலை) அறிந்து இளக்க முற்படுதல் வேண்டும். இளக்கத்தொடங்குமுன் இறைவனையும் குருவையும் உள்ளத்தில் இருத்தித் தொடங்குவதை வர்மாணியர்களின் முதற்பணியாகவும் கொள்ள வேண்டும்.

அடங்கல் முறை

வர்மத்தானத்தில் அடிபட்டு நோயுற்றவருக்கு மருந்து கொடுக்குமுன் பிடித்துத் தூக்குதல், அமர்த்துதல், தடவுதல், தட்டுதல் ஆகிய முறைகளைக் கையாண்டு எழுந்திருக்கச் செய்யும் முதலுதவி முறையே அடங்கல்முறை எனப்படும். அடிபட்ட வர்மத்தானத்திற்கு மாறான ஒரு வர்மத்தானத்தில் தட்டுதல், தடவுதல் முறைகளைக் கையாள்வதனால் இதனை மாற்றுவர்மமுறை எனவும் வழங்குவர்.

அடங்கல் எனப்பெறும் மாற்றுவர்மங்கள் இருபத்து ஆறு என்பது படத்தின்வழி நிறுவப்படுகிறது. அவற்றுள் பத்தொன்பது அடங்கல்கள் இரண்டிரண்டு இடங்களில் இடம்பெறுவன; நான்கு அடங்கல்கள் ஒவ்வொரு இடத்தில் மட்டும் நிலைபெறுவன; இரண்டு நான்குநான்கு இடங்களிலும், ஒன்றுமட்டும் மூன்று இடங்களிலும் நிலை பெறுவனவாக மொத்தத்தில் ஐம்பத்துமூன்று அடங்கல்தானங்கள் உடலில் இடம்பெறுகின்றன.

அடங்கல்தானம்

இரண்டிரண்டு இடம் 19

1. புருவநுனி(மதிப்பிற)
2. அலவாடி உள்பூட்டு
3. உண்ணாக்கு அடி
4. வாயின் முன்பக்கம்
5. நாவடி
6. முன்தாடையுட்புறம்
7. மேல்காதின் அடிக்குழி
8. முண்டெலும்பின் அடி
9. முண்டெலும்பின் கீழ்
10. தொடையின் மேல்பூட்டு
11. தொடையின் புறப்பாகம்.
12. நடுத்தொடையின் முன்பக்கம்
13. கால் கவளிக்குள்
14. முன்னங்கால் மத்தி
15. உள்ளங்கால்
16. உள்ளங்கை
17. கைப்பெருவிரல் இடை
18. 'வரிப்பூட்டு (கை)
19. சத்தி கூர் அடங்கல் (கை)

ஒவ்வொரு இடம் – 4

1. குரல்வளைக்குழி
2. முண்டெலும்பின் இடை
3. முண்டெலும்பின் கீழ்
4. முண்டெலும்பின் உள்

நான்குநான்கு இடம் – 2

1. மூலாதாரப்பொருத்தும்
2. கழுத்துப்பேன்குழி

மூன்று இடம் – 1

1. முதுகின் அடிப்பாகம் – இடை

என்பன அடங்கல்கள் நிலைபெறும் இடங்களாகும்[15]

வர்ம அடிபட்ட இடத்தை அறிந்து அது இந்த வர்மம் என்று உறுதிப்படுத்தியவுடன் அந்த வர்மத்தானத்துக்கு மறு புறத்திலுள்ள அல்லது மேல், கீழுள்ள அடங்கலாகிய மாற்று வர்மத்தினை அறிந்து அங்குள்ள நரம்புகளைப்

15. ஒடிமுறிவு, பா.334-337

பக்குவமாய் வலித்து விடுதல் வேண்டும். வர்ம அடியின் மாத்திரை அளவுக்கு ஏற்றாற்போல மாற்று வர்ம நரம்புகளைத் தடவிவிடுதல், இலேசாய்த்தட்டுதல், சிறுபலமாகத் தட்டித் தடவுதல் போன்ற முறைகளால் சிறிது சிறிதாக நரம்புப்பிடிப்பை இளக்குதல் வேண்டும்.

பொது அடங்கல் முறைகள்

வர்மநோய் கொண்டவரை மிகவும் பக்குவமாகவும் மென்மையாகவும் முறையாகவும்,

1. தூக்கி அமர்த்துதல்
2. மார்புப்புறமும் முதுகுப்புறமும் தடவிவிடுதல்
3. விலா எலும்பு நன்கு விரியுமளவில் கைகளை விரித்துக் கட்டிக் கொள்ளச் செய்தல்
4. நரம்புகளை வலித்து விடுதல்
5. காலால் மிதித்து அமர்த்திவிடுதல்
6. வலது கையை வலப்புறமாகச் சுற்றி வளைத்து முதுகின் அருகில் தடவிவிடுதல்
7. இடது கையை இடப்புறமாகச் சுற்றி வளைத்து முதுகின் அருகில் தடவி விடுதல் (நூல், பா. 38-40)
8. தண்டு எலும்பும் தலையோடும் இணையும் குழியின் இரண்டு ஓரங்களிலும் இரண்டு கைகளின் பெருவிரல்களால் பிடித்து முன்னாகவும் பின்னாகவும் மேலாகவும் கீழாகவும் மூன்று முறை அசைத்து விடுதல் (ஒடிவுமுறிவு, பா.180)

என்பன இளக்கு முறையின் தொடக்கத்தில் மேற்கொள்ள வேண்டிய பொது அடங்கல் முறைகளாகும். அடிபட்ட வர்மத்திற்கு ஏற்றவாறு இவற்றுள் சிலவற்றை மேற்கொள்ளலாம்.

"மூட்டுவாய் எடுத்திருத்தி முடியைத் தூக்கி
முறையாக நாடிதன்னில் ஏந்திக் கொண்டு
தீட்டுவாய் உள்தாரை பிறதாரை ரெண்டும்
திடம்பெறவே தான்தடவி ஏத்திக் கூட்டிக்
கூட்டுவாய் இருகாலும் அசைத்துக் கூட்டிக்
குறிப்பாகக் கைகெட்டிச் செலுத்தி ஆட்டி
ஆட்டுவாய் சங்குதிரி வர்மம் ஒன்றாய்

அடவாகத் தானிமிர்த்து அசைத்து வையே"
"வைத்திடவே சங்குதிரி மேலுஞ் செய்து
வளமாக அதனகத்து விரல்கொ டுத்துத்
தோத்திடவே அசவுகொட்டி விடுகில் சீவன்
தயங்கியே மீளுவது சாத்திய மாகும்"

(வர்மக்கண்ணாடி, பா.46-47)

என்னும் பாடல்களும் தூக்கி இருத்துதல், தடவி ஏத்துதல், நிமிர்த்தி முன்னும் பின்னும் கீழும் மேலுமாக அசைத்து விடுதல் முதலான அடங்கல் முறைகளைத் தொகுத்துத்தருகின்றன.

சிறப்பு அடங்கல் முறைகள்

வர்மங்களுக்கு ஏற்ற சிறப்பு அடங்கல்முறைகளையும் நூல்கள் சுட்டுகின்றன. அவற்றுள் சில:

திலதவர்ம அடங்கல்

"உண்மையுடன் திலதவர்மம் கொண்டு தானால். . .
முன்னாக முடிதூக்கிப் பிடித்தி ருத்தி
முகநாடி தன்னைமுன் பிடித்துக் கொண்டு
ஆளப்பா சிரசிலொரு அடிய டித்துக்
கண்டமொடு தனைத்தடவி கருணை கூர்ந்து
ஏலவே நெஞ்சிலொரு அடிய டித்தால்
எழுந்திருக்கும் என்றுமுனி இயம்பி னாரே".

(வர்மகண்டி, பா.3, 4)

"கேளப்பா விழுந்தவனை எடுத்தி ருத்திக்
கிருபையுடன் பதைப்பின்மேல் ஒருகை குத்து"

(வர்ம சூடாமணி, பா.6)

அடிபட்டவனின் முடியைப்பிடித்துக் கொண்டு அமரச்செய்து முகத்திலுள்ள அடங்கல்நாடியைப் பிடித்தபடி தலையில் ஒரு அடி அடித்தல் வேண்டும். தொடர்ந்து கண்டத்தைக் தடவிக்கொடுத்து நெஞ்சில் ஒரு அடி அடித்தால் வர்ம நோய் இளகும். நடுக்கம் தோன்றுமிடத்தில் (பதைப்பில்) ஒருகையால் குத்தியும் இளக்கலாம் என்பன திலதவர்மத்துக்குக் கூறப்பெறும் சிறப்பு அடங்கல் முறைகளாகும்.

நட்சத்திரகால அடங்கல்

"நயம்பெறவே அதிலேதான் நட்சத்திர காலம் .....
நாடியே மறுபுறத்தில் கைவிரித்து
நன்றாக யடியடிக்கு மாத்திரையைக் கேளு.

"கேளடா விழுந்தவனை எடுத்தி ருத்தி
விதமாக மறுபுறத்தில் தடவிக் கொண்டு
வித்தகனே உச்சியிலோர் அடியும் போடு"

(வர்ம சூடாமணி 7, 8)

என்பது நட்சத்திர காலத்தில் அடிபட்டால், அடிபட்டவனை முறையாக எடுத்து இருத்தி அந்த வர்மத்திற்கு நேரே மறுபுறத்தில் தடவிக்கொண்டே உச்சியில் ஓரடியடித்தால் இந்த வர்மநோய் இளகும் என்னும் செய்தியைத்தருவது. 'இவ்வாறே.

முகத்தைக் கையிலே தாங்கியபடி அடிபட்ட இடத்திற்கு நேர் மறுபுறத்தில் விரலை மடக்கிக் குத்தினாலும், உச்சியில் ஒரு அடி அடித்து மறுபுறம் அமரச் செய்தாலும் **செவிக்குத்தி வர்மம்** இளகும்.

உச்சியில் தட்டி உதறிவிட்டால் **பிடரிவர்மம்** இளகும். கையைமடக்கிப் பிடரியில் வைத்துக்கொண்டு அடிபட்ட வர்மத்திலிருந்து இரண்டுசாண் நீளம் வரை இறங்கு முறையில் இதமாகத் தடவிக்கொடுத்து, உச்சியில் தட்டி உதறிவிட்டால் **உறக்க காலம்** இளகும்.

உச்சியில் தட்டி முதுகுவரியில் புறங்காலால் முறையாகத் தட்டிவிட்டால் **திவளை வர்மம்** இளகும்.

அடிபட்ட வர்மத்திற்கு மறுபுறத்தில் ஒரு தட்டுதட்டி, முதுகுவரியில் தடவித் தாழ்த்தி, உச்சியிலும் தட்டித்தூக்கி உதறினால் **அடைப்பக்காலம்** இளகும். முதுகுவரியில் தட்டி நெஞ்சில் இறங்குமுறையில் இதமாகத் தடவ **உறுமிவர்மம்** இளகும்.

முதுகுப்பக்கத்தில் புறங்காலால் தட்டி, உச்சியிலும் தட்டிக் கை, கால்களைத் தடவி உதறிவிட **வலிய அத்திச்சுருக்கி** குணமாகும்.

உடலின் இரண்டு பக்கமும் இறங்குமுறையில் தடவி, கால்களைப்பிடித்து இழுத்துவிட்டு, உச்சியிலும் தட்ட **சிறிய அத்திச்சுருக்கி** இளகும்.

தூக்கி அமர்த்தி இரண்டு கைகளையும் சேர்த்து வைத்து, உடல் முழுவதையும் இறங்குமுறையில் தடவிக்கொடுத்து இரண்டு விரைகளுக்கு

மிடையில் நன்றாக அழுத்திவிட்டால் அறைக்குள் ஏறிய விரைகள் இறங்கிக் கல்லிடைக்காலம் இளகும்.

சிலேத்தும நாடியின் தொடர்புடைய வர்ம நோய்கள் ஏற்பட்டால் அடிபட்டவரது மூக்கின் நடுப்பகுதியில் காணப்பெறும் நரம்பைக் கீழ்நோக்கி மிகவும் நுட்பமாக இதமாக மூன்றுமுறை இழுத்துத் தாழ்த்திவிடவும்; பக்கத்து எலும்புகள், முண்டெலும்பு ஆகியவற்றையும் தடவிவிட்டால் மயக்கம் தெளியும் என்ற அடங்கல் முறையை,

"மாயத்தால் வன்மூக்கின் நடுந ரம்பில்
மண்டியிடி யிருந்துவரி நெடுநீ ளந்தான்
பாயத்தால் மூன்றுவிசை இழுத்துத் தாழ்த்தி
பக்கமுள்ள எல்லுகளும் தடவித் தாழ்த்து
நேயத்தால் விலாவில்முண் டெலும்பின் தாழ்வாய்
நெருக்கியுந்தன் இருவிரலால் ஊன்றித் தாக்கே"

(தொடுவர். பா.47)

என்னும் அடிகள் விளக்குகின்றன.

அடிபட்ட வர்மத்தின் மறுபுறம் இடம் பெறும் அடங்கல்களில் அடித்தல், குத்துதல், தடவுதல், தட்டுதல் முறைகளைப் பயன்படுத்தி, வர்மநோயை இளக்குவதும், உடல் முழுமையும் தடவிக்கொடுத்து இளக்குவதுமாகிய இம் முறைகளை ஒவ்வொரு வர்மத்திற்கும் ஏற்றவாறு கையாள வேண்டும் என்னும் இக்குறிப்புகள் சிறப்பு அடங்கல் முறைகளாகும். இவ்வாறே பெரும் பாலான வர்மங்களையும் இளக்கலாம்.

அடங்கல் முறையிலான இளக்குமுறைகள் அனைத்தும் முதலுதவியாக அமைவனவாகும். வர்ம அடியினால் திடீரென அலறுதல், மயக்கமடைதல், சிறுநீரும் மலமும் போதல், தலைதொங்கிவிழுதல், நாக்கு வெளியில் தொங்க வாயில் நொப்பும் நுரையுந்தள்ளி நீர்வடிதல், வாயடைத்துப்போதல், விழி பிதுங்கிக் காணுதல் போன்ற அஞ்சத்தக்க அறிகுறிகள் பல தோன்றும்.[16] அவ்வாறான அஞ்சத்தக்க நிலையிலிருந்து எழுந்து, அமர்ந்து பார்க்க, பேச, கஞ்சி முதலியன உண்ணக்கூடிய நிலைக்கு வர்ம நோயை இளக்குவதே இந்த முதலுதவிச் செயல்களாகிய இளக்குமுறைச் செயல்களாகும். இந்த நிலையைக் குணமடைந்துவிட்ட நிலை என்று கூற முடியாது. வர்மநோயால் உடலிலும் கை, கால்களிலும் ஏற்படும் வீக்கம், கபம், சன்னி, சீதளம், சுரம் போன்ற நிலையான

16. 'வர்ம அறிகுறிகள்' இணைப்பு 3 இல்.

நோய்களுக்குரிய மருத்துவமுறைகளை மேற்கொண்டு நோயை நீக்கிய நிலையையே குணமான நிலை என்று கூறமுடியும்.

ஊ. வர்ம மருத்துவம்

முன்பே சுட்டியவாறு வர்ம மருத்துவத்தை மந்திரம், நசியம், மருந்து என மூன்று வகைப்படுத்தலாம். இவற்றுள் மந்திரமும் நசியமும் தொடக்க இளக்குமுறைக்குத் துணை புரிவனவாகும். திடீரென ஏற்பட்ட தாக்கத்தால் உண்டான வர்மநோயானது உடனே மயக்கத்தையும் உள்ளத்தில் அச்சத்தையும் ஏற்படுத்திவிடும். அதனால் அலறுதல், மிரளமிரள விழித்தல், நடுங்குதல், மூச்சுத்திணறல், வாயடைத்துப்போதல் ஆகிய அறிகுறிகள் தோன்றக் கூடும். பயத்திலிருந்து நீக்கித் தெளிவை ஏற்படுத்தத் தண்ணீரை மந்திரித்து முத்தில் அடித்தல் வேண்டும். எதிர்பாராது ஏற்படுகின்ற சிறுசிறு அதிர்ச்சிகளினால் ஏற்படும் மயக்கத்தைத் தெளிவிக்க உடனே முகத்தில் தண்ணீரை அடிக்கும்முறை வழக்காற்றிலும் உள்ளது. இது போன்று தண்ணீரை முகத்தில் அடிக்கும்போது அதை மந்திரித்து அடிப்பது வர்மாணியர் கையாளும் முறையாகும். இறைவன் மீதும் குருவின் மீதும் பெரும்பக்தியுடைய வர்மாணியர் இம்முறையைப் பெரிதும் போற்றுகிறார்கள்.

தண்ணீர்ஓதும் மந்திரம்

எதிர்பாராத தாக்குதலால் பயந்து, அலறி மயக்கமுறுவது இயல்பு. இச்செயலைப் பேய், பிசாசு, பூதம் போன்றவற்றின் சேட்டைகளால் ஏற்பட்டது என்று கருதுகின்றனர். எனவே அச்சமும், கணங்களின் சேட்டைகளும் நீங்கீத் தெளிவடைய வேண்டும் என்ற பொருளில் மந்திரங்கள் அமைகின்றன.

"அறிவுடனே கஞ்சிவெந்நீர் கொடுக்க லாகும்
அச்சமது பிடித்திருந்தால் அய்யா கேளு
பிறிவுடனே கும்பமதில் சலத்தை மோந்து
பேர்பெரிய பஞ்சாட்சரத்தை எழுதி ஒட்டிக்
குறியுடனே ஓம்நமசி வாயா வென்று
இருநூறு செபித்துமுகத் தெறிந்தா யானால்
குறியுடனே கங்காளம் பூதப் பிரேதம்
குலைந்துபோம் சீக்கிரத்தில் குலைந்து போமே"

(வர்ம சூட்சம், பா.26)

என்பது மந்திரம்ஓதித் தண்ணீர் எறியவேண்டிய காரணத்தையும் முறையையும்

கூறுகிறது. புதிய குடத்தில் தண்ணீர் கொண்டுவந்து அக் குடத்தில் `நமசிவய' என்று ஐந்தெழுத்தை எழுதி ஒட்டி, ஓம் நமசிவய' என்று இருநூறு முறை உருபோட்டு அந்த நீரை முகத்தில் எறிந்தால் அச்சத்தால் ஏற்பட்டதாயினும் பேய், பூத சேட்டைகளால் ஏற்பட்டதாயினும் அச்சமும் அப் பூதங்களும் விலகி வர்மநோய் நீங்கும் என்பதைப் புலப்படுத்துகிறது.

"நங் மங் சிங் வங் றீயும் – வாசிவா" என்று நூற்று எட்டுமுறை உச்சரித்துத் தண்ணீரை மந்திரித்து மூன்று நாட்கள் தெளிக்கப் பன்னிரண்டு படுவர்மங்களும் இளகிப் போகும். இது,

"நாடப்பா மந்திரங்கள் சொல்லக் கேளு
நங்மங்சிங் வங்றீயும் நலமாய் ஓதே
ஓதவுமே ஓங்கார வாசிவா வென்று
உத்தமனே டங்கென்று உறுதியாக
ஏத்தவுமே ஓதிவிடு நூற்றெட் டாகப்
புத்தியுடன் சக்கரத்தைப் புகலக் கேளு
வாதுடனே ஐங்கோணம் மேலே வட்டம்
வலமான சூலமொடு முரியுங் கூட்டி
ஆதுடனே ஐந்தெழுத்தை மேலே நாட்டி
அருமையாய்ச் செபித்திடவே ஆகும் பாரே".

(வர்ம சூத்திரம் 131, பா. 32, 33)

என்னும் பாடலால் அறியவருகிறது. மேலும் இந்த மந்திரத்தை ஓதுமுன் தண்ணீர்க் கும்பத்தில் ஒரு சக்கரத்தை எழுதி ஒட்டவேண்டும். அந்தச்சக்கரம்,

ஒரு வட்டத்திற்குள் ஐங்கோணம் அமைத்து அதன் நுனிகளில் `நமசிவய' என்னும் ஐந்தெழுத்தையும் எழுதியதாக இருத்தல் வேண்டும். அதை ஒட்டி அதன் மீது சூலத்தை நிறுத்தி புதிய துணி ஒன்றைச் சுற்றுதல் வேண்டும். இவ்வாறு அமைத்த கும்பத்தில் நீர்நிரப்பி முன்பு கூறியது போல மந்திரம் ஓதி நீரைத் தெளிக்க வேண்டும்.

"உத்தமனே புதுக்கலசம் தண்ணீர் வாங்கி
ஓதவே ரீங்காரம் நடுவே யிட்டு
மூர்க்கமுடன் சிவாயநம வென்று மாறி
ஓதியே முகந்தனிலே எறிந்தா யானால்
உட்பயங்க ளானதெல்லாம் ஒழிந்து போகும்"

(வர்ம சூட்சம், பா.30)

என்பது நட்சத்திரகாலத்திற்குக் கூறப்பெற்ற மந்திரமாகும். இது போன்று சில வர்மங்களுக்குரிய தனித்தனி மந்திரமுறைகளும் காணப்படுகின்றன. ஏதேனும் ஒரு மந்திரத்தை உச்சரித்துத் தண்ணீர் ஓதி எறியலாம் என்பதே வர்மாணியர் கருத்தாகும். ஒரு முறை, மூன்றுமுறை, ஐந்துமுறை என்ற அளவில் மந்திரத்தை உருப்போடுதல் வேண்டும். சிலமந்திரங்களை நூற்றுஎட்டு முறை, இருநூறு முறை, ஆயிரத்தெட்டு முறை என்று உருவேற்ற வேண்டும் என்ற நிலை வரை குறிப்பிடப் பெற்றுள்ளது.

"பாரப்பா திகில்பிடித்துப் பயந்தா னானால்
பண்பான கும்பமதில் தண்ணீர் கோரி
வாரமா யறுகோண மதிலே யிட்டு
வரிசையுடன் அவ்வுஞ்சி வாய வென்று
சோரமாய் ஆயிரத்தெட்டு உருதா னோதி
கோரியே எறிந்துவிடு குலைந்து போகும்".

(வர்ம சூட்சம், பா.33)

என்பது செவிக்குத்திக்காலத்திற்குச் சொல்லப்பட்ட மந்திரமுறையாகும். இது ஆயிரத்தெட்டுமுறை உருப்போட வேண்டிய ஒன்று.

"நலமான சுத்தசலம் கொண்டு வந்து
குன்றான முக்கோண மதிலே யொட்டி
கூர்மையாஞ் சிகாரமது நடுவே யிட்டு
மன்றானஓம் நமசிவய சிவாவென் றேத்தி
வாங்கியெறி மனக்கலக்கம் மாறிப் போகும்"

(வர்ம சூட்சம், பா.36)

என்பது பிடரி வர்மத்திற்குரிய மந்திரமாகும்.

"வண்மையாய் ஓங்காரம் சுற்றிக் கட்டி
மந்திரம்ஓம் சிவசக்தி வாவா வென்று
தண்மையா யிருநூற்றெட் டுருதா னோதி
தடுத்தெறிய எழுந்துசமாச் சாரஞ் சொல்வான்".

(வர்ம சூட்சம், பா.39)

உறக்ககாலத்திற்குரிய இம் மந்திரம் இருநூற்றெட்டு முறை ஓதி நீரைத் தெளிக்க வேண்டிய முறையையுடையது.

"உரைத்திட்டார் கும்பத்தில் தண்ணீர் வாங்கி
உறுதிபெறப் பூரணமாம் வட்ட மிட்டு
அரைத்திட்ட வட்டமதில் முக்கோண மிட்டு
அதற்குள்ளே மவ்விட்டு விந்து விட்டு
இறைத்திட்ட "ஆதிசிவ சக்தி வாவா" (என்று)
உருவோரா யிரத்தெட்டு ஏற்றித் தாக்கு."

(வர்மசூட்சம், பா.45)

என்பது நேரு வர்மத்திற்குரிய மந்திரம். ஒருவட்டம் வரைந்து, அதன் உள்ளே முக்கோணம் வரைந்து, அதில் `ஓம்' என்னும் மகர ஒற்றோடு கூடிய ஓகாரம் அமைத்து அதைக் குடத்தில் ஒட்டி மந்திரத்தை ஆயிரத்தெட்டு முறை ஓதித் தண்ணீர் எறிய வேண்டும் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

"முத்தியுடன் ஏகாட்சரம் தன்னை யொட்டி
`சிவசக்தி யுள்ளவனே வாவா' வென்று"

என்பது தண்ணீர்க்குடத்தில் `ஓம்' என்னும் பிரணவத்தை எழுதி ஒட்டி மந்திரத்தை ஓதவேண்டும் என்கிறது.

"ஓம் சக்தி வாவா" வென்று சங்கர விளத்தினும் தண்ணீர் எறியவும் என்னும் முறை ஒன்று வர்மபீரங்கி என்னும் சுவடியுள் காணப்படுகிறது.

(சங்கரம் – நஞ்சு, போர், வருத்தம்)

(சங்கரர் – போர்செய்வோர்)

விளத்தல் – நீக்குதல், விலக்குதல்

போர்க்காலத்து ஏற்படும் வர்ம அடிகளின் வருத்தத்தைப் போக்குவதற்கும் இந்த மந்திரத்தைப் பயன்படுத்தித் தண்ணீர் எறியும்செயல் நடைமுறையில் இருந்துள்ளது என்பதை இந்தத் தொடர்கள் புலப்படுத்துகின்றன. இதே முறையில்,

"சங்கர விளத்தினும் `ஓம் கிலீயும் வா' என்று தண்ணீர் ஓதி
எறியவும்"
"சங்கர விளத்தினும் `சருவசத்தி வாவா' என்று வெள்ளமோதி
எறியவும்"
"சங்கர விளத்தினும் `ஓம் ஆம் அவ சிவா' என்று வெள்ளமோதி
எறியவும்"

என்னும் மந்திரங்கள் பல அமைகின்றன. சங்கர விளத்தினும் என்ற தொடக்கத்தோடு,

அரகரா வாவா; நமசிவாய நம: ;
நசியேபா; சிவசத்தி வாவா;
அரியரி ராமா ராமா - சீவன் சத்து லெட்சுமீ

என்னும் பல தொடர்கள் தண்ணீர் ஓதும் மந்திரங்களாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளன என்பதை வர்ம பீரங்கி என்னும் சுவடியால் அறிய முடிகிறது.

கழிப்பு

தண்ணீர் ஓதித்தெளிப்பதோடு அல்லாது உள்ளத்தில் ஏற்பட்ட பயமும் பேய் பூதங்களின் சேட்டையும் நீங்க மாந்திரீகக் கழிப்புமுறை ஒன்றையும் வர்மாணியர் மேற்கொள்ளுகின்றனர். அம் முறை சுவடிகளிலும் இடம்பெறுகிறது.

அவல், பொரி, வெற்றிலை, பாக்கு முதலான நைவேத்தியப் பொருள்களைப் படைத்துக் கணபதிபூசை ஒன்றைச் செய்ய வேண்டும். தொடர்ந்து பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்து, அதே மந்திரம் எழுதிய தகடு ஒன்றினைப் பூசையில் வைத்து எடுத்துச் (தாயத்தாக) சுருட்டிக் கட்ட வேண்டும். இச் செய்தியை,

"நிறையான கழிப்பொன்று நினைவாய்ச் சொல்வேன்
 நீணிலத்தில் வர்மங்கள் அடக்கி யேதான்
முறையான கணபதியும் கும்பத் தோடு
 மும்மூன்று தட்டுவைத்துத் தேங்காய்ப பழமும் . . . . .
துய்யவே தெட்சணையும் துணையாய் வைத்துத்
 தோத்தரித்துப் பஞ்சாட்சரம் எழுதிக் கட்ட
அய்யவே வர்மங்கள் அனைத்தும் போகும்
 . . . .
கண்டுகொள்வாய் நோய்பிணியும் பேயும் பூதம்
 கனமான பிசாசுமுதல் கதிகேட் டோடும். . ."

(தொடுவர். 27-29)

என்னும் பாடல்களும் அறிவிக்கின்றன.

நசியம்

மூக்கிலிடும் மருந்துகளுக்கு நசியம் என்று பெயர். நசிதல் என்பது அழிதல், கெடுதல் என்னும் பொருள்படும். உடலில் ஏற்பட்ட மயக்கம் முதலான நோய்கள்

கெடுவதற்கு மூக்கில் இடப்பெறும் மருந்து நசியம் எனப்பட்டது. நசியத்தால் வருமநோய் முழுமையும் குணமாவதில்லை. மாற்று வர்ம முறையாகிய அடங்கல்முறை, தண்ணீர் ஓதி அடித்தல் ஆகிய முதலுதவிச் செயல்களைப் போலப் பயன்தரக்கூடிய ஒன்று நசியமுறை. மூன்றுவகைப்படுத்தப்பட்ட வர்ம மருத்துவ முறையில் மந்திரத்தை அடுத்து செய்யக்கூடிய முதலுதவி நசியமுறை ஆகும்.

சுக்கைப் பொடித்துத் தூளாக்கிச் சிறிதளவு எடுத்து மூக்கிலும் செவியிலும் செலுத்தி ஊத வேண்டும். இதனால் உடல்வியர்க்கும்; இறுக்கமாக மூடியவாய் திறக்கும். இதனை,

"பார்க்கவே சுக்கதனைப் பொடிய தாக்கிப்
பண்பாகச் செவிநாசி செலுத்தி யூது
வேர்க்கவே வாய்பிளக்கும் அலகு பூட்டும்" (வர்மசூட்சம், பா.71)

என்னும் அடிகளால் அறியலாம்.

"வானான மந்திரத்தால் தீரா தென்றால்
வரிசைபெறும் வெற்றிலையும் மிளகும் உப்பும்
கூனான வழிநாசி நசியம் பண்ண
கூவென்ற அலகையெல்லாம் குடிபோம் பாரே".

(வர்மசூட்சம், பா.74)

என்பதும் ஒருவகை நசியமுறையாகும். அதாவது மந்திரத்தால் வர்மநோய் இளகாவிட்டாலும் வெற்றிலை, மிளகு, உப்பு ஆகிய மூன்றையும் இடித்துச் சாறெடுத்து மூக்கிலிட அச்சமாகிய பிசாசு விலகி நோயாளி தெளிவடைவான் என்பது இந்த நசிய முறையாகும்.

". . பற்றிவரில் வெள்ளுள்ளித் தைலம் வாங்கிச்
சீரப்பா பொறிதலங்கள் எல்லாம் போடு
சிறப்பாகக் காதிலடை நாசி யேற்று" (வர்மசூட்சம், பா.75)

"செய்யவே வெற்றிலையின் காம்பும் சுக்கும்
சேரவே சவைத்து ஒன்றாய்ச் செவியி லூது" (மேலது 54)

"தாக்கவே திப்பிலியும் அரத்தை சுக்கும்
சமனாக இடித்தெடுத்துத் தூள தாக்கித்
தூக்கவே செவியிரண்டு தன்னி லேற்று" (மேலது 52)

என்பனவும் நசியமுறைகளைக் கூறுவன.

பூண்டுத் தைலத்தைக் காதிலும் மூக்கிலும் விடலாம். வெற்றிலைக் காம்பையும் சுக்கையும் சேர்த்து நசிக்கியோ, வாயில் போட்டு மென்றோ செவியில் ஊதலாம். திப்பிலி, அரத்தை, சுக்கு இவற்றைச் சம அளவு எடுத்து இடித்துப் பொடியாக்கிச் சிறிதளவு இரண்டு காதிலும் வைத்து ஊதலாம். இந்த நசிய முறைகளினால் வர்மம் உற்றவன் மயக்கம் முதலானவை தெளிந்து எழுந்திருப்பான்.

உணவு (கஞ்சி)

மாற்று வர்மமுறை, தண்ணீர் ஓதி அடித்தல், நசியமிடுதல் ஆகிய இளக்கு முறைகளைக் கையாண்டு வர்ம நோயாளியைத் தெளிவுடையச் செய்தபிறகு அவரது சோர்வு நீங்க உணவு அளித்தல் வேண்டும். முதலில் அளிக்கப்பெறும் அந்த உணவு கஞ்சி வடிவிலேயே இருத்தல் அவசியமாகிறது. அதுவும் சில மருந்துப்பொருள் கலந்ததாக அமைய வேண்டும். இந்தக் கஞ்சி கொடுக்கும் முறையையும் வர்ம நூல்கள் தெளிவுபடுத்துகின்றன.

மாற்று வர்மங்களைக் கொண்டு தட்டித் தடவி இளக்கும்போது வர்ம அடி பட்டவரின் உடல் வியர்த்துக் கொட்டும். முன்பே தயாரிக்கச்செய்து வைத்துள்ள கஞ்சியைச் சூடாக ஊட்டிவிட மேலும் வியர்க்கும். வியர்வையைத் துடைத்துவிடக் களைப்பு நீங்கும். சிறிது கழித்துப் பச்சைப் பயிற்றை அவித்து உப்பிட்டுச் சாப்பிடக் கொடுக்கலாம். சாமையரிசியை வேகவைத்துக் கஞ்சியாக்கி அதில் வில்வவேரைப் பொடித்துப் போட்டுக் கொடுக்கலாம். இந்த முறையை,

"வேர்த்துஅது சிதறுமுன்னே சாமைக் கஞ்சி
வில்லைவேர் இட்டருந்த வியர்வை தோன்றும்
பார்த்துநீ உடனுடனே துடைத்துப் போடு
பக்குவமாய்ச் சிறுபயறு அவித்துத் தூக்கே".

(தொடுவர். பா.49)

என்னும் அடிகள் விளக்குகின்றன.

இந்தக்கஞ்சியோடு தனி வெள்ளாட்டுப்பாலைக் கலந்து ஒரு மண்டலம் (நாற்பத்தெட்டு நாள்) கொடுத்துவர உடல்தேறிப் பழைய நிலையையடைவான். இதனை,

"தனியாட்டுப் பால்கஞ்சி மண்ட லம்கொள்
பாக்கியனாய் இருந்திடுவான் பாரின் மீது" (தொடுவர், பா.50)

என்னும் அடிகளால் அறியலாம். இந்தக் கஞ்சியைப் போலவே,

பச்சரிசியை உடைத்து நொய்யாக்கி அதனை வேகவைத்து அக்கஞ்சியுடன்

சுக்கு, ஏலம், சீரகம், ஓமம், இஞ்சி ஆகிய இவற்றுள் ஏதேனும் ஒன்றினைப் பொடித்துப்போட்டு உணவாகக் கொடுக்கலாம். நொய்யுடன் வெந்தயம் சிறிது கலந்து வேகவைத்துக் கஞ்சியாக்கிக் கொடுக்கலாம். இவ்வாறே கம்புக்கஞ்சியும் வைத்துக்கொடுக்கலாம்.

"இட்டமாய்ப் பொடியரிசி சீர கந்தான்
இட்டனத்தி இனியகஞ்சி கொடுக்கப் போமே"

(வர்மகுட்சம், பா.42)

"கன்றான வெந்தயத்தின் கஞ்சி யூட்டு" (மேலது 36)

"நன்மையாய் ஏலமிட்டுக் கஞ்சித் தண்ணீர்
நயம்பெறவே கொடுத்துவிடு நன்றாய்த் தானே" (மேலது 39)

"வேமென்ற இஞ்சியரிந் திட்டுக் கஞ்சி
வெந்துகொடு சந்தேக மில்லை தானே". (மேலது 60)

போன்ற பலபாடலடிகள் கஞ்சிஉணவு தரும் முறையை விளக்குகின்றன.

சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம், கொழுஞ்சி, சித்தாமுட்டி ஆகியவற்றைத் துணியில் வைத்துக்கட்டி, அரிசிக்கஞ்சியுடன் போட்டு வேகவிட்டு அந்தக் கஞ்சியைப் பத்துவேளை கொடுக்க வர்ம நோய் தீரும். இச்செய்தி,

"கேளப்பா திரிகடுகு திப்பிலி மூலம்
கிட்டுகின்ற [1]கொழுஞ்சியொடு சித்தா முட்டி
நாளப்பா பழந்துணியில் கிழியாய்க் கட்டி
நலமான அரிசியுரி அதன்மேல் போட்டு
வாளப்பா கஞ்சியுந்தான் பத்து நேரம்
வளமாகக் குடித்திடுநீ வரும மெல்லாம்
வேளப்பா தீருதற்கு முறையாய்த் தானும்
விலக்குமுறை குடிநீரால் தீர்ந்து போகும்".

(வர்மசூத். 131, பா.96)

என்னும் பாட்டால் அறிய வருவதாகும்.

சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் திரிகடுகு, அதிமதுரம், திப்பிலிமூலம், சீரகம், ஈருள்ளி (ஈரவங்காயம்), குன்றிவேர், அறுகன்வேர், கொழுஞ்சி, கடலாடி (நாயுருவி) ஆகியவற்றை நன்றாய் நறுக்கிக் கிழியாய்க் கட்டிக் கஞ்சியில்

1. பா. வே. உழிஞைவேர் (சிறுபூளை) கொழுஞ்சி என்பது—கொளுமிச்சை, வேளை.

போட்டுக் காய்ச்சிப் பத்து நாட்கள் குடிக்கச் செய்யலாம். இந்தக் கஞ்சி உணவை உட்கொள்ளுங்காலத்தில் புளிப்பு நீக்க வேண்டும் (மேல் நூல், பா.97)

"சொல்லுவோம் நோயதுவும் மாற வேண்டி
சுகமான கஞ்சிமுறை பாகம் ஒன்று
மெல்லவே உழிஞைவேர் அறுகன் வேரும்
விதமான குறுந்தொட்டி கொடுப்பை யோடு
மெல்லவே வகைக்குஒரு கழஞ்சு சேர்த்து
விதமான ஏலப்பொடி மதுரம் சீரகம்
மெல்லவே வகைக்குஇரு கழஞ்சு வாங்கி
விதமான ஈருள்ளி படிதான் காலே".

காலான ஆட்டின்பால் படிதான் ஒன்று
கனமான சாமையரிசி அதுபோல் சேர்த்து
நாலான தண்ணீரில் அரிசி யிட்டு
நுணுக்கியிசைத் திடிமருந்து பாகம் கண்டாய்
கோலான கிழியாகக் கட்டி ரெண்டு
குறித்தஉள்ளி அரிந்துமுன் பாலில் போட்டு
மூலாகத் தான்வெந்து ஆற்றும் போது
முறையாக இருநேரம் சேர்த்துக் கொள்ளே.

(வர்மக்கண்ணாடி, பா.23)

என்பதும் ஒரு கஞ்சிவகையைக் கூறுகிறது. அதாவது.

உழிஞைவேர் (சிறுபூளைவேர்)	}	வகைக்கு ஒரு கழஞ்சு
அறுகன்வேர்		
குறுந்தொட்டி(காஞ்சொறி)		
கொடுப்பை(பொன்னாங்காணி)		
ஏலம், அதிமதுரம், சீரகம்	–	வகைக்கு இரண்டு கழஞ்சு
ஈரவங்காயம்	–	கால்படி
ஆட்டின்பால்	–	ஒருபடி
சாமையரிசி	–	ஒருபடி
தண்ணீர்	–	நான்குபடி

ஆகியவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும். பாலுந்தண்ணீரும் பாத்திரத்திலிட்டு

அதில் அரிசியைப் போடவேண்டும். வங்காயத்தை நறுக்கி அதில் சேர்க்க வேண்டும். மேற்காணும் பொருள்களை இரண்டு வகையாகத் தனித்தனியே நன்றாய்த் தட்டி இரண்டு பொட்டணங்களாகத் துணியில் முடிந்து அரிசியுடன் போட்டு வேகவிட்டு இறக்கிக்கொள்ள வேண்டும். ஒரு நாளைக்கு இரு நேரம் வீதம் மூன்றுநாள் உண்ண வர்ம நோய் தீரும்.

மருந்து

மாற்றுவர்மம், மந்திரம், நசியம் ஆகிய முறைகளால் வர்மநோயை இளக்கிக் கஞ்சி ஊட்டித் தெளிவடையச் செய்வதுடன் வர்மாணியர் பணி முடிந்து விடுவதில்லை.

> "சாத்திரமாய்க் கொண்டவுடன் மயங்கு மப்பா" (நூல், பா.5)
>
> "தன்மமுறும் வாய்மூக்கில் நீரொ ழிக்கும்
> தவறாமல் முகம்கோணி உடல்ந டுக்கும்" (மேலது 10)
>
> "விளக்கவே வாய்விட்டுப் பேசா தாகும்" (மேலது 15)

என்னும் அடிகளில் கூறியவாறு வர்ம அடிபட்டவருக்கு உடனடியாக ஏற்படும் மயக்கம், வாயிலும் மூக்கிலும் நீர்வடிதல், உடல் நடுங்குதல், வாய் அடைத்துப் போதல் போன்ற குறிகள் முதலுதவியாகிய இளக்கு முறைகளால் குறையக்கூடும். ஆனால்,

> "குன்றாகக் கண்ணிரண்டுங் குழிந்து நட்டுக்
> கூர்மமுடன் தாழ்ந்துமே குறுக்கிக் கூனும்
> மன்றான மூலமதில் வாயில் ரத்தம்
> மாறியே ஒழுகுமடா மூத்தி ரத்தில்" (நூல், பா.44)
>
> "மாற்றவே வயிற்றுவலி கொழுத்து முண்டாம்
> மகிழவே சரீரமெல்லாம் வீங்கு மப்பா
> சாற்றவே சன்னியது கூடி நிற்கும்" (மேலது 55)

என்னும் இந்த அடிகளில் கூறியவாறு வர்ம நோயால் கண்கள் குழிந்து நட்டுக் கொள்ளுதல், உடல்குறுகிக் கூன் விழுதல், மூலத்திலும் வாயிலும் சிறுநீரிலும் இரத்தம் கொட்டுதல், வயிற்றுவலி, உடல் வீக்கம், சன்னி, சுரம் ஆகியவையும் உண்டாகும். இவை இளக்குமுறையால் உடனே குணமாகக்கூடியவை அல்ல. மேலும்,

வயிறு ஊதி விறைத்துக்கொள்ளுவதும், பசிமிகுந்து அளவுக்கு மிகுதியான உணவு உட்கொள்ளுவதும் (பா.69) ஆகிய பல நோய்களும் உடனே குணமாகா.

எனவே வர்ம நோய்களுக்கு இளக்கு முறைகளைத்தவிர மேலும் பலவகை மருத்துவ முறைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் வர்மாணியருக்கு ஏற்படுகிறது. இந்த மருத்துவ முறைகளை நோய்க்கு ஏற்றவாறு ஒத்தடம் கொடுத்தல், உள்ளுக்கும் மேல் பூசுவதற்கும் மருந்து கொடுத்தல், தேவைப்படும் போது கட்டு போடுதல் என்னும் மூன்று வகைப்படுத்திக் கூறலாம்.

ஒற்றடம்

வர்மத்தில் பட்ட அடியினால் இரத்தக்கட்டு, காயம், வலி, வலிப்பு, வீக்கம் போன்றவை ஏற்படக்கூடும். அந்த இடத்தில் வெப்பம் உண்டாக்கி அந்த நோயைக் குறைக்கலாம். அவ்வாறு வெப்பம் உண்டாக்குவதற்குக் கொடுக்கப்பெறும் புறமருத்துவ முறைகளில் ஒன்று ஒற்றடம் எனப்படும். இம்முறையை ஒற்றடம், தொக்கணம், பொட்டணம் என்னும் சொற்களால் கூறுவர். என்றாலும் இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு செய்முறைகளை யுடையவை.

தவிடு, மாவு போன்ற பொருள்களை வறுத்துத் துணியில் வைத்து முடிந்து நோயுள்ள இடத்தில் பொறுக்குமாறு ஒற்றுவது; வெந்நீரில் தைலம், மருந்துப் பொருள்களைப் போட்டு அந்த வெந்நீரில் துணியை நனைத்துப் பிழிந்து அந்த ஈரத்துணியால் சூடு பொறுக்க ஒற்றுதல் ஆகியவை ஒற்றடம் ஆகும். இதை ஒத்தடம், ஒத்தணம் ஒத்தளம் எனவும் பலவாறாய் வழங்குகின்றனர்.

வலி முதலிய ஏற்பட்ட இடத்தில் நோய்க்கேற்ற தைலங்களைத் தடவிக் கையால் பிடித்து விடுவது தொக்கணம் ஆகும்.

நோய்க்கேற்ற மருந்துப்பொருள்களை இடித்துத் துணியில் பொட்டணமாகக் கட்டிக்கொண்டு, வேப்பெண்ணெய் போன்று உரிய எண்ணெய் ஒன்றைச் சூடாக்கி அதில் தோய்த்து நோயுள்ள இடத்தில் ஒற்றுவதைப் பொட்டணம் என்பர்.

இவற்றைத் தவிர வர்மநோயால் ஏற்பட்ட வலி, வீக்கங்களுக்கு மேல் மருந்தைப்பூசுதல், புகைபிடித்தல், வேதுபிடித்தல் ஆகிய பிற மருத்துவ முறைகளையும் மேற்கொள்ளுவர்.

1. "சொல்லிடவே ஒத்தலொன்று சூட்ச மாகத்
திறமைசால் சாம்பிராணி மஞ்சள் சுக்கு
கொல்லிடவே நவசாரம் சுண்ணம் தாரம்
குப்பையொடு மிளகரத்தை வசம்பு சாத்து
தொல்லிடவே புங்கன்விதை அரப்பு ஓமம்

தும்பைநொச்சி சுண்டைவேர் எருக்கிலைச் சருகு (இருக்கு)
மெல்லிடவே வெற்றிலையும் எலிப்பு ழுக்கை
மேன்மையுடன் வகைக்குசமன் நிறுத்து வாங்கே."
வாங்கியே இடித்தெல்லாம் கிழியாய்க் கட்டி
விரிசைபெறும் வேப்பெண்ணெய் தனில்வெ துப்பி
ஓங்கிக்கொண்ட இடமுதலாய்ப் பாதம் மட்டும்
ஒழுங்காகக் கிழியனத்து ஓடும் நோய்கேள்"

(தொடுவர், பா. 20, 21)

என்பது வர்ம ஒற்றடமுறையைக் கூறுவது. அதாவது,

சாம்பிராணி, மஞ்சள், சுக்கு, நவசாரம், சுண்ணம், தேவதாரம், சதகுப்பை, மிளகு, அரத்தை, வசம்பு, கிரிசாத்து, புங்கன்விதை, அரப்புத்தூள் (தலைக்கிடுவது), ஓமம், தும்பை, நொச்சி, சுண்டைச்செடிவேர், எருக்கிலைச்சருகு, [1] முருங்கிலை, வெற்றிலை, எலிப்புழுக்கை ஆகியவற்றைச் சம அளவாக நிறுத்து எடுத்து, அவற்றை இடித்து முடியாய்க்கட்டி வேப்பெண்ணெயில் வெதுப்பி எடுத்து வர்ம அடிபட்ட இடம் முதல் பாதம் வரை ஒற்றடம் கொடுத்து வர வர்மநோய் நீங்கும்.

2. தேவதாரக்கட்டையை நூறுகிராம் எடுத்துப் பொடித்துக்கோழிக் காரம் என்னும் மருந்துடன் கலந்து வறுத்து மெல்லிய துணியில் கட்டி ஒற்றடம் கொடுக்கலாம்.

(வர்மசூத்திரம் 131, பக்.41)

3. எலுமிச்சம் பழத்தின் தோலை நீங்கிப் பழத்தை நசுக்கி மெல்லிய துணியில் பொட்டணமாகக் கட்டிக்கொண்டு சூடுசெய்த நல்லெண்ணெயில் தோய்த்து ஒற்றடம் கொடுக்க இரத்தக்கட்டு, வீக்கம் முதலியன குணமாகும். இதுவே பொட்டணமுறை என்பது. இது,

"சுத்துகின்ற தன்பழத்தை நறுக்கிச் சீவி
கருத்தாகத் துணியதிலே முடிந்து கொண்டு
வத்துகின்ற நல்லெண்ணெயில் அமுக்கி ஒத்தே"
ஒத்தயிலே சுழியாடி வருமசன்னி
உயர்ந்ததொரு ஒடிமுறிவு ரத்தம் மாறும்"

(வர்மசூத்திரம் 131, பக்.40)

---

1. முருக்கு – என்பது பாடல். முருங்கிலை என்பது உரை. முருங்கை இலையா முருக்கன் இலையா என்பதை அறிதல் வேண்டும்.

என்னும் பாடலடிகளால் புலப்படுத்தப்படுவது.

4. "நலம்பெறவே ஏலாதித் தைலம் தேயே" (படுவர்ம, பா.18)

"விஷமுட்டித் தைலமிட் டிளக்கி யிருத்தே" (மேல் பா.8)

என்னும் அடிக்ளில் கூறியவாறு ஏலாதித்தைலம், விஷமுட்டித்தைலம் ஆகியவற்றில் ஒன்றை வர்ம அடிபட்ட இடத்தில் நன்றாகப்பூசி கையால் நன்கு அழுத்திப் பிடித்து விட்டால் வர்மவலி வீக்கம் போல்வன குறையும். இது தொக்கணமுறை எனப்படுகிறது.

5. "மாறவே தேங்காய்நெய் (உரி) ஏலம் நொச்சி
மைந்தனே காக்கலத்தின் வேரு மிட்டு
தேறவே காய்ச்சும்போது மிளகு சுக்கு
திப்பிலியும் இடித்துக்கிழி கட்டிக் கொண்டு
கூறவே எண்ணெய்தனில் வேக வைத்துக்
குறிப்புடனே படுவர்மத் தலங்கள் தோறும்
ஆறவொண்ணா உச்சிதனில் அனத்தி மெள்ள
அங்கமெங்கும் கிழியூன்றித் தடவு வாயே".

(படுவர்.பா. 52)

என்னும் ஒற்றட முறையும் கையாளப்படுகிறது. அதாவது,

தேங்காய்ப்பால் எடுத்துக் காய்ச்சி உருக்கிய நெய்யில் ஏலம், நொச்சியிலை, வெள்ளைக்காக்கணத்தின் வேர் ஆகியவற்றைப் போட்டுக்காய்ச்சி, மிளகு, சுக்கு, திப்பிலி ஆகியவற்றைச் சம எடை எடுத்துப் பொடித்துத் துணியில் கட்டிக் காய்ச்சிய எண்ணெயில் போட்டுச் சிறிது நேரம் வேகவிட்டு இறக்கிக்கொள்ளவும். மிதமான சூட்டில் அந்த எண்ணெயை அடிபட்ட இடத்தில் ஒற்றடம் கொடுக்கலாம்.

6. பச்சரிசி, புழுங்கலரிசி இரண்டும் சம அளவாய் எடுத்து வேக வைக்கவும். வெந்தபின் தேங்காய்ப்பூத்திருகல், சிறிது மஞ்சள் தூள் இரண்டையும் போட்டுக் கிண்டி இறக்கிக்கொள்ளவும். தேவையான சூட்டில் துணியில் பொட்டணமாகக் கட்டி ஒற்றடம்கொடுக்க இரத்தக்கட்டு, வீக்கம் ஆகியவை குணமாகும். (வர்மசூத்திரம் 131, பக்.44)

7. கொள்ளு, சிறுபயிறு, ஏலம், கடலை, கடுகு, பெருங்காயம் வசம்பு, உள்ளி ஆகியவற்றைச் சம எடை எடுத்து, அதே அளவு கடுகெண்ணெயில் ஊறவைத்து உலர்த்தவும். அப்பொருள்களை நெருப்பிலிடப் புகையும். அப்புகையை இரண்டு காதுகளிலும் செலுத்த வர்ம நோய் குணமாகும். இது,

"அறைகிறேன் புகையொன்று அவனி மீதில்
அதிகமா முதிரைசிறு பயிறு ஏலம்
நிறையுடனே கடலையொடு கடுகு காயம்
நிலவசம்பு உள்ளிசமன் கடுகெண்ணெய் தன்னில்
குறைவின்றி ஊறியெடு கனவில் இட்டுக்
கூசாமல் செவிதனிலே புகையை ஏற்று. . ."

(தொடுவர்.பா. 93)

என்னும் பாடல் கூறுவது.

மருந்து வகை

வர்ம நோய் முழுமையாகக் குணமடைவதற்குதச் சிலமருந்துகள் பயன்படுகின்றன. அந்த மருந்துகள் உள்ளுக்குக் கொடுத்தலும் மேலே பூசுதலுமாகிய இரண்டு முறையிலும் பயன்படுகின்றன. அவற்றுள் உள்மருந்துகள்,

1. இலேகியம் (நக்கல்)
2. எண்ணெய்
3. கியாழம் (கஷாயம்) (குடிநீர்)
4. கிருதம் (நெய்)
5. குளிகை (மாத்திரை)
6. சூரணம் (பொடி)
7. தயிலம்
8. துவாலை

என்னும் பல வடிவங்களில் உருவாக்கப் பெற்றுப் பயன்படுத்துப் பெறுகின்றன.

வர்மநூல்கள் கூறும் இந்த மருந்துவகைகளை உள்மருந்து, பூசுமருந்து என்னும் இரண்டு வகையில் எடுத்துக் கொண்டு, உள்மருந்துகளுள்,

1. இலேகியம்
2. குடிநீர்
3. குளிகை
4. சூரணம்
5. தயிலம் என்னும் ஐந்து வகைகளுக்கும், பூசுமருந்துகளுள்,

1. மருந்து 2. எண்ணெய் என்னும் இரண்டு வகைகளுக்கும் உரிய மருந்துகள் இங்கு எடுத்துக் காட்டப்பெறுகின்றன. கிருதம் எனப்பெறும் நெய் முறை தயில வகையில் அடங்கிவிடுகிறது. துவாலை என்பது மேலே குறிப்பிட்ட ஒற்றட முறையில் இடம் பெற்றுவிடுகிறது.

1. **இலேகியம்**

ஒரு ஆழாக்கு ஓமத்தை ஏழுமுறை மீண்டும் மீண்டும் வறுத்து உமிநீக்கிச் சுத்தம் செய்து மாவாக்க வேண்டும். அதோடு வசம்பைச் சுட்டுச் சேர்த்து வேண்டுமளவு தேன்விட்டு அரைத்து இலேகியமாக்கிக் கொள்ளவும். நெல்லிக்காயளவு இருவேளை உண்டுவர, வர்மநோயால் மலத்தில் இரத்தம் போதல் முதலான நோய்கள் குணமாகும்.

(சித்தமருத்துவம் – சிறப்பு, பக்.140)

2. *குடிநீர் (கியாழம் – கஷாயம்)*

1. ஆடாதொடா வேர், இசங்கன்வேர், சுண்டைவேர், செந்தொட்டிவேர், தசமூலம், தூதுவேளை, தேசவரம் (நறுக்குத் திப்பிலி), மணப்புல், மூவிலை, வேலியிலை ஆகியவற்றை நான்குபடித் தண்ணீரில் போட்டு, அதில் அதிமதுரம் ஒருபலம், கொம்பரக்கு இரண்டுபலம், சுக்கு அரைபலம் ஆகியவற்றைப் பொடித்துப்போட்டுக் காய்ச்சி இரண்டுபடியாகக் சுண்டும்போது இறக்கிக் கொள்ளவும். இந்தக் குடி நீரைக் கோழி இரத்தமும் திப்பிலிப்பொடியுமிட்டுப் பத்து நாட்கள் குடிக்க எல்லாவகை வர்ம நோய்களும் குணமாகும்.

2. அதிமதுரம், ஆடாதொடை, எலுமிச்சை, ஏலம், குப்பைமேனிவேர், குறுந்தொட்டி, கோட்டம், சந்தம் (சந்தனம்), சாதிக்காய், மிளகு, முத்தம், வில்வவேர் ஆகியவற்றை வகைக்கு ஒருகழஞ்சு வீதம் எட்டுபடி தண்ணீரில் போட்டு, ஒருபடி நீராகும்வரை காய்ச்சி இறக்கவும். இந்தக் குடிநீரில் புனுகும் சூடனும் சேர்த்து ஒரு அளவாக நாளைக்கு இரண்டுவேளை, மூன்றுநாள் குடிக்க வர்மநோய் நீங்கும். சுரம், பிடிப்பு, மயக்கம், வலி ஆகிய அறிகுறிகளை உடைய எந்தவர்ம நோய்க்கும் இந்தக் குடிநீரைக் கொடுக்கலாம். (படுவர்.பா58-60)

3. குலைவதற்குக் கியாழமொன்று சொல்லக் கேளு
குறுந்தட்டி வில்லைவேர் முத்தக் காசு
கலைவதற்கு அமிர்துவள்ளி அறுகன் வேரும்
கனமான முருங்கைவேர் முருங்கைப் பட்டை
துலைவதற்குச் செஞ்சட்டிஆ மணக்கு வேரும்
சுருக்காக வகைக்குஒரு படிதான் வாங்கி
மலைவதற்குத் திரிகடுகு மதுரம் ஓமம்
வளமான ஏலப்பொடி யோடு கிராம்பு
அரத்தையொடு வகைக்குஇரு கழஞ்சு வாங்கி

அடவாக இதுவெல்லாம் சதைத்து வைத்து
பத்தரையே யாக்கியொரு மூன்று பங்கும்
பண்பாக வேபடிநால் வெள்ளம் வைத்து
வற்றக்காய்ச்சி அனலிலிட்டு எட்டொன் றாக்கிச்
சீனியிட்டுக் குடிக்கில்வர்மம் பறந்து போமே

(வர்மக் கண்ணாடி, பா.26)

என்பது பலவகை வர்ம நோய்களும் குணமாவதற்குரிய குடிநீரைப் பற்றிக் கூறுவது அதாவது.

அமிர்தவல்லி (சீந்திற்கொடி), அறுகன்வேர், ஆமணக்குவேர், குறுந் தொட்டி, செஞ்சட்டி (செந்தாமரை), முத்தக்காசு (கோரைக்கிழங்கு), முருங்கைப் பட்டை, முருங்கைவேர், வில்வவேர் ஆகியவை வகைக்கு ஒருபடியளவு எடுத்து நன்றாய் நசுக்கி நான்குபடி தண்ணீரில் போடவும், அதில் அதிமதுரம், அரத்தை, ஏலம், ஓமம், கிராம்பு, சுக்கு, திப்பிலி, மிளகு ஆகியவை இரண்டு கழஞ்சு வீதம் எடுத்துப் பொடித்துப்போட்டு எட்டிலொரு பாகமாகக் காய்ச்சி (அரைபடி) அதில் ஓரளவு எடுத்துச் சர்க்கரை சேர்த்துக் குடித்துவர வர்ம நோய் நீங்கும்.

4. ஓமம், கடலாடி (நாயுருவி), குன்றிவேர், துளசிவேர், நன்னாரி, பற்படகம்புல், பொதியன்கிழங்கு, முத்தக்காசு, முருங்கைப்பட்டை, வேலிப்பருத்தி ஆகியவை வகைக்கு அரைபலம்; அதிமதுரம், இஞ்சி, உள்ளி, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, சீரகம், நறுக்கு மூலம் (வெட்டிவேர்) ஆகியவை வகைக்குக் கால்பலம் வீதம் எடுத்து அனைத்தையும் நன்றாய்த்தட்டித் சதைத்துப் பன்னிரண்டுபடி தண்ணீரில் போட்டு வேகவிட்டு, முட்டையிடும் பருவமுள்ள கோழி ஒன்றைக் குடல், முடி, கால் இவற்றை நீக்கி, நறுக்கி அத்தண்ணீரில் போட்டுச் சிறிது மிளகு சேர்த்து, காலை, மாலை இரண்டுவேளை (சக்கரையும் சேர்த்துக்கொள்ள) அருந்த அனைத்து வர்மமும் குணமாகும்.

"விள்ளவே விக்கலொடு உள்காய வர்மம்
சகலமுமே தீருமென்று சார்ந்து பாரே
அள்ளவே வர்மக்கண் ணாடி யானால்
அழகான இந்நூலின் அடக்கம் பாரே".

(வர்மக்கண்ணாடி, பா.27)

என்பது இந்தக் குடிநீரின் இறுதியாக அமைவது.

3. குளிகை

1. வர்மாணிக்குளிகை

அதிமதுரம், அத்திப்பால், அறுகு, இசங்கு (சங்கங்குப்பி), ஏலம், ஓமம், கந்தம், கோட்டம், சிங்கி, சுக்கு, திப்பிலி, தூதுவேளைப்பூ, தென்னம்பூ, புனுகு, பூநாகம், பூரம், மாதுளம்பூ, மிளகு, வெந்தயம் ஆகியவை வகைக்கு ஒரு கழஞ்சு; குங்குமப்பூ, கோரோசனை ஒவ்வொன்றும் இரண்டு கழஞ்சு, இவற்றை இடித்துத் தூளாக்கிக் குடிநீர், பசும்பால், பொன்ஆவாரைச்சாறு ஆகிய மூன்றிலும் தனித்தனியே ஒவ்வொரு சாமநேரம் அரைத்துக் குளிகையாக ஆக்கி வைத்துக்கொண்டு மேற்படி குடிநீரில் இழைத்துக்கொடுக்க வர்ம நோய்கள் குணமாகும். இதை வர்மாணிக்குளிகை என்பர். இந்தக் குளிகை முறை,

"சாற்றினோம் திரிகடுகு மதுரம் ஏலம்
செம்மையாம் வெந்தயமும் ஓமம் பூரம்
ஆற்றினோ மதுசிங்கி கோட்ட மோடு
அழகான கந்தமொடு புனுகுஞ் சேரு
வாற்றினோம் தென்னம்பூ தானும் கூட்டி
வளமான இசங்குதூர் து வளையின் பூவும்
ஏற்றமுள்ள பூநாகத் துடனத் திப்பால்
ஆக்கமுள்ள மாதுளம்பூ அறுகும் கூட்டே

கூட்டியுமே வகைவகைக்குக் கழஞ்சு ஒன்றாய்க்
குங்குமப்பூ கோரோசனை கழஞ்சு இரண்டாம்
வாட்டியுமே இதுவெல்லாம் இடித்துத் தூளாய்
வளமாகக் குழியம்மி தன்னில் போட்டு
ஆட்டியுமே கொம்பரக்குக் குடிநீ ரால்தான்
அழகாக ஒருசாமம் அரைத்து வைத்துக்
கூட்டியுமே ஒருசாமம் பசுவின் பாலில்
குற்றமில்லாப் பொன்னாவாரைச் சாற்றா லாட்டே.

ஆட்டியுமே குளிகையைத்தான் ஆக்கிக் கொண்டு
அழையான குடிநீரால் அரைத்துத் தாக்கு"

(வர்ம சூத்திரம் 131, பா.99– 101)

என்னும் பாடல்களால் தெரியவருகிறது.

2. அதிமதுரம், திப்பிலி, நாயுருவிவிதை, நாவல்பிசின், பூரம்,

பெருங்காயம், பொரிகாரம், லிங்கம் ஆகியவற்றை ஒருகழஞ்சு எடை எடுத்துப் பொடித்துத் தூளாக்கி, வாழைப்பூச்சாறு, வெற்றிலைச்சாறு இவற்றில் தனித்தனியே மை போல அரைத்து பயிறு அளவில் குளிகை செய்து கொடுக்கலாம். (வர்ம சூத்திரம் 131, பா.102- 103)

3. அக்கிரா, அதிமதுரம், அமுக்கூரம், அரத்தை, இந்துப்பு, ஏலம், கஸ்தூரி, குந்திருக்கம் (குங்கிலியம்), கோட்டம், கோரோசனை, சிங்கி, தாளகம், திப்பிலி, திரிசாதி, துரிசு, தேற்றான், பீர்க்கன்வித்து, பீலி, ரோணி, லிங்கம், வால்மிளகு ஆகியவற்றை வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்துப் பொடித்துக்கொள்ளவும்.

ஆடாதொடா, உத்தாமணி, கண்டங்கத்திரி, குப்பைமேனி, குன்றி, சூரி, முடக்கொத்தான், அத்தி, ஆகியவற்றின் சாறும், செட்டிநீரும் வகைக்கு ஒரு உழக்கு எடுத்து மேற்கூறிய பொடியைக் கலந்து ஒரு சாமநேரம் அரைத்து, குன்றிமணியளவில் உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும். இக்குளிகையை ஏதேனும் ஒரு குடி நீரிலோ தேனிலோ கலந்து கொடுக்க வரும நோய் அனைத்தும் நீங்கும். இந்தக் குளிகை முறையை,

“. . . . .
சரியான திப்பிலியும் மதுரம் ஏலம்
சிங்கிதிரி சாதிகோட்டம் அரத்தை ரோணி
பரியோடு குந்திருக்கம் இந்து அக்கிரா
பீர்க்கனுட வித்துதேற்றான் வால்மிளகு பீலி
கரியாத தாளகமும் துரிசு லிங்கம்
கனத்தபசும் ரோசனையும் கஸ்தூரி யாமே.

ஆமடா வகைகழஞ்சு ஒன்று வீதம்
ஆடலோ டத்தின்சார் மேனி கொத்தான்
தாமடா சூரியொடு குன்றியுத் தாமணி
தனித்தகண்டன் காரிசெட்டிநீர் வகைக்கு ழக்கு
நாமடா சாறுஒன்றோர் சாமம் ஆட்டி
நலக்குன்றி யெடையுருட்டி நிழலு லர்த்திப்
போமடா கஷாயம்தேன் இவையில் ஊட்டப்
பொல்லாத வர்மத்தால் எழும்நோய் போமே”

(வர்ம சூட்சம், பா.97-98)

என்னும் பாடல்கள் கூறுகின்றன.

4. **சூரணம்** *(பொடி)*

1. அக்ராகாரம், அசுவகெந்தி, அதிமதுரம்; ஆடாதோடை, இசங்கன்வேர், எலுமிச்சை, ஏலம், கண்டங்கத்திரி, சித்தரத்தை, செந்தொட்டிச்சார், செந்தொட்டிவேர், திப்பிலி, தூதுவேளை, வால்மிளகு ஆகியவற்றைக் காயவைத்து இடித்துப் பொடியாக்கிக் கொள்ளவும். இதில் சிறிதளவு தேனிற் குழைத்து உட்கொண்டுவர வருமநோய்கள் குணமாகும். சயம்கொண்டிருந்தாலும் இந்த மருந்தால் குணம் ஏற்படும். இந்த மருந்து முறையை,

"தீருமடா அசுவகந்தி அக்கரா காரம்
திறமான சித்தரத்தை திப்பிலி தானும்
வேறுமடா அதிமதுரம் வால்மிளகு தானும்
வெளியான எலுமிச்சை ஏலந் தானும்
வாறுமடா செந்தொட்டிச் சாரும் வேரும்
வளமான இசங்கன்வேர் ஆடா தோடை
கூறுமடா தூதுவளை கண்டங் கத்திரி
குணமாக இதைப் பொடித்து வைத்துக் கொள்ளே.
கொள்ளவுமே ஒருகடிகை தேனில் கொள்ள . . . .
. . . .
நுணுக்கமாய்ச் சயந்தீரும் வருமம் தீரும்"

(வர்ம சூத். 131. பா.126, 127.)

என்னும் பாடல்கள் உணர்த்துகின்றன.

2. "நலமாகச் சூரணந்தான் ஒன்று கேளு
நன்றான நிலவாகை சுக்கும் கூட்டிப்
பிலமாக மிளகுவாய் விளங்கம் ஓமம்
பேராக வகைக்குஒரு பலமே தூக்கிச்
சிலமாக ரவிமுகத்தில் உலரப் போட்டுச்
சிதறாமல் இடித்துச்சூ ரணந்தான் செய்து
தலமாகச் சர்க்கரைதான் சமனாய்க் கூட்டித்
தவறாமல் ஒருநேரம் கொண்டால் கேளு"

(வர்ம சூத்திரம் 131, பக.45)

என்பதும் ஒரு சூரணவகையைச் சுட்டுகிறது. அதாவது,

ஓமம், சுக்கு, நிலவாகை, மிளகு, வாய்விளங்கம் ஆகிய ஐந்திலும் வகைக்கு

ஒருபலம் வீதம் எடுத்து நன்றாக வெய்யிலில் உலர்த்தி இடித்துச் சூரணமாக்கிக் கொள்ளவும். இதில் சிறிதளவு எடுத்துச் சக்கரை சேர்த்து உண்டுவர, சூடு, பித்தம், வாயு இவற்றால் உண்டாகும் வர்ம நோய்கள் அனைத்தும் குணமாகும். பத்தியம் புளி நீக்க வேண்டும்.

5. தயிலம்

1. ஐந்தெண்ணெய்த் தயிலம் (உள்ளுக்குக் கொடுக்க)

எள்எண்ணெய், சென்னாஎண்ணெய், தேங்காய்எண்ணெய், நிம்ப எண்ணெய், பசுநெய் ஆகிய ஐந்தையும் சமஎடை எடுத்து தாளி தூதுவேளை, தொட்டாற்சுருங்கி, விலாலி, வேலிப்பருத்தி என்னும் ஐந்தின் சாற்றையும் வகைக்குக் கால்படி சேர்த்து, அவற்றில் அரத்தை, குங்கிலியம், கோரோசனை, சிங்கி, சீரகம், சுக்கு, திரிபலை, மதுரம் ஆகியவற்றை வகைக்கு ஒரு கழஞ்சு பொடித்துத் தூவி, வில்வப்பழச்சாறு சேர்த்துக் காய்ச்சி மணல் பதத்தில் இறக்குமுன் வெள்ளைக் குங்கிலியம் சேர்த்து இறக்கவும். இதை ஒரு கரண்டிவீதம் உண்டுவர வர்ம நோய் நீங்கிக் குணமாகும். (வர்மகண்டி, பா.33-35)

2. கருங்கோழித் தயிலம் (உள்ளுக்குக் கொடுக்க)

"குக்கிடத்தின் நெய்ஒன்று வழுத்தக் கேள்.
போச்சுதொரு கருங்கோழி கொண்டு வந்து
புனிதமுடன் குடலதனை நீக்கிப் போடு
வாச்சுதே குறுணிநீர் கியாழ மிட்டு
வளமாக எட்டொன்றாய் வற்றக் காய்ச்சு
காய்ச்சியே குழிமிண்டான் வேலிப்ப ருத்தி
கனமான சம்பழமும் தொட்டால் வாடி
காய்ச்சுதே நத்தைச்சூரி சிவனார் வேம்பு
கனமான வகைக்குஒரு படிதான் வாங்கே.
வாங்கியே பசுவின்நெய் நிம்பத் தெண்ணெய்
வகைக்குபடி தான்வாங்கிப் பதனம் பண்ணி
வாங்கியே சித்தரத்தை மதுரம் திப்பிலி
கூறும்பத்திரி அமுக்கூரம் விடயம் தானும்
தாங்கியே இவையெல்லாம் வகைஒன் றுக்குச்
சார்ந்தவகை பலம்காலாய்த் தூள தாக்கி

நீங்கியே கோரோசனை பலமே கால்தான்
நிறையான வடிகலசம் பொடித்துப் போடே."

(வர்மக் கண்ணாடி, பா.88-90)

கருங்கோழி ஒன்றைக் கால், குடல், தலை, முடி நீக்கிச் சுத்தம் செய்து நறுக்கிக் குறுணி நீரில் போட்டு எட்டில் ஒருபாகமாகச் சுண்டக் காய்ச்சவும் (8 படி நீரை ஒரு படியாகக் காய்ச்ச). குழிமிட்டான் (நத்தைச்சூரி), சம்பளம், சிவனார்வேம்பு, தொட்டாற்சுருங்கி, வேலிப்பருத்தி ஆகியவை வகைக்கு ஒரு படி எடுத்து அவற்றோடு பசுவின் நெய், நிம்பத்தெண்ணெய் ஆகிய இரண்டும் வகைக்கு ஒரு படி சேர்த்துக் காய்ச்சவும்.

அமுக்கூரம், அதிமதுரம், சித்தரத்தை, திப்பிலி, பத்திரி, விடயம் ஆகியவை வகைக்குக் கால் பலம் எடுத்துப்பொடித்து, கோரோசனை கால் பலம் சேர்த்து, மேலே கூறிய கியாழம், எண்ணெய், இந்த மருந்துகள் எல்லாவற்றையும் சேர்த்து மீண்டும் காய்ச்சி இறக்கவும். இதை ஒரு கரண்டிவீதம் காலை, மாலை உண்டுவர வர்மம் யாவும் குணமாகும்.

3. மற்றொரு வகை

கருங்கோழியின் கால், தலை, முடி நீக்கிச் சுத்தம் செய்து நறுக்கி எட்டுநாழித் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி ஒருநாழியாகச் சுண்டியபின் இறக்கிக் கொள்ள வேண்டும்.

உழிஞை, குறுந்தொட்டி, நாயுருவி இவற்றின் வேர் வகைக்குப் பத்துபலம் எடுத்து நறுக்கி இருபத்துநான்கு படி தண்ணீரில் போட்டு ஒன்றரைபடியாய்ச் சுண்டக் காய்ச்சிக்கொள்ளவும்.

ஆவின்நெய் ஒருபடி, சிற்றெண்ணெய், நல்லெண்ணெய் ஆகிய இரண்டும் வகைக்கு அரைபடி எடுத்து இவை மூன்று வகையையும் ஒன்றாய்க்கலந்து அவற்றில், அதிமதுரம், அதிவிடயம், ஏலம், கொத்துமல்லி, சீரகம், திப்பிலி, திரிசாதி, வெந்தயம் ஆகியவற்றை வகைக்கு ஒருகழஞ்சாக எடுத்துப் பொடித்துத்தூவி, மெழுகுபதமாகக் காய்ச்சி இறக்கவும். இந்தத் தயிலத்தை ஒரு கரண்டிவீதம் காலை, மாலை மூன்று நாள் கொடுத்துவரவும். முருங்கைக் கீரைச் சோறும் உண்ணக்கொடுத்துவரவும்; வரும நோய்கள் விலகும்.

(வர்மகண்டி, பா.36-39)

4. குறுமுனி தயிலம் (உள்ளுக்குக் கொடுக்க)

அரசு, அரசம்பூ, அத்தி, ஆயணி, மா இவற்றின்பட்டை வகைக்கு ஒரு

கழஞ்சு; அரிசி, அறுகு, இசங்கு, இலுப்பை, உழிஞை, எருக்கு, கண்டங்கத்திரி, கமுகு, கார்க்கோலவித்து, குருவிஞ்சி, குறுந்தொட்டி, குன்றி, கொத்தமல்லி, கொன்றை, செஞ்சட்டி, சோற்றுக்கற்றாழை, தக்காளி, தாழை, துளசி, தூதுவேளை, பாதிரி, பாற்சோற்றி, பூலாத்தி, முஞ்ஞை (முன்னை) இவற்றின் வேர் வகைக்கு இரண்டு கழஞ்சு;

அமுக்குரா, உலுவா (பெருஞ்சீரகம்), ஓமம், கிராம்பு, கொம்பரக்கு, சடாமாஞ்சில், சதகுப்பை, சாதிக்காய், சுக்கு, திப்பிலி, பத்திரி, மிளகு, வாய்விளங்கம் ஆகிய கடைச்சரக்குகள் ஆகிய மூன்றுவகைப் பொருள்களையும் இடித்துப் பதினாறுபடி தண்ணீரிலிட்டு ஒருபடியாய் வற்றக் காய்ச்சவும். இந்தக் கியாழத்தில்,

ஆவின்நெய் ஒருநாழி, சித்திரநெய் உழக்கு, புங்கன் எண்ணெய் ஆழாக்கு இவற்றை ஒருநாழி அளவில் காய்ச்சிச் சேர்க்கவும்.

அதிமதுரம், அதிவிடயம், அரத்தை, கசகசா, கருடப்பச்சை, குங்குமப்பூ கோரோசினை, தேவதாரம் இவற்றில் வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து ஆவின் பாலில் போட்டுச் சூடாக்கி மேற்படி எண்ணெயில் போட்டுக் காய்ச்சவும், மெழுகு பதமாய் வரும்போது கஸ்தூரி, புனுகு இவை வகைக்கு இரண்டு குன்றி போட்டு இறக்கவும். காலை, மாலை ஒரு கரண்டி வீதம் ஒரு மண்டலம் உண்ண வர்ம நோய் அனைத்தும் குணமாகும்.

வர்ம சூடாமணி, பா.41-46)

1. மேல்பூச்சுக்கு மருந்து

   1. குத்துக்கற்றாழையும் உப்பும் சம அளவு வைத்து அரைத்து நீர் சேர்த்துக் கொதிக்கவைத்து வலி உள்ள இடத்தில் மூன்றுநாள் பூச வலி நீங்கும்.
   2. பச்சரிசியைத் தண்ணீரில் போட்டு வேகவிடவும். கூடவே குருந்தொட்டி, சுக்கு, திப்பிலி, பீளைத்தோல், மிளகு, முடிச்சுமூலம் ஆகியவற்றைத் தட்டித் துணியில் முடிந்து போடவும். களிபோல் வெந்தபிறகு அதோடு அமுக்குராவேர், கடுகுரோகணி, காஞ்சுரம்பட்டை, நத்தங்கொரல்லி, நத்தைச்சூரி ஆகியவற்றைச் சேர்த்து முல்லைப்பூச்செடிப் பட்டைச்சாறு விட்டு அரைத்துப் பூசவும். வலி, காயம் யாவும் குணமாகும்.
   3. இலிங்கம், கருஞ்சீரகம், கார்கோலரிசி, துத்தம், துருசு, மஞ்சள்மெழுகு, வேம்பாடம் இவற்றை வகைக்கு ஒருகழஞ்சு எடுத்துப் பொடித்துக் கொள்ளவும். அந்தத் தூளைத்

தேங்காயெண்ணெய் உழக்கு, புங்கம்பால் உழக்கு ஆகியவற்றுடன் சேர்த்து மணல் பதத்தில் காய்ச்சி இறக்கவும்.

4. கற்றாழைச்சோறு, நல்லெண்ணெய், மஞ்சள்மெழுகு, மாதுளை இலைச்சாறு ஆகிய நான்கையும் மெழுகுபதத்தில் காய்ச்சிக் கொள்ளவும்.

5. கடுகு, கருப்பட்டி (பனைவெல்லம்), சுக்கு, நீர்முள்ளி, மஞ்சள், வசம்பு, வெள்ளுள்ளி ஆகியவற்றைச் சமஅளவு எடுத்து, ஊமத்தன் இலை, திருக்கள்ளி ஆகியவற்றின் சாற்றால் அரைத்துக் கொள்ளவும். மேற்காணும் (3, 4, 5 இல்) மருந்துகளில் ஒன்றை மேற்பூச்சாகப் பூசிவர வர்மத்தால் ஏற்பட்ட உளைச்சல், குத்து, முடக்கு, மூட்டுவாதம், வலி, வீக்கம் அனைத்தும் குணமாகும்.

(சித்தமருத்துவம், சிறப்பு, பக்.128)

2. மேல்பூச்சுக்கு எண்ணெய்

1. **சித்திரநெய்(ஆமணக்கு நெய்) எண்ணெய்** (மேலே தேய்க்க)

“கேளப்பா நண்டினுட கொழுப்பு தானும்
நலமான தவளையுட கொழுப்புங் கூட்டு
நாதாந்த குமரியுட சாறுங் கூட்டு
நன்மையுள்ள சம்பளத்தின் சாறும் சேர்த்து
நலமான பெரும்பாம்பின் நெய் உழக்கு
நலமான குமரேச ஓடம் சேர்த்து
நளினமுள்ள தோகையுட நெய்யு ழக்கு
நலம்பெறவே சித்திரநெய் தானு ழக்கு
நன்மையாய் மானின்நெய் உழக்குங் கூட்டி
நளினமுடன் அடுப்பேற்றி மெழுகுபதந் தன்னில்
வடித்ததொரு நெய்தன்னைக் கையில் தொட்டு
வசையாத முடமுதிலே தேய்த்தா யானால்
வசையுமடா முடங்களெல்லாம் வணித மாகா”

(வர்ம சூடாமணி, பா.47)

என்பது சித்திரநெய் எண்ணெய் என்னும் மேல்பூச்சு எண்ணெயைக் கூறுவது. அதாவது,

1. சித்திரநெய்(ஆமணக்கெண்ணெய்)

2. தோகைநெய் (மயில் எண்ணெய்)

3. பெரும்பாம்பு நெய்

4. மான் நெய் – ஆகிய நான்கும் வகைக்கு ஒரு உழக்கு வீதம் எடுத்து அவற்றோடு,

1. குமரிச்சாறு(கற்றாழை) 2. குமரேச ஓடு
3. சம்பளச்சாறு(எலுமிச்சை) 4. தவளைக்கொழுப்பு

5. நண்டுக்கொழும்பு ஆகியவற்றையும் சேர்த்து மெழுகு பதத்தில் காய்ச்சி இறக்கவும். இந்த எண்ணெயை வர்ம அடி பட்ட இடத்திலும், பிடிப்பு உள்ள இடங்களிலும் சூடுபரக்கத் தேய்த்தால் வர்ம முடங்கல்கள் (பிடிப்புகள்) குணமாகும்.

2. *சிற்றாமுட்டி எண்ணெய் (தேய்த்து முழுக)*

குறுந்தொட்டி (சிற்றாமுட்டி), கூவிளம் (வில்வம்), சங்கங்குப்பி, வெட்டிவேர் ஆகியவற்றில் வகைக்குப் பத்துபலம் எடுத்து, நான்குபடி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி ஒரு நாழியாக்கி, அதில் நல்லெண்ணெய் ஒருபடியும், வல்லாரைச்சாறு ஒருநாழியுமாகச் சேர்த்துக் கொள்ளவும். அந்தக்கலவையில் ஒருபலம் சீரகமும், ஒருகழஞ்சு பெருங்காயமும் சேர்த்து மெழுகுபதமாகக் காய்ச்சி இறக்கவும். இதனை உடலில் தேய்த்து முழுக எல்லாவர்ம நோய்களும் குணமாகும். இதனை வர்மாணியர் குறுந்தொட்டித் தயிலம் என்பர்.

(வர்ம சூத்திரம் 131, பா.117)

3. **தேய்த்துமுழுக மற்றொரு எண்ணெய்**

“ஆடவே தயிலமொன்று அறையக் கேளு
அப்பனே எண்ணெயது படிதான் ஒன்று
கூடவே பசுவின்நெய் படிஉரி கால்நிம்பம்
கொற்றனவே இசங்கின்சார் படிதான் ஒன்று
ஒன்றான சாதிக்காய் கிராம்பு முத்தம்
உத்தமனே மதுரமொடு தாளிசப் பத்திரி
நன்றாகக் கால்பலமே அரைத்துக் காய்ச்சி
நலம்பெறவே வடித்தரித்துப் பிறவு மட்டு
குன்றான மேவாற வர்மம் எல்லாம்
குடிபோகும் என்றனவே குறித்த வாறாம்”

(வர்மக்கண்ணாடி, பா.88)

எள் எண்ணெய் படி ஒன்று, பசுநெய் படிகால், வேப்பெண்ணெய் படி கால், இசங்குச்சார் படி ஒன்று ஆகியவற்றில் அதிமதுரம், கிராம்பு, சாதிக்காய், தாளிசப்பத்திரி, முத்தம் ஆகிய ஐந்தையும் வகைக்குக் கால்பலம் பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்தெடுத்துத் தேய்த்துக் குளிக்க வர்மநோய் நீங்கும்.

மருத்துவத்தில் கைராசி

வர்மக்கலையிலும் வர்ம இளக்குமுறைகளிலும் மருத்துவத்திலும் பல பயிற்சிகளைப் பெற்றிருந்தாலும் பல நூல்களைக் கற்றிருந்தாலும் பயனில்லை. கைப்பலிதம் வேண்டும். அதுவே முழுப்பலனை அளிக்கக்கூடியது என்பது வர்மாணியரின் அனுபவக் கருத்துகளாகும். இந்தக் கருத்தை,

> "போமென்றால் செய்பாகம் அறிய வேண்டும்
> புனிதமுடன் கைப்பாகப் பலன்கள் வேண்டும்"

என்கிறது வர்ம சூட்சம் (27)

மருந்துப்பொருள்

வர்ம மருத்துவத்தில் கையாளப்பெறும் உள்மருந்து, மேல்பூச்சுமருந்து, ஒற்றடம் ஆகியவற்றிற்குரிய மருந்துப் பொருள்களாக,

1. அமிர்தவல்லி (சீந்தில்), ஆடாதொடா, குப்பைமேனி, துளசி, தூதுவேளை, வேலிப்பருத்தி போன்ற **இலைகள்**
2. அரிசி, இஞ்சி, உள்ளி, ஏலம், ஓமம், கிராம்பு, சீரகம், சுக்கு, மிளகு, வெந்தயம் போன்ற **உணவுப்பொருள்கள்**
3. எள்ளெண்ணெய், சென்னா(கடலை)எண்ணெய், தேங்காய் எண்ணெய், நிம்ப எண்ணெய் (வேம்பு), நெய் போன்ற **எண்ணெய் வகைகள்**
4. அதிமதுரம், அரத்தை, குங்குமப்பூ, கோட்டம், கோரோசனை, சந்தனம், சாதிக்காய், சாதிப்பத்திரி, திப்பிலி, புனுகு ஆகியவற்றைப் போன்ற **கடைச்சரக்குகள்**
5. ஆட்டுப்பால், பசும்பால் ஆகிய **பால்** வகைகள்
6. அறுகன், ஆமணக்கு, இசங்கன், குறுந்தொட்டி, குன்றி, செந்தொட்டி, தசமூலம், முத்தக்காசு, வில்வம், வெட்டி போன்ற **வேர்வகைகள்**
7. அத்திப்பால், எலுமிச்சம்பழம், முருங்கைப்பட்டை போன்ற பால், பழ, பட்டை வகைகள்
8. சர்க்கரை, தேன், பால் முதலிய துணை மருந்துப்பொருள்கள்

போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் பொருள்களைத் தேர்ந்தெடுப்பதிலும் சில நுணுக்கமான முறைகள் வர்மாணியர்களால் மேற்கொள்ளப்பெறுகின்றன. சான்றாக, இலை, வேர்களாகிய பச்சை மூலிகைகளைத் திரட்டும் போது,

சான்றோர் பலரும் நடமாடும் பழக்கமுள்ள மலைகள், குன்றுகள்; தென்றல் முதலிய காற்றுகள் வீசக்கூடியதும், தட்பமும் வெப்பமும் ஒருங்கே விளங்கக்கூடியதுமான நிலம்; நிலவளம் மிகுந்து நல்லமண்ணுடைய நிலம் ஆகிய இடங்களைத் தேர்ந்து அங்குள்ள மூலிகைகளையே திரட்ட வேண்டும் என்ற நியதியைக் கையாளுகிறார்கள். இந்தச் செய்தியைப் பலரும் அறியுமாறு செய்யச் சுவடிகள் துணை புரிகின்றன. மூலிகை எடுக்க வேண்டிய இடம், எடுக்கக்கூடாத இடம் என்பவைவற்றைக் கீழ்க்காணும் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.

"நலமுறும் மறையோர் சென்று நடமிடும் மலைகள் குன்று
பலமுறும் தென்றல் தட்பம் பகர்வெப்ப முற்ற பூமி
கலையுறு நல்ல மண்ணும் கமழ்நில வளம்பொ ருந்தும்
நிலையுறு மிடங்கள் கண்டு நிகழ்த்துமிம் மூலி நன்றே.

சுடலையில் போர்க்க ளத்தில் சோரர்கள் வழிகா லோடை
படலைப்போல் தொடுத்த சேறு பாழ்விசைச் செய்தோ னண்டை
கதறிடும் நெருப்பு வாய்க்கும் கான்மணல் குன்று புற்று
விதறிடும் மலங்கள் தன்னில் விளங்குமிம் மூலி யாகா."

(ஒடிமுறிவு. பக்.15)

எ. வர்மக்கலையும் வர்மாணியரும்

எதிரிகளிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளப் பயன்பட்ட வர்மக்கலை, மாற்றாரைத் தாக்கி வீழ்த்தவும் பயன்படுத்தும் நிலைக்கு வளர்ந்திருந்தது. போர்வீரர்களை உருவாக்கிய வர்மாணியர் போர்க்காலத்தில் படையுள் இருந்த புண்பட்ட வீரர்களைக் குணப்படுத்தி மீண்டும் போர்புரியச் செய்துள்ளனர். போர் முறைகள் பலவாறு வளர்ச்சி பெற்றுவிட்ட இன்றைய நிலையில் வர்மக்கலையின் தேவை இந்த அளவில் துணைபுரிவதில்லை. தற்காப்புக்குத் துணையாவது, எதிரிகளை வீழ்த்துவது என்னும் நிலைகளைக் காட்டிலும், வீழ்ந்தாரை வாழச் செய்வது என்ற ஒரே நிலையில் பெரும் பகுதி இக்கலை இன்று பயன்படுத்தப்படுகிறது. `வீழ்ந்தார்' என்பது போரில் அடிபட்டு வீழ்ந்தார், மாற்றாரின் வர்ம அடியால் தாக்கப்பட்டு வீழந்தார் என்னும் நிலைகளும் மாறின.

பிறரால் வீசப்பட்ட கல், கோல், தடி போன்றவை உடலைத் தாக்குதல், எதிரிகள் கையால் தாக்குதல், தொழிலில் ஈடுபடும்போது எதிர்பாராமல் தொழிற்கருவிகள் விழுந்து அதனால் அடிபடுதல், உயர்ந்த சுவர்கள், மரக்கிளைகள் போன்றவற்றிலிருந்து தவறி விழுதல், ஓடும் ஊர்திகளிலிருந்து விழுதல் போன்ற பல வகையான செயல்களால் வர்மத்தானத்தில் அடிபடுதல் என்னும் நிலைகளே பெரும்பான்மையும் இன்றைய வர்ம நோய்களுக்குக் காரணமாகின்றன. இத்தகு வர்மநோய்களை ஆய்ந்தறியும் திறன் அனைவருக்கும் ஏற்பட்டுவிடுவதில்லை.

"வழியான சித்துநிலை உள்ள பேர்க்கும்
மகத்தான வாசிநிலை அறிந்த பேர்க்கும்
சுழியான சரநிலையை யறிந்த பேர்க்கும்
சிவயோகத் தத்துவத்தை ஆய்ந்த பேர்க்கும்
அழியாத பஞ்சபட்டி தெரிகின் றோர்க்கும்
அமிர்தநிலை ஏற்றிறக்கம் அறிந்த பேர்க்கும்
நழுவாமல் ஐவர்நிலை ஒடுக்கு வோர்க்கும்
நானிலத்தில் வர்மமது காணுங் காணே"

(ஒடிமுறிவு, பக்.12)

என்பது வர்மாணியர் பற்றிய இலக்கணமாகிறது.

நஞ்சினும் கொடியது வர்மக்கலை என்றாலும், அது அடக்கமும் ஒடுக்கமும், அன்பும் அறனும், ஒழுக்கமும் பொறுமையும் உடையவர்களிடம் அடங்கி நிற்கும் கலையாகும்; இறையன்பும் குருபக்தியும் விளங்க, தேவையற்றபோது பயன்படுத்தாத பண்புடையவர்களிடம் நிலைத்து நிற்கும் கலையாகும்; தான் வல்லுநன் என்பதைப் பிறர் அறியாதபடி நடந்துகொள்ளுபவனிடம் பெருகி வளருங் கலையாகும்; அபயம் என்று வந்தோர் பகைவரேயாயினும் அவரிடம் பரிவுகாட்டும் பண்புடையவரிடம் அமிழ்தமாய் விளங்கும் கலையாகும். எனவே இப்பண்புகளே ஒரு சிறந்த வர்மாணியரின் பெருமைக்குச் சான்றுகளாகின்றன.

இந்தியப் போர்க்கலைகளில் மிக உயர்ந்ததும், நுட்பமான கலைத்திறன் வாய்ந்ததுமாகிய ஒன்று வர்மக்கலை. பல்வேறு நரம்பு மையங்களில் இடம் பெறுவதே வர்மம். அம்மையங்களை அறியும் திறன் வர்மாணிகளுக்கு மட்டுமே உண்டு. வர்மாணிகள் மனித உடலின் உறுப்பு அமைப்பியலையும், அதன் இரத்த ஓட்டமுறையாகிய நரம்பு மண்டல அமைப்பியலையும் நன்கு அறிந்தவர்களாவர்.

மனித இயல்பு, நடத்தை, சுற்றுபுறம், சூழ்நிலை, மனித இயல்பையும் நடத்தையையும் பாதிக்கும் தன்மைகள் ஆகியவற்றை நன்கு உணர்ந்தவர்கள்

வர்மாணிகள். ஆதலால் அவர்கள் பொறுமையும் தைரியமும் தன்னம்பிக்கையும் மிகுதியாக உடையவர்களாகிறார்கள்[1] என்பன அவர்தம் பெருமைகளுக்கு எடுத்துக்காட்டுகளாகின்றன.

தட்டவேண்டிய, தொடவேண்டிய சரியான இடம் (points), தட்டுப்பட்ட இடம், அதன் சக்தி, அளவு இவற்றை அறியக்கூடிய திறன் அவர்களுக்கு உண்டு. இத்திறமையால் அடிபட்டு விழுந்தவனை உயிர்ப்பிக்க வேண்டிய பல நரம்பு மையங்களையும், இளக்கு முறைகளையும் உடனுக்குடன் அறிந்து, உரிய காலத்தில், உரிய இடத்தில் தடவியும் தட்டியும் (மாற்றுவர்ம முறையால்) அவனைக் காப்பாற்றும் சக்தியைப் பெறுகிறார்கள்.

இந்த வர்மாணியர் வர்ம நோய்வாய்ப்பட்டவர்களைச் சோதித்தறிய சில எளிய முறைகளைக் கையாளுகின்றனர்.

1. கண்ணின் கறுப்புப் படலத்துக்கு நேரே விரலை ஆட்டிப்பார்க்கக் கண்ணொளியில் விரலாட்டம் தெரிந்தால் உயிர் இருக்கிறது என்று அறியலாம். விரலாட்டம் தெரியாமல் இருப்பினும், ஆண்குறி மிகச் சுருங்கியிருப்பினும் உயிர் இல்லை என்று உணரலாம்.

2. காலின் பெருவிரல்கள், உள்ளங்கால் ஆகியவற்றில் கை வைத்துப்பார்க்க அவ்விடத்தில் சூடு இருப்பது தெரியும்; அவை அசைந்து துடிக்கும். சூடும் அசைவும் துடிப்பும் இல்லையானால் உயிர் பிரிந்துவிட்டது என்று அறியலாம்.

3. கைப்பெருவிரல், நகக்கண்கள் ஆகியவற்றில் கை வைத்து நன்றாய் அழுத்தினால் சுரணை உண்டாகும்.

4. காதின் சிறுதண்டருகிலும், விலாஎலும்பின் நுனியாகிய கொழுந்திலும் பெருவிரலால் அழுத்தினால் கண் விழிக்கும்.

5. மலவாயிலுக்கருகிலும், இரு விதைகளுக்கிடையிலும் நன்றாய் அழுத்தினால் உடலில் அசைவும் துடிப்பும் ஏற்படும். இந்தச்சுரணையும் விழிப்பும், அசைவும் துடிப்பும் இல்லையாயின் உயிர் இல்லை என்று உணரலாம்.

(வருமசூத். 131, பக்.31)

என்பன சில எளிய, முதல் சோதனை முறைகளாகும்.

ஏ. நூலுள் இடம்பெறும் வர்மங்கள்

நூலுள் நூற்று ஐந்து பாடல்கள் காணப்பெறுகின்றன. அவற்றுள்

1. Journal of Japan பக். 58

தொண்ணூற்றாறு வர்மங்களுக்கான குணம், குறிகள் விளக்கம் பெறுகின்றன.

1. உச்சிமுதல் கழுத்துவரை உள்ள பகுதியை எடுத்துக்கொண்ட முதற்கண்டத்தில் முப்பத்தேழு வர்மங்களைப் பற்றிக் கூறப்பெற்றுள்ளதாக நூல் குறிப்பிடுகிறது. (பா.37). செவிக்குத்திக் காலம் என்ற தலைப்பில் தனித்தனி இரண்டு பாடல்கள் இடம்பெறுகின்றன (பா.6, 7). இரண்டையும் தனித்தனி வர்மங்களாகக் கொண்டால்தான் முப்பத்தேழு வர்மங்கள் கிடைக்கின்றன.

2. கழுத்து முதல் மூலாதாரம் வரை உள்ள பகுதியை இரண்டாவது கண்டமாகக் கொண்டு,

"கருத்தான கழுத்தின்கீழ் மூலா தாரம்
கருத்துடனே எழுந்தவர்மம் முப்பத்து நாலு" (பா41)

என்று தொடங்கி,

"ஓமென்ற வர்மம்முப் பத்து நாலும்
உத்தமனே சொல்லிவிட்டேன் உண்மை யாக" (பா.76)

என்று நூல் குறிப்பிடுகிறது. முப்பத்துநான்கு பாடல்களும் இப்பகுதியில் இடம் பெறுகின்றன (பா.42- 75). ஆனால் சிறிய அத்திச்சுருக்கி, வலிய அத்திச்சுருக்கி என்னும் வர்மங்களை மூன்று பாடல்களில் உணர்த்துகின்றது (பா.52- 54). எனவே இப்பகுதியில் கூறப்பெறுவன முப்பத்து மூன்று வர்மங்கள் மட்டுமேயாகும். வலம்புரி, இடம்புரி என்பவற்றுள் இடம்புரி வர்மம் விடுபடுகிறது.

3. மூன்றாவது கண்டமாக எடுத்துக்கொள்ளப்பெற்ற முதுகுப்பகுதியின் பதினாறு வர்மங்களில் பதினைந்து மட்டுமே நூலுள் கூறப்பெற்றுள்ளன (பா.78-92). எல்முடிச்சு என்னும் வர்மம் இடம் பெறவில்லை.

4. காலில் இடம்பெறும் பதினொரு வர்மங்களும் இடம் பெறுவது நான்காவது கண்டம்.

5. ஐந்தாவது கண்டமாகிய கைப்பகுதியில் அடங்கும் பத்து வர்மங்களும் நூலில் கூறப்பெறவில்லை.

தொண்ணூற்றாறு வர்மங்களும் தொண்ணூற்றேழு பாடல்களில் விளக்கப் பெற்றுள்ளன. பிறவாகிய எட்டுப்பாடல்கள் பொதுவான கருத்துகளைக் கூறுகின்றன. அவை:

பாட்டு எண் 37 முதல் 40 முடியவுள்ள மூன்று பாடல்களும் கண்டத்தின் மேலுள்ள முப்பத்தேழு வர்மங்களுக்கும், அடுத்துவருகின்ற ஐம்பத்து ஒன்பது வர்மங்களுக்கு முரிய பொது இளக்கு முறைகளைச் சிங்க நோக்காகக் கூறுகின்றன.

நாற்பத்து ஒன்றாம் பாடல் கழுத்தின் கீழே உள்ள முப்பத்து நான்கு வர்மங்களையும் கூறுவேன் என நுதலிப்புகுதல் முறையை உடையது. எழுபத்து ஆறாம் பாடல் இந்த முப்பத்து நான்கு வர்மங்களுக்குமான சுருங்கிய அடங்கல் முறையைக் கூறுகிறது.

உடலின் முன் பக்கத்திலுள்ள வருமங்கள் கூறப்பெற்றன; மறுபுறமாகிய முதுகுப்புறத்தில் இடம்பெறும் பதினாறு வர்மங்களையும் கூறுவேன் என்னும் பொருளில் அமைகிறது எழுபத்தேழாம் பாடல். ஆனால் இப்பாடல்,

"வீறாக முதுகில்வர்மம் பதினொன் றாகும்
விதமாகச் செய்குணமும் விவர மாக"

என்னும் அடியில் முதுகில் வர்மம் பதினொன்று ஆகும் என்றே குறிப்பிடுகிறது. தொண்ணூற்று மூன்றாவது பாடல்,

"சொன்னோமே முதுகில்வர்மம் பதினா றுந்தான்
தொகுப்பாகச் சொல்லிவிட்டேன் தொகுத்துப் பாரு"

என்னும் அடியில் பதினாறுங் கூறியதாகவே குறிப்பிடுகிறது. எனவே பதினொன்று என்பது பிழைபட அமைந்துவிட்டது என்றே குறிப்பிடலாம். காலில் வர்மம் பதினொன்றும் சொல்லுவேன் என்று சொல்லித் தொடங்காமல்,

"வாங்குவது காலில் வர்மம் சொல்லி விட்டேன்" (105) என்று கூறி முடிக்கிறது.

ஐ. வர்மப் பெயர்களுக்கான காரணங்கள்

ஒன்றற்கு ஒரு பெயர் வைக்கிற போது காரணம் கருதியும், காரணமின்றி இடுகுறியாகவும் பெயர் வைப்பது இயல்பு. வர்மங்களுக்கான பெயர்கள் அனைத்தும் காரணம் கண்டு வைக்கப்பெற்றனவாகவே காணப்பெறுகின்றன. ஒவ்வொரு வர்மப் பாடலுக்கும் உரை கூறுமுன் அந்தவர்மம் நிலை பெறும் இடம், அந்த வர்மம் அப்பெயர் பெற்றதற்கான காரணம் ஆகியவை விளக்கப்பெற்றுள்ளன. ஒன்றன் தன்மையை அறிந்தால் ஏற்ற செயல் முறைகளைக் கையாள்வது பயன்தரும். இதே அடிப்படையில் வர்மத்தின் பெயர்க்காரணத்தை அறிந்தால் அதன் குணம், குறிகளை மனத்தில் இருத்துவது எளிமையாகிவிடும் ஆதலின் பெயருக்குரிய காணங்கள் எடுத்துக்காட்டப் பெற்றன.

நூலில் இடம்பெறும் தொண்ணூற்றாறு வர்மங்களும் மூன்று வகைக் காரணங்களால் பெயர் பெற்றுள்ளன.

வர்ம இடம்

இருபத்திரண்டு வர்மங்கள்[1] அவை நிலை பெறும் இடத்தால் பெயர் பெற்றுள்ளன. சான்றாக, தலையின் உச்சிப்பகுதி கொண்டை எனப்படும். அங்கு நிலைபெறும் வர்மம் கொண்டைக் கொல்லி எனப்படுகிறது. இதை உச்சி வர்மம் என்றும் கூறுவர். (கொண்டை என்பதை உச்சிக்கும் கீழே, முடியைக் கொண்டையாக முடித்துவிடும் இடம் என்பது சில வர்மாணியர் கூற்று. நூல்கள் அவ்வாறு கூறவில்லை.)

"கேளப்பா சிரசுநடு கொண்டைக் கொல்லி"
"பாடுவோம் உச்சிநடு உள்ளந் தன்னில்"

என்னும் நூல் கூற்றுகள் உரையில் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன.

புறங்கழுத்துப் பகுதியாகிய பிடரியில் இடங்கொள்ளுவது பிடரிவர்மம்; செவியையடுத்த சிறு குழியில் இடம் பெறுவது செவிக்குத்திக் காலம்; நெற்றியில் பொட்டு இடும் இடத்தில் அமைவது திலதவர்மம் என்பன போன்று இந்த இருபத்திரண்டு வர்மங்களும் நிலைபெறும் இடத்தால் பெயர் பெற்றுள்ளன. இப்பெயர்கள் வர்மத்தானம், அதன் குணங்கள் ஆகியவற்றை நினைவுகொண்டு உடனே இளக்குமுறைகளைக் கையாளத் துணிபுரிகின்றன.

வர்மக் குணம், குறிகள்

சுமார் எழுபது வர்மங்கள் வர்ம அடியால் ஏற்படும் குணம், குறிகளால் பெயர் பெற்றுள்ளன. சான்றாக,

சீற்றத்தை உண்டாக்கும் குணக்குறிகளை உடையது சீறுங்கொல்லி எனப்பட்டது. குளிரும் நடுக்கமும் ஏற்பட்டு அதனால் காதில் 'கும்' மென்ற ஒலியை உண்டாக்குவது சுருதிவர்மம் எனப்படுகிறது. கண்களை இருளடையச் செய்யும் குணமுடையது புகைச்சை வர்மம் எனப்பட்டது. இவ்வாறு பெரும்பான்மையும் வர்ம நோயால் உண்டாகும் குணம், குறிகளைக் கொண்டு பெயரிடப்பட்டவை இந்த எழுபது வர்மங்களும் ஆகும். இந்தப் பெயர் முறையும் பெயர்களைக் குறித்தவுடன் அவற்றின் குணம், குறிகளை நினைவு கொண்டு ஏற்ற இளக்கு முறைகளை மேற்கொள்ளத் துணைபுரிகிறது.

1. இருபத்திரண்டு வர்மங்களாவன: உதரகாலம், உள்ளெல்லுவர்மம், எட்டெல்லுவர்மம், ஒட்டுவர்மம், கரக்கூட்டுகாலம், கல்லிடைக்காலம், குதிரைவர்மம், கூம்புவர்மம், கைகெட்டிக்காலம், கொண்டைக்கொல்லிவர்மம், கொழுந்துவர்மம், சிமைவர்மம், செவிக்குத்திக்காலம், திலதவர்மம், தெட்சணைக் காலம், நடுச்சுழிக்காலம், நட்சத்திரகாலம், பள்ளவர்மம், பிடரிவர்மம், பின்னெல்லு வர்மம், பொய்கைக் காலம், மணிபந்தவர்மம் என்பன.

வர்ம இடமும் குணங்குறிகளும்

கதிர்கால வர்மம், கதிர்வர்மம், காம்பூரிக்காலம், பட்சிவர்மம் ஆகிய நான்கும் நிலைபெறும் இடத்தாலும் குணங்குறிகளாலும் பெயர் பெற்றுள்ளன. உடனே குணங்குறிகளை நினைவுகொள்ள இப்பெயர்கள் துணையாகின்றன.

மார்புத்தண்டாகிய கதிர் என்னும் பகுதியில் இடம்பெறுவன கதிர்கால வர்மமும் கதிர்வர்மமும். இவை கதிர் (ஒளி) நரம்புகளைத்தாக்கிக் கண்களைப் பிதுங்கச் செய்யும் குணமுடையவை. எனவே இவை இடத்தாலும் குணத்தாலும் பெயர் பெற்றவை எனலாம்.

வர்மத்தானமாகிய அடிக்காம்பிலிருந்து கொடியவிடம் ஏறியது போலத் தலைக்குஏறித் தலையைக் கனக்கச் செய்யும் குணமுடைய வர்மம், காம்பாகிய இடத்தாலும் ஊர்ந்து செல்லும் குணத்தாலும் காம்பூரிகாலம் என்று பெயர் பெற்றுள்ளது. (இந்த இடத்தைக் காமம் பூரிக்கும் இடம் என்பர்.)

பட்சிகள் கூடிக் குழைவதுபோலப் பல நரம்புகள் இணைந்துள்ள இடத்தில் நிலைபெறுவது பட்சிவர்மம். இது பட்சிகள் சுறுசுறுப்பாக இருப்பது போல மிக விரைவாக நோயைப் பரப்புவது. இவ்விரண்டு தன்மைகளாலும் பெயர் பெற்றுள்ளது பட்சிவர்மம்.

மாங்காரி, முண்டிறுக்கி, முன்னை போன்ற சில வர்மப் பெயர்களுக்கான காரணங்களைத் தெளிவாக அறிய இயலாத நிலையும் உள்ளது.

இடத்தால் பெயர்பெறும் இருபத்திரண்டு வர்மங்களின் பெயர்கள் அடிக்குறிப்பில் இடம்பெற்றன. இடத்தாலும் குணத்தாலும் பெயர்பெற்ற நான்கு வர்மங்களும் விளக்கப் பத்தியிலேயே சுட்டப்பட்டன. இந்த இருபத்தாறும் நீங்கிய எழுபது வர்மங்களுமே குணங்குறிகளால் பெயர் பெற்றவையாகும்.

வர்மப் பெயர்களில் சில வேறுபாடுகள்

1. கொல்லி என்னும் ஒட்டுச் சொல்லோடு பெயர்பெறுவன இரண்டு வர்மங்கள் அவை. 1. கொண்டைக்கொல்லி வர்மம் 2. சீறுங்கொல்லி வர்மம் என்பன. கொல்லுந் தன்மையுடையவை என்னும் பொருள்பட இவ் ஒட்டுகள் அமைந்தன என்பர். ஆனால்,

"பய்யவே மரணமது காணு மென்று" (பிடரிவர்மம்)
"அட்வாக அசாத்தியமென் றறிந்து சொல்லே" (பாலவர்மம்)
"வாளப்பா மரணமது உண்டா மென்று
மாமுனிவர் தாமுரைத்த வார்த்தை யாமே" (அல்லிவர்மம்)

என்பனவற்றுள் `மரணம் உறுதி', `அசாத்தியமாகும் எனவே நீ மருத்துவம் செய்யாமல் விலகிவிடு' என்னும் செய்திகள் வெளிப்படையாய்க் கூறப்பெறுகின்றன. இவை கொல்லி என்ற ஒட்டு பெறவில்லை.

> "பாளப்பா போகாது குணமுன் டாகும்
> பதிவாக இதையறிந்து பார்த்துச் செய்யே"

(சீறுங்கொல்லி)

என்பது குணமாகும் என்பதைத் தெளிவாகவே குறிப்பிடுகிறது. எனவே கொல்லி என்பது கொல்லுந் தன்மையைக் குறிக்க வந்தது அன்று எனலாம்.

கொண்டையை இடமாகக் கொண்டது என்னும் பொருளில் கொண்டைக் கொள்ளி எனவும், சீற்றத்தைப் பண்பாகக் கொண்டது என்னுங் கருத்தில் சீற்றங்கொள்ளி (சீறுங்கொள்ளி) எனவும் பெயர்பெற்று மருவியுள்ளது என்றே கொள்ளுதல் வேண்டும்.

2. கண்களில் புகைபட்டு இருளடையச் செய்தல்போல இருளடையச் செய்யும் வர்மம் `புகைசெய்' வர்மமாயிற்று. இது புகைச்சை, புகச்சை, புகழ்ச்சை எனப்பலவாறு திரிந்துள்ளது.

3. பொட்டு இடும் இடத்தில் நிலைபெறும் திலதவர்மம் (திலகம், திலதம்-பொட்டு) என்பது பல அச்சு நூல்களிலும், சான்றோர் கட்டுரைகளிலும் திலர்தவர்மம் என்றே குறிக்கப் பெறுகிறது.

4. பட்சி வர்மம், பச்சிவர்மம் எனக்கொச்சைச் சொல்லாக அமைகிறது.

5. `இரத்த வர்மம்' என்பது ஒன்று (எண்.23). அது பொருள் பொருத்தமுடையது. அதே பொருளில் `உதிரகாலம்' என ஒரு வர்மம் அமைவது பொருந்தாத ஒன்று (எண்.32). `உதரகாலம்' என்பதே பிழைபட எழுதப் பெற்றுவிட்டது என்பது வர்மம் 32இல் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

6. தோளொடு கை கூடுமிடத்தில் இடம்பெறுவது `கரக்கூட்டு வர்மம்'. இது காக்கட்டை, காக்கோட்டை, கரக்கட்டை எனப் பலவாறாகத் திரிந்து வழங்கப்பெற்றுவருவது வர்மம் 35இல் விளக்கப்பட்டுள்ளது.

7. கிளி கத்துவது போன்ற நோயை உருவாக்குவது கிளிமேக வர்மம். தூய்மைப்படுத்துவதாகக் கருதி இது கிளிமுக வர்மம் எனப் பிழைபட எழுதப்பட்டுள்ளது.

8. `துவளுதல்' குணத்தை உருவாக்கும் வர்மம் திவளை என்பது. இது தெவளை, தோளை எனவும் சுட்டப்பெறுகிறது. இந்நூல் தேளேகாலம் என்று பிழைபடக் குறிப்பிடுகிறது.

9. இடத்தாலும் குணத்தாலும் எளிமையாக அனுமானித்து அறியக்கூடிய ஒன்று அனுமானவர்மம். அது புள்ளி இடப்பெற்று அனுமான் வர்மம் என்றாகிச் சிறப்பு கருதி அனுமார் வர்மமாகியுள்ளது.

10. உறுமும் குணத்தை உருவாக்குதலின் உறுமிவர்மம் எனப்பட்டது. உறுமுதல் புன்றிக்குரிய செயலாதலின் இது பன்றிவர்மம் என்றும் சுட்டப்பெறுகிறது.

11. இரண்டு விதைகளுக்கிடையில் இடம்பெறுவது கல்லிடைக்காலம். இது கல்லடைக்காலம், கல்லெடைக்காலம் எனப்பலவாறு சுவடிகளிலும் அச்சு நூல்களிலும் குறிப்பிடப் பெறுகிறது.

12. கொம்புகுத்தி என்பது கொம்பகுற்றி எனவும்,
வில்லுறுமி என்பது வெல்லுறுமி எனவும்,
பள்ளவர்மம் என்பது பள்ளைவர்மம் எனவும்

பலவாறாகப் பிழைபடவும் வேறு பொருள்படவும் பெயர் கூறப்பெற்றுள்ள பல வர்மங்கள் நூலில் இடம் பெறுகின்றன. இவை அனைத்தும் ஆங்காங்கு சுட்டப்பெற்றுள்ளன.

ஓ. வர்ம இடங்களைக்குறிக்கும் படங்கள்

வர்ம சூத்திரம் என்னும் இந்த நூலின் பாடல்கள் `ஒடிமுறிவு சரசூத்திரம்' என்னும் சுவடிப்பதிப்பு ஆய்வேட்டில் உள்ள பாடல்களோடு ஒப்புடையன. இந்த வர்மங்கள் நிலைபெறும் இடங்களைச்சுட்டும் பாடல்களும் ஆய்வேட்டில் இடம் பெற்றுள்ளன. இந்த இரண்டு அடிப்படையைக் கொண்டு, ஆய்வாளரால் வரையப்பெற்ற, வர்மத்தானங்களைக் குறிக்கும் படங்கள் இந்த நூல் பதிப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. `சித்த மருத்துவத்தில் வர்மப் பரிகாரமும் சிகிச்சை முறைகளும்' என்னும் நூலில் இடம் பெற்ற படங்கள் ஒப்பிடப்பட்டுப் பயன்படுத்தப்பெற்றன. இப்படங்கள் சுட்டும் வர்மத்தானங்களும் நூலின் பாடல்கள் சுட்டும் வர்மத்தானங்களும் சிலவிடத்து மாறுபடுகின்றன.

1. கடைக்கண் பகுதியை அடுத்து இடம் பெறுவது நட்சத்திர காலம். படம் ஒரு கண்ணில் இதை அமைத்துக்காட்டுகிறது. மறுகண்ணில் அதே இடத்தில் அண்ணான் காலத்தைச்சுட்டுகிறது.

2. மின்வெட்டிக்கு மேல் சேமக்காலம் (செம்மகாலம்) என்பது நூல் செய்தி. நெற்றி நடுவில் இடம் பெறும் பட்சிவர்மத்தின் கீழ் சேமக்காலத்தை அமைத்துக் காட்டுகிறது படம்.

3. கழுத்தின் பின்புறத்தில் பிடரிவர்மத்தை அடுத்து அமைவது முடிச்சுவர்மம். இதைக் காலின் விரலுக்குமுன் அமைத்துக் காட்டுகின்றன வர்மக்கண்ணாடியும் சிகிச்சை முறை நூலில் அமையும் படமும்.

இவ்வாறு பிறநூல் கருத்துகளோடு மாறுபடும் வர்மத்தானங்கள், படத்தோடு மாறுபடும் வர்மத்தானங்கள் ஆகியவை பலப்பலவாகும். இவை அந்தந்த் வர்ம உரைகளில் எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன.

பச்சனி, பச்சி, பச்சை, பட்சனி, பட்சி, பதக்களை, பதக்கால், பாதச்சக்கரம் என்பன போன்ற பல பெயர்கள் சுவடிக்குச் சுவடி வேறுபட அமைகின்றன. இவை பெரும்பான்மையும் கொச்சைநடையால் ஏற்பட்ட வேறுபாடுகளாகும். அவற்றை முறையாகத் தெளிவாக அறிந்து கொள்வது என்பது கடினமாகவே இருக்கிறது.

சில முரண்பாடுகள்

பிடரி வர்மத் தானத்தில் அடி பலமானால் மரணம் ஏற்படும்; மருத்துவம் செய்யாதே; விலகிவிடு என்கிறது இந்த நூல். இதனை,

"பாரமாய்க் கொண்டுதென்றால் அப்பா கேளு
பய்யவே மரணமது காணு மென்று
வகுப்பாக இதையறிந்து அகன்று காணே"

என்னும் அடிகள் தெளிவுபடுத்துகின்றன. ஆனால் பிற நூல்கள் இதற்கான இளக்குமுறை, கஞ்சு, மருத்துவம், மந்திரம் ஆகியவற்றைக் கூறிக் குணமாகும் என்கின்றன. இந்த் நூலும்,

வர்மத்தில் அடிபட்டால், அடிபட்ட மூன்றேமுக்கால் நாழிகைக்குள் குணமாக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தையும் கூறுகிறது. இக்கருத்தை,

"பய்யவே கடிகைமூன்றே முக்கா லப்பா"

என்னும் அடியில் கூறுகிறது. ஆனால் பிற நூல்கள் இந்த நாழிகையைப் பலவகையாகக் கூறுகின்றன. அவற்றுள்,

"நாணவே கடிகையிரு நாழி கைக்குள்

நலமுடனே இளக்கிவிட முறையைக் கேளு"

என்கிறது தொடுவர்மத் திரட்டு.

"நாடுமப்பா நாழிகைதான் மூவெட் டாகும்"

என்கிறது வர்மசூத்திரம் 131 என்னும் நூல்.

"நிசமான நாழிகைதான் பதினெட் டுக்குள்"

என்கிறது வர்மகண்டி. இவ்வாறே குறிகுணங்கள் வேறுபடக் கூறுதல், நாழிகையை முரண்படக் கூறுதல், பெயர்களில் பலவகை மாற்றங்கள் அமைதல் போன்ற முரண்பாடுகள் பல வர்மநூல்களுக்கிடையே இடம் பெற்றுவிடுகின்றன.

ஓ. வர்மக்கலை பரவிச் சிறப்படையாமை

1. வர்மப் பாகுபாடுகள் ஒரு குறிப்பிட்ட வகையில் மட்டும் இல்லாமல் ஒவ்வொரு நூலாசிரியரும் வர்மாணியரும் தங்கள் தங்கள் விருப்பம் போலப் பாகுபடுத்தியுள்ள தன்மையால் குழப்பம் பல ஏற்பட்டுவிடுகின்றன. அந்தப் பாகுபாடுகளும் அவற்றில் அடங்கும் வர்மங்களும் ஒரேமாதிரியாகத் தெளிவுபடுத்திக் காட்டப் பெறாமையாலும் அக்குழப்பம் மிகுதியாகிறது.

சான்றாக,

படுவர்மம் 12

தொடுவர்மம் 96

தட்டுவர்மம் 8

தடவுவர்மம்

நக்குவர்மம்

நோக்குவர்மம்

என்று பெயரளவில் வகைப்படுத்திக் காட்டியது 'சித்தமருத்தவத்தில் வர்மப் பரிகாரமும் சிகிச்சை முறைகளும்' என்னும் நூல். இது தடவு, நக்கு, நோக்கு வர்மங்களின் எண்ணிக்கையைச் சுட்டவில்லை. பயன்பாட்டில் உள்ளவை 108 என்றும் குறிப்பிடுகிறது.

இவற்றைத்தவிர குடோரிவர்மம், தூண்டுவர்மம், மெய்தீண்டாக்காலம் என்னும் வகைகளையும் சிலநூல்கள் சுட்டுகின்றன. ஆனால் அவை நிலைபெறும் இடங்களை உறுதிப்படுத்திக் காட்டவில்லை.

மேலும் வர்ம இடங்களைத் தொகுத்துச்சுட்டும் பாகுபாட்டில் ஐந்து கண்டங்களாகக் கொண்டு சிலநூல்கள் பாகுபடுத்திக் காட்டுகின்றன. அவை:

		பதிப்பு நூல் (இந்நூல்)	ஒடிமுறிவு (ஆய்வேடு, பக். 6)		பொது	
1.	உச்சிமுதல் கழுத்துவரை	37		25	படுவர்மம்	12
2.	கழுத்து – மூலாதாரம் வரை முன் பக்கம்	34	கழுத்து – உந்தி	45	தொடுவர்மம்	96
3.	" " " " பின் பக்கம்	16	உந்தி – மூலாதாரம்	9		108
4.	காலில்	11		15		
5.	கையில்	10		14		
		108		108		

1.	வாதவர்மம்	64
2.	பித்த வர்மம்	24
3.	சிலேத்தும வர்மம்	6
4.	உள் வர்மம்	6
5.	தட்டு வர்மம்	8
		108

1.	கழுத்தின் மேல்	37
2.	மார்பில்	9
3.	வயிற்றில்	3
4.	முதுகில்	14
5.	காலில்	22
6.	கையில்	22

என 107 வர்மங்களை வகைப்படுத்திக் காட்டுகிறது `வர்மவிதி' என்னும் நூல்.

இவ்வாறு பாகுபடுத்திக்கூறும் வகை, தொகை முறைகள் நூலுக்கு நூல் வேறுபட அமைவதால் தெளிவாகக் கற்க இயலாமை ஏற்பட்டு விடுகிறது.

2. "நகைபுரிய ஒருநூற்றெட் டல்லா துண்டோ
நவிலுவார் உள்வர்மம் ஆறுண் டென்ன
பகையறவே திசைபேதம் நூல்கள் தோறும்
பலவிதமாய் வர்மமது பகர்வார் காணே"

(வர்மகுட்சம். பா.3)

என்னும் பாடலில் கூறியவாறு வர்மத் தொகை, வகைகளில் பலவகைப்பாடுகள் இருப்பதால் சிக்கல் நிறைவது போலவே, வர்ம எண்ணிக்கை, வர்மப் பெயர், வர்மஇடம், வர்மக் குணங்குறிகள், தாங்கும் நேரம் (நாழிகை) போன்றவற்றில் ஏற்படும் மிகைகளும் முரண்பாடுகளும் கற்போருக்குத் தெளிவை ஏற்படுத்தும் வகையில் அமையாததால் பெரும்பான்மையும் இக்கலை வளர்ச்சி குன்றிவிட்டது எனலாம். (முரண்பாடுகள் முதலிய பலவும் முன்னர் குறிப்பிடப்பட்டன.)

3. வர்மக்கலைகளைக் கூறும் நூல்களைத் தீயவர்களுக்குச் சொல்லவே கூடாது என்ற கட்டாயம் பழைய வர்மநூல்கள் அனைத்திலும் வற்புறுத்தப்படுகின்ற ஒன்றாகும். அப்படிக் கூறினால்,

"சத்தியமாய்ப் பெரியோர்கள் சாபம் எய்தும்
ஆத்துகின்ற நரகமதில் வீழ்வான் மற்றே
அக்கினியில் புக்கியவன் அழுந்து வானே".

(வர்ம சூட்சம், பா.5)

என்ற பயமுறுத்தல்கள் நூலின் தொடக்கத்திலேயே அமைக்கப்பட்டன.

"கடாட்சமது போகருட கருணை யாலே
ஆதாரம் அறிந்துரைத்த வர்ம சூத்திரம்
வையகத்தோர் காணாமல் மறைவில் வையே".

(வர்ம சூத்திரம், பா.2)

"உறவாடி சிலபேர்கள், நூல்தா வென்று .
ஓவியம்போல் மொழிபேசி உன்னை ஏய்ப்பார்
திறமான நூலவர்க்கு வெளியி டாதே"

(மேல் நூல், பா.3)

என்னும் நூலாசிரியர்களின் கட்டளைகளை வர்மாணியர் பெரிதும் போற்றிப் பின்பற்ற வேண்டியவர்க ளானார்கள்.

இதன்படி வர்மாணியரும் வர்ம ஆசான்களும் மாணாக்கரைச் சோதிக்கத் தொடங்கினார்கள்.

"வழுந்தாத பாதகம்பொய் இடும்பு மூர்க்கம்
மதமான கோபவஞ்சக மில்லா னாகி
பழுந்தாத அறிவுமன தடக்கம் உண்மை
பத்திமுத்தி மனதிரக்கம் பலிப்புள் ளானாய்
மொழிந்தபடி ஏவல்கேட் டுன்னைக் காத்தால்
முறைமையுடன் நூல்கொடுக்க முத்தி யாமே".

(வர்ம சூத்திரம். பா.6)

என்னும் கருத்துகளை உட்கொண்டு, துரோகம், பொய், செருக்கு (அகங்காரம்), விடாப்பிடி, கொழுப்பு, கோபம், வஞ்சகம் ஆகிய தீக்குணங்கள் இல்லாதவனாக இருக்கிறானா எனச்சோதிக்கத் தொடங்கினார்கள். நல்ல அறிவு, அடக்கம், மனக்கட்டுப்பாடு, உண்மைபேசுதல், இறை, குருபக்தி, இரக்க உள்ளம் ஆகிய நல்ல பண்புகளோடு ஆசான் கூறியபடியே கேட்டு நடத்தல், அவருடைய கட்டளைகளுக்குப் பணிந்து நடத்தல், ஆசிரியருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தல் ஆகிய நற்பண்புகளும் நல்ல செயல்களும் உடையவனாய் நடந்துகொள்ளுகிறானா என்பதையும் சோதிக்கத் தலைப்பட்டார்கள். இவை கற்போருக்குப் பெரிதும் வருத்தத்தைக் கொடுத்திருக்க வேண்டும். முழுமையான இந்த அடிமை மனப்பான்மையைப் பலராலும் ஏற்க முடியாத நிலையில், வர்மம் கற்பதிலேயே தடை ஏற்பட்டுவிடுகிறது.

4. "சீடனென்று பன்னிரண்டு வருடங் காத்தால்
அறிவான புத்தியவர்க்கு இருந்த தானால்
அப்பனே பொருள்வாங்கி நூலை ஈயே"

(மேல் நூல், பா.3)

என்னும் கூற்றுப்படி வர்மங்கற்போர் பன்னிரண்டு ஆண்டுகள் ஆசான்களிடம் அடிமைகளாக வாழவேண்டும் என்ற நிலையும், வர்மம் கற்பதில் அலட்சியப் போக்கை உருவாக்கி விடுகிறது. ஆசான்களுக்கு வேண்டிய பொருள் கொடுத்து வர்மப் பயிற்சி பெறுவதி என்பதும், பன்னிரண்டு ஆண்டு என்னும் நீண்ட காலத்துக்கு உரியதாகி விடுகிறது. இந்த நிலையும் வர்மம் கற்பதில் ஏற்படும் ஊக்கத்தைக் குறைத்து விடுகிறது.

5. "மெய்யென்று சொல்லிவைத்த நூல்கள் மெத்த
வீணாகப் பேசிவந்த வித்தை யெல்லாம்
கையென்றும் காலென்றும் அறியா மூடர்
கற்றவர்போல் வர்மமெல்லாம் கைக்குள் என்பார்
பொய்சொல்லி வயிறுபிழைக்கும் புலையர் கூட்டம்
பெரிதென்று சொல்லியே பொருள்தா வென்பார்"

(வர்ம சூத்திரம் 131, பா.49)

என்னும் பழைய சுவடிப்பாடல் வர்மாணியர்களுக்கிடையே இருந்த மனப்பான்மையைத் தெளிவுபடுத்துகிறது. இந்தக் கருத்துக்கு ஏற்ப,

'ஆசான்கள் பலர் தங்கள் ஏழ்மைத்தன்மையால் வர்மக்கலையை ஒரு புனிதக்கலை என்று கூறிக் காத்து வருகிறார்கள். மிக நெருங்கிய மாணவர்களும்

நம்பிக்கைத் துரோகம் செய்கிறார்கள்; காட்டிக் கொடுக்கிறார்கள் என்பதை அறிந்து, தங்கள் கலைத்திறமையை, கலைநுட்பத்தை, பட்டறிவை வெளிப்படையாகக் கூறவிரும்புவதில்லை. இதனாலும் இக்கலை பயில்வோர் குறைந்து வருகின்றனர்" என்பதும் இக்கலை வளராமைக்கு ஒரு காரணமாகிறது.

(Journal of Japan – பக்.37,

6. தென்னியக் களரிப்பயிற்று முறை ஒரு காலத்தில் மிகப்பரவலாகப் பயிலப்பட்டுவந்தது. இன்றைய நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்திலும் சுற்றுப்புற மாவட்டங்களிலும் சிறு கிராமங்களில் உள்ள ஒருசில ஆசான்களுக்கே சொந்தமான கலையாகக் கருதப்பட்டு வருகிறது. பிறருக்குக் கற்பிப்பதிலும் மேற்கூறிய பல தடைகள் இருந்து வருகின்றன. கிராமங்களுக்குச் சென்று, ஆசான்களைத் தேடிக்கற்பது என்பது மிகக்கடினமான பணியாகிவிடுகிறது. இதனாலும் இக்கலை பரவுவதற்குத் தடை ஏற்படுகிறது.

7. மிகத்தாழ்ந்த பண்பும் தொழிலும் உடையவர்களாகக் கருதப்பட்டவர்கள் தெருச்சண்டைக்காரர் எனப்பட்டனர். அவர்கள் வர்மக்கலையைப் பயின்று பிறரைத் தாக்கிப் பொருள்பறிப்பது போன்ற தீச்செயலில் ஈடுபட்டு வந்தார்கள். வர்மக் கலையைப் பயிற்றுவிப்பது அத்தகு தீயோரை வளர்ப்பதாகக் கருதப்பட்டது. எனவே தான் பல ஆண்டுகள் சோதித்து நல்லோரை அறிய வேண்டிய நிலை ஏற்பட்டது.

8. 1976 முதல் நம்நாட்டில் நடைபெற்றுவரும் 'அகில இந்தியக் களரிப்பயிற்று நிறுவனம்' என்பது நன்கு வளர்ச்சி பெற்றுவருகிறது என்றாலும் கராத்தே முறையும் ஜூடோ பயிற்சியுமே பரவலாக வளர்ச்சி பெற்று வருகிறது. வர்மக் கலை – சிறப்பாக வர்ம மருத்துவக் கலை என்பது மிக மிக அருகிலேயே காணப்படுகிறது. இக்காலத்திய நரம்பியல் மருத்துவ முறையும் நவீன மருத்துவ முறைகளும் வளர்ந்துவிட்டதன் காரணமாகவும் வர்ம மருத்துவக்கலையில் தேக்கம் ஏற்பட்டது எனவும் கூறலாம்.

Introduction (A brief study)

"uṭaluyir paravuñ cakkti
 ōrntavōr tākkal taṉṉāl
paraviṭum virave ḻucci
 paṟṟyē mikuti yākkal
uṭaluyir nāṭi kaṭṭiṉ
 uyirttoḻi leṉṟum paṉṉā
uṭaluyir mūccin vēkam
 ūrntēṟu miṭaṅkaḷ varmam" (tamiḻum varmakkalaiyum; p.2)

The above verse defines the term *"Varma"*. What varmakalai deals with are some of the most important structural features of human body: ligaments, nerves, bones, blood vessels, joints and Nerve – centres etc., They meet, combine and coordinate so as to enable the body to function biologically. The nerves and bones and muscles form part of the entire body. The bones and joints are hard structures. At many points the nerves and nerve centres are closely intertwined. Even a slight damage to these nerve centres and joints some times may prove critically harmful. (eg. where the nerve is in contact with the bone). The damage may be extensive too. That may even affect the blood vessels passing through that area causing improper blood supply to that area. This leads to pain and unconsciousness. Hence such nerve centres are called vulnerable sites/spots/points.

Marmam

1. These vulnerable points are not visible, as they lie beneath the skin. The word 'Marmam' means that which is hidden.
2. The points at which these structures lie intertwined are not visible and are located only at a few points.
3. These spots are so finely placed that all cannot locate and identify them.
4. Injury to these varmas, causes severe pain and affects the normal functioning of the body.
5. The 'how' and why of the various symptoms that result have remained a mystery. Hence the name 'Marmam'

which is 'Varmam' in Tamil.

"veṅkan muracatirum vēlamaruḷ villutaippa
eṅkum marumat titaikulippa" (pu.po.ve.mā. 7-23)

"ennilāta varuntavattōn iyampiyacol
marumattin erivēl pāynta..." (kampa. pāla. kaiyatai. 11)

According to those sources the point through which an arrow pierces the body and kills the person , is taken for a *vulnerable* point / spot / area / (marmam)

Varmam

"utanpirantār currattār enrirukka vēntā
utanpirantē kollum viyāti"

A varma harms the body in which it originates and with which it abides. Hence it is called a varmam, an enemy within 'Varma' is the term used in most of the texts.

Varma is the seat of wind, breath or source/seat of life. When the flow of this life-force is disturbed the body becomes insensitive. If the injury is of very serious kind it proves fatal. If the injury or damage to the varma is less in volume and intensity and it is not yet too late for treatment recovery is possible. The other Varmas are to be stimulated as an antidote. This restores the affected to health.

"varmamenra talaṅkalellām vācit tānam
vācinilai tatuttatānāl māyakka māccu
ullapati nūrrettut talamuñ cāvum
unarvāki yattalaṅkal cukamuṅ kānum
ullunara vattalaṅkal vāci yēra
lurratanāl attalaṅkal uruti cērum...." (āyvētu, p.5)

The synonyms of Varmam (Other names of varmam)

"caramenrum uyirenrum vāyu venrum
carvātmā vacittatoru kalaiya tenrum
puraviyenruṅ kālamenrum pirāna nenrum
pirakāca mānakārru civa nenrum

paramenruñ cuvācamenrum mūcca tenrum
paracivamāk kiranakenta māvi yenrum
piracitta caivamenrum varma menrum
picakāta varūpiyenruñ carattin pērē"
(Ñāna otimurivup perunūle.kā. āyvētu, P. 6)

"varmamenrum vāciyenrum puravi yenrum
kārrenrum uyirenrum māykai yenrum
piranānenruṅ kalaiyenruñ cuvāca menrum
caramenrum yōkamenrum paramam enrum
civamenrum ivaiyellāñ colla lākum" (ibid. Āyvētu, P. 6)

Other texts dealing with Varma refer to it as Varmam or Kalam. Many are called Varmam, eg. Adaippu Varmam. Anivarmam, Kadirvarmam Kadirkamattu Varmam. Some are called Kalam, eg. Amirthakalam, Annaikalam, Urakkalam, Urumikalam

"ettāna kalaiyutanē piranan nālum
yēkinatāl irāru kalaiya menna"
(Otivumurivu. nikantu. pā.15)

Mind, Ahamkara, intellect Sakti, Karma, Jnana, Vayu prana, Udana, are eight faculties which together with the four pranas, namely, wind, spirit, breath and Sakti make them 12 in Total.

"ullapati nūrrettut *talaṅka* lākum
unruākum attalaṅkal *uyirum* ākum
ullunarnta attalaṅkal *vāci* yēral......" (ibid, pā.81)

The words "uyir" and "Vasi" in this verse also mean varma. The word varma idam (the place of varma) also means the location of the Varma. This is also used as the synonym of varma. This term does not occur in other glossaries. Similarly terms like "Sootcham" Adavu, Edu, were also used.

"cūtcāti **cūtcamataik** kantu niyum
tokaiyāna viparamellām āyntu pāru" (ibid, pā. 13)

"iyampinār innamoru **atavu** kēlu" (varmakanti, pā. 5)

"vitavitamāy akattitum mārip pōkum" (ibid, pā. 11)

From the above sources it is clear that the terms Sootcham,

Adaru and eedu were used as synonyms to varma.

As varma is the seat of very life, as the life force it is called adaivu. It is referred to as *'Adaivu'* meaning that which contains sense – 'shield'.

The Origin and History of Varmam

There exists a power above us. The world believes in it, accepts it as God, and worships it. Our country is no exception. Besides it looks upon it as an omniscient force. Our land has had the glorious tradition of worshipping that 'power' in the image of woman. A woman is a symbol of love, compassion, mercy, tolerance and above all sakti, and it is these qualities that made people in our country sakti worshippers (worshippers of Goddess). Of course there comes a stage where the sakti-worship naturally leads to the worship of God who is the Lord of Goddess Sakti.

"aranārum umaiyavaḷum vanattil ēki
anranrāy alavutappit tirinta kālam
civakiriyām malaitanite cenra pōtu
cirappāna vēṭanumē mayakkaṅ konṭu
maramatile ērinatāl viḻuta lānān
vēkamurra maṅkiyavan mūrccai yurrān
oruvarumē kānāmar kiṭanta tālē
kanṭavutan aranārum kānā marpōy
karukkenavē pōkumanta vēlai tannil
umaiyavaḷum connamoḻi yētō venrāl
ponnaranē intavitam karutā tenru
pōkaviṭai ceyyaranē ivanai viṭṭut
tirumpininru aranārum arulic ceytār
tivinaikaḷ manuvōrkaḷ cetattuk kullē
varmamenrum ataṅkalenrum irantun ṭappā
vakaivivaram innatenru kanṭu kollē
umaiyavaltān connamoḻi manattil tērntu
kaṭkattil iruntavoru porpi rampaik
karamatilē aranārum etukka lurrār
hariyenra aṭcarattai varma mākki
sriyenra aṭcarattāl tatti nārē

umaiyavalum kotuttatoru nirai vāṅki
erintuvittār mukamatilē visaṅkal niṅka
eluntiruntāṉ vētanuntāṉ icalvāyt tāṉē
tāṉāka iruvarumē pōka luṟṟār
tāraniyil varmamenṟu telinta vāṟē"

(Otimuṟivu – āyvētu, p. xiii)

Leg (Lower Limbs)	11	___________	15		
Hands (upper limbs)	10	___________	14		
	108		108		

Classification based on the doshas they vitiate etc.

1.	Vatha varma	64
2.	Pitha varma	24
3.	Silethma	6
4.	Ul varmam	6
5.	Thattu varma	8
		108

Another anatomical classification

1.	Above the neck	37
2.	In the chest region	9
3.	Abdomen	3
4.	Back (posterior side)	14
5.	Lower limbs	22
6.	Hands	22
		107*

* The text called 'Varma vithi' has classified and numbered and 107 varmas.

Thus the total number of varmas, their types and the number of varmas of each type etc have been described differently in each text. This inhibits to a certain extent the thorough study and understanding of this science.

2. "nakaipuriya orunūrreṭ taḷḷā tunṭō
 naviluvār uḷvarmam ārun tenna
pakaiyaravē ticaipētam nūlkaḷ tōrum
 palavitamāy varmamatu pakarvār kāṇē"
 (varma cūṭcam, pā. 3)

Just as there are differences in the number and types of classifications. There are variations in the total number of varmas their names, locations, their qualities, the signs and symptoms of an injury, the time limits for revival methods etc. This causes more confusion to the person who would like to have an indepth study of this science.

3. All the varmakkalai texts insist that the knowledge this sacred and powerful science should not be imparted to anybody and everybody. The asan chooses his disciples with great care and scrutiny as the student should be dedicated and should have no evil motives. If not the texts warn that

"cattiyamāyp periyōrkaḷ cāpam eytum
āttukinra narakamatil viḻvān marrē
 akkiniyil pukkiyavan. aḻuntu vānē" (varma cūṭcam, pā. 5)

"kaṭāṭcamatu pōkaruṭa karuṇai yālē
ātāram arinturaitta varma cuttiram
 vaiyakattōr kāṇāmal maraivil vaiyē"
 (varma cūttiram, pā. 2)

"uravāṭi cilapērkaḷ nūltā venru
 ōviyampōl moḻipēci unnai ēyppār
tiramāṇa nūlavarkku veḷiyi ṭāṭē" (ibid, pā.3)

The asans and varmanis were very choosy in selecting their students

"valuntāta pātakampoy itumpu mūrkkam
matamāna kōpavañcaka millā nāki
paluntāta arivumana tatakkam unmai
pattimutti manatirakkam palippul lānāy
molintapati ēvalkēt tunnaik kāttāl
muraimaiyutan nūlkotukka mutti yāmē"

(varma cūttiram, pā.6)

They choose disciples without drawbacks like deceit, falsehood, selfpraise, shrewdness, adamance, anger, etc. and looked for qualities like intellegence, humbleness, humility, self control, truthfulness, respect for Gods and teachers, soft natured, full of pity and concern for others, obedience to the guru helping the guru in his duties. Not many would accept this kind of submissiveness and total surrender to the guru. Hence this science did not have many students. This also formed an important reason for spreading in a restricted way.

"citanenru pannirantu varutan kāttāl
arivāna puttiyavarkku irunta tānāl
appanē porulvānki nūlai iyē"

(ibid, pā.3)

As the learning of this science involves the student to stay for 12 years under the asan totally under his control. This also discourages the students as it involves a very long period of time. Moreover the student has to monetarily support the expenses incurred during this period of 12 years for himself and the asan.

5. "meyyenru collivaitta nūlkal metta
vinākap pēcivanta vittai yellām
kaiyenrum kālenrum aryāmūtar
karravarpōl varmamellām kaikkul enpār
poycolli vayirupilaikkum pulaiyar kūttam
peritenru colliyē porultā venpār)"

(varma cūttiram 131, pā.49)

This verse also gives a similar idea. Further in the Journal of Japan page 37. "In the present day I have come across a few well versed Asans (Masters) who are willing to reveal the secrets of the art. inspite of being financially poor the masters have been guarding their art as something sacred. Knowing that even their closest

disciples might betray them, the Asans were very careful in disclosing the knowledge. Due to this, many high techniques have died with the great masters....."

6. The southern art of kalanpayat was once a widely practised form of martial art. But now it is practised only in small villages in and around K.K. district. Thus it becomes difficult for students from Cities and Towns to locate and indentify a competant asan as their teacher.

7. The grasp of street hawkers and street fighters are considered to be of a very low caste. They were learning this sacred art and using it for bad purposes like stealing and dacoity. Hence the Asans became more resistant in imparting the knowledge as it was used for anti social purposes.

8. Since 1976 an organisation called The All India Kalai payatt organisation has been working actively. But still with more popularity and encouragement given to martial arts like. Karrate and Judo, Kalaripayatt seems to be in the background. Even in area of Medicine today due to the development of Neuro medicine and Neuro surgery, Varma medicine is not put to good use.

The above mentioned retarding factors seem to keep this science as a dormant one and has stagnated its progress. This science has great relevance and potential today.

வர்ம சூத்திரம்

காப்பு

ஆதியந்த பரம்பொருளின் அருளே காப்பு
அகண்டபரி பூரணத்தின் அருளே காப்பு
சோதியாக நின்றிலங்கும் பிராண தீபம்
சூட்சமதை யாவருக்கும் விளக்க வேண்டி
ஆதியென்னும் உலகமதில் மாணி டர்க்கு
அதன்விவரம் கைப்பாகம் அறியச் சொல்ல
பாதிமதி தரித்தசிவன் தன்னைப் போற்றிப்
பரப்பிரம்ம மானபொருள் பதியே காப்பு.

வர்மாணி

கேளப்பா மனமதனை அடக்க வேணும்
கெடியான கோபமெல்லாம் தொலைக்க வேணும்
ஆளப்பா அடியிடியால் காலம் கொண்டால்
அப்பனே குருபரனைத் தேட வேணும்
தாளப்பா அவர்பாதம் பணிந்து போற்றித்
தெய்வமதை உள்ளத்தே தியானம் செய்வாய்
வேளப்பா ஐந்தெழுத்துச் சித்தி வேணும்
சீருலகில் ஐந்தெழுத்தைத் தியானம் செய்யே.

செய்யப்பா மூலியெல்லாம் சாபம் தீர்த்துச்
செயலான உபசரணை உண்டு பண்ணி
கையப்பா வருமத்தைத் தெரிந்து கொண்டால்
கருத்தான கைப்பாகம் அறிய வேணும்
நையப்பா இதன்விவரம் நன்றாய்ப் பார்த்து
நலமான நூல்கண்டு தெளிகு வாய்நீ
பையப்பா வருமமெல்லாம் பகரக் கேளு
பராபரனை நெஞ்சதனில் நினைந்து தேரே.

உலகச் செயல்கள் எல்லாவற்றிலும் முதலிலிருந்து முடிவுவரை கலந்து நிற்பவன் இறைவன். அவன் தனக்கு என்று முதலும் முடிவும் இல்லாதவன்; பிறப்பும் இறப்புமாகிய தோற்றமும் மறைவும் பெறாதவன்; அடியும் முடியும் கூடிய ஒருருவம் இல்லாதவன்; அடியும் முடியும் காண இயலாதவன்; உலகப்

பொருள்களுக்கெல்லாம் உயர்ந்த பொருளானவன்; ஒப்பும் உயர்வும் இல்லாதவன்; அவன் ஒருவனே ஆயினும் எங்கும் நிறைந்திருப்பவன்; உலக உயிர்களின் இதயத்தில் இயங்கும் உயிராகி விளங்குபவன்; ஒப்பற்ற ஒளிப்பிழம்பாகத் திகழ்பவன்; அதனால் உலக உயிர்கள் பிற பொருள்களை அறியுமாறு செய்பவன்; இளநிலவைத் (பிறைசந்திரன்) தன் சடையிலே அணிந்தவன்; உலக முழுமையும் தோன்றி ஒடுங்குவதற்குரிய இடமாகி நிற்பவன். அவனுடைய திருவடிகளை வணங்கி,

காலங்கணக்கிட்டுக் கூறமுடியாத, மிகப் பழமைவாய்ந்த இந்த நிலவுலகத்தில் தோன்றியுள்ள மக்களுக்கு உடலின் சூட்சமாகிய வர்மக்கலையை எடுத்துக் காட்டவும், செய்முறைகளாகிய கைவினைகளை அறியச் செய்யவும் தொடங்குகிறேன். அதற்கு அந்தப் பரம்பொருளின் திருவடிகள் துணை நிற்பனவாகுக.

வர்மாணியே! தெரிந்தோ தெரியாமலோ, இயல்பாகவோ மாறாகவோ ஏற்படும் அடி, இடி, உதை, குத்து ஆகியவற்றால் வர்மநோய் உண்டாகக்கூடும். அந்த நோயைக் குணமாக்க 'நமசிவய', என்னும் ஐந்தெழுத்து மந்திரசக்தியே துணை நிற்பதாகும். எனவே அந்த ஐந்தெழுத்தை ஓதி அந்த இறைவனைத் தியானம் செய்வாயாக! குருவின் திருவடிகளையும் வணங்கித் துதிப்பாயாக !

வர்ம முறைகளையும் உரிய கைப்பாகமாகிய இளக்கு முறைகளையும் அறிந்த நீ, வர்மத்தின் வகையை ஆராய்ந்து அதன் உண்மையறிய வேண்டும். உரிய மூலிகைகளுக்கு வழிபாடு செய்து அவற்றிற்குரிய சாபத்தை நிவர்த்தி செய்ய வேண்டும். பிறகே இளக்கு முறைகளையும் மருத்துவப் பணிகளையும் தொடரவேண்டும். இந்த விதிமுறைகளுக்கெல்லாம் உனக்குத்துணைபுரியும் நூலாக இந்த வர்ம நூலைச் சொல்லத் தொடங்குகிறேன். அந்த இறைவனை உள்ளத்தில் நிலைநிறுத்திக்கேட்பாயாக!

Varma Cūttiram

A Treatise on the vulnerable centres of human body, their ailments and remedies

KĀPPU

ātiyanta paramporuḷiṉ aruḷē kāppu
akantapari pūraṇattiṉ aruḷē kāppu
cōtiyāka niṉṟilaṅkum pirāṇa tīpam
cūṭcamatai yāvarukkum viḷakka vēṇṭi

ātiyennum ulakamatil māṇi ṭarkku
atanvivaram kaippākam ariyac colla
pātimati tarittacivan tannaip pōrrip
parappiramma mānaporuḷ patiyē kāppu.

VARMĀṆI

kēḷappā manamatanai aṭakka vēnum
keṭiyāna kōpamellām toḷaikka vēṇum
āḷappā aṭiyiṭiyāl kālam kontāl
appanē kuruparanait tēṭa vēṇum
tāḷappā avarpātam paṇintu pōrrit
teyvamatai uḷḷattē tiyānam ceyvāy
vēḷappā ainteḻuttuc citti vēnum
cirulakil ainteḻuttait tiyānam ceyyē.

ceyyappā mūliellām cāpam tīrttuc
ceyalāna upacaranai uṇṭu paṇṇi
kaiyappā varumattait terintu koṇṭāl
karuttāna kaippākam ariya vēṇum
naiyappā itanvivaram nanrāyp pārttu
nalamāna nūlkaṇṭu teḷiku vāyni
paiyappā varumamellām pakarak kēḷu
parāparanai neñcatanil niṉaintu tērē.

It is God who abides with the world and its activities. He has neither a beginning nor an end. He knows not birth and death. Nor does he have a form with a head and feet, visible. He is above all that is worldly. He is incomparable and unexcelled. he is one whole. He is manifest in every thing. He is the life of all beings. He is the source of light inexhaustible and thus he makes everything seen. He is Shiva who wears the crescent on his head. In Him all life is born and contained. I surrender to Him. May He help me in this task of expounding for the benefit of people the Art of Varma, (Varmak Kalai) I begin invoking His blessings.

Varmani is the practitioner of Varmakkalai. All types of injuries, be it accidental or natural or caused by actions intentional or otherwise may be cured by the incantation of the Namasivaya mantra. Hence pray to the Lord chanting this mantra and meditate

on him. Also you seek the blessings of your Guru, praying to him.

Having already acquainted yourself with the Varma methods of treatment and preparation of portions through cathartic process, you should also know the various aspects of Varma. You should also learn how to propitiate the herbs and remove the curses on them. Only then should you start practising varma system of medicine. I therefore offer you this treatise on Varma Art as a source of help and guidance. Pray to the Lord and lend your ears to me.

1. கொண்டைக்கொல்லி வர்மம்

வகையாக தலைமுகிந்த கொண்டைக் கொல்லி
வகுப்பாகக் கொண்டிடுகில் குணத்தைக் கேளு
துகையான கொண்டையது குழைந்து போகும்
தோகையரே ஸ்திரீபோகம் விழுந்து போகும்
பகையான சன்னிசீ தளங்கள் வந்து
பழிகேடு செய்திடுமே பாங்காய்க் கொண்டால்
தகையான பெரியோர்கள் வந்திட் டாலும்
தப்பாது மரணம்வரும் சார்ந்து கேளே. (1)

"தானான தலையிற்கொண்டைக் கொல்லிக் காலம்"
(வர்மக்கண்ணாடி – 15)

"கேளப்பா சிரசுநடு கொண்டைக் கொல்லி" (ஒடிமுறிவு - 20)

"பாடுவோம் உச்சிநடு உள்ளந் தன்னில்
பாங்கான அடியிடிகள் தாக்குப் பட்டால்"
(தொடுவர்மம் – 14)

என்பன கொண்டைக்கொல்லி வர்மத்தின் இடத்தைச் சுட்டுவன. தலையில் இடங்கொள்ளுவனவாக அறியப்பெறும் முப்பத்தேழு வர்மங்களில் முதலாவதாக வைத்து எண்ணப்படுவது இவ் வர்மம். இது மண்டையோட்டின் மூன்று துண்டுகளும் இணைந்து நிற்கும் தலை உச்சியில் நிலைபெறுவதாகும். இதனை உச்சிவர்மம் எனவும் வழங்குவர். தலையின் உச்சிப்பகுதி கொண்டை எனவும் வழங்கப்பெறும் – ஆணியின் கொண்டை என்றாற்போல. கொண்டையில் இடம் கொள்ளுதலின் கொண்டைக்கொள்ளி என்பது பொருந்தும். கொல்லி என கொள்ளுதலின் கொச்சையாக மருவியதாகலாம். தலைமுடியை முடிவது கொண்டை எனக்கொண்டு உச்சியிலிருந்து எட்டு விரல் அளவு கீழே அமைவது கொண்டைக் கொல்லி என்பர். இது நூல் கருத்திலிருந்து மாறுபடுகிறது. அது பிடரிவர்மமாகும்.

கொண்டைக்கொல்லி என்னும் இந்த வர்மத்தில் அடிபட்டால் தலையின் உச்சியானது நெகிழ்ந்து கலங்கிப்போகும். உயிருக்குத் தீங்கு தருமளவில் சன்னியும் சீதளமும் உண்டாகும். இலிங்கந் தளர்ந்து பெண் சுகத்தைப்போக்கும். கைகால் சோர்வும் உடல் அயர்வுந் தோன்றும்.

"செப்புவோம் சிரசுநடு கொண்டைக் கொல்லி
சீர்க்கேடு வந்திடுகில் குணத்தைக் கேளு
தப்புமோ கொண்டையது அயர்ந்து போச்சு
. . . .
அப்புமே இந்தவர்மங் கொண்ட பேர்கள்
உயிர்போவ தில்லையது அறிவித் தோமே".

என்பது வர்மக்கண்ணாடியின் கூற்று (37). வர்மத்தில் அடிபலமாயின் பிழைப்பது கடினம். ஆயினும் பதினைந்து நாழிகைக்குள் முயற்சி செய்தால் இளக்கிவிட முடியும்.

அடிபட்டவரை முறையாகத் தூக்கி உட்காரச்செய்து, உச்சியில் கையை வைத்துத்தட்டித் தண்ணீர் ஓதித் தெளித்துச் சுக்குத்தூளின் மணத்தினைக் காதிலும் மூக்கிலும் ஊதல் வேண்டும். கஞ்சியூட்டிவிடவும் தெளிவாகும். எண்ணெய், கியாழம், நெய் முதலியவற்றை முறையாகக் கொடுத்துவர முழுமையாகக் குணமாகும்.

முகிதல்-முடிதல், முற்றுதல். முகிந்த – முடியும் இடம், உச்சி. கொண்டை மயிர்முடி. இங்கு-தலையுச்சி. பெரியோர்-உயர்ந்த மருத்துவ ஆசான்மார். சன்னி-சீதநோய். சீதளம்- குளிர்ச்சி.

1. Koṇṭaikkolli Varmam

vakaiyāka talaimukinta koṇṭaik kolli
vakuppākak koṇṭitukil kuṇattaik kēḷu
tukaiyāṉa koṇṭaiyatu kuḻaintu pōkum
tōkaiyarē sripōkam viḻuntu pōkum
pakaiyāṉa caṉṉici talaṅkal vantu
paḻikēṭu ceytitumē paṅkāyk koṇṭāl
takaiyāṉa periyōrkaḷ vantit tālum
tappātu maraṇamvarum cārntu kēḷē (1)

"tāṉāṉa talaiyiṟkoṇṭaik kollik kālam"

(Varmak Kaṇṇāṭi - 15)

"kēḷappā ciracunaṭu koṇṭaik kolli" (Oṭimuṟivu - 20)

"pāṭuvōm uccinaṭu uḷḷan taṉṉil
  pāṅkāṉa aṭiyiṭikaḷ tākkup paṭṭāl" varmam - 14)

Kondaikkolli Varma, being located in the head, it is the first among the 37 important Varmas. It is located at the point on the skull where all the three bones meet. This is also called ucchi Varmam. The top most part of the head is called "Kondai", hence the name.

If one is hit on this Kondaikolli Varma the region becomes loose and disorganized. Cold and phlegm result to the extent of being fatal; sterility, loss of libido, general tiredness and laxity of the body are caused.

"ceppuvōm ciracunaṭu koṇṭaik kolli
  cirkkēṭu vantiṭukil kuṇattaik kēḷu
tappumō koṇṭaiyatu ayarntu pōccu
... ...
appumē intavarmaṉ koṇṭa pērkaḷ
  uyirpōva tillaiyatu aṟivit tōmē"

Thus it is said in Varmak Kannadi (37). If the injury is serious survival becomes remote. But one could try massage - treatment within 15 Nazhigais.

The injured must be carefully lifted and made to sit, the injured spot of the head should be patted gently and sponged with water. Powder of dry ginger should be applied to the ears and nostrils. The affected should be on Kanji. Oils, decoctions and ghee should be given in proper doses.

2. *சீறுங்கொல்லி வர்மம்*

கேளப்பா சீறுங்கொல்லி கொண்டு தானால்
  கெணிதமுடன் சொல்லுகிறேன் கெறுவாய்க் கேளு
கேளப்பா கொண்டவுடன் தலையு ருட்டும்
  குணமாக வாயில்பதை குறுக்குங் கூனும்
நாளப்பா நாக்கையுமே சவைக்கும் பாரு
  நாளெட்டும் ஈராறுங் கழிந்தால் !மீளும்

பாளப்பா போகாது குணமுண் டாகும்
பதிவாக யிதையறிந்து பார்த்துச் செய்யே. (2)

"தானான தலையில்கொண்டைக் கொல்லிக் காலம்
சாண்ஒட்டை அதற்குக்கீழ் சீறுங் கொல்லி"

(வர்மக் கண்ணாடி - 15)

"கேளப்பா சிரசுநடு கொண்டக் கொல்லி
கீர்த்திபெற ஒட்டையின்கீழ்ச் சீறுங் கொல்லி"

(ஒடிமுறிவு - 20)

என்பன சீறுங்கொல்லி வர்மத்தின் இடத்தைச் சுட்டுவன. தலையுச்சியில் இடம்பெறும் கொண்டைக்கொல்லிக்கு ஒட்டைச்சாண் அளவு நேர்கீழே பின்புறத்தில் இவ்வர்மம் இடம்பெறுகிறது. இந்த வர்மங் கொண்டவுடன் தலையுருட்டுதல், வெறும்வாயை மெல்லுதல் முதலான சீற்றத்திற்குரிய குறிகுணங்கள் ஏற்பட்டுவிடுவதால் 'சீற்றங்கொள்ளி வர்மம்' என்ற பெயர் கொடுக்கப் பெற்றிருக்கவேண்டும். அதுவே சீறுங்கொள்ளி எனத்திரிந்து, சீறுங்கொல்லி என்ற கொச்சைநடையைப் பெற்றிருக்கிறது. கொல்லுந் தன்மையைப் பெறும் வர்மங்களாதலின் இவை இரண்டும் 'கொல்லி' என்ற சிறப்புக்குரியவாயின எனவும் பொருள் கொள்ளலாம். மாத்திரையில் மிகுகின்றவிடத்துப் பலவகை வர்மங்கள் கொல்லுந்தன்மையைப் பெறுவனவே ஆதலின் கொல்லி என்பது இயற்பெயராகத் தோன்றவில்லை.

சீறுங்கொல்லியில் அடிபட்டால் தலையை உருட்டுதல், வாயில் நுரைதள்ளுதல் ஆகியவை ஏற்படும். மேலும் நெடுகக் கூன்விழுவதோடன்றி ஒரு பக்கச்சாய்வாகக் குறுக்கிலும் கூன் விழுந்துவிடும். வெறும் வாயை மென்று சுவைக்கும் செயலும் காணப்பெறும்.

". . . . . சிரசுருட்டிக் குறியே திச்சுக்
குறியான வாயதுவும் குறுக்குங் கூனும்"

என்னும் வர்மக்கண்ணாடி (38) கூறும் குறிகளும் இவ்வர்மத்திற்குரியனவாகும். இவையும் சீற்றத்தில் குறிகளாகிப் பெயரின் பொருத்தத்திற்குத் துணைபுரிகின்றன. வர்மநோய் ஏற்பட்ட எட்டாம் நாளும் பன்னிரண்டாம் நாளும் இவ்வர்மத்திற்குரிய கடின நாட்களாகும். இந்நாட்கள் கழிந்தால் மருத்துவத்தால் குணமாவது உறுதி. 'நாளெட்டு' என்பதை 'நாலெட்டு' என்று கொண்டு கணக்கிடுவர் வர்மாணியர்.

தாக்கி இருத்துதல், தடவித்தட்டுதல், நீர் ஓதித்தெளித்தல், கஞ்சியுண்ணச் செய்தல் ஆகிய முறைகளால் இளக்கி, முறையாகக் கியாழமும், மருந்தும் கொடுத்து வரக் குணமாகும்.

கெணிதம்-கணிதம், எண்ணிக்கை, சரியாக. கெறு – கெட்டியாய், பொறுப்பாய். பதைநீர் - பதைத்துவரும் நீர், மிகுதியாகத் தோன்றும் நீர். சவைத்தல் – சுவைத்தல், வெறும் நாக்கைச்சுவைத்தல்.

2. Ciruṅkolli Varmam

kēḷappā ciruṅkolli koṇṭu tāṉāl
    keṇitamutaṉ collukirēṉ keruvāyk kēḷu
kēḷappā koṇḍavutaṉ talaiyu ruṭṭum
    kuṇamāka vāyilpatai kurukkuṅ kūṉum
nāḷappā nākkaiyumē cavaikkum pāru
    nāleṭṭum irāruṅ kaḻintāl mīḷum
paḷappā pōkātu kuṇamuṉ ṭākum
    pativāka itaiyarintu pārttuc ceyyē (2)

"tāṉāṉa talaiyirkoṇṭaik kollik kālam
    cāṉoṭṭai atarkukkil ciruṅ kolli"

(Varmak kaṇṇāṭi - 15)

"kēḷappā ciracuṉatu koṇṭaik kolli
    kīrttipera oṭṭaiyiṉkiḻe ciruṅ kolli" (Oṭimurivu - 20)

Now let me enlighten you on Seerunkolli Varmam. This varma point is located a span away straight kondaikkolli below on the back side of the head. This varma derives its name from the injury-caused symptoms like the turning of the head, trying to clear an empty mouth which indicate a (mouth) troubled state of mind. Seetrankkolli has come to be known as Seerunkolli. As both the Varmas are fatal they are "Kolli" ('Kolli' means that which kills). Depending upon the degree of the damage caused to the varma the injury becomes at times more fatal. Hence the term 'Kolli'.

Injury to this Varma causes shaking of the head and frothing. Besides the person may lose his balance and fall down. Sometimes he grows a hunch on one side and chews with nothing in the mouth.

"...... ciracuruttik kuripē ticcuk
kuriyāṉa vāyatuvum kurukkuṅ kūṉum"

(Varmak kannāti - 38)

These symptoms prove the aptness of the name given to this

Varma. The 8th and 12th days after the injury to this Varma are crucial days and if the person is capable of surviving the effects of these the condition can be treated medically and with success too.

The person affected has to be treated with massage. He is lifted carefully and made to sit. He has to be fed on kanji. Decoctions and medicines are to be administered.

3. பிடரி வர்மம்

செய்யவே பிடரிவர்மம் கொண்டு தானால்
செப்புகிறேன் குணமதனைத் தெளிந்து கேளு
வெய்யவே தலைகுழைந்து கண்டம் சாய்க்கும்
விந்தையாய் [1]மூச்செடுக்கும் நாக்குந் தள்ளும்
பய்யவே [2]கடிமூன்றே முக்கா (லப்பா)
பாரமாய்க் கொண்டுதென்றால் அப்பா கேளு
மய்யவே மரணமது காணு மென்று
வகுப்பாக யிதையறிந்து அகன்று காணே. (3)

"ஊனான உறக்ககாலம் நாலங்குலத் தின்கீழ்
உற்றதொரு பிடரிவர்மம் பாரு பாரு"

(வர்மக்கண்ணாடி - 15)

". . . . கீர்த்திபெற ஒட்டையின்கீழ் சீறுங் கொல்லி
நாளப்பா நால்விரற்கீழ்ப் பிடரிக் காலம்" (ஒடிமுறிவு - 20)

கொள்ளவே பிடரிஎன்ற குழியில் தானே
குணமாக முடிமுடிந்த தலத்தி லப்பா
மெல்லவே அதிற்பிடரிக் கால மென்றேன்

(வர்மக்கண்ணாடி - 8) (சுவடி)

என்னும் அடிகள் பிடரிக்காலத்தின் இடத்தைக் கூறுகின்றன. அதாவது பிடரிவர்மம் என்பது தலையின் பின்புறத்திலமையும் சீறுங்கொல்லி வர்மத்திலிருந்து நான்கு விரலளவு நேர் கீழே அமைவது; கழுத்தின் முன்புறத்திலமையும் உறக்க காலத்திற்கு நான்கு அங்குல அளவு ஒரு பக்கமாகப் பின்புறத்தில் அமைவது ஆகும். புறங்கழுத்துப் பகுதியாகிய பிடரியில் இடங்கொள்ளுதலின் பிடரிவர்மம் எனப்பட்டது.

---

1. பா.வே. மூச்சொடுக்கும் 2. பா.வே. "கடிகைபதி னொன்றே முக்கால்"

பிடரிவர்மத்தானத்தில் அடிபட்டவுடன் மிக விரைவில் தலை நெகிழ்ச்சியடைந்து கழுத்து முன்பக்கம் சாய்ந்து தொங்கிப்போகும். இயற்கைக்கு மாறாகப் பெருமூச்சு வாங்கும். நாக்கு வெளியிலே தொங்கிப்போகும்.

"..... பிடரிவர்மம் – குணம்,
கொண்டாலோ அப்படியே மலந்தள்ளும் குறியான
கண்சிறும் நாக்குந் தள்ளும்" (வர்மக்கண்ணாடி – 39)

"பேணவே பிடரிவர்மங் கொண்டு தானால்
பிலம்பெறவே கண்ணுரெண்டு மடைத்துக் கொள்ளும்
தோணவே தலைகுனிந்து தேகம் சாய்க்கும்
தொடர்ந்துமூச் செடுத்துநா வெளியில் தள்ளும்"
(தொடுவர்மம் -81)

என்பனவும் பிடரிவர்மத்தின் அறிகுறிகளாகும்.

இவ்வர்மங்கொண்டால் மூன்றே முக்கால் நாழிகைக்குள் இளக்கவேண்டும். அடி பலமாகப் பட்டிருந்தால் குணமாக்க முடியாது என்பது இப்பாடல் கூற்று. ஆனால்,

"விண்டாலோ நாழிகைதா னிருபத்து நாலு
இதுகழியு முன்இளக்கி விடுதல் நன்று"

என்கிறது வர்மக்கண்ணாடி (39).

வர்மங் கொண்டவரின் கால்களை மடக்கிச் சேர்த்துப் பிடித்துத் தூக்கித் தரையில் உட்காரவைத்து, முறையாக உச்சியில் குத்தி, அகங்கழுத்திலும் பிடரியின் இருபக்கங்களிலும் பலமாகத் தடவிக் கொடுத்து அப்பக்கத்து நரம்புகளையும் பிடித்து விட்டால் குணம் ஏற்டும். வெந்தயக்கஞ்சி உண்ணச் செய்து முசுமுசுக்கைத் தயிலத்தை உள்ளுக்குக் கொடுத்துவரக் குணமாகும்.

பிடரி-புறங்கழுத்து. குழைதல்-நெகிழ்ந்துசாய்தல், துவண்டு சாய்தல். கண்டம்-கழுத்து. மூச்செடுத்தல்-மூச்சுவாங்குதல். தள்ளுதல்-. வெளித்தள்ளல், கழித்தல். கடி-கடிகை, நாழிகை.

3. Piṭari Varmam

ceyyavē piṭari varmaṅ koṇṭu tāṉāl
ceppukiṟēṉ kuṇamataṉait terintu kēḷu
veyyavē talaikuḻaintu kaṇṭam cāykkum
vintaiyāy mūccetukkum nākkun taḷḷum
payyavē kaṭimūṉṟē mukkā (lappā)
pāramāyk koṇṭuteṉṟāl appā kēḷu

mayyavēmaranamatu kānu menru
vakuppāka yitaiyarintu akanru kānē (3)

"ūnāna urakka kālam nālaṅkulat tinkil
urratoru pitarivarmam pāru pāru"

(Varmak kannāti - 15)

"kirttipera ottaiyinkil ciruṅ kolli
nālappā nālvirarkil pitarik kālam" (Otimurivu - 20)

"kollavē pitarienra kuliyil tānē
kunamāka mutimutinta taltti lappā
mellavē atirpitarik kāla menrēn"

(Varmak kannāti Mss - 8)

Pidari Varmam is located on the skull at 4 fingers from Seerunkolli Varma. It is 4 inches side ways from the Urakkakala Varma and on the front of the neck. As this Varma is located in 'Pidari' region (the hinder and upper part of the name) on the neck it is called Pidari Varmam.

Injury to the Pidari Varma renders the muscles of the area congested and weakens the neck and makes it slightly stoop. Purging and palpitation result and tongue hangs out.

". . . . pitarivarmam - kunam,
kontālō appatiyē malantallum
kuriyāna kancirum nākkun tallum"

(Varmak kannāti - 39)

"pēnavē pitarivarmaṅ kontu tānāl
pilamperavē kannurentum ataittuk kollum
tōnavē talaikunintu tēkam cāykkum
totarntumūc cetuttuna veliyil tallum"

(Totu varmam - 81)

vintālō nālikaitān irupattu nālu
itukaliyu munilakki vitutal nanru

(Varmak kannati - 39)

The afflicted person is lifted carefully his legs bent and kept together, and made to sit on the floor and is pricked with needles.

*The front and back side of the neck are massaged and the nerves in that area are stimulated carefully. A gruel made of fenugreek seeds and oil of Musumusukkai are administered.

4. [1]சுருதி வர்மத்தின் குணம்

காணவே [1]சுருதிவர்மங் கொண்டு த்தானால்
தப்பாமல் செய்குணத்தை செப்பக் கேளு
தோணவே கொண்டவுடன் தலைசு ருட்டும்
குறிகோடாய்ப் பனிகுளிரும் நடுக்கும் தேகம்
பூணவே கடிகைபத் தொன்ப தாகும்
புகழாகக் கொண்டுவந்தால் புரிந்து நீயும்
ஊன்றியே இளக்கிவிடு [2]மூழ்கு மப்பா
உத்தமனே மாத்திரையை மகிழ்ந்து செய்யே (4)

"ஏனான உச்சியிலே யிருந்து எட்டு
விரலின்கீழ் சுருதிவர்மம் எனச்சொல் வார்கள்"
(வர்மக்கண்ணாடி – 15)

"நாளப்பா நால்விரற்கீழ் பிடரிக் காலம்
நாலிறை பக்கம்மேல்முன். சடுதி வர்மம்" (ஒடிமுறிவு – 20)

என்பன சுருதி வர்மத்தின் இடத்தைச் சுட்டுகின்றன. சருதிவர்மம், சடுதிவர்மம், என்பன சுருதிவர்மத்தின் வேறுபெயர்களாதல் வேண்டும் என்ற கருத்தை ஊட்டுகின்றன. ஆனால் சு என்ற எழுத்தைச் 'ச' என்று கொண்டதும், ரு என்ற எழுத்தை 'டு' என்று கொண்டதும் ஏடு எழுதுவோரால் ஏற்பட்டுவிட்ட மாற்றங்களாகும்; இவை மாற்றுப் பெயர்களல்ல. சரிதி வர்மம் என்றும் சில ஏடுகளில் காணப்படுகிறது. கொண்டைக்கொல்லிக்கும் சிறுங்கொல்லிக்கும் இடையில் தலையின் பின்புறத்து இடங்கொள்வது சுருதி வர்மம் ஆகும். ஒலி, இசை, காது என்னும் பொருள்களில் வழங்குவது சுருதி என்னுஞ் சொல். இவ்வர்ம நோய் ஒலியை உண்டாக்கிக் காதடைப்பை ஏற்படுத்துதலின் பெற்ற பெயரால் கூடும்.

தலைசுற்றுவதும், மிகுந்த குளிரால் உடல் நடுக்கத்தை உண்டாக்குவதும் இதன் அறிகுறிகளாகும். பத்தொன்பது நாழிகைக்குள் இளக்க முயற்சிக்க வேண்டும்.

தூக்கி இருத்துதல், தட்டித்தடவுதல், தண்ணீர் ஒதித்தெளித்தல், சூடான

* references to Accupuncture in ancient Indian system of medicine

1. பா.வே. சடுதி வர்மம், சருதி வர்மம்
2. பா.வே. இளகுமப்பா.

கஞ்சிகொடுத்தல் ஆகியவை இதன் பொது இளக்கு முறைகளாகும்.

சுருட்டுதல் – சுருண்டுபோதல். பனிகுளிர் – நடுக்குங்குளிர். மாத்திரை – அளவு.

4. Curuti Varmam

kāṇavē curutivarmaṅ koṇṭu tāṉāl
tappāmal ceykuṇattaic ceppak kēḷu
tōṇavē koṇṭavuṭan talaicu ruṭṭum
kuṟikētāyp paṉikuḷirum naṭukkum tēkam
pūṇavē kaṭikaipat toṉpa tākum
pukaḷākak koṇṭuvantāl purintu nīyum
ūṉṟiyē iḷakkivitu mūḷku mappā
uttamaṉē māttiraiyai makiḻntu ceyyē (4)

"ēṉāṉa ucciyilē iruntu eṭṭu
viraliṉkīḻ carutivarmam enaccol vārkaḷ"

(Varmak Kaṇṇāṭi - 15)

nāḷappā nālviraṟkīḻ piṭarik kālam
nāliṟai pakkammēlmun catuti varmam

(Otimuṟivu - 20)

The location of suruthi Varma (also called Saduthi and suruthi) due to the words having been wrongly spelt by different writers. It is even called "Sarithi" Varma in some texts.

This Varma is located between the Kondaikolli Varmam and Seerunkolli Varmam at the back side of the head. The word suruthi meaning sound, music and ears. Thus by extension they come to mean deafness caused by noise in the ears.

It also causes giddiness and shivering. One should try to revive the victim within 19 Nazhigais. (Twenty-four minutes make a Nazhikai) The patient is to be lifted carefully, bathed and sponged with water. He must be given hot Kanji. This forms the first-aid to such patients suffering from damage to this Varmam.

5. புகழ்ச்சை வர்மத்தின் குணம்

மாத்திரையாய்ப் புகழ்வர்மங் கொண்டு தானால்
        மைந்தனே செய்குணத்தை வருந்திக் கேளு
சாத்திரமாய்க் கொண்டவுடன் மயங்கு மப்பா
        தப்பாமல் புருவமது சீறிக் குத்தும்

சாற்றுகிறேன் கடிகையறு பத்து நாலுந்
        தான்கழியு முன்னாகத் தடவி விட்டு
ஆற்றுகிறேன் அடங்கல்பதி யகற்றச் செய்ய
        அப்பனே எழுந்திருக்க அறிந்து சொல்வான். (5)

"நாலிறை பக்கம்மேல்முன் சடுதி வர்மம்
பாளப்பா இரண்டிறைக்கீழ் புகச்சை வர்மம்" (ஒடிமுறிவு – 20)

என்பது புகச்சை வர்மத்தின் இடத்தைச் சுட்டுகிறது. இவ்வடிகளில் குறிப்பிடப்பெறும் சடுதி வர்மம் என்னும் சுருதிவர்மத்தின் கீழ் இரண்டு விரற்கடை அளவில் இடங்கொள்வது புகச்சைவர்மம் எனப்பெறுகிறது. சுருதியின் நேர் கீழேயல்லாது சிறிது பக்கவாட்டில் இடங்கொள்ளுகிறது.

புருவம் நிமிர்ந்து குத்திநிற்க உடல்முழுவதும் குத்தலுங் குடைச்சலும் உளைச்சலும் உண்டாகி, கண்களைமங்கச் செய்து இருளடையச் செய்தல் இவ்வர்மத்தின் அறிகுறிகளாதலின் 'புகைச்சை' என்னும் பெயர் பெற்றுள்ளது. அதுவே புகச்சை, புகழ்ச்சை எனப் பலவாறாகத் திரிந்துள்ளது.

அறுபத்துநான்கு நாழிகைக்குள் இளக்கலாம். தூக்கி இருத்துதல் முதலான அனைத்துப் பொது இளக்குமுறைகளும், கஞ்சி, மருந்து முறைகளும் இவ்வர்மத்திற்கும் பொருந்துவனவாகும்.

சீறுதல் – சினக்குறிப்போடு தோன்றுதல். குத்துதல் – நெரித்தல், சினக்குறிப்பாய்க் குத்தி நிமிர்ந்து தோன்றுதல்.

5. Pukal̲ccai Varmam (Pukaccai)

māttiraiyāyp pukal̲varmaṅ koṇṭu tāṉāl
        maintaṉē ceykuṇattai varuntik kēḷu
cāttiramāyk koṇṭavuṭaṉ mayaṅku mappā
        tappāmal puruvamatu cīr̲ik kuttum
cār̲r̲ukir̲ēṉ kaṭikaiyar̲u pattu nālum
        tāṉkal̲iyu muṉṉākat taṭavi viṭṭu

---

1. பா.வே. புகச்சை (புகைச்சை); பொற்சை.

ārrukirēn atankalpati yakarrac ceyya
appanē eluntiruntu arintu colvān (5)

" nālirai pakkammēlmun catuti varmam
Pālappa irantiraikkil pukaccai varmam"

(Otimurivu - 20)

This Varmam is located 2 fingers below the 'Saduthi' Varmam. It is not directly below but a little away on one side. Injury to this Varmam causes raising of the eye brows and severe body pain and tiredness. A complete loss of eye sight may also occur.

Effort must be made to revive the patient within 64 Nazhigais. The same kind of first aid may be given. Dieting and prescription of medicine should be along the same lines.

6. செவிக்குத்திக் காலத்தின் குணம்

அழுந்தியே செவிக்குத்திக் காலங் கொண்டால்
அருமையாய்ச் சொல்லுகிறேன் அறிந்து பாரு
பழுந்தியே சுமருமப்பா துடிக்குந் தேகம்
பண்பான கண்ணிரண்டும் அடைத்துப் போகும்
மழுந்தியே மொழிந்தமொழிக் கெதிர்வி சைதான்
மைந்தனே மதியேங்கி மயக்க முண்டாம்
மொழிந்தியே நாழிதான் (முப்பத் தேழு)
மோசமில்லா முன்சென்று முடிக்கச் செய்யே. (6)

7. ஆமென்ற செவிக்குத்திக் காலங் கொண்டால்
அறியவே சொல்லுகிறேன் அன்பாய்க் கேளு
நாமென்ற வாய்மூக்கில் நீர்ஓ லிக்கும்
உத்தமனே தியங்கியே முகங்க றுக்கும்
தாமென்ற வாய்மூக்கு ரத்தம் உண்டாம்
தப்பாமல் கடிகையது முப்பத் தேழு
ஆமப்பா உறவதனால் அடங்கல் பார்த்து
மருவியே பிடிக்கஅவன் அலறு வானே. (7)

"மூலமாய்க் காதின்சிறு தண்டருகில் தானே
செவிக்குற்றிக் கால மென்பார். . ."

(வர்மக்கண்ணாடி - 16)

என்பது செவிக்குத்திக்காலத்தின் இடத்தைச் சுட்டுவதாகும். காதின் சிறுதண்டையடுத்துள்ள குழியில் நிலைத்துள்ளது செவிக்குத்திக்காலம். செவியையடுத்து அமையும் வர்மநிலை யாதலின் செவிக்குத்தி என்னும் பெயர்பெறுகிறது. இதைச் செவிக்குற்றி எனவும் வழங்குவர். குத்தல், குற்றல் என்னும் இரு சொற்களும் அடித்தல், இடித்தல், குத்துதல், நெரித்தல் என்னும் ஒரே பொருளைத்தருவன. செவியையடுத்த குழியாகிய இடத்தில் அடங்கியிருத்தலின் அடக்கம் என்னும் பொருளால் குத்தி அல்லது குற்றி என இகர ஈறு பெற்றது. இது இரு செவிகளையும் அடுத்து நிலைபெறும் வர்மமாகும்.

இந்த வர்ம நிலையில் அடிபட்டால், அடிபட்டவரின் உடல் முழுமையும் நடுங்கித் துடிக்கும்; கண்களிரண்டும் இருண்டுபோகும்; நாகுழறிச் சொல் தடுமாறும்; மயக்கமும் ஏற்படும்; வாயிலும் மூக்கிலும் நீரும் இரத்தமும் வடியும்; முகங் கறுத்துப்போகும்; பிடித்தால் அலறுவார். (பிடித்தால் அகலுவார் என்பது சரியாகலாம்.)

இந்த வர்மத்தில் அடிபட்டால் முப்பத்தேழு நாழிகைக்குள் இளக்க வேண்டும். இருபத்துமூன்று நாழிகைக்குள் இளக்க வேண்டும் எனவும் கூறுவர்.

“நிகழ்த்தவே மறுபுறத்தில் விரல்கொண் டூன்றி
நேர்மையாய்க் கைபொத்தி நெருங்கக் குத்து
திகழவே சுக்கதனைப் பொடிய தாக்கிச்
செவிரெண்டும் ஊதிவிடத் திறக்கும் பாரே”

(வர்மசூட்சம் – 32)

என்பது இளக்குமுறை கூறுவது. அதாவது,

அடிபட்ட காதின் மறுபுறத்தில் விரலை ஊன்றிக்கொண்டு மறுகையால் ஊன்றிய விரலின் மீது பலமாகக் குத்த வேண்டும். மருத்துவர் தமது வலக்கையை விரித்துச் சிரசில் வைத்துக்கொண்டு இடக்கையால் குத்தவேண்டும். சுக்குத்துண்டை மென்று காதில் ஊத வேண்டும். தண்ணீர் ஓதி முகத்தில் தெளிக்க வேண்டும். மயக்கம் தெளியும் நிலையில் சாமையரிசிப்பால் அல்லது அன்னப்பால் உள்ளுக்குத்தர தெளிவு ஏற்படும்.

சுமருதல் – சுமக்குதல், சிறிது சிறிதாகக் கனத்துத் துடித்தல். அடைத்தல் - ஒளிமங்குதல், இருளாதல். முன்- உரியகாலத்தில், விரைவில் முடிக்கச் செய்தல்- இளகச்செயதல். நீர் ஒலித்தல்-நீர்மிகுதல், நீர் வடிதல், தியங்குதல்-சோர்வடைதல்.

6. Cevikkuttik Kālam

aḻuntiyē cevikkuttik kālaṅ koṇṭāl
arumaiyāyc collukiṟēṉ aṟintu pāru

paluntiyē cumarumappā tuṭikkum tēkam
panpāna kaṇṇirantum ataittup pōkum
maluntiyē molintamolik ketirvi caitāṉ
maintaṉē matiyēṅki mayakka muṇṭām
molintiyē nālitān (muppat tēlu)
mōcamillā muṉceṉṟu muṭikkac ceyyē (6)

7. Cevikkuttik Kālam

āmeṉṟa cevikkuttik kālaṅ koṇṭāl
aṟiyavē collukiṟēṉ aṉpāyk kēḷu
nāmeṉṟa vāymūkkil nīro likkum
uttamanē tiyaṅkiyē mukaṅka ṟukkum
tāmeṉṟa vāymūkku ratta muṇṭām
tappāmal kaṭikaiyatu muppat tēlu
āmappā uṟavataṉāl ataṅkal pārttu
maruviyē piṭikkaavaṉ alaṟu vānē (7)

"mūlamām kātiṉciṟu taṇṭarukil tānē
cevikkuttik kāla meṉpār ..." (Varmak kaṇṇāṭi - 16)

This verse describes the location of the Sevikkutthi Varma. This is located in the small **depression** near the earlobe and gets its name from the location. Some call it also Sevikkutri. Both 'Kuttal' and 'Kutral' mean the same namely piercing or boring. It is also called Kuthi or Kutri as it is restricted to the small depressed area. This is present on both sides of the ears.

Injury to this Varma causes shivering of the whole body. The victim looks dark and gloomy; develops stammering and blabbering; and feels giddy. He bleeds in the nose and mouth. The patient screams on being touched. He has to be cured within 37 nazhigais. According to **Varmakandi** treatment must completed within 23 nazhigais.

"nikalttavē maṟupuṟattil viralkoṇ ṭūṉṟi
nērmaiyāyk kaippotti neruṅkak kuttu
tikalavē cukkatanaip potiya tākkic
cevireṇṭum ūtiviṭaṭ tiṟakkum pārē"

(Varmacūttiram - 32)

According to Varma Sootcham the obverse of the ear is to be pressed

with a finger and mildly tapped with the other hand. The physician should place his palm on the head and punch with the left hand. He should also blow into the ear after having chewed a piece of dry ginger, and sponge the face after sprinkling a little water. When the patient regains his consciousness he should be given 'Samai or Anna milk'.

8. முடிச்சு வர்மத்தின் குணம்

அறையவே முடிச்சிவர்மங் கொண்டு தானால்
அறியவே சொல்லுகிறேன் அன்பாய்க் கேளு
குறையவே கண்ணிரண்டுந் தள்ளு மப்பா
குறியாக வாய்பிளந்து கண்சி வக்கும்
நிறையவே வாய்மூக்கில் நீரொ லிக்கும்
நிச்சயமாய் உறுமியே உடலே வெட்டும்
நிறையவே நாழிகையீ ராற தாகும்
நிசமாகத் தடவிவிட நினைவுண் டாமே. (8)

"பிடரியின் இறைநாலில் முடிச்சு வர்மம்"

(ஒடிமுறிவு – 20)

என்பது முடிச்சுவர்மத்தின் இடத்தைச் சுட்டுகிறது. தலையின் பின்புறத்தில் புறங்கழுத்துப் பகுதியில் இடங்கொள்ளும் பிடரிவர்மத்தின் நேர்கீழே நான்குவிரல் அளவில் இடம் பெறுவது முடிச்சுவர்மமாகும் என்பது இங்குச் சுட்டப்பெறுகிறது.

"செய்யப்பா மூவிரலில் கீழே தானே
திறமான முன்நரம்பில் முடிச்சு மையம்"

(வர்ம சூத்திரம் – 81)

"வளமான அதனருகில்சிறு விரலின் கீழே
ஒன்றான முன்நரம்பில் முடிச்சி மையம்"

(வர்மக்கண்ணாடி – 34)

என்னும் இவ்வடிகள் கால் சிறுவிரலின் தோற்றமாகிய முன் நரம்புப்பகுதியில், அச்சிறுவிரலின் அடிப்பாகத்தில் இடம்பெறுவதே முடிச்சி வர்மம் என்னும் உயிர்நிலை என்பதை உணர்த்துகின்றன. கால் நரம்புகள் பலவற்றின் கூட்டு நிலையாகிய விரல்அடியில் அமைவது ஆதலின் இது முடிச்சு வர்மம் எனப்பெறுகிறது. இந்நரம்புகளில் சுளுக்கு முதலியன ஏற்பட்டால் அவ்விடத்து

நரம்புகள் சேர்ந்து தொல்லை தருவதை முடிச்சிகட்டிக்கொண்டு வலியை உண்டாக்குகிறது என்பது உலகவழக்கு. உண்மையும் அதுவே. ஆனால் கண்டத்தின் மேலுள்ள முப்பத்தேழு வர்மங்களைச் சுட்டும் இப்பகுதியில் அமைவது ஆதலின் இது புறங்கழுத்துப்பகுதியைச் சார்ந்தது என்பதே ஆசிரியர் கூற்றாகும்.

இந்த உயிர்நிலையில் அடிபட்டால் இரண்டு கண்களும் சிவந்து வெளித்தள்ளி (பிதுங்கி) நிற்கும்; வாய் திறந்தபடி நிற்க, வாயிலும் மூக்கிலும் நீர்வடியும்; உடல் குலுங்குதலும் உறுமல் ஒலியும் தோன்றும். இதனைப் பன்னிரண்டு நாழிகைக்குள் இளக்க வேண்டும்.

முதலில் முறையாக உட்காரச் செய்து தடவி விடுவதனாலேயே நினைவு தோன்றச் செய்யலாம். தொடர்ந்து பிற இளக்குமுறைகளைக் கையாளலாம்.

தள்ளுதல் – வெளித்தள்ளுதல், பிதுங்கித் தோன்றுதல். வெட்டுதல் – உதறி நடுங்கித்தூக்கிப் போடுதல் நிலை.

8. Muṭiccu Varmam

aṟaiyavē muṭiccivarmaṅ koṇṭu tāṉāl
ariyavē collukiṟēṉ aṉpāyk kēlu
kuṟaiyavē kaṇṇiraṇṭuṉ taḷḷu mappā
kuṟiyāka vāypiḷantu kañci vakkum
niṟaiyavē vāymūkkil nīro likkum
niccayamāy uṟumiyē utalē veṭṭum
niṟaiyavē nāḻikaiyi rāṟa tākum
nicamākat taṭavivita niṉaivuṉ tāmē. (8)

"piṭariyiṉ iṟaināḷil muṭiccu varmam" (Oṭimuṟivu - 20)

The locations of Mudichu Varmam is described. This Varma is situated four fingers below the pidari Varmam on the back of the neck.

"ceyyappā mūviralil kīḻē tāṉē
tiṟamāṉa muṉnarampil muṭicci maiyam"

(Varmacūttiram - 81)

"vaḷamāṉa ataṉarukilciṟu viraliṉ kīḻē
oṉṟāṉa muṉnarampil muṭicci maiyam"

(Varmak kaṇṇāṭi - 34)

According to these lines this Varmam is located underside of the last toe. Many of the leg nerves meet here. Hence the name *'Mudichu'*.

In case this Varmam suffers a sprain, it results in the knotting of nerves. The mouth remains open, fluids ooze out of the nostrils and mouth. The body shivers and the person groans. He has to be helped to recover within 12 nazhigais. He will regain consciousness if he is made to sit and the affected parts of his body are massaged properly. The patient may further be treated so as to cause the affected part to regain mobility.

9. பொய்கைக் காலத்தின் குணம்

[1]மதிப்பான பொய்கைவர்மங் கொண்டு தானால்
மைந்தனே செங்குணத்தை [2]வருந்திக் கேளு
சதிப்பான கண்புகையும் காய்ச்சல் உண்டாம்
சார்பொய்கை குத்தியே [3]புருவஞ் சீறும்
குதிப்பான வாய்மூக்கு நீர்ஓ லிக்கும்
குணமான குறிகள்நீ அறிந்து பாரு
சதிப்பான நாழிகைதான் அறுபத் தொன்று
தப்பாமல் கடக்குமென்றால் சார்ந்து செய்யே. (9)

". . . . .செவிக்குற்றிக் கால மென்பார்
காலமாம் இதனிரண்டு யிறைக்கு மேலே
குணமான பொய்கைஎன்ற கால மாகும்"

(வர்மக்கண்ணாடி - 16)

"வர்மமடா சதிர்மேலே பொய்கைக் காலம்" (ஒடிமுறிவு-21)

என்பன பொய்கைக் காலம் நிலைபெறுமிடத்தைச் சுட்டுவன.

காதின் சிறுதண்டையடுத்த குழிக்குமேலே, அதாவது செவிக்குத்திக் காலத்திற்குமேலே இரண்டுவிரல் அளவில் அமையும் உயிர் நிலை 'பொய்கைக்காலம்' எனப்படுகிறது. குழிக்கு மேலே உள்ள தட்டையான பகுதி ஆதலாலும், ஐம்பொறிகளின் நரம்புகளோடும் தொடர்புடைய உயிர்நிலை யாதலாலும் இப்பகுதியாகிய உயிர்நிலை பொய்கைக்காலம் எனப்பெறுகிறது. இது காதுகளின் இருபுறங்களுக்கும் பொருந்தும்.

இப்பொய்கைக்காலத்தில் எக்காரணத்தாலோ அடிபடுமேயானால் முதலில் அப்பகுதி விறைத்துப் போகும். புருவமிரண்டுஞ் சீறிக் குத்தி நிற்கும்; வாயிலும்

பாடவேறுபாடு 1. முதற்சீர்கள் முறையே மதியான, சதியான, குதியான, சதியான
2. மட்டாய்க் கேளு. 3. புரிகஞ் சேரும்.

மூக்கிலும் நீர்வடியும்; ஐம்பொறிகளும் தம் இயல்பழியக் கண்ணில் எரிச்சல் தோன்றும்; வாயில் நுரைதள்ளும்; தலை அண்ணாந்து வாய்பிளக்கும்; சுரம் உண்டாகும். அறுபத்தொரு நாழிகை கழிந்தபின் இவ்வர்ம நோயினை இளக்க வேண்டும்.

"மாற்றவே நாழிகைதான் முப்பதுக்குள்" என்கிறது தொடுவர்மத்திரட்டு

(பா41)

"திடமுடனே அஞ்சேழு பன்னி ரண்டில்
செகமதிலே மயக்கமது இல்லா விட்டால்
இடமுடனே தெளிவாக இகத்தில் வாழ்வார்
இல்லாமல் மயங்கிடிலும் மாள்வா ரப்பா"

(தொடுவர்மம் - 42)

அதாவது வர்மநோய் உண்டான ஐந்து, ஏழு, பன்னிரண்டாம் நாட்களில் மயக்கம் ஏதும் ஏற்படாமலிருப்பது நல்லது. மயக்கம் ஏற்பட்டுவிட்டால் அசாத்திய நிலையேயாகும். மயக்கமில்லையாயின் தயிலமிட்டுத் தலைமுழுகச்செய்தல், கியாழம், நெய் ஆகியவற்றை முறையாக அருந்தச் செய்தல் ஆகிய முறைகளால் குணமாக்கலாம்.

பொய்கை - குளம் புகைதல் - எரிச்சல்உண்டாதல், கடக்கும் - கழியும், கழிந்ததானால்.

9. Poikaik kālam

matippāṉa poykaivarmaṅ koṇṭu tāṉāl
maintaṉē ceykuṇattai varuntik kēlu
catippāṉa kaṉpukaiyum kāyccal uṇṭām
cārpoykai kuṭṭiyē puruvañ cirum
kutippaṉa vāymūkkuṉiro likkum
kuṇamāṉa kuṟikalṉi aṟintu pāru
catippāṉa nāḻikaitāṉ aṟupat toṉṟu
tappāmal kaṭakkumeṉṟāl aṟintu ceyyē (9)

". . . cevikkuṟṟik kāla meṉpār
kālamām itaṉirantu iṟaikku mēlē
kuṇamāṉa poykaieṉṟa kāla mākum"

(Varmak Kaṇṇāṭi - 16)

"varmamaṭā katirmēlē poykaik kālam" (Oṭimuṟivu - 21)

The location of poikaikalam: This Varmam is located above the sevikuthikalam at 2 fingers distance. As it is situated in the flat area above the sevikuthi, the nerves of the sense organs pass through this area, and being a point of energy flow it is called poikaikalam. This is on both the sides above the right and left ears.

Any injury to this Varma, first causes numbness of that area. Eye-brows are raised. Oozing from the mouth and nostrils occurs. The sense organs lose the power of perception and the vision gets blurred, he leans to one side and the mouth remains open. The victim may run a temperature. Efforts at reviving should start only after 61 nazhigais.

"mārravē nālikaitān muppa tukkul" (Toṭu Varmam - 41)

"tiṭamutanē añcēlu panni rantil
    cekamatilē mayakkamatu illā viṭṭāl
iṭamutanē telivāka ikattil vālvār
    illāmal mayankiṭinum mālvā rappā"

(Toṭu Varmam - 42)

It is good if there are no symptoms of giddiness on the 5th 7th and 12th days after the injury. If there is giddiness then it is prognosis of incurability. If there is no giddiness then oil is applied all over the head and massage is given. Decoctions and ghee – based preparations of medicine are administered.

10. *நட்சத்திர காலம்*

சொன்னதோர் நட்சத்திர காலந் தன்னைத்
தொகுப்பாகக் கொண்டிடுகில் குணத்தைக் கேளு
தன்மமுறும் வாய்மூக்கில் நீரொ லிக்கும்
தவறாமல் முகங்கோணி உடல் நடுக்கும்
வன்னமுறு மாத்திரையாய்க் கொள்ளு மானால்
வளம்பெறவே சாகாது வலிமை யாகும்
என்னவென்றால் கடிகைமூ வாறு மானால்
இளகிடுநீ இளகாமல் கடிகை போச்சு. (10)

"தாலமாம் கடைக்கண்ணி னிறைக்குள் ளேதான்
துலங்குகின்ற நட்சத்திரக் கால மென்னே"

(வர்மக்கண்ணாடி – 15)

"சோதியென்ற கடைக்கண்ணி னிறைக்குள் ளேதான்
துலங்குகின்ற குழிதனிலே நட்சத்திரக் காலம்"

(வர்ம சூத்திரம் – 10)

என்பன நட்சத்திர காலத்தின் இடத்தைக் குறிப்பிடுகின்ற அடிகளாகும். அதாவது கடைக்கண்ணின் ஒருவிரலகலத்துக்குள் நிலைபெறும் உயிர்நிலை 'நட்சத்திரகாலம்' எனப்பெறுகிறது. இருகண்களின் புறத்தேயும் இது நிலைபெறும். கரணம், திதி, நட்சத்திரம், யோகம், வாரம் என்னும் பஞ்சாங்க உறுப்புகளில் ஒன்றாகிய நட்சத்திரம் (விண்மீன்) ஒளியுடையது. ஐம்பொறிகளுள் ஒன்றாகிய கண் விண்மீனின் ஒளியுணரும் புலனுடையது. ஆதலின் கண்ணையடுத்து நிலைபெறும் உயிர்நிலை நட்சத்திரக் காலம் என்னும் பெயர்பெறுகிறது.

இந்த உயிர்நிலையில் தாக்கம் ஏற்பட்டால் வாயின் அமைப்பு முதலியன வேறுபட்டு முகம் கோணலாகிவிடும்; வாயிலும் மூக்கிலும் நீர்வடிய, உடல் முழுமையும் நடுக்கமுறும்; கண்கள் சிவந்து சீற்றமடையும்; நாகுழறும்; செவி கேளாது.

தாக்கம் அளவோடு இருக்குமானால் உயிருக்குச் சேதமில்லை. இதனைப் பதினெட்டு நாழிகைக்குள் இளக்க வேண்டும்.

"பார்க்கவே ஈடுகொண்ட வசம றிந்து
பட்டதின்நேர் மறுபுறத்துப் பொய்கை தன்னில்
நோக்கியே கைவிரித்துப் பதமாய்த் தட்டி
உண்மையா யிருபுறமும் தடவி விட்டு. . ."

(வர்ம சூட்சம் – 29)

என்பது இளக்குமுறை கூறுவது. அதாவது,

அடிபட்டதற்கு நேர் மறுபுற வர்மநிலையில் மருத்துவர் தம்கையை விரித்துப் பதமாய்த் தட்டுதல் வேண்டும். தம் கையை விரித்துத் தலையில் வைத்து மறுகையால் குத்தி, இருபுறமும் தடவிவிடலாம். சுக்கைச் சுவைத்து ஊதினால் நற்பலன் கிடைக்கும். கிலி பிடித்தவராகக் காணப்பட்டால் நீரை மந்திரித்துத் தெளிக்க வேண்டும்.

கோணி-கோணுதல், வளைதல்; வாட்டமடைதல். மாத்திரையாய் அளவாய். மூவாறு – $(3 \times 6 = 18)$ பதினெட்டு.

10. Naṭcattira Kālam

connatōr naṭcattira kālam tannait
tokuppākak kontitukil kunattaik kēḷu
tanmamurum vāymūkkil niro likkum
tavarāmal mukaṅkōṇi uṭalna tukkum
vannamuru māttiraiyāyk kollu mānāl
valamperavē cākātu valimai yākum
ennavenrāl katikaimū vāru mānāl
ilakituni ilakāmal katikai pōccu. (10)

"tālamām kataikkannin iraikkul lētan
tulaṅkukinra naṭcattirak kālam ennē"

(Varmak Kannāṭi - 16)

"cōtiyenra kataikkannin iraikkul lētān
tulaṅkukinra kuḷitanilē naṭcattirak kālam"

(Varmacūttiram - 10)

This is located two inches away from the corner of each of the eye. Of the five components of an Almanac (Panchangam) vize 'Karana', 'thithi', 'Natchattiram', 'Yogam' and 'Varam'. Natchathiram has illumination and so also the eye among the five sense organs is related to light (perceives light) that is how it has come to be called Natchathira Kalam.

Injury to this area causes change in the position of the mouth. The facial expression is twisted. Oozing of fluids from nostrils and mouth occur, shivering and reddening of eyes, twisting of tongue take place while hearing gets impaired.

If the injury is mild it is not fatal and revival is achieved with in 18 nazhigais.

"pārkkavē itukonta vacama rintu
paṭṭatinnēr marupurattup poikai tannil
nōkkiyē kaivirittup patamāyt taṭṭi
unmaiyāy irupuramum taṭavi viṭṭu"

(Varmacūṭcam - 29)

The remedial treatment is as follows. The physician must

slightly pat the area of the Varma. He should place his palm on the head of the patient and mildly hit it with his other hand, and massage both the sides. **Sumugakai** is chewed and blown into the ears. If the patient appears to be in a state of shock chanting hymns he must be treated with sanctified water.

11. காம்பூரிக் காலத்தின் குணம்

போச்சென்ற காம்பூரிக் [1]காலத் தின்குணம்
புதுமையாய்ச் செய்குணத்தைப் புகழ்ந்து பாரு
[2]வாச்சென்ற குருமூலி மத்திப் பிட்டால்
கடிவிஷம்போல் (கண்காணாது) கனத்துதலை
(சீறுலுடன்) கடின மாகும்
தீச்சென்று [3]அம்மூலி மத்திப் பிட்டால்
துகையான நாளெட்டுத் திகையும் போது
பூச்சென்ற கண்சிறல் கண்பு கைச்சல்
குணமாகத் தீருமென்று குறிசொன் னோமே. (11)

"துலங்குகின்ற நட்சத்திர கால மென்னே" –
என்னவே அதற்கும்ரெண்டு இறைக்குக் கீழே
இதமான காம்பூரிக் கால மாகும்" (வர்மகண்டி 16, 17)

என்பதுவர்மக்கண்ணாடிக்கூற்று

"வளமாகக் கண்ணின்கீழ் நட்சத்திர காலம்
கர்மமடா இரண்டிறைக்கீழ்க் காம்பூரிக் காலம்"

(ஒடிமுறிவு 21)

கடைக்கண்ணை அடுத்து ஒருவிரலளவில் தோன்றுவது நட்சத்திர காலம். அதற்கு இரண்டுவிரலளவுக்குக் கீழே கண்ணின் கீழ் அமைவதே காம்பூரி வர்மமாகும் என்பதை இவ்வடிகள் உணர்த்துகின்றன.

இந்த வர்மத்தில் அடிபட்டவுடன் வர்மத்தானமாகிய அடிக்காம்பிலிருந்து கொடிய விடம் ஏறினாற்போலத் தலைக்கு ஏறித் தலையைக் கனக்கச் செய்யும் தன்மையுடையது ஆதலின் இது காம்பு ஊரிக்காலம் என்று பெயர்பெறுகிறது.

பா.வே. 1. காலங் கொண்டால்.
2. காச்சென்ற கடிவிஷம் போல் கண்கா ணாது சித்துதலை சீறிடவே
3. நல்மூலி.

(ஊர்ந்துசெல்லுதல் என்ற பொருளில்.) (காமப்பூரிப்பு என்னும் பொருளது என்பர்.)

அடிபட்டவுடன் கிறுகிறுறத்துத் தலைகனக்கும்; கண்களில் கோபக்குறியுடன் கூடிய சீற்றமும் புகைச்சலும் உண்டாகும்; கண்கள் இருளடையும். குருமூலி என்னும் மூலிகையைத் தேய்க்கச் சிறிது சிறிதாக எட்டுநாளைக்குள் கண்புகைச்சல் முதலியவை குணமாகும்.

காம்பு-மலரின் அடிப்பகுதி, இங்கு வர்மத்தானத்தைக்குறித்தது. ஊரி ஊர்வது, ஊர்ந்து செல்லுவது. ஊர்தல்-ஊர்ந்து செல்லுதல் – தவழ்ந்து செல்லுதல். குருமூலி மத்திப்பிடுதல் - தேய்த்துவிடுதல். திகைதல்-கடத்தல். சீறல் - கோபக்குறி, புகைச்சல் - எரிச்சல்.

11. Kāmpūrik Kālam

pōccenṟa kāmpūrik kālat tiṉkuṇam
putumaiyāyc ceykuṇattaip pukaḻntu pāru
vāccenṟa kurumūli mattip piṭṭāl
kaṭivisampōl (kaṅkāṇātu) kaṉattu talai
(ciṟaluṭaṉ) kaṭiṉa mākum
ticceṉṟu ammūli mattip piṭṭāl
tukaiyāṉa nāleṭṭut tikaiyum pōtu
pūccenṟa kañciṟal kaṇpu kaiccal
kuṇamākat tirumeṉṟu kuṟicoṉ ṉōmē (11)

"tulaṅkukiṟa naccattirak kāla meṉṉē
eṉṉavē ataṟkumreṇṭu iṟaikkuk kīḻē
itamāna kāmpūrik kāla mākum"

(Varmak kaṇṇāṭi - 16, 17)

"vaḷamāṉa kaṇṇiṉkiḻ naccattirak kālam
karmamaṭā irantiṟaikkiḻk kāmpūrik kālam"

(Otimuṟivu - 21)

2 fingers below the Natchathira Varma is located the Kampurivarma.

Injury to this varma causes heaviness of head as though some deadly poison has been shot up from the very bottom of the spinal cord. Hence it is called Kamburi Kalam (Kambu means spinal cord and urudal means crawling, climbing). Immediately after the injury there is heaviness of the head. A sensation of reeling of head and burning of eyes are caused; vision is blurred. Treated with the herb of 'genu mooli' the victim is cured of his condition.

12. மூர்த்தி காலத்தின் குணம்

ஓமென்ற மூர்த்திவர்மங் கொண்டு தென்றால்
        உத்தமனே செய்குணத்தை உரைக்கி றேனே
ஆமென்று மண்டையிலே உளவு குத்து
        அறிவுகெட்டு மயங்குமப்பா அதன்பின் னாக
வாமென்று முன்கூட்டி வலிக்கும் பாரு
        வரிசையாய்ச் சித்தரத்தைப் பொடித்துக் கொண்டு
தேமென்ற வசவுதெறுந் தேய்த்து வாட்டின்
        நாளான யெட்டுதனில் தீரும் பாரே. (12)

" இதமான காம்பூரிக் காலமாகும்
துன்னவே அதன்மேல்வலம் இறைமூன் றில்தான்
        குக்கான மூர்த்தியென்ற கால மென்பார்"

(வர்மக்கண்ணாடி - 17)

"கர்மமடா இரண்டிறைக்கீழ்க் காம்பூரிக் காலம்
        கருதுமோர் இறைவலத்தே மூர்த்திக் காலம்"

(ஓடிமுறிவு - 21)

கண்ணின்கீழ் அமையும் காம்பூரிக் காலத்தையடுத்து உட்புறத்தே மூவிரலளவில் நிலைபெறுவது மூர்த்திவர்மம் எனப்பெறுகிறது. காம்பூரியின் வலத்தே என்றது உட்புறமாய் மூக்குத்தண்டின் அருகில் உள்ள இடத்தைச் சுட்டியது. வலம் என்றது பொதுப்படக் கூறியதே. இடது கண்ணின் கீழுள்ள காம்பூரிக்கு வலத்திலும், வலது கண்ணின் கீழுள்ள காம்பூரிக்கு இடத்திலுமாக அமையும் என்பதே கருத்து.

மூர்த்தியாகிய தலைவனையே அறிவுகெட்டு மயங்கச் செய்யும் பண்புடையதாதலின் இது மூர்த்திகாலம் எனப்படுகிறது.

தலைவலி தொடங்கி மண்டைக்குத்துங் குடைச்சலும் உண்டாகிப் புத்தித்தடு மாற்றத்தையும் மயக்கத்தையும் ஏற்படுத்தும் தன்மையுடையது இவ்வர்மம். எப்படி மருத்துவம் செய்தாலும் எட்டுநாள்வரை இவ் வர்மநோய் இருந்தே தீரும்.

சித்தரத்தை என்னுங் கடைச்சரக்கை வாங்கிப் பொடித்து உடல் முழுவதும் தேய்த்துச் சூடேற்றிவர , எட்டு நாளில் இவ்வர்மநோய் குணமாகிவிடும். சித்தரத்தைத் தூளினை நோயில் வலி உள்ளவரை, வலி நீங்கும்வரை தேய்த்துச் சூடேற்றி வருதல் அவசியம் என்றார்.

மூர்த்தி - தலைவன். வசவு - இழிசொல் திட்டுதல் இங்கு - நோய், வலி. தெறுதல் அழித்தல், நீங்கும்வரை.

12. Mūrtti Kālam

ōmenṟa mūrttivarmaṅ koṇṭu tenṟāl
uttamaṉē ceykuṇattai uraikki rēṉē
āmenṟu mantaiyilē uḷavu kuttu
aṟivukeṭṭu mayaṅkumappā ataṉpiṉ ṉāka
vāmenṟu muṉkūṭṭi valikkum pāru
varicaiyāyc cittarattaip potittuk koṇṭu
tēmenṟa vacavu teṟum tēyttu vāṭṭiṉ
nāḷāṉa yeṭṭutanil tīrum pārē (12)

". . . itamāṉa kāmpūrik kāla mākum
tuṉṉavē ataṉmēlvalam iṟaimūṉ ṟiltāṉ
cukkāṉa mūrttyenṟa kāla meṉpār"

(Varmak kaṇṇāṭi - 17)

"karmamatā irantiṟaikkiḻk kāmpūrik kālam
karutumōr iṟaivalattē mūrttik kālam"

(Oṭimuṟivu - 21)

Below the eye in a three - finger area adjacent to Kampuri Kalam is the Moorthy Kalam. KampuriyinValadhu refers to the spot near the base of the nose. 'Valadu' or the right' is here used as a general reference. it means right side to the left of Kampuri and the left side to the right of Kampuri. This Varma causes loss of consciousness.

This Varmam causes symptoms ranging from headache, to giddiness and loss of consciousness, whatever. the medications the symptoms surely last for 8 days.

Applying powder of Sitharathai and warming by fomentation the condition could be treated with success. Treatment should be continued until the pain subsides completely.

13. [1]அண்ணாம காலம்

முடுகுவது [2]அண்ணாம காலங் கொண்டால்
முறையான செய்குணத்தை மொழியக் கேளு
கடுகுவது கடிகையன் பதுதா னாகும்
கருத்துடனே மயக்கமது கழிந்து நிற்கும்
[3]நடுக்குவது அன்பதின்மேல் கடக்கு மானால்
நாடாதே அதன்விவரம் நன்றாய்ப் பார்த்து
நடுக்குவது கொல்வதற்குக் குறிக ளாகும்
குறிகேடாய் என்றுஉயிர்க் குறுகும் பாரே. (13)

". .கருதுமோர் இறைவலத்தே மூர்த்தி காலம்
தர்மமடா அரையிறைக்கீழ் அண்ணான் காலம்"

(ஒடிமுறிவு-21)

என்பது மூக்குத்தண்டின் கீழ் நிலைபெறும் மூர்த்தி காலத்தை யடுத்து அரைவிர லளவில் அமைவது அண்ணாம காலம் என்று சுட்டுகிறது. படத்தில் கடைக்கண் பகுதியில் இடம்பெறும் நட்சத்திரகாலத்தை ஒருபுறத்தில் சுட்டி, மறுபுறக் கண்ணின் அதே இடத்தில் அண்ணான் காலத்தைச் சுட்டிக் காட்டப்பெற்றுள்ளது.

இவ் வர்மத்தானத்தில் அடிபட்டவுடன் வாயைப் பிளந்து நிற்கும் நிலை ஏற்பட்டுவிடும் என்பதால் அங்காத்தலாகிய அண்ணாம நிலையைச்சுட்டி இப்பெயர் கொடுக்கப் பெற்றுள்ளது. அண்ணான் என்ற சொல் பகைவனைக் குறிக்கும். பகையை வெல்லுதற்குப் பயன்படுத்தப் பெற்றுவந்த வர்மமாதலின் அண்ணான் காலம் என்றாயிற்று என்பதும் பொருத்தமுடையதாகும்.

இவ் வர்மநோய் மயக்கத்தையும் உடல் நடுக்கத்தையும் உண்டாக்கவல்லது. ஐம்பது நாழிகைக்கு மேலும் நடுக்கம் நிற்கவில்லையானால் அது அசாத்திய அறிகுறியாகும். ஒன்பது நாழிகை என்ற பாட வேறுபாடும் உள்ளது. இளக்க வேண்டிய நாழிகைக்குள் பொது இளக்குமுறைகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

அண்ணாமம் – அண்ணாத்தல், மேல்நோக்குதல். அறண்ணான் பகைவன். அன்பது – ஐம்பது.

பா.வே. 1. அண்ணான்காலம் 2. பாடுவது மண்ணான்தான்
3. நடுக்கும தொன்பதின் மேல்

13. Aṇṇāma Kālam

mutukuvatu aṇṇāma kālaṅ koṇṭāl
    muṟaiyāṉa ceykuṇattai moḻiyak kēḷu
kaṭukuvatu kaṭikaiyaṉ patutā ṉākum
    karuttuṭaṉē mayakkamatu kaḻintu niṟkum
naṭukkuvatu aṉpatiṉmēl kaṭakku māṉāl
    nāṭātē ataṉvivaram naṉṟāyp pārttu
naṭukkuvatu kolvataṟkuk kuṟika lākum
    kuṟikēṭāy eṉṟuuyirk kuṟukum pārē (13)

"....karutumōr iṟaivalattē mūrti kālam
tarmamaṭā araiyiṟaikkil aṇṇāṉ kālam"

(Oṭimuṟivu - 21)

Annama kalam is located ½ finger distance away from the moorthy kalam. The picture provided shows the lateral side of the eye where Natchatira Kalam is situated, Likewise in the lateral side of the other eye Annama kalam has been shown.

Injury to this Varma causes the jaws to snap open a once and hence is called annama kalam. It also means a foe and damage to the varmam; may lead to the demise or destruction of an enemy. The word annama kalam may also mean this.

This Varma when injured develops the symptoms of giddiness and shivering. If the shivering continues after 50 Nazhigais it indicates a stage of serious concern. (Another text puts it at 9 Nazhigais also) All the usual remedial methods are applicable to this varmam also.

14. வெட்டு வர்மம்

பாரப்பா வெட்டுவர்மங் கொண்டு தானால்
    பசியான செய்குணத்தைப் பகரக் கேளு
ஆரப்பா அல்குஒரு புறமே கொட்டும்
    அறைகிறேன் வலித்துவாய் பிளக்கு மப்பா
காரப்பா வாய்மூக்கு நீரொ லிக்கும்
    கட்டுடனே தனித்துவலி பகர்ந்து நிற்கும்

சாரப்பா கடிகைபதி னால தாகும்
சாற்றுகிறேன் அதற்குமுன் இளக்கு வாயே. (14)

"அரையிறைக்கீழ் அண்ணான் காலம்
தக்கமுன் றிறைவலமே வெட்டு வர்மம்"

(ஓடிமுறிவு - 21)

அண்ணாமகாலம் என்னும் அண்ணான் காலத்தை யடுத்து அதன்வலப்புறம் மூன்று விரற்கடை தூரத்தில், அதாவது புருவ இறுதிப்பகுதிக்கு மேலே நிலைபெறுவது வெட்டு வர்மம் எனப்படுகிறது என்பதை இவ்வடிகள் கூறுகின்றன.

இவ் வர்மத்தில் அடி ஏற்பட்டால் ஒருபுறத்தில் மட்டும் அலகு (தாடை) கொட்டும் நிலை எனப்படும் வாய்கிட்டிப்போகும் தன்மை ஏற்படும். வாயின் வலப்புற இடப்புறத் தாடைகளில் ஒருபுறம் மட்டும் கிட்டிப்போய் வாய்திறக்க முடியாத நிலை ஏற்பட வாய் கோணிப்போகும். மற்றொருபுறம் வலிப்பு ஏற்பட்டு வாய்திறந்து காணப்பெறும். வாயின் இருபுறமும் ஏற்படும் இந்த இருவேறு வெட்டு நிலைகளால் இது வெட்டுவர்மம் என்றே பெயர் பெறுகிறது.

வாயின் ஒருபுறம் கிட்டிக் கோணிப் போகும். அதனால் மிகுந்த வலி ஏற்படும். வலியால் வாயின் மறுபுறம் திறந்து நிற்கும். வாயிலும் மூக்கிலும் நீர்வடியும். உடல் முழுமையும் வலி மிகுதியாகும். பதினான்கு நாழிகைக்குள் பொதுமுறைகளைக் கையாண்டு இளக்குதல் வேண்டும்.

வெட்டல்-உடலில் செய்யப்படும் தொழில்களில் ஒன்று; குத்தல், தடவல், தட்டல் போன்று வெட்டலும் ஒன்று. அலகு – தாடை. கொட்டுதல் – கிட்டிப்போதல், திறக்கமுடியாதநிலையில் மேல்வாயலகும் கீழ்வாய் அலகும் நெருங்கி நிற்றல்.

14. Veṭṭu Varmam

pārappā veṭṭuvarmam koṇṭu tāṉāl
paciyāṉa ceykuṉattaip pakarak kēḷu
ārappā alakuoru puṟamē koṭṭum
aṟaikirēṉ valittuvāy piḷakku mappā
kārappā vāymūkku nīro likkum
kaṭṭutaṉē taṉittuvali pakarntu niṟkum
cārappā kaṭikaipati ṉāla tākum
cāṟṟukirēṉ ataṟkumuṉ iḷakku vāyē (14)

". . . . araịyiraikkil annān kālam
takkamūn riraivalamē vettu varmam"

(Otimurivu - 21).

This varma is located on the right side of the annama kalam at a distance of 3 fingers i.e. a little away from and above the eye-brow. Affliction of this varma causes the jaw twist on one side and the mouth snaps shut on one side. The two different (opposite) reaction on members open on the other. As the condition affects the jaws in two different ways it assumes the name 'Vettu Varmam'

One side of the mouth becomes crooked causing excessive pain because of which the other side remains open; oozing is seen in the mouth and nostrils. There is pain all over the body. Revival by general methods should be attempted within 14 nazhigais.

15. *அமிர்தலாந்தையின் குணம்*

இளக்கவே அமிர்தலாந்தை வர்மங் கொண்டால்
இயல்பாகச் செய்குணத்தை இயம்பக் கேளு
பிளக்கவே அலகுஓட்டிச் சவைமே லப்பா
பிலமான கண்கூடி ஒடுக்கும் பாரு
விளக்கவே வாய்விட்டுப் பேசா தாகும்
நிச்சயமாய்ப் பித்தனைப்போ லலறி விம்மும்
இளக்கவே கடிகையிரு பத்தா றாகும்
இயல்பாக இருந்துநீ இளக்கு வாயே. (15)

"ஆட்சிபத்தில் ஒட்டுவர்மம் இரத்த வர்மம்
அமிர்தலாந்தை முன்குறுக்கி யடியி லாமே."

(ஒடிமுறிவு – 22)

தாடையின்கீழ் சங்குக்குழியின் புறத்தே நிலைபெறும் முன்குறுக்கி வர்மத்தின் நேர் கீழே அமைவது அமிர்தலாந்தை வர்மம் எனப்படுகிறது என்பதை இவ்வடிகள் உணர்த்துகின்றன. பொருள் முதலான காரணங்களை நோக்க இது 'அமிழ்தலாந்தை' என்றிருத்தல் வேண்டும் என்பது புலனாகும்.

அலறி அலறி விம்முவதோடு பித்துப்பிடித்த நிலையில் அழுத்திவிடும் குறிகளையுடையது ஆதலின் இவ்வர்மம் அமிழ்தலாந்தை எனப்பட்டது. ஆந்தைபோல் அலறி, பித்து நிலையில் ஆழ்த்திவிடும் பண்புடையது இவ்வர்மம். வாயின் ஒருபுற அலகு (தாடை) கோணி வெறுவாயை மென்று அசைபோடுவது

போன்ற செயலை உருவாக்கும். கண்கள் ஒருபக்கமாய்ச்சாய்ந்து இழுத்து வெட்டும். வாய்விட்டுப் பேசமுடியாத நிலை உருவாகிவிடும்.

இருபத்தாறு நாழிகைக்குள் பொது இளக்குமுறைகளைக் கையாண்டு இவ்வர்ம நோயினை இளக்கிவிடலாம்.

அமிர்தல் – அமிழ்தல், அலகு – தாடை. ஒட்டுதல்–குறுகிவளைதல்.

15. Amirtalāntai

ilakkavē amirtalāntai varmaṅ koṇṭāl
iyalpākac ceykuṇattai iyampak kēḷu
piḷakkavē alakuoṭṭic cavaimē lappā
pilamāṉa kaṅkūṭi otukkum pāru
viḷakkavē vāyviṭṭup pēcā tākum
niccayamāyp pittaṉaippō lalaṟi vimmum
iḷakkavē kaṭikaiyiru pattā ṟākum
iyalpāka iruntuṉi iḷakku vāyē (15)

"āṭicipattil ottuvarmam iratta varmam
amirtalāntai muṉkuṟukki aṭiyi lāmē"

(Oṭimuṟivu - 22)

This Varma is located just below the former Varma and it could also be called "Amizhthalanthai" by reason of its meaning. This Varma has accquired this name as its affliction causes symptoms of temporary bouts of deliruim and check. This varma when injured makes the person call like on owl and makes him behave like a mad one. One side of the jaw becomes crooked and the person chews the empty mouth. The eyes slant to one side and the person is unable to open his mouth and speak. General remedial methods have to be followed to treat this condition within 26 Nazhigais.

16. [1]செம்மகாலத்தின் குணம்

[2]இருந்துபார் சொல்லுகிறேன் செம்ம காலம்
இசவாகக் கண்சிவந்து நீரொ லிக்கும்
பரிந்துடனே முகங்கோணிப் [3]புருவஞ் சீறும்

பா. வே. 1. சேமக்காலம் 2. இயல்பாகச் சொல்லுகிறேன் சேமக் காலம்
3. புரிகஞ் சீறும்.

பாலகனே மாத்திரைதான் மீறிக் கண்டால்
விரித்துடனே கண்ணிரண்டுந் தள்ளு மப்பா
விதமான முகஞ்சீறி முகந்தான் கோணும்
மருந்துடனே செய்யாதே பதினா றானால்
மருவியே செய்துவிடு மாறுந் தானே. (16)

"பகர்ந்த ரெண்டில் மின்வெட்டிமேல் சேம வர்மம்"

(ஒடிமுறிவு - 22)

என்பதில் மின்வெட்டி வர்மத்திற்கு மேலே அமைவது சேம வர்மம் என்று சுட்டப் பெறுகிறது. ஆனால்,

"காணுமே நெற்றிநடு பட்சி வர்மம்" என்னும் அடியில் பட்சிவர்மத்தின் இடம் சுட்டப்பெறுவதோடு அதனையடுத்து இரு விரற்கடையிலமைவதே சேமக்காலம் என்பதைப் படம் சுட்டுகிறது.

முகஞ்சீறிக் கோணுவதும் புருவஞ்சீறித் தோன்றுவதும் இவ் வர்மத்தின் இயல்பு. பொருமுதல், மூடுதல் என்னும் பொருள் தரும் செம்முதல் என்ற சொல்லால் இவ்வர்மம் செம்ம காலம் என்று வழங்கப்பெறுகிறது.

இவ்வர்ம நோய் ஏற்பட்டால் கண்சிவந்து நீர்வடியும்; முகம் கோணிக் கொள்ளுவதும், புருவஞ் சீறித் தோன்றுவதும் இதன் அறிகுறிகளாகும். அடி சிறிது பலமாகப் பட்டிருந்தால் கண்கள் விரிந்து பிதுங்கிக் கொள்ளும்; முகமும் சீறிப் பொருமும்.

தொடக்கத்தில் இளக்குமுறைகளை மட்டுமே கையாளவேண்டும். உடனே உள்ளுக்கு மருந்து கொடுக்கக்கூடாது. பதினாறு நாட்கள் சென்ற பிறகு உள்ளுக்கு மருந்து கொடுப்பதே முழுக்குணத்தை உண்டாக்கும்.

செம்முதல் – பொருமுதல், வலித்தல், வீங்குதல். தள்ளுதல் - வெளியே தோன்றுதல்.

16. Cemma Kālam (Cēmak kālam)

iruntupār collukiṟēṉ cemma kālam
icavākak kaṇcivantu nīro likkum
parintutaṉē mukaṅ kōṇip puruvañ cīṟum
pālakaṉē māttiraitāṉ mīṟik kaṇṭāl
virintutaṉē kaṇṇiraṇṭun taḷḷu mappā
vitamāṉa mukañcīṟi mukantāṉ kōṇum
maruntutaṉē ceyyātē patiṉā ṟāṉāl
maruviyē ceytuviṭu māṟun tāṉē. (16)

"pakarntarentil minvettimēl cēma varmam"

(Otimurivu - 22)

"kāṉumē neṟṟinatu patci varmam"

It is said in the above verse that this varma is situated above the "minvetti" varma, but 'kanume netrinadu patchivarmam' mentions the location of patchi varmam from which semakala verma is found at a distance of 2 fingers.

When this varma is injured eyes redden and eye brows are raised. The term semmakala means grumbling and closing too. Eyes may also become tearful, and would appear to be popping out. As a first - aid measure effort at reviving must be made. No medicine should be administered immediately. It should start only after 16 days.

17. திலர்த வர்மம்

தானான திலர்தவர்மங் கொண்டு தானால்
ஆள்நிமிர்ந்து அண்ணாந்து இருக்கும் பாரு
வானார்ந்து வேகுழந்து வாய்பே சாது
வரிசையாய் அறிவறிந்து குழைந்து போகும்
தேனாக முறிந்துதானால் மீளா தப்பா
செப்புகிறேன் நாழிகைதான் மூணே முக்கால்
தானான குணங்களைநீ அறிந்து செய்ய
நலமான கைப்பாகம் நாடு வாயே. (17)

"சூட்சமாம் நெற்றிநடுப் புருகந் தன்னில் (புருவந்)
துகையிரண் டிறைக்குக்கீழ் திலர்த வர்மம்"

(ஒடிமுறிவு - 22)

". . . . .நயமுறவே புருவமையம் நாராசத் தின்கீழ்
செயம்பெறவே திலர்தத்தில் குத்திடிகள் கொண்டுதானால்
சீராக ஒருகலையில் மரணம் பாரே".

(படுவர்மத்திரட்டு - 4)

என்னும் அடிகள் நெற்றி நடுவிலிருந்து இரு விரலளவு கீழேயும் இரு புருவங்களின் இடைப்பகுதியாகிய புருவ மையத்திலிருந்து ஒரு நெல்லளவு கீழ்ப்பகுதியிலும் அமைவது திலர்த வர்மமாகும் என்பதை உணர்த்துகின்றன.

திலதம் என்னும் சொல் `பொட்டு' என்னும் பொருள் தருவது; நெற்றியில் பொட்டு இடும் இடத்தில் நிலைபெறும் வர்மமாதலின் இது `திலதவர்மம்' எனப்படுகிறது. சுவடிகளிலும் சான்றோர் வெளியீடுகளாகிய அச்சு நூல்களிலும் திலர்த வர்மம் என்றே குறிப்பிடப்படுகிறது.

இந்த உயிர்நிலையில் அடிபட்டால் மூன்றேமுக்கால் நாழிகைக்குள் மரணம் ஏற்படக்கூடும். ஆதலின் அதற்குள் இதனை இளக்க வேண்டும். இந்த வர்மங் கொண்டவர் அண்ணாந்து பார்த்தபடி நிமிர்ந்து விறைப்பாகவே இருப்பர். அறிவு மயங்கி, சொற்கள் குழைய, பேச முடியாத நிலை ஏற்படும். கண்கள் சிவந்து போகும். இந்த அறிகுறிகளை நுட்பமாய் அறிந்து உடனே இளக்க முயற்சிக்க வேண்டும்.

சிரசு முடியைப் பிடித்துத் தூக்கித் தரையில் உட்கார வைக்க வேண்டும். நம் இரு கைகளையும் நேராகச் சேர்த்துக் கவிழ்த்து ஒரடியடித்து, அடிபட்ட மாத்திரை அளவுக்கு ஏற்றவாறு நரம்பைப்பற்றி அளவாக இளக்க வேண்டும். முதுகுவரியிலிருந்து கீழாகத்தடவித் தாழ்த்த வேண்டும். நடுக்கமும் கிலியும் நீங்கத் தண்ணீர் ஓதித் தெளிப்பது நல்லது.

முதலில் சுக்கைச் சுவைத்து மூக்கிலும் காதிலும் ஊத மயக்கந் தெளியும். உடம்பில் சந்தனாதித் தயிலத்தைத் தேய்க்கத் தெளிவு ஏற்படும். சூடான அரிசிக் கஞ்சி கொடுக்க அசைவு உண்டாகும்.

அண்ணாந்து – அண்ணாத்தல் – மேல் நோக்குதல், வாய்பிளத்தல்.

குழைதல் – கலங்குதல், அறிவறிந்து குழைந்துபோகும்' என்பது அறிவழிந்து குழைந்து போகும்' என்றிருத்தல் வேண்டும். முறிதல் – ஒடிதல், அழிதல்.

17. Tilarta Varmam

tāṉāṉa tilartavarmaṅ konṭu tāṉāl
 ālnimirntu aṇṇāntu irukkum pāru
vāṉārntu vēkuḻantu vāypē cātu
 varicaiyāy aṟivaṟintu kuḻaintu pōkum
tēṉāka muṟintutāṉāl miḷā tappā
 ceppukiṟēṉ nāḻikaitāṉ mūṉē mukkāl
tāṉāṉa kunaṅkalaiṉi aṟintu ceyya
 nalamāṉa kaippākam nāṭu vāyē. (17)

"cūtcamām neṟṟinaṭup purukaṉ taṉṉil (puruvaṉ)
 tukaiyiraṉ ṭraikkukkil tilarta varmam"

(Oṭi muṟivu - 22)

"....nayamuṟavē puruvamaiyam nārācat tiṉkil
 ceyamperavē tilartattil kuttiṭikaḷ koṇṭutāṉāl

ciraka orukalaiyil maranam pārē"

(paṭuvarmat tiraṭṭu - 4)

2 fingers below mid-forehead just a grain's distance below the point that divides the brows is situated this Varma.

The word 'Thilartham means the marks 'pottu' on the forehead. Hence the name Thilatha Varma. But in the palm leaf manuscripts and publications by scholars it has been mentioned as Thilartha Varma only.

Injury to this Varma causes death within 3 and 3/4 nazhigai, so treatment should start immediately. The affected person lies stiff on his back and leans to one side. His senses fail and his speech is not clear. The eyes become red. Treatment should follow immediately so as to cure the victim before it is too late.

The patient is held by the hair and made to sit on the floor. He is to be hit once with both the hands depending on the force of the blow to the nerves and this is in order to acheve mobility of the area muscles. The affected part must be massaged up and down. Once the patient is out of shock, Water spraying may be done.

Dry ginger is chewed and blowed into the nose and ears to revive him. Chandanadi Thailam (Sandal oil) is rubbed all over the body. He is fed on hot Kanji.

18. மின்வெட்டிக் காலம்

நாடுவது மின்வெட்டிக் காலங் கொண்டால்
[1]நலமாக வானம்பார்க்கும் மேகம் பார்த்துக் (த்தலைவலிக்கும்)
கூடுவது மேல்நோக்கி வலிக்கும் பாரு
[2]குணமாக செவிதலையும் கேட்கா தப்பா
பாடுவது நாழிகைதான் ஆற தாகும்
பரிவான குணத்தைநீ அறிந்து கொண்டு
தேடுவது இக்குணங்கள் இருக்கு மானால்
[3](தெளிவாக) இளக்கிடுநீ திறஞ்சொன் னோமே. (18)

பா.வே. 1. நலமாக மேல்பார்த்து நிமிர்ந்தி ருக்கும்
2. குணமான செவிரெண்டுங் கேளா தப்பா
3. அசாத்திய மென்றுநீ யிருந்து நாடே

முனையான திலர்தமென்ற கால மாகும்
அன்னமாம் அரையிறைக்கீழ் முன்வெட்டி வர்மம்"

(வர்மக்கண்ணாடி – 17)

"பட்சியென்ற தரையிறைக்கீழ்ப் பால வர்மம்
பகர்ந்தரெண்டில் மின்வெட்டிமேல் சேம வர்மம்"

(ஒடிமுறிவு – 22)

இவை மின்வெட்டிக் காலத்தின் இடத்தையுணர்த்தும் பாடலடிகளாகின்றன. திலதவர்மத்திலிருந்து அரை விரலளவில் அமைவது மின்வெட்டி என்கிறது வர்மக்கண்ணாடி. ஆனால் திலர்த வர்மத்தையடுத்துப் பாலவர்மமும், அதையடுத்து இரண்டு விரற்கடைக்கீழ் மின்வெட்டி வர்மமும் அமைகின்றன என்பது ஒடிமுறிவு என்ற சுவடியின் கூற்று.

இவ் வர்மத்தில் அடிபட்டவுடனே பார்வையானது வானத்தையே உற்று நோக்கும் நிலை ஏற்படும். ஆதலின் மின்வெட்டி என்று இதனை வழங்கினர். இவ்வர்ம நோய் பார்வையை மேல் நோக்கி இழுக்கும் தன்மை வாய்ந்தது.

அடிபட்டவுடன் அண்ணாந்த நிலையில் மேகத்தையே உற்று நோக்க அதனால் தலைவலி மிகுந்து தோன்றும்; காது கேட்காது; தலையும் அசையாது.

நோய் ஏற்பட்ட ஆறு நாழிகைக்குள் இதனை இளக்க முயற்சிக்க வேண்டும்.

மின் – மின்னல். மின்வெட்டல் – ஆகாயத்தை உற்றுநோக்குதல். செவிகேட்காது.

18. Miṉveṭṭik Kālam

nāṭuvatu miṉveṭṭik kālaṅ koṇṭāl
nalamāṉa vāṉampārkkum mēkam pārttut (talai valikkum)
kūṭuvatu mēlnōkki valikkum pāru
kuṇamāṉa cevitalaiyum kēṭkā tappā
pāṭuvatu nāḻikaitāṉ āṟa tākum
parivāṉa kuṇattaiṉi aṟintu koṇṭu
tēṭuvatu ikkuṇaṅkal irukku māṉāl
(teḷivāka) iḷakkituṉi tiṟañcoṉ ṉōmē (18)

"muṉaiyāṉa tilartameṉṟa kāla mākum
aṉṉamām araiyiṟaikkīḻ muṉveṭṭi varmam"

(Varmak kaṇṇāṭi - 17)

"patciyenra taraiyiraikkilp pāla varmam
pakarntarentil minvettimēl cēma varmam"

(Otimurivu - 22)

The above verse speak of the location of the Minvettikkalam. It is said to be located at ½ a fingers distance from thilartha Varma. But according to odimurivu text Balavarmam is adjacent toThilartha Varmam and 2 fingers below the former is Minvetti Varma.

Injury to this Varma causes the man to turn his eyes upward and fix his gaze at the sky. Hence the name, Severe head-ache, loss of hearing and stiffness of head result. Treatment to revive the victim should be completed within 6 nazhigais.

19. மந்திர காலம்

சொன்னதோர் மந்திரகாலம் கொண்டு தானால்
முகஞ்சீறிக் கொட்டாவி துறந்து போகும் (அது)
என்னவென்றால் வயிறதனில் மந்த முண்டாம்
தெளிவாகக் கண்ணதனை உருட்டிக் காட்டும்
[1]என்னவென்றால் இக்குணங்கள் அறிந்து நீயும்
இருவினையால் ஆராய்ந்து இளக்கு வாய்நீ
[2]வன்னமுற்று மாத்திரையாய்க் கொள்ளு மானால்
வரிசையுடன் கடிகையஞ்சில் இளகிப் போச்சே. (19)

"இசைந்தகரு விழியருகில் மந்திர காலம்"

(வர்மக்கண்ணாடி - 17)

"கர்மமென்ற விழியருகில் மந்திர க்ாலம்" (ஒடிமுறிவு - 21)

என்னும் அடிகள் மந்திரகாலத்தின் இடத்தைப் பொதுப்படச் சுட்டுகின்றன. அதாவது கீழ் இமையின் கீழ் இடைப்பகுதியில் நிலைபெறுவது மந்திரகாலம் எனப் பெறுகிறது.

மந்திரம் செபிக்குங்காலத்தில் செபிப்போருக்குக் கொட்டாவி வருவது இயல்பு. மந்திர காலத்தில் ஏற்பட்ட நோய்க்கும் கொட்டாவி மிகுதியாக வருதல் ஒரு முக்கிய அறிகுறியாதலின் இது மந்திர காலம் எனப்பட்டது.

இந்த வர்மநோய் ஏற்பட்டால் உடனடியாக முகம்சீற்றமடைந்து

பா.வே. 1. அளக்கவே கடிகையது பதின்மூன் றாகும்
2. "களக்கவே அஞ்சுநாள் கடந்து தானால் குற்றமில்லை தீர்ந்துவிடும்"

தொடர்ந்து கொட்டாவி வந்துகொண்டிருக்கும். வயிறு மந்தம் அடையும். கண்கள் மிரளமிரள உருட்டிக்காட்டும் தன்மை ஏற்படும். இதனை ஐந்து நாழிகைக்குள் இளக்குதல் வேண்டும்.

கொட்டாவி – வாய் திறந்து விடும் நீண்ட மூச்சு. துறந்து போகும் – தொடர்ந்து போகும் என்றிருக்க வேண்டும். மந்தம் – அசீரணம். இருவினை – நல்வினை தீவினை. மாத்திரையாய் – அளவாக.

19. Mantira Kālam

coṉṉatōr mantirakālam koṇṭu tāṉāl
    mukañciṟik koṭṭāvi tuṟantu pōkum (atu)
eṉṉaveṉṟāl vayirataṉil manta muṇṭām
    teḷivākak kaṇṇataṉai uruṭṭik kāṭṭum
eṉṉaveṉṟāl ikkuṇaṅkaḷ aṟintu nīyum
    iruviṉaiyāl ārāyntu iḷaku vāynī
vaṉṉamuṟṟu māttiraiyāyk koḷḷu māṉāl
    varicaiyuṭaṉ kaṭikaiyañcil iḷakip pōccē (19)

"icaintakaru viḻiyarukil mantira kālam"

(Varmak kaṇṇāṭi - 17)

"karmameṉṟa viḻiyarukil mantira kālam" (Oṭimuṟivu - 21)·

Mantira Kalam is located below the lower eye lid. Tiredness makes those who chant mantra yawn often likewise. Injury to this Varmam too causes excessive yawning. Hence it is called manthira Kalam.

Injury turn the face of the victim into a peroxysm of rage. He becomes dull and yawning continues. Stomach is upset, eye balls roll as though in fear. The victim should be restored to normalcy by treatment within five nazhigais.

20. [1] பச்சி வர்மத்தின் குணம்

போச்சென்ற பச்சிவர்மங் கொண்டு தானால்
    புகழாகச் செய்குணத்தைப் பொருந்தக் கேளு
[2]வாச்சென்ற பச்சியது குழைந்தாப் போலே
    விரிசையுடன் சுருசுருவிச் சூழ்ந்து நிற்கும்

பா.வே. 1. பட்சி வர்மம்
2. வாச்சென்ற் பூச்சியது சூழ்தல் போல வரிசையுடன் சுறுசுறுப்பாய்ச் சூழ்ந்து நிற்கும்.

தீச்சென்ற வாய்மூக்கின் நீரொ லிக்கும்
செப்பியதோர் நாழிகைதான் மூன்ற தாகும்
பூச்சென்ற கடிகையது கடரு மானால்
பிறகுணங்கள் மெத்தவுண்டாம் கூடும் போமே. (20)

"அந்தமாம் பச்சநடு நேம வர்மம்
அதற்குஅரை யிறையின்கீழ் பச்சி வர்மம்"

(வர்மக்கண்ணாடி - 18)

"காணுமே நெற்றிநடு பட்சி வர்மம்" (ஒடிமுறிவு - 18)

பட்சி வர்மம் என்பதன் இடம் சுட்டுகின்றன இவ்வடிகள். இதைப் பச்சி வர்மம் எனச் சுட்டுகிறது வர்மக்கண்ணாடி. நெற்றியின் நடுப்பகுதியில் சேமகாலத்திற்கு மேலே இடம் பெறுவது பட்சிவர்மமாகும். இடம் சுட்டுவதில் இருநூல்களும் வேறுபடுகின்றன.

". . . . பட்சியது குழைந்தாற் போலே
வரிசையுடன் சுருசுருவிச் சூழ்ந்து நிற்கும்"

என்பது இவ்வர்மத்தின் பெயருக்குரிய காரணத்தைக் கூறுகிறது. பறவைகள் ஒன்றோடொன்று கூடிக்குழைவதுபோல பல நரம்புகள் இணைந்துள்ள இடமே இவ்வர்மத்தின் இடமாகும். இதில் அடிபடும் போது மிக விரைவான வேகம் காணப்படும். வாயிலும் மூக்கிலும் நீர் வடியும். மூன்று நாழிகைக்குள் இதனை இளக்க முயற்சி செய்ய வேண்டும். இல்லையேல் வெவ்வேறு அறிகுறிகள் தோன்றி மிகுதியாக்கிவிடும்.

பச்சி-இளமை, இங்கு—பட்சி—பறவை. குழைதல்-சேர்ந்துமகிழ்தல் சுருசுருவி-சுருசுருப்பாக. கடருதல்—கடத்தல், மீறிப்போதல், தாழ்த்துதல்.

20. Paṭci Varmam

pōccenṟa paccivarmaṅ koṇṭu tāṉāl
pukaḻākac ceykuṇattaip poruntak kēlu
vāccenṟa pacciyatu kuḻaintāp pōlē
varicaiyuṭaṉ curucuruvic cūḻntu niṟkum
ticcenṟa vāymūkkiṉ nīro likkum
ceppiyatōr nāḻikaitāṉ mūṉṟa tākum
pūccenṟa kaṭikaiyatu kaṭaru māṉāl
piṟikuṇaṅkaḷ mettavuṇṭām kūṭum pōmē (20)

"antamām paccanaṭu n̲ēma varmam
atar̲kuarai yir̲aiyin̲kil̲ pacci varmam"

(Varmak kaṇṇaṭi - 18)

"kāṇumē ner̲r̲inaṭu paṭci varmam" (Oṭimurvu - 22)

It is called pacchi varmam in Varmakannadi. The location is the spot just above the semakalam on the forehead. Just as many birds flock together, so a number of nerve endings pass through this point. Hence the name. The symptoms of affliction of this Varma appear very fast. Causes oozing of fluids through the mouth and nostrils. Remedial treatment should be given within 3 nazhigais. Otherwise the condition becomes more complicated.

21. நேம வர்மத்தின் குணம்

ஓமென்ற [1]நேமவர்மங் கொண்டு தென்றால்
உத்தமனே செய்குணங்கள் உணர்வாய்க் கேளு
ஆமென்ற சுவாசமது சிதறி யோடும்
அகிலனே உடல்சுருட்டும் [2]உடல்பா ராடும்
வாமென்ற மாத்திரைதான் மீறிக் கொண்டால்
மருவியே சன்னிசிலேற் பனமு முண்டாம்
ஏமென்ற கடிகையது எட்டுக் குள்ளே
திறமாக அடங்கல்பார்த்து அறிந்து செய்யே. (21)

"அந்தமாம் பச்சநடு நேம வர்மம்"

என்கிறது வர்மக்கண்ணாடி- (18)

"அமிர்தலாந்தை முன்குறுக்கி அடியி லாமே
அடியான தொட்டையின்கீழ் ஏம வர்மம்"

என்று ஏம வர்மத்தைச் சுட்டுகிறது. 'ஒடிமுறிவு' (22-23) அதாவது கழுத்தின் மேற்பகுதியிலுள்ள முன்குறுக்கி, அமிர்தலாந்தை ஆகிய வர்மங்களுக்குப் புறத்தே ஒரு ஒட்டைச்சாண் அளவு கீழே, நெஞ்சுக்குழியையடுத்துக் காணப்பெறுவது நேம வர்மமாகிறது.

ஏமம்–கலக்கம், மயக்கம்; நேமம்–நியமம், முறை–என்பன ·இரண்டு

பா.வே. 1. ஏமவர்மம் 2. உடல் மாறாட்டம்

சொற்களுக்குமுரிய பொருள்கள். இயல்பாக உள்ள சுவாசிக்கும் முறையை இவ்வர்ம நோயானது சிதறிச் சிக்கலை உண்டாக்குவதால் இப்பெயர் பெறுகிறது.

இவ்வர்மத்தின் அடி ஏற்பட்டால் இயல்பான சுவாசமுறையானது சிதறிச் சிக்கலாவதோடு உடலானது சுருட்டி இழுத்துக்கொள்வதும், உடலமைப்பானது மாறுபட்டுக் கூனிக் குறுகிக்கொள்வதுமாகிய மாறுபாடுகள் தோன்றிவிடும். அடி, அளவின் மிகுதியாகிவிட்டால் சன்னியும் கபமும் (கோழை) உண்டாகும். எட்டுநாழிகைக்குள் இளக்குமுறைகளைக் கையாண்டு குணமாக்க வேண்டும்.

சுவாசம்-மூச்சுவாங்கிவிடுதல், சிதறுதல்-பலவாறு சிந்துதல். சுருட்டுதல்-சுருள்ச்செய்தல். பாராடுதல்-மாறாடுதல் என்றிருத்தல் வேண்டும்-மாறுபடுதல், மயங்குதல். மாத்திரை – அளவு.

21. Nēma Varmam

ōmen̲r̲a nēmavarmaṅ koṇṭu ten̲r̲āl
uttaman̲ē ceykanaṅkaḷ uṇarvāyk kēḷu
āmen̲r̲a cuvācamatu citar̲i yōṭum
akilan̲ē uṭalcuruṭṭum uṭalpā rāṭum
vāmen̲r̲a māttiraitān̲ mīr̲ik koṇṭāl
maruviyē can̲n̲icilēr̲ pan̲amu muṇṭām
ēmen̲r̲a kuṭikaiyatu eṭṭuk kallē
tir̲amāka aṭaṅkaḷpārttu ar̲intu ceyyē (21)

"antamām paccanaṭu nēma varmam"

(Varmak kaṇṇāṭi - 18)

"amirtalāntai mun̲kur̲ukki aṭiyil tāmē
aṭiyān̲a toṭṭaiyin̲kil ēma varmam"

(Oṭimur̲ivu - 22 - 23)

Above the neck and below the Amirthalanthai Varma at a distance of one span near the depression at the end of the sternum. Emam means - disturbed conditions or giddiness. Nemam - means orderly or methodical. This Varma when affected alters the normal course of breathing and the body shrinks. The shape of the body gets distorted. If the attack is severe there is accumalation of phlegm. Remedial treatment should be completed within 8 nazhigais.

22. பாலவர்மத்தின் குணம்

செய்யவே பாலவர்மங் கொண்டு தானால்
　　செப்புகிறேன் குணந்தன்னைத் தெளிந்து கேளு
உய்யவே சொல்லுகிறேன் தடிக்கும் நாவு
　　உத்தமனே கறுத்தநீர் அடைந்து பாயும்
செய்யவே சொல்லுகிறேன் சன்னி யுண்டாம்
　　செப்பிய நாழிகைதான் எட்ட ரைக்குள்
அய்யவே இக்குணங்கள் இருக்கு மாகில்
　　அடவாக அசாத்தியமென் றறிந்து சொல்லே. (22)

"சுத்தமாம் நாசிமத்தி கண்ணாடி காலம்
　　துல்லியமாய்க் கண்டபால வர்ம மாகும்"

(வர்மக்கண்ணாடி – 18)

"பட்சியென்ற தரையிறைக்கீழ்ப் பால வர்மம்"

(ஒடிமுறிவு-22)

நெற்றி நடுவில் அமைவது பட்சிவர்மம். அதன் அரைவிரலளவில் இடம்பெறுவது சேமக்காலமாகிறது. எனவே மூக்கின் மத்திய பாகத்தில் இடம்பெறும் கண்ணாடிகாலத்தையடுத்து அமைவது பாலவர்மம் என்னும் வர்மக்கண்ணாடியின் கூற்று வலிவுறுகிறது.

நாக்குத் தடித்துக் குழந்தையைப் போல் குழறிப்பேசும் நிலையை உருவாக்குமாதலின் பால வர்மம் எனப்படுகிறது.

இவ் வர்மநோய் ஏற்பட்டால் நாக்குத் தடித்துப்போகும். வாயில் கறுப்பாக நீர் வடியும். சுரமும் சன்னியும் உண்டாகும். இதனை எட்டரை நாழிகைக்குள் இளக்க வேண்டும்.

பாலன் – குழந்தை. தடித்தல்- கனமாகத்தடித்துப்போதல். நாவு-நாக்கு.

22. Pāla Varmam

ceyyavē pālavarmaṅ koṇṭu tāṉāl
　　ceppukiṟēṉ kuṇantaṉṉait teḷintu kēḷu
uyyavē collukiṟēṉ taṭikkum nāvu
　　uttamaṉē kaṟuttanīr aṭaintu pāyum
ceyyavē collukiṟtēṉ caṉṉi yuṇṭām
　　ceppiya nāḻikaitāṉ eṭṭa raikkuḷ

ayyavē ikkunaṅkal irukku matil
    aṭavāka acāttiya menṟintu collē (22)

"cuttamām nācmatti kaṇṇāti kālam
    tulliyamāyk kaṇṭapāla varma mākum"

(Varmak Kaṇṇāṭi - 18)

"paṭciyenṟa taraiyiṟaikkīḻp pāla varmam"

(Oṭimuṟivu - 22)

The Patchi Varmam is located in the centre of the fore head. ½ finger away from it is semakala Varma. Bala Varmam is close to kannadikalam. This Varma causes the twisting of the tongue and the person prattles like a child. Hence its name Bala Varmam. The afflicted Varma causes the thickening of the tongue, fluids oozing from the mouth. Accumalation of phlegm and fever follow. The victim must be treated within 8 ½ nazhigais.

23. இரத்த வர்மத்தின் குணம்

அடவான இரத்தவர்மங் கொண்டு தானால்
    [1]அடவாக இரத்தமுண்டாங் காலம் விம்மும்
பிடமாகப் பனிகுளிரும் அதிக முண்டாம்
    பலமான நாழிகைதான் மூன்ற தாகும்
தடமான இக்குணங்கள் இருக்கு மாகில்
    கண்டேனே இளகிடுமே இளகு மப்பா
திடமான மாத்திரைதான் மீறிக் கொண்டால்
    சிர்க்குணமு மில்லாமற் கூடும் போமே. (23)

"துகையிரண் டிறைக்குக்கீழ் திலர்த வர்மம்
ஆட்சிபத்தில் ஒட்டுவர்மம் இரத்த வர்மம்"

(ஒடிமுறிவு - 22)

திலர்தவர்மம், ஒட்டுவர்மங்களுக்கு எதிர்ப்புறத்தில் – அதாவது நேர்கீழே பத்துவிரற் கடை தூரத்திலுள்ளது இரத்த வர்மமாகும் என்பது நூல்கூற்று. திலர்தவர்மத்தின் பத்துவிரற்கடைக்கீழ் அமைவன ஒட்டுவர்மமும் இரத்தவர்மமும் என்று கூறுவதும் உரையளவில் பொருந்தும். ஆயினும் முன்குறுக்கி, அமிழ்தலாந்தை ஆகிய

பா.வே. 1. அப்பனே கபாலமதில் ரெத்தம் வீழும்.

வர்மத்தானங்களுக்கு எதிராக முன்கழுத்துப் பகுதியிலமைவது இரத்த வர்மம் என்பதை அறியமுடிகிறது.

இந்த வர்மநோய் உண்டானால் மண்டை ஓட்டிலிருந்து தொடர்ந்து இரத்தங் கொட்டும். இதுவே இதன் முதல் அறிகுறியாதலின் இது இரத்தவர்மம் எனப்பட்டது. தொடர்ந்து இரத்தங் கொட்டுவதோடு மிகுதியான குளிரும் நடுக்கமும் தோன்றும். மூன்று நாழிகைக்குள் முறையாக இளக்க இளகிப்போகும். மீறிய அடியானால் நோயின் குணங்கள் மிகுதியாகும்.

விம்முதல் – இறுகிப்பருத்தல். காலம் – கபாலம் என்றிருத்தல் வேண்டும். கபாலம்-மண்டையோடு.

23. Iratta Varmam

aṭavāṉa irattavarmaṅ koṇṭu tāṉāl
    aṭavāka irattamuṇṭāṅ kālam vimmum
piṭamākap paṉikuḻirum atika muṇṭām
    pilamāṉa nāḻikaitāṉ mūṉṟa tākum
taṭamāka ikkuṇaṅkaḷ irukku mākil
    kaṇṭēṉē iḷakitumē iḷaku mappā
tiṭamāṉa māttiraitāṉ miṟik koṇṭāl
    cirkkuṇamu millāmaṟ kūṭum pōme (23)

" tukaiyiraṉ tiṟaikkukil tilarta varmam
ātcipattil oṭṭuvarmam iratta varmam"

(Oṭimuṟivu - 22)

Opposite to the Thilartha Varmam and Ottu Varmam. i.e. 10 fingers below is located the Ratta Varma. It can be said to be opposite to ottu varmam which is 10 fingers just below the Thilartha Varma. In short Ratta Varmam is in the outer part of the neck.

Damage to this Varma causes continuous bleeding from the skull. This is its first symptom. Hence the name. Also there is excessive cold and shivering. Revival by general methods are to be effected within 3 nazhigais.

24. பச்சைவர்மத்தின் குணம்

குணமாகப் பச்சைவர்மங் கொண்டு தானால்
    குணமாகச் செய்குணத்தைக் கூர்ந்து பாரு

சேணமாக அலகுரெண்டும் ஒதுக்கிக் கொள்ளும்
செப்புகிறேன் பல்லதுவாய் பூண்டு போகும்
கனமான கடிகைபதி னால தாகும்
கடிகையது கடருமென்றால் இருந்து நீயும்
பிணமாகப் போகாது குணம்உண் டாகும்
பிரியாமல் இப்பொருளே பலமாய்ச் செய்யே. (24)

" பகர்ந்த ரெண்டில் மின்வெட்டிமேல் சேம வர்மம்
காட்சியென்ற யிரண்டிறைப்பக்கம் பச்சை வர்மம்"

(ஒடிமுறிவு - 22)

பிறவர்ம நூல்கள் சுட்டாத பச்சைவர்மம் என்பதை இந்நூல் சுட்டுகிறது. மின்வெட்டிக்கு மேலுள்ள சேம வர்மத்தின் பக்கத்தில் உள்ளது பச்சை வர்மம் என்கிறது இந்நூல். ஆனால் மூக்கின் கீழ், கன்னப்பகுதியில் அமைவதாக அறிஞர்களின் படக்குறிப்பு காட்டுகிறது.

இந்த வர்ம நோய்பட்ட மறுகணத்தில் இருபுறத் தாடைகளும் தாமாகக் கோணி விலகி ஒதுங்கிப் போகும். பல்லும் வாயுங்கிட்டி மூடிக்கொள்ளும். பச்சைப் பொய் என்பது போல மிகுதிப் பொருளிலும் வெளிப்படைப் பொருளிலும் இப்பெயர் பெறுகிறது. அறிகுறிகள் வெளிப்படையாகவும் மிகுதியாகவும் அமைவதாகும்.

பதினான்கு நாழிகைக்குள் மருந்து எதுவும் கொடுக்காமல் எளிய இளக்கு முறைகளை மட்டும் கையாள வேண்டும். பதினான்கு நாழிகை கடந்தபின் மருந்து கொடுக்கப் பலன் உண்டாகும். முழுக்குணம் ஏற்படும்.

பச்சை–பச்சையாக, வெளிப்படையாக. பூண்டுபோதல் - நெருங்கிக் கிட்டிக் கொள்ளுதல்.

24. Paccai Varmam

kuṇamākap paccaivarmaṁ koṇṭu tāṉāl
kuṇamākac ceykuṇattaik kūṟntu pāru
ceṇamāka alakureṇṭum otukkik koḷḷum
ceppukiṟēṉ pallatuvāy pūṇṭu pōkum
kaṉamāṉa kaṭikaipati nāla tākam
kaṭikaiyatu kaṭarumeṉṟāl iruntu nīyum
piṇamākap pōkātu kuṇamuṇ ṭākum
piriyāmalipporuḷē palamāyc ceyyē (24)

"pakarnta rentil minvettimēl cēma varmam
kātciyenra yirantiraippakkam paccai varmam"

(Otimurivu - 22)

This Varma has not been mentioned in other texts. This is located next to "Sema Varma" which is above - Minvetti Varma. But some scholars say that this exists in the region below the nose.

Injury to this Varma causes the palsy of the lower jaw on both sides. The rows of teeth get stuck to each other. The symptoms are many easily noticeable.

Within 14 nazhigais attempt at reviving should be made without administering any potion internal. Then he can be given medicines prescribed.

25. [1]மங்காரி வர்மத்தின் குணம்

[2]பிலமான [1]மங்காரி வர்மங் கொண்டால்
பிரியாமல் செய்குணத்தைப் பேசக் கேளு
நிலமான கையடியில் வீக்க முண்டாம்
நிச்சயமாய்ப் பனிகுளிரும் நிகழ்த்தக் கேளு
குலமான [3]கடிகைநாள் ஏழ தானால்
குணமாகத் தீராமல் குறிகள் மாறும்
விடமான கடிகையது எட்டுக் குள்ளே
[4]விலகுநீ செய்துவிடு மேன்மை தானே. (25)

"கருதுகின்ற கண்ணருகிலாங் காரி வர்மம்"

(ஒடிமுறிவு - 21)

மங்காரி வர்மத்தினை ஒடிமுறிவு என்னும் நூல் ஆங்காரி வர்மம் எனக் குறிப்பிட்டு, அது கண்ணருகில் உள்ள வர்மமாகும் எனவும் சுட்டுகிறது. ஆனால் இரத்த வர்மத்தின் கீழ், சிறிது இடப்பக்கமாக விலாவைச்சார்ந்து இவ் வர்மத்தின் இருப்பிடத்தைச் சுட்டிக் காட்டுகிறது அறிஞர்களின் படக்குறிப்பு.

பா.வே. 1. ஆங்காரி வர்மம், 2. பிலமான தாங்காரி வர்மங்
3. கடிகையீரேழ் தன்னில். 4. விலகாது செய்துவிடு

இந்த வர்மத்தில் அடிபட்டு நோய் ஏற்பட்டால் கை தோளோடு இணையும் இடமாகிய அக்குள் பகுதியில் வீக்கம் உண்டாகும். மேலும் மிகுதியான குளிரும் சுரமும் ஏற்படும். இந்நோயினை எட்டு நாழிகைக்குள் இளக்குதல் வேண்டும். உரிய காலத்தில் இளக்காமல் விட்டு ஏழுநாட்கள் கடந்துவிட்டால் நோய் குணமாகாததோடு அறிகுறிகள் பலவகையாக மாற்றம் அடையக்கூடும். வீக்கம் உண்டாதலின் வீங்குதல் என்ற பொருளில் மங்காரித்தல் வர்மம் எனப்பட்டது.

கடிகை எட்டில் விலகாது செய்துவிடு என்பதே சிறப்பான பாடமாகும். மங்காரித்தல் – வீங்குதல், தடித்தல்.

25. Maṅkāri Varmam

pilamāṉa maṅkāri varmaṅ koṇṭāl
piriyāmal ceykuṉattaip pēcak kēḷu
nilamāṉa kaiyaṭiyil vīkka muṇṭām
niccayamāyp paṉikuḷirum nikaḻttak kēḷu
kuḷamāṉa kaṭikaināḷ ēḻa ṭāṉāl
kuṇamākat tirāmal kuṟikaḷ māṟum
viṭamāṉa kaṭikaiyatu eṭṭuk kuḷḷē
vilakuṉi ceytuviṭu mēṉmai tāṉē (25)

"karutukiṉṟa kaṇṇarukilāṅ kāri varmam"

(Oṭimuṟivu - 21)

This Varma has been mentioned as Angari in the text Otimurivu and is said to be near the eye. But scholars have placed it below the Ratta Varma and slightly on the left side in the chest region.

Injury to this Varma causes swelling in the armpit, cold and temperature. Treatment should be given within 8 nazhigais. If not treated, after a lapse of 7 days the condition becomes worse. As this Varmam causes swelling it takes the name 'mangari' which mean '*swell*'.

26. அடைப்பு வர்மம்

மென்மையாய் அடைப்புவர்மங் கொண்டு தானால்
மெத்தவே செய்குணத்தை விளம்பக் கேளு
தன்மையாய்ச் செவியிரண்டுங் கேளா தாகும்
தப்பாது பெலமடைத்து அலறி விம்மும்
நன்மையாய் நாழிகைதான் இருபத் தெட்டு
நலமாகத் துவாலைவிட் டகற்றி நீக்கித்
தன்மையா யடங்கலது அறிந்து செய்யப்
பாய்ந்தோடிப் போமென்று பாடி னோமே. (26)

"ஆமிந்த நேருவர் மத்தின் கீழே
அழகான விரல்நாலில் அடைப்பு வர்மம்"
(வர்மக்கண்ணாடி - 25)

"மாப்புமுண்டெல்/இருவிரல்மேல் அடைப்பு வர்மம்"
(ஒடிமுறிவு - 29)

என்பன அடைப்பு வர்மத்தின் இடம் சுட்டுகின்றன.

கழுக்கட்டு எனப்பெறும் அக்குள் பகுதிக்கு எட்டு விரற்கடையளவு கீழே இருப்பது அடைப்பு வர்மம் எனப்பெறும். இது முண்டெலும்பாகிய மார்புக்கூட்டுக்கு (விலா எலும்புக்கு) நான்குவிரலளவு தள்ளியும், நெஞ்செலும்பின் இரண்டு விரல் கீழே உள்ள நேர்வர்மத்திற்குக் குறுக்கே நான்கு விரலளவிலுமாக நிலைபெறுவதாகும். இதனை அடைப்பன் காலம், விலாவடைப்பன் காலம் எனவும் வழங்குவர்.

இவ்வர்மத்தில் அடிபட்டவுடன் காதுகள் குப்பென்று அடைத்துப் போகுமாதலின் இப்பெயர் பெறுகிறது. அடிபட்டவுடன் காதடைப்பு ஏற்பட்டு இரண்டு காதுகளும் கேட்காது; அலறலும் விம்முதலும் நிகழ உடல் நிமிர்ந்து மயக்கம் உண்டாகும். மாத்திரைஅளவில் மிக்க அடிபடுமாயின் கை, கால் முறிவும் ஏற்படக்கூடும். இதனை 28 நாழிகைக்குள் தடவிவிட்டுக் குணப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

தடவிவிட்டு இளக்கி அடிபட்டவரின் கைகளை மடக்கிவைத்து அணைத்துத் தூக்கி ஒருஅடி பள்ளமான இடத்தில் உட்காரச்செய்தல் வேண்டும். நம் இடக்கையைத் தலையில் வைத்து வலக்கையில் மடக்கிக் குத்துதல், மறுபுற விலாவில் ஒரு தட்டு தட்டுதல், உடலின் முன்னும் பின்னும் தடவித் தாக்குதல், கை, கால்களை நன்கு உதறிவிடுதல் ஆகிய இளக்கு முறைகளை அளவாகக்கையாள வேண்டும். நீர் ஓதி முகத்திலடிப்பது நல்லது.

அடைப்பு - காதடைத்தலைக்குறித்தது. துவாலை விடுதல் - தயிலம் பூசுதல். அடங்கல் - மாற்றுவர்மம் கொண்டு இளக்குதல்.

26. Aṭaippu Varmam

menmaiyāy aṭaippu varmaṅ konṭu tāṉāl
    mettavē ceykuṇattai vilampak kēḷu
tanmaiyāyc ceviyirantuṅ kēḷā tākum
    tappātu pelamaṭaittu alaṟi vimmum
nanmaiyāy nāḻikaitāṉ irupat teṭṭu
    naḷamākat tuvālaivit ṭakaṟṟi nikkit
taṉmaiyā yaṭaṅkalatu aṟintu ceyyap
    pāyntōṭip pōmeṉṟu pāṭi ṉōmē (26)

"āminta nēruvar mattiṉ kiḻē
    aḻakāṉa viralnālil aṭaippu varmam"

(Varmak Kaṇṇāṭi - 25)

"māpumuṇṭel iruviralmēl aṭaippu varmam"

(Otimuṟivu - 29)

This varma is located 8 fingers below the armpit called *Kamukattu*. It is at four fingers away from the ribs, and 4 fingers away from *Nervaram*. It is also called "Adaippan Kalam" or "Vila adaippan kalam".

Immediately on being hurt this Varmam causes deafness of both the ears. The patient groans. Body becomes stiff and he faints. If the damage is very severe it may affect the movement of hands and legs. If treatment is arranged within 28 nazhigais revival is possible.

The victim has to be lifted gently and made to sit in a pit, one foot deep. Massage to his affected part must be firm holding the head with the left hand. The physician must hit very mildly, the head with his hand stroking the ribs up and down. Back sides of the trunk are massaged so as to help the patient to regain mobility of limbs. Water splash on the face is also advisable.

27. [1] முடிச்சுக் காலம்

பாடுகிறேன் [1] முடிச்சிக்காலங் கொண்டு தானால்
    பண்பான செய்குணத்தைப் பகரக் கேளு
நாடுகிறேன் [2] மூட்டதுவுங் கவிழ்ந்து வீழும்
    நலமான சன்னிசிலேற் பனமு முண்டாம்

பா.வே. 1. முன்முடிச்சுக் காலம். 2. நெட்டதுவும்

கூடுவது கடிகைதா னஞ்ச ரைக்குள்
குணமாகா அசாத்திய மென்று சொல்லு
பாடுவது குணமென்று அறிந்து நீயும்
பண்பாகில் விலகிநீ அகல நில்லே. (27)

"அடியான தொட்டையின்கீழ் ஏம னாகும்
அதினோரம் அஞ்சிறைக்குள் முன்மு டிச்சு"
(ஓடிமுறிவு - 23)

கழுத்தின் கீழ் முன்குறுக்கி, அமிர்தலாந்தையும் அவற்றின் கீழ் ஏமவர்மமும் இடம் பெறுகின்றன. அந்த ஏம வர்மத்தின் இடப்பக்கம் ஐந்து விரற்கடையளவு கீழே அமைவது முன்முடிச்சுக்காலம் எனப்பெறுவது. முன்பு சுட்டப்பெற்ற (பா.6) முடிச்சு வர்மத்திற்கு இது முன்புறம் அமைவதால் முன் முடிச்சு எனப்படுகிறது. இந்த நூல் கருத்தின்படி இவ் வமைப்பு ஏற்புடையதாகிறது. பிற நூல்களின் கருத்துப்படி காலின் விலரடியில் அமைவதே முடிச்சு ஆயின் இப்பொருள் பொருந்துவதில்லை.

இந்த வர்ம நோயானது எலும்புகளின் பொருத்துகளாகிய மூட்டுகள் நெகிழ, கீழே விழும் நிலையை உருவாக்கும் தன்மையுடையது ஆதலின் முடிச்சு வர்மம் எனப்பட்டது. மூட்டு நெகிழ்ந்து விழச்செய்வதோடு சன்னியும் கபமும் உண்டாகி வருத்தும்.

இவ்வர்ம நோயினை ஐந்தரை நாழிகைக்குள் இளக்க முயற்சிப்பது நல்லது. இல்லையாயின் அசாத்தியநிலையை உருவாக்கிவிடும்.

மூட்டு – கைமூட்டு, கால்மூட்டுகளாகிய பொருத்துகள்.

27. Muṭiccu Kālam (Munmuṭiccu Kālam)

pāṭukiṟēn muṭiccikālan koṇṭu tāṉāl
panpāṉa ceykuṇattaip pakarak kēḷu
nāṭukiṟēn mūṭṭatuvuṅ kaviḻntu viḻum
nalamāṉa caṉṉicilēṟ paṇamu muṇṭām
kūṭuvatu kaṭikaitā ṉañca raikkuḷ
kuṇamākā acāttiya meṉṟu collu
pāṭuvatu kuṇameṉṟu aṟintu nīyum
paṉpākil vilakinī akala nillē (27)

"aṭiyāṉa toṭṭaiyiṉkiḻ ēma ṉākum
atiṉōram añciṟaikkuḷ muṉmu ṭiccu" (Oṭimuṟivu - 23)

Just below the neck lie the Amirthalanthai and Ema Varmas. Left to Ema Varma, five fingers below lies the munmudicchu kalam.

This is situated just in front of the Mudicchu Varma (mentioned earlier in verse - 8) at the same level. Hence the name 'mun' means 'front'. Except this source, all other textual sources place the varmam in the sole.

This Varma when injured causes dislocation of joints. That is why it is called Mudicchu Varmam. This condition must be treated within 5½ nazhigais, lest it should develop into an incurable one.

28. கண்கலங்கியின் குணம்

நில்லேநீ கண்கலங்கி வர்மங் கொண்டால்
நிச்சயமாய்ச் செய்குணத்தை நினைவாய்க் கேளு
வில்லேநீ கண்குழைந்து கலங்கிச் சீறும்
வித்தையாய் வாய்மூக்கில் நீரொ லிக்கும்
பல்லேணி பூட்டியே யடக்கிக் கொள்ளும்
பாலகனே நாழிகைதான் இருப தாகும்
சில்லேணி குறிகுணங்கள் அறிந்து நீயும்
செப்பிய கடிகைவிட்டால் அறிந்து செய்யே. (28)

"அதினோரம் அஞ்சிறைக்குள் முன்மு டிச்சு
படியான தெட்டிறைமேல் கண்க' லங்கி" (ஒடிமுறிவு - 23)

என்பது முன்முடிச்சு வர்மத்திற்கு மேல் வலப்புறமாக எட்டு விரலளவு தூரத்தில் இடம்பெறுவது 'கண்கலங்கி வர்மம்' என்பதை உணர்த்துகிறது.

இந்த வர்ம நோய் கொண்டால் கண்கள் நெகிழ்ந்து, கலங்கிச் சீற்றமும் கொள்ளும். எதிர்பாராது வியக்கத்தக்கவாறு வாயிலும் மூக்கிலும் நீர் வடியும். பற்களின் வரிசை தெரியாதவாறு வாய் இறுக்கமாக மூடிக்கொள்ளும். இந்த வர்ம நோயின் முதல் நிலை கண்கள் கலங்கிச் சீறுவதேயாதலின் அந்தச் செயலே வர்மத்தின் பெயராயிற்று.

இருபது நாழிகைவரை எளிய இளக்கு முறைகளை மட்டுமே கையாண்டு அந்நாழிகை கழிந்த பிறகு மருந்து முதலியன கொடுப்பது நல்ல குணத்தை உண்டாக்கும்.

கண்கலங்கி – கண்ணில் நீர்வடிதல், கலங்குதல்.

28. Kaṇkalaṅki Varmam

nillēnī kaṇkalaṅki varmaṅ koṇṭāl
niccayamāyc ceykuṇattai niṉaivāyk kēḷu
villēnī kaṇkuḻaintu kalaṅkic cīṟum
vittaiyāy vāymūkkil nīro likkum
pallēṇi puṭṭiyē yaṭakkik koḷḷum

pālakanē nālikaitān irupa tākum
cillēṇi kurikunaṅkal arintu niyam
ceppiya kaṭikaiviṭṭāl arintu ceyyē (28)
"atinōram añciraikkul munmu ticcu
paṭiyāna teṭṭiraimēl kank laṅki" (Oṭimurivu - 23)

This varma is located above the Munmudichu Varma at a distance of 8 fingers on the right. Injury to this Varma causes swelling and dilation and reddening of eyes. There will be sudden oozing of watery substance from the mouth and nose. The lips are tightly closed and the rows of teeth are not seen. As this Varma first cause swelling up of tear in the eyes it is called Kankalangi Varma. Treatment should be given within 20 nazhigais for a speedy recovery. The patient can take medicine later. That will ensure complete recovery.

29. நல்லிருப்புக் காலம்

அறிந்துடனே நல்லிருப்புக் காலங் கொண்டால்
அப்பனே வாய்பிளக்கு நல்யி ருப்பாய்ப்
பிரிந்துடனே அகங்கூனி உள்வி றைக்கும்
பிலமான கண்மூடி மேல்வ லிக்கும்
சேர்ந்துடனே சன்னிசிலேற் பனமு முண்டாம்
(செலவான) நாழிகைதான் நாற்பத் தொன்று
அறிந்துடனே செய்துவிட கடிகை விட்டால்
அப்பனே இளகுமது வலிமை தானே (29)

"படியான தெட்டிறைமேல் கண்க லங்கி
பாடுகிறேன் நல்லிருப்பு அமிர்த காலம்"

என்பது நல்லிருப்புக்காலத் தானத்தை ஓரளவே உணர்த்துகிறது.

ஆனால் கண்கலங்கி வர்மத்திற்குக் கீழே வலதுபுறத்திலும், அமிர்த காலத்திற்கு மேலே வலதுபுறத்திலுமாக அமைவது நல்லிருப்பு வர்மம் என்பதைப் படத்தின் துணையால் அறிய முடிகிறது.

இந்த வர்ம நோய் குளிரால் விறைத்துச் சமாதிபோல அசையாதிருத்தல் நிலையை உருவாக்கி விடுதிலின் நல்லிருப்புக்காலம் எனப்படுகிறது.

வாய் திறந்தவாறே நின்றுபோக உள்ளும் உடலும் கூனிக் குறுகி மிகுதியான குளிரினால் உடல் விறைத்து அசையாமல் உட்கார்ந்திருக்கும் நிலையை உருவாக்கி விடுவதோடு உடம்பெல்லாம் வலிஎடுக்கக் கண்களை இறுக்கி மூடியபடியே இருக்கச் செய்துவிடும். மேலும் சன்னியும் சிலேற்பனமும் தோன்றிவிடும்.

நாற்பத்தொரு நாழிகைவரை இளக்குமுறைகளை மட்டும் கையாண்டு நாழிகை கழிந்த பிறகு மருந்து கொடுப்பது நல்ல பலனைத்தரும்.

இருப்பு – இருத்தல் நிலை, அசையாது இருக்கும் தன்மை. பிளத்தல்-திறத்தல். அகம்-உள்ளே. கூனுதல்-வளைதல். விறைத்தல்-மரத்துப்போய் நிற்றல்.

29. Nalliruppu Kālam

arintuṭanē nalliruppuk kālaṅ koṇṭāl
appanē vāypiḷakku nalyi ruppāyp
pirintuṭanē akaṅkūṉi ulvi ṟaikkum
piḷamāṉa kaṇmūṭi mēlva likkum
cērntuṭanē caṉṉicilēṟ paṉamu muṉṭām
(celavāṉa) nāḻikaitāṉ nāṟpat ṭoṉṟu
aṟintuṭanē ceytuviṭu kaṭikai viṭṭāl
appanē iḷakumatu valimai tāṉē (29)

"paṭiyāṉa teṭṭiṟaimēl kaṅka laṅki
pāṭukiṟēṉ nalliruppu amirta kālam"

The above verse only (approximately) locates the Varmam. But the provided diagram helps to locate it below to the right of the Kankalangi Varmam and above the Amirthakalam.

The victim is frozen into a state of icy chill as if he were in a trance. Hence the name. Mouth is snapped open. The body becomes shrunken. Pain is felt all over the body. Eyes remain closed. The patient is found in a fit of delirium. For the first 41 nazhigais effort should be made to revive. After this mobility of muscles can be achieved through massage. Medicines are to be administered later.

30. அமிர்தகாலத்தின் குணம்

வலிமையா யமிர்தமென்ற காலங் கொண்டால்
மைந்தனே செய்குணத்தை வருந்திக் கேளு
வலிமையாய் நாவதனில் நீர்தான் சொரியும்
பண்பான கண்ணிரண்டும் அடைத்துப் போகும்
நன்மையா யலகிரண்டுங் கொள்ளும் பாரு
நலமான நாழிகைதான் ஆற தாகும்
வலிமையாய்ச் செய்யாதே கடிகை விட்டால்
மைந்தனே செய்துவிடு மாறுந் தானே. (30)

நல்லிருப்புக் காலத்தில் குறிப்பிட்டதுபோல கண்கலங்கி, நல்லிருப்பு ஆகியவற்றின் கீழே இடதுபுறத்திலும், முன் முடிச்சியின் கீழ் அதன் வலது

புறத்திலுமாக அமைவது அமிர்த காலமாகும். யாவும் கழுத்தின்கீழ் மார்பெலும்பின் தொடக்க இடத்தில் அமைவனவாகும்.

வர்ம அடி கொண்டவரின் நாவினின்றும் மிகுதியாக நீர் வடிவதே முதல் அறிகுறியாதலின் இது அமிர்த காலம் எனப்படுகிறது.

நாக்கில் நீர் வடிவதோடு நோய் கொண்டவரின் கண்கள் இருண்டுபோகும்; இருபுறத் தாடைகளும் கோணிக்கொள்ளும். ஆறு நாழிகைவரை தொடக்க நிலைக்குரிய இளக்கு முறைகளைக் கையாண்டு நாழிகை கழிந்தபிறகு முறையான மருத்துவம் செய்வது சிறந்ததாகும்.

அமிர்தம் – அமிழ்தம், இனிப்பு; இங்கு வாயிலிருந்து வரும் நீரைக் குறித்தது. கண் அடைத்தல் – கண்பார்வை மங்கி இருண்டு போதல். அலகு – தாடை.

30. Amirta Kālam

valimaiyā yamirtamenṟa kālaṅ koṇṭāl
maintaṉē ceykuṇattai varuntik kēḷu
valimaiyāy nāvataṉil nīrtāṉ coriyum
paṉpāṉa kaṇṇirantum ataittup pōkum
naṉmaiyā yalakirantuṅ koḷḷum pāru
nalamāṉa nāḻikaitāṉ āṟa tākum
valimaiyāyc ceyyātē kaṭikai viṭṭāl
maintaṉē ceytuviṭu māṟuṅ tāṉē (30)

As has been pointed out in the passage on Nalliruppu, this varmam is located below to the left of Kankalangi and Nalliruppu and below Mun Mudichu on the right. This is called Amirtha kalam as the first symptoms of this Varmam disease are excessive flow of fluids from the month and dullness of eye sight. Simple treatment (external) is to be given for the first six nazhigais which may be followed by medication.

31. ஒட்டுவர்மத்தின் குணம்

போமென்ற ஒட்டுவர்மங் கொண்டு தென்றால்
புதுமையாய்ச் சொல்லுகிறேன் புகழ்ந்து பாரு
ஓமென்ற [1]நாடிரெண்டும் பூண்டு போகும்
உத்தமனே வாய்முக்கில் நீரொ லிக்கும்
நாமென்ற நெட்டதுவுங் கமழு மானால்
நலமான நாழிகைதான் எட்ட ரைக்குள்

பா.வே. 1. வாயதுவே பூண்டு போகும்.

ஆமென்று செய்யாதே அகன்று நில்லு
அப்பனே அசாத்திய மாகுந் தானே. (31)

"கூறுகிற காலமதில் ஆகும் பாரு
நெறியான கீழிட்டு ஒட்டு வர்மம்"

(வர்மக்கண்ணாடி - 19)

"துகையிரண் டிறைக்குக்கீழ் திலர்த வர்மம்
ஆட்சிபத்தில் ஒட்டுவர்மம் இரத்த வர்மம்"(ஒடிமுறிவு - 22)

நெற்றி நடுவிலிருந்து இரண்டு விரற்கடையளவு கீழே புருவ மத்தியில் அமையும் திலத வர்மத்திற்கு எதிர்ப்புறமாகக் கண்ணின் கீழிமையில் ஓரத்தில் அமைவது ஒட்டுவர்மம் எனப்படுகிறது. இமையை ஒட்டி இடம் பெறுதலின் இப் பெயர் பெறுகிறது.

இவ் வர்மநோய் ஏற்பட்டால் இருபுறத்தாடைகளும் வாயுங் கிட்டிப் போகும். வாயிலும் மூக்கிலும் நீர் வடிய இடை பிங்கலை நாடிகளிரண்டும் பின்னி ஒட்டம் தடைபடும். அதனால் பெருமூச்சு தோன்றக்கூடும். பெருமூச்சு இறைக்கத் தோன்றுவது இயலாத நிலைக்கு அறிகுறியாகிவிடக்கூடும். எட்டரை நாழிகை வரை இளக்க முறை மட்டும் மேற்கொண்டு அந்நாழிகை கழிந்த பின் மருத்துவ முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒட்டுதல் – ஒன்றோடொன்று சேர்ந்து பிடித்துக்கொள்ளுதல். நெட்டு - நெட்டுயிர்ப்பு, பெருமூச்சு. கமழ்தல் – தோன்றுதல்.

31. Oṭṭu Varmam

pōmenṟa oṭṭuvarmaṅ koṇṭu teṉṟāl
putumaiyāyc collukiṟēṉ pukalntu pāru
ōmenṟa nāṭirenṭum pūṇṭu pōkum
uttamaṉē vāymūkkil nīro likkum
nāmenṟa neṭṭatuvuṅ kamaḻu māṉāl
nalamāṉa nāḻikaitāṉ eṭṭa raikkuḻ
āmenṟu ceyyātē akaṉṟu nillu
appaṉē acāttiya mākun tāṉē (31)

"kūṟukiṟa kālamatil ākum pāru
neṟiyāṉa kiḻiṭṭu oṭṭu varmam"

(Varmak kaṇṇāṭi - 19)

"tukaiyiraṉ tiṟaikkukkiḻ tilarta varmam
    āṭcipaṭṭil oṭṭuvarmam iraṭṭa varmam"

(Oṭimuṟivu - 22)

This Varma lies at the edge of the lower eyelid. As it is actually based in the eye lid it is called Ottu Varmam (ottu - means stuck). The jaws get stuck, and oozing of fluids from the mouth and nostrils are noticed. The ida and pingala nadi twist round each other hinders their movement. (Ida and pingala can be understood as the para sympathetic nerve chain). The victim breatges hard. If it is allowed to further develop into panting, it may prove serious. External remedial treatment should be given within 8½ nazhigais and later the patient may be treated with medicine.

32. உதிர காலத்தின் குணம்

தானான உதிரகாலங் கொண்டு தானால்
    தவறாத செய்குணத்தைச் சாற்றக் கேளு
ஆமென்ற அயதியுடன் அழலு முண்டாம்
    [1]அங்கமது இறைத்துநா வறண்டு கொள்ளும்
நாமெனவே சன்னியுண்டாம் நாடி சாயும்
    நவின்றதோர் [2]கடிகைபத் தொன்ப தாகும்
வாமெனவே கடிகையது கடந்து தானால்
    வண்மையாய்ச் சென்றிளக்க வரிசை பாரே. (32)

"துடியான தொட்டையின்மேல் ஆந்தை வர்மம்
    தொகையான தறுவிரற்கீழ் உதிர காலம்"

(ஒடி முறிவு - 23)

முன் தாடையின் கீழ்க் கழுத்தோரத்தில் தோளுக்குமேல் இடம்பெறும் ஆந்தை வர்மத்திலிருந்து ஆறுவிரலளவு கீழே இடம் பெறுவது உதிரகாலம் என்பது இப் பாடலடிகளின் கூற்று. படத்தில் முதுகுப்புறத்தே இவ் வர்மம் குறிப்பிடப் பெறுவது குறிப்பிடத்தக்க ஒன்று. அறிஞரின் படம் ஒன்று கொப்பூழுக்கு மேலே இரண்டு விரல் அளவில் இவ் வர்மத்தைச் சுட்டிக் காட்டுகிறது. இரத்த வர்மம் என்பது பொருள் பொருத்தத்துடன் பெயர் அமைவது மேலே சுட்டப்பட்டது (பா. 21). அதே பொருளில் உதிரகாலம் என்று ஒரு வர்மம் பெயர் பெறுவது

பா.வே. 1. அங்கமது விறைத்து. 2. கடிகைதா னொன்ப தாகும்

பொருத்தமற்றதாகிறது. மேலும் உதிரம் (இரத்தம்) என்பது பற்றிய பொருத்தமும் இவ் வர்மப் பண்புகளில் அமையவில்லை. எனவே உதரகாலம் என்பதே மருவி வழங்கப்பெற்றிருக்கிறது. என்று கொள்ளுவது பொருத்தமுடையதாகும்.

இந்த வர்மநோய் ஏற்பட்டால் உடல் முழுமையாகச் சோர்வடையும்; உடலில் சூடு தோன்றும் (நெருப்பாய்க் கொதிக்கிறது என்பது வழக்கு). பெரு மூச்சு வாங்கும். உடல் விறைத்துப் போகும் என்பதும் உண்டு. நா வறண்டு போகும். சன்னி தோன்றும். நாடித்துடிப்பில் தெளிவிராது சோர்ந்து காணப்பெறும்.

பத்தொன்பது நாழிகைவரை இளக்குமுறைகளை மேற்கொண்டு அதன் பிறகு மருத்துவம் செய்வது நல்ல குணமளிக்கும்

உதிரம் - இரத்தம். இங்கு உதரம் என்று கொள்ளுவது பொருத்தமுடையது. உதரம் - வயிறு

32. Utira Kālam

tāṉāṉa utirakālaṅ koṇṭu tāṉāl
tavaṟata ceykuṇattaic cāṟṟak kēḷu
āmeṉṟa ayatiyutaṉ aḷalu muntām
aṅkamatu iṟaittunā varaṇṭu kollum
nāmeṉavē caṉṉiyuṇṭām nāṭi cāyum
naviṉṟatōr kaṭikaipat toṉpa tākum
vāmeṉavē kaṭikaiyatu kaṭantu tāṉāl
vaṉmaiyāyc ceṉṟilakka varicai pārē (32)

tuṭiyāṉa toṭṭaiṉmēl āntai varmam
tokaiyāṉa taṟuviraṟkiḻ utira kālam

(Oṭimuṟivu - 23)

It lies 6 fingers below Andhai Varma which is located below the lower jaw on one side of the neck. In the picture this Varma is shown on the back. Another picture by a scholar shows this varma 2 fingers above the navel ridge.

As there has been a varma already described as Ratta Varmam, there cannot be another varmam called Utira varmam which also means blood Varmam. Besides this Varmam has nothing to do with blood. According to another patantaram (reading) i.e. Utara Kalam, is the name of the Varma. This Varma renders the victim extremely tired. Temperature shoots up. Breathing becomes hard. The body stiffens and the tongue becomes parched. Condition becomes

delirious and the pulse becomes weak. Treatment external may be given within 19 nazhigais after which medicine can be administrated.

33. [1]முண்டிறுக்கியின் குணம்

பார்க்கவே [1]முண்டிறுக்கிக் காலங் கொண்டால்
    பாடுகிறேன் அதின்குணத்தைப் பகரக் கேளு
நோக்கவே முகஞ்சீறி சுவாசம் முட்டும்
    உண்மையாய்க் கைகால்கள் கோச்சுங் கோச்சும்
சேர்க்கவே வயிறூதும் நாக்குத் தள்ளும்
    சீர்க்கேடாய்ச் சன்னிசிலேற் பனங்க ளுண்டாம்
ஆர்க்கமாய்ச் செய்யாதே அகல நில்லே
    அப்பனே அசாத்தியமென் றறிந்து கொள்ளே. (33)

மேலே குறிப்பிட்ட அமிர்தலாந்தைக்கு ஒரு விரலளவு மேலே இரத்த வர்மத்திற்கு எதிரே இடம்பெறுவது முண்டிறுக்கி வர்மமாகும். மூச்சு முட்டுமளவிற்கு மிக முரட்டுத்தனமான அறிகுறியுடையது ஆதலின் இது முண்டுஇறுக்கி எனப் பெயர்பெறுகிறது. கை, கால்கள் வளையுமாறு குறுகச் செய்வதால் முன் குறுக்கி எனவும் பெயர் பெறுகிறது.

இந்த வர்மத்தில் அடிபட்டால் முகம் கோபக்குறி மிகுமாறு சீற்றத்தோடு காணப்படும்; மூச்சுவிடுவதும் வாங்குவதும் மிகக்கடினமாகி அவ்வப்போது மூச்சு அடைக்கும். கை, கால்கள் குறுகித்தாழ்ந்து போகும். வயிறு உப்பிவிடும். நாக்கு வெழியிலே தொங்கிவிடும். சன்னியும் சுரமும் உண்டாகும். இவ்வாறான குறிகள் மிகுந்து காணப்பட்டால் இது அசாத்திய நிலை என்பதை அறிய வேண்டும். மருத்துவம் மேற் கொள்ளாமல் விலகிவிடுவது நல்லது.

முண்டு - முரண்டுத்தன்மை, முரட்டுத்தன்மை. சீறுதல் - கோபக்குயடைதல், சுவாசம் முட்டுதல் - மூச்சு அடைத்தல். கோச்சுதல் - குறுகுதல், தாழ்தல் ஊதுதல் - உப்பிப் பருத்துக் காணுதல். தள்ளுதல் - வெளியில் தொங்கிவிடுதல். அசாத்தியம் - குணப்படுத்த முடியாத நிலை.

33. Muṇṭiṟukki Varmam (Muṉkuṟukki)

pārkkavē muṇṭiṟukkik kālaṅ koṇṭāl
    pāṭukiṟēṉatiṉ kuṇattaip pakarat kēḷu
nōkkavē mukañciṟi cuvācam muṭṭum
    uṇmaiyāyk kaikālkaḷ kōccuṅ kōccum

பா.வே. 1. முன்குறுக்கி

cērkkavē vayirūtum nākkut tallum
cirkkētāyc canniciler panańka luntām
ārkkamāyc ceyyātē akala nillē
appanē acāttiyamen rarintu kollē (33)

A finger above Amirthalanthai Varma facing Ratta Varma is this Varma situated. The victim gasps for breath and might feel suffocated. Hence its name Mundu irukki. This is also called Munkurukki as it cripples the victims.

Injury to this Varma makes breathing difficult and makes the victim look annoyed. Arms and legs suffer from lack of proper blood circulations; tongue slips out. Temperature comes down and phlegm is formed. The condition assumes at times incurable proportions.

34. உறக்க காலத்தின் குணம்

ஊதவே உறக்ககாலம் கொண்டு தானால்
உத்தமனே செய்குணத்தை உணர்வாய்க் கேளு
மோதவே உறங்குமப்பா பல்வாய்ப் பூண்டு
முறட்டையிட்டு உறக்கமது தானுண் டாகும்
ஓதவே நாழிகைதொண் ணூற தாகும்
உத்தமனே அனலாகி எழுந்தி ருக்கும்
போதவே தேகமது குளிர்ந்தி ருக்கும்
புதுமையா யிக்குணத்தைப் புகழ்ந்து செய்யே. (34)

"நெறியான கீழிட்டு ஒட்டு வர்மம்
நிறையாய அருகில்ரெண்டும் உறக்க காலம்"

(வர்மக்கண்ணாடி - 19)

"தொகையான தறுவிரற்கீழ் உதிர காலம்
வடிவான மூன்றிறைக்குள் உறக்க காலம்" (ஒடிமுறிவு - 23)

என்பன உறக்க காலத்தின் இடத்தைச் சுட்டுகின்றன. இச்செய்திகள் ஒன்றுக்கொன்று வேறுபட்ட கருத்துகளைத் தெரிவிக்கின்றன. கண்ணின் கீழ் இமை ஓரத்தில் அமையும் ஒட்டுவர்மத்தின் அருகில் உறக்க காலம் இடம் பெறுகிறது என்பது வர்மக்கண்ணாடியின் கூற்று. கழுத்தின் பின்புறம் பிடரிவர்மத்தின் கீழே இடம்பெறும் உதிரகாலத்தின் மூன்று விரளவு தூரத்தில் அமைவது உறக்க காலம் என்பது ஒடிமுறிவின் கூற்று. என்றாலும்,

கழுத்தின் கீழுள்ள சங்கு நிலையங்கள் இரண்டிலும் நிலைபெறும் உயிர்நிலையே உறக்ககாலம். எனப்பெறுகிறது வர்ம நிலையத்தில் அடிபட்டால் குறட்டையோடு கூடிய தூக்கம் மிகுதியாகுமாதலின் இது உறக்ககாலம் எனப்பெயர் பெறுகிறது. தூக்கம் மேலிட்டபோதும் உடல் சில்லிட்டு, இமை விட்டு விட்டு மூடித் திறக்கும். திடீரென்று அனல் வீசுவதுபோன்ற நிலை ஏற்படத் தூக்கம் நீங்குவது உண்டு.

"'மீறவே நித்திரையில் அரைக்கண் விட்டு
விடுவித்து இமைதட்டி முழிக்கும் பாரு
யேறவே உடலெங்கும் அனப்புண் டாகும்
இயல்பான கடிகைதொண்ணூ றாகும் போது
ஆடியே எழுந்திருக்கும்... " (37)

என்பது உறக்ககாலத்தின் குணம்பற்றிய வர்மசூட்சக் கருத்து.

இந்த வர்மத்தைத் தொண்ணூறு நாழிகைக்குள் இளக்கலாம். மெதுவாக அணைத்துத் தூக்கி உட்காரச்செய்து உச்சியில் ஒரு அடியடித்துப் பிடரிக்குழியின் கீழ் ஒருகுத்து குத்த வேண்டும். பின் முதுகுவரியில் முறையாகத் தடவித் தாழ்த்தித் தலையைமட்டும் மேலுங் கீழுமாகவும், பின் வலமும் இடமுமாகவும் மாறிமாறி அசைக்க வேண்டும். கமுக்கட்டு எனப்பெறும் அக்குளில் கையைக் கொடுத்துத் தூக்கி உடம்பை நன்றாக உதறி விடுவது நல்லது. தண்ணீர் ஓதி முகத்தில் தெளிக்கப் பயம் நீங்கும்.

34. Uṟakka Kālam

ūtavē uṟakka kālam koṇṭu tāṉāl
uttamaṉē ceykuṇattai uṇarvāyk kēḷu
mōtavē uṟaṅkumappā palvāyp pūṇṭu
muṟaṭṭaiyiṭṭu uṟakkamatu tāṉuṇ tākum
ōtavē nāḻikaiton ṉūṟa tākum
uttamaṉē aṉalāki eḻunti rukkum
pōtavē tēkamatu kuḷirnti rukkum
putumaiyā yikkuṇattaip pukaḻntu ceyyē (34)

neṟiyāṉa kiḷiṭṭu oṭṭu varmam
niṟaiyāya arukilreṇṭum uṟakka kālam

(Varmak kaṇṇāṭi - 19)

tokaiyāna taruvirarkil utira kālam
vativāna mūnrurikkul urakka kālam (Otimurivu - 23)

These verse given the location of the Urakkakala Varma as one close ottuvarma which is at the corner of the lower eyelid (Varma Kannadi) and 3 fingers away from uthira varma which is below the pidari varma on the back of the neck.

As urakkakalam is the vital point which controls the Sangu Nilayam below the neck it gets the name. Injury to this varma causes excessive sleep with snoring. Hence the name 'urakka' meaning sleeping. Temperature falls and the victim keeps blinking (goose pimples). The body hots up all of a sudden and the sleep is disturbed.

.....miravē nittiraiyil araikkan vittu
vituvituttu imaitatti mulikkum pāru
yēravē utaleṅkum anappun tākum
iyalpāna katikaitonnū rākum pōtu
ātiyē elunturukkum ... ... (Varma cūtcam - 37)

This condition can be treated within a period of 90 nazhigais. The person is carefully lifted and made to sit up. He is mildly hit on top of the head. The back and the head is massaged up and down, and then from left to right.

35. கரக்கூட்டு காலம் (காக்கட்டைகாலம்)

செய்யவே [1]கரக்கூட்டுக் காலங் கொண்டால்
செப்புகிறேன் குணந்தன்னைத் தெளிந்து கேளு
நய்யவே அள்ளிவிடும் கைகால் கோச்சும்
நலமான நாழிகைதான் ஏழ தாகும்
பய்யவே கடிகையது கெடுவு பார்த்துப்
பாலகனே இளக்கிடுநீ இளகா விட்டால்
நய்யவே செய்யாதே குருவைப் பார்த்து
நலமான தியானமது நவிலு வாயே. (35)
"வடிவான மூன்றிறைக்குள் உறக்க காலம்
வளமான காக்கோட்டைசுமை வர்ம·மாகும்"
(ஒடிமுறிவு - 23)

பா.வே. 1. காக்கோட்டைக் காலம்

தாடையின்கீழ் 'இடங்கொள்ளும் உறக்க காலத்தையடுத்து இடம் பெறுவது காக்கோட்டை வர்மமும், சிமைவர்மமும் என்பதை இவ்வடிகள் உணர்த்துகின்றன. முதுகுப்புறத்தில் பிடரி வர்மத்தின் கீழ் இடம்பெறுவதாகப் படத்தில் சுட்டுகின்றனர். அப்படங்களின்படி, உறக்ககாலத்தையடுத்து இடம்பெறுவது என்பது அதன் கீழ், மேல் எனக் கொள்ளாமல் அதே அளவில், அருகில் எனக் கொண்டால் கழுத்தின் பின்புறம் பொருந்திவிடும். இதை வர்மக்கண்ணாடி மேலும் தெளிவுப்படுத்துகிறது. அதாவது,

கையானது புயத்தோடு சேருமிடத்தில் தோளின் இரண்டு அங்குலத்துக்குக் கீழே நிலைத்திருப்பது கரக்கூட்டு வர்மமாகும். கரம் புயத்தோடு கூடுமிடத்திலுள்ள உயிர் நிலையாதலின் இப்பெயர் பெறுகிறது. இது தோள்களின் இருபுறங்களிலும் பொருந்தும் வர்மமாகும். இதுவே கரக்கூட்டைக்காலம் எனவும் காக்கட்டைக் காலம் எனவும் பலவாறாகக் குறிப்பிடப்படுகிறது. இதனை வர்மக்கண்ணாடி என்றும் சுவடி,

"மன்றான தோளிரண்டங் குலமே நீக்கி
மருவுகின்ற தலமதில்காக் கட்டை வர்மம்" (21)

என்றே குறிப்பிடுகிறது.

மிகவும் நொந்து வருந்துதலும் அலறுதலும் இதன் அறிகுறிகளாகும். மேலும் கை, கால்கள் செயலாற்ற முடியாத அளவில் சோர்ந்து போகும்; இழுத்துப் பிடித்துக் கொள்ளும்.

இவ்வர்ம நோய் ஏற்பட்ட ஏழு நாழிகைக்குள் இதனை இளக்க வேண்டும். அள்ளிவிடும் - வருத்தத்தை மிகுதியாக்கும். கோச்சுதல்- தாழ்தல், சோர்வடைதல். கெடுவு - கெடு. உரிய காலம், குறிப்பிட்ட கால அளவு.

35. Karakkūṭṭu Kālam (Kākkaṭṭai kālam)

ceyyavē karakkūṭṭuk kālaṅ koṇṭāl
ceppukiṟēṉ kuṇantaṉṉait teḷintu kēḷu.
nayyavē aḷḷiviṭum kaikāl kōccum
nalamāṉa nāḻikaitāṉ ēḻa tākum
payyavē kaṭikaiyatu keṭuvu pārttup
pālakaṉē ilakkituṉi iḷakā viṭṭāl
nayyavē ceyyātē kuṟuvaip pārttu
nalamāṉa tiyāṉamatu niviḻu vāyē (35)

vaṭivāṉa mūṉṟiṟaikkuḷ uṟakka kālam
vaḷamāṉa kākkōṭṭaicumai varma mākum
(Otimuṟivu - 23)

This and Sumai Varmam are present adjacent to Urakkakala Varma below the lower jaw. In the picture it is shown to be situated below the Pidari Varma on the back 'Varma Kannadi' gives more details about its location. It says that Karakuttu Varma is present near the Urakkakala Varma and not above or below it and thus it is said to be at the back of the neck. As the name specifies it is located at the shoulder joint, two fingers below. This Varma occurs on both the sides of the shoulder. It is also known as Karakkuttai kalam or kakkattai kalam. In 'Varma Kannadi'

manṟāṉa tōliraṇṭaṅ kulamē nikki
maruvukiṉṟa talamatilkāk kaṭṭai varmam

(Varma Kaṇṇāṭi Varmam - 21)

It is said as kakkattai varmam.

This victim groans and cries in pain; limbs become stiff and also effects mobility. The condition must be treated within seven nazhïgais.

36. சிமை வர்மம்

புனிதமுடன் சிமைவர்மங் கொண்டு தானால்
புகலான செய்குணத்தைப் போற்றக் கேளு
சினிதமுடன் வாயில்பதை நுரையுந் தள்ளும்
செப்புகிறேன் நயனமது நீரொ லிக்கும்
குனிதமுடன் மதியறிந்து குணத்தைப் பார்த்துக்
குணமுடனே இளக்குடுநீ கொல்லா தப்பா
நினைவாக நினைவதனால் தியானஞ் செய்ய
நிச்சயமாய் இளகிவிடும் நினைவுண் டாகும். (36)

"அரியகுரல் வளையதனில் சங்குதிரி காலம்
அதற்குக்கீழங் குலம்நாலில் சிமைசிர் வர்மம்"

என்பது வரமக்கண்ணாடியின் கூற்று (பா. 19). கழுத்தின் குரல்வளையில இடம்பெறும் சங்குதிரி காலத்தின் கீழ் நாலங்குல அளவில் அமைவது சிமைவர்மம் ஆகும் என்கின்றன இப்பாடலடிகள்.

"வடிவான மூன்றிறைக்குள் உறக்க காலம்
வளமானகாக் கோட்டைசுமை வர்ம மாகும்"

என்னும் ஒடிமுறிவு நூலின் கூற்று (23), தாடையின் கீழ் இடம்பெறும் உறக்க காலத்தின் அருகில் இடம்பெறுவன காக்கோட்டையும் சிமை வர்மமும் ஆகும் என்பதை உணர்த்துகிறது. உறக்க காலத்தின் கீழோ மேலோ அன்றி, அதன் அருகில் என்றுகொண்டால் கழுத்தின் புறத்து அமையும் அதே சிமை வர்மத்தையே சுட்டுவதாகும். குடுமி என்ற பொருளில் வரும் சிமை வர்மம் என்று கொண்டால் பின்குடுமியின் முடிச்சு நிற்குமிடத்தில் நிலைபெறும் வர்மம் என்னும் பொருளில் வழங்கப்படுகிறது எனலாம். இதைச் சிமைசீர் வர்மம் எனவும் சுட்டுவர். சிமை என்றதைக் கொச்சைச் சொல் எனக் கொண்டு, சுமை வர்மம் எனத்தூய சொல்லால் கூறுவதாகக் கொண்டு வழங்கியுள்ளனர்.

இந்த வர்ம நோய் கொண்டால் வாயில் மிகுதியாக நுரைதள்ளும். கண்களில் நீர்வடியும். இது சாத்திய குணமுடையதே. பொது இளக்கு முறைகளாலேயே இளக்கிவிடலாம்.

36. Cimai Varmam

punitamutan̲ cimaivarmaṅ konṭu tān̲āl
  pukalān̲a ceykun̲attaip pōṟṟak kēḷu
cin̲itamutan̲ vāyilpatai nuraiyun tallum
  ceppukiṟēn̲ nayan̲amatu nīro ḷikkum
kun̲itamutan̲ matiyaṟintu kun̲attaip pārttuk
  kun̲amutan̲ē iḷakkituni kollā tappā
nin̲aivāka nin̲aivatan̲āl tiyān̲añ ceyya
  niccayamāy iḷakiviṭum nin̲aivuṅ tākum (36)

ariyakural valaiyatanil caṅkutiri kālam
  ataṟkukkiḻaṅ kulamnālil cimaicīr varmam,

(Varmak kaṇṇāṭi - 19)

It is located 4 fingers below the Sanguthiri Kalam which is located in the front part of the neck (throat)

vaṭivāṇa mūn̲iṟaikkuḷ uṟakka kālam
  vaḷamān̲a kākkōṭṭaicumai varma mākum

(Oṭi muṟivu - 23)

While a verse in Odimurivu (verse 23) says that kakottai and Sumai Varma are located near urakkakalam. It is close to Urakkakala Varma. Thus it almost coincides with urakkakala. It simai means Kudumi (tuft). it can be said to be located where the top of the tuft lies. This is also called Simai Varmam. As simai is nothing but a

corruption of 'Sumi' the varmam is to be called 'Sumai' which is its correct form. A lot of frothy discharge from mouth is noticed. When this varma is harmed water collects in the eyes. Treated externally the condition gets cured.

37. [1] கிளிமேக வர்மத்தின் குணம்

ஆற்றேநீ [1]கிளிமேக வர்மங் கொண்டால்
அப்பனே கூகூகூ வென்று கூவும்
கூற்றேநீ நாழிகைதான் நாலுக் கப்பால்
குறிகேடாய் மயங்குமப்பா கூறக் கேளு
தேற்றேதான் நாழிகைபதி னெட்டுக் குள்ளே
திடமாக எழுந்திருந்து திடமே சொல்லும்
மாற்றேநீ உள்ளுக்குத் தயிலங் கொள்ளு
தப்பாமல் தீருமிது தயுவு தானே. (37)

"பாரதன்கீழ் இரண்டிறைக்குள் சடைப்பிற வர்மம்
நாலிறைமேல் கிளிமேக வர்ம மென்பார்"

இது கிளிமேக வர்மத்தலத்தைப் பற்றிய வர்மக்கண்ணாடிக் கூற்று (26). இது இடுப்பினிடத்தே அமையும் சடப்பிற வர்மத்திற்குமேல் நான்கு விரலளவில் அமைவதே கிளிப்பிற வர்மம் ஆகும் எனச் சுட்டுகிறது. ஆனால்,

"ஆகுமே கிளிமுகமும் மேல தாகும்
அடங்கியே கழுத்தின்மேல் முப்பத் தேழு"

என்பது ஒடிமுறிவு கூற்று (24). அதாவது காக்கோட்டை வர்மம் சிமை வர்மங்களுக்கு நேரே மார்புப்பக்கத்தில் அமைவது கிளிமேக வர்மம் ஆகும் என்பதாகக் கூறுகிறது. இவை தம்முள் மாறுபடுகின்றன.

'கூகூகூ' என்று கிளி கத்துவது போன்று கத்துவதே இந்த வர்ம நோய் கொண்டவரின் முதல் அறிகுறியாதலின் இது கிளிமேக வர்மம் எனப்பட்டது. மேகம் என்ற சொல் ஒரு வகை நோயைக் குறிப்பது. இங்குக் கிளி போன்று கத்தும் நோய் கொண்ட வர்மத்திற்கு வைக்கப்பெற்றது. இதனைக் கிளிமுகவர்மம் என்று கூறும் வழக்கும் ஏற்பட்டுவிட்டது.

இவ்வாறு கத்துவதோடு நான்கு நாழிகைக்குப் பிறகு மயக்கமும் ஏற்படும். நான்கு நாழிகைக்குள் இளக்கத் தொடங்கினால் பதினெட்டு நாழிகைக்குள் குணமாகி விடும். தொடர்ந்து தயிலம் முதலான மருந்துகளை உள்ளுக்கும் கொடுக்க வேண்டும்.

பா.வே. 1. கிளிமுக வர்மம்

37. Kiḷimēka Varmam (Kiḷimuka Varmam)

ārrēni kiḷimēka varmaṅ koṇṭāl
    appaṉē kūkūkū veṉṟu kūvum
kūṟṟēni nāḻikaitāṉ nāluk (kappāl)
    kuṟikēṭāy mayaṅkumappā kūṟak kēḷu
tēṟṟētāṉ nāḻikaipati neṭṭuk kuḷḷē
    titamāka eḻuntiruntu titamē collum
māṟṟēni uḷḷukkut tayilaṅ koḷḷu
    tappāmal tirumitu tayāvu tāṉē (37)

pāratanṅkil irantiṟaikkuḷ cataippiṟa varmam
    nāliṟaimēl kiḷimēka varma meṉpār

(Varmak kannāti - 26)

ākumē kilimukamum mēla tākum
    ataṅkiyē kaḻuttiṉmēl muppat tēḻu. (Oṭimurivu - 24)

This is found in the hip region 4 fingers above the Sadappira varma. But 'Odimurivu' (24) says it is in the chest region, facing Kakkottai and Simai varmas. Damage to the varmam causes the victim to make sounds like a parrot. 'Megham' actually denotes a particular disease. Here it comes to mean this particular varmam. The victim can be helped to recover completely if treatment starts in 4 nażhigais. Oils may be administered later.

பொது

(பாட்டு-38, 39, 40-)

தயவாகக் கண்டத்தின் மேலெ ழுந்த
    வர்மமது முப்பத்து ஏழுஞ் சொன்னேன்
நயமாகக் கொண்டவுடன் எடுத்தி ருத்து
    நவிலுகிறேன் இருபுறமுந் தடவி விட்டு
வயமான வாரியதி லகற்றி நீக்கி
    வழுகாம லிருபுறமும் வலித்துக் கட்டிப்
பயமாக.அமர்த்திவிட அமரு மென்று
    பரிவான வகைநூறு பாடி னோமே. (38)

பாடினேன் வர்மமது முப்பத் தேழும்
பாலகனே சொல்லிவிட்டேன் பாரு பாரு
நாடியே கொண்டவுடன் இளக்கு மார்க்கம்
நலமாகச் சொல்லுகிறேன் நாடிப் பாரு
கூடியே கண்டமதில் வளைத்துச் சுற்றிக்
குறியான நரம்பெல்லாம் வலித்துப் பின்னித்
தேடியே கையிரண்டும் வலித்துக் கட்டித்
திறமாகச் சட்டத்தில் சவட்டிக் கொண்டு. (39)

சவட்டவே வலதுகையை வலத்தே வைத்துச்
சாற்றுகிறேன் இடதுகையை இடத்தே கூட்டி
வட்டமாய் முதுகருகில் தடவி விட்டு
வலம்புரியும் இடம்புரியும் திரிச்சுக் கெட்டி
நட்டமாய்ப் போகாமல் அடங்கல் தன்னில்
நாடியே மாத்திரையை உள்செ லுத்திக்
கட்டமாய் இளகுமது கருவும் பார்த்துக்
கலங்காமல் செய்துவிடு கருத்த னாமே. (40)

மேலே முப்பத்தேழு பாடல்களிலும் சொல்லப் பெற்றவை முப்பத்தேழு வர்மங்களாகும். (பா. 6, 7 இரண்டும் செவிக்குத்தி 1, 2 எனக் கொள்ள வேண்டும்.) இவை அனைத்தும் கண்டத்திற்கு மேலே அமைந்தவையாகும்.

கண்டத்திற்கு மேல் அமைந்த முப்பத்தேழு வர்மங்களாவன:

1. கொண்டைக்கொள்ளி
2. சிறுங்கொள்ளி
3. பிடரி
4. சுருதி
5. புகழ்ச்சை
6. செவிக்குத்தி - 1
7. செவிக்குத்தி - 2
8. முடிச்சு
9. பொய்கை
10. நட்சத்திரம்
11. காம்பூரி
12. மூர்த்தி
13. அண்ணாமம்
14. வெட்டு
15. அமிர்தலாந்தை
16. செம்மம்
17. திலதம்
18. மின்வெட்டி
19. மந்திரம்
20. பட்சி
21. நேமம்
22. பாலவர்மம்

23. இரத்தம்
24. பச்சை
25. மங்காரி
26. அடைப்பு
27. முன்முடிச்சு
28. கண்கலங்கி
29. நல்லிருப்பு
30. அமிர்த காலம்
31. ஒட்டு
32. உதிரகாலம்
33. முண்டிறுக்கி
34. உறக்ககாலம்
35. கரக்கூட்டு (காக்கட்டை)
36. சிமை
37. கிளிமேகம்

என்பன.

இந்த வர்மங்களுக்குரிய பொதுவான இளக்குமுறைகளாவன:

1. வர்ம நோய் கொண்டவரை உடனே மிகவும் பக்குவமாகத் தூக்கி இருக்கச் செய்ய வேண்டும்.

2. மார்புப்புறமும் முதுகுப்புறமும் முறையாகவும் பக்குவமாகவும் தடவி விடுதல் வேண்டும்.

3. விலாவெலும்பை நன்கு விரியுமாறு செய்து, இரண்டு பக்கங்களிலும் கைகளை விரித்துக் கட்டிக்கொள்ளுமாறு செய்தல் வேண்டும்.

4. நரம்புகளையும் பக்குவமாய் வலித்து விட்டுக் கைகளைக் கழுத்தின் பின்புறமாகக் கட்டிக் கொள்ளச் செய்தல் வேண்டும்.

5. ஒவ்வொரு இளக்குமுறையையும் முறையே அடுத்தடுத்துச் செய்து இளக்கிக் காலாலும் மென்மையாக மிதித்து அமர்த்திவிடுதல் வேண்டும்.

6. வலது கையை வலப்புறமாகச்சுற்றி வளைத்து முதுகின் அருகில் தடவி விடுதல்; அதே போல இடது கையை வளைத்துத் தடவி விடுதல் ஆகிய இளக்கு முறைகளை முறையாக மாறி மாறிச் செய்தல் வேண்டும்.

7. இவ்வாறான இளக்கு முறைகளைக் கையாண்ட பிறகு இறுதியாக மருந்து, மாத்திரைகளை வேண்டியவாறு உட்கொள்ளச் செய்தல் வேண்டும். இவை பொதுவான இளக்குமுறைகளாகும்.

tayavākak kaṇṭattiṉ mēle ḻunta
varmamatu muppattu ēḻuñ coṉṉēṉ
nayamākak koṇṭavuṭṭaṉ eṭutti ruttu
navilukiṟēṉ irupuṟamun ṭaṭavi viṭṭu
vayamāṉa vāriyati lakaṟṟi nīkki
vaḻukāma lirupuṟamum valittuk kaṭṭip

payamāka amarttiviṭa amaru meṉṟu
parivāṉa vakainūṟu pāṭi ṉōmē (38)

pāṭiṉēṉ varmamatu muppat tēḻum
pālakaṉē colliviṭṭēṉ pāru pāru
nāṭiyē koṇṭavutaṉ ilakku mārkkam
nalamākac collukiṟēṉ nāṭip pāru
kūṭiyē kaṇṭamatil valaittuc cuṟṟik
kuṟiyāṉa narampellām valittup piṉṉit
tēṭiyē kaiyiraṇṭum valittuk kattit
tiṟamākac caṭṭattil cavaṭṭik koṇṭu (39)

cavaṭṭavē valatukaiyai valattē vaittuc
cāṟṟukiṟēṉ iṭatukaiyai iṭattē kūṭṭi
vaṭṭamāy mutukarukil taṭavi viṭṭu
valampuriyum iṭampuriyum tiriccuk keṭṭi
naṭṭamāyp pōkāmal aṭaṅkal taṉṉil
nāṭiyē māttiraiyai ulce luttik
kaṭṭamāy ilakumatu karuvum pārttuk
kalaṅkāmal ceytuviṭu karutta ṉāmē (40)

In the above 37 verses 37 varmas have been described (verses 6, 7 may be taken for 1 and 2 chevikutti) All of them are located above the Adam's apple.

Following is the list of 37 Varmas:-

1. Kondaikolli
2. Seerunkolli
3. Pidari
4. Suruthi
5. Pugazhehai
6. Chevikuthi
7. Chevikuthi
8. Mudicchu
9. Poikai
10. Naṭchattiram
11. Kampuri
12. Murtti
13. Annamam
14. Vettu
15. Amirtalantai
16. Chemmam
17. Thilatam
18. Minvetti
19. Mantiram
20. Patchi
21. Nemam
22. Palavarmam
23. Irattam
24. Paccai

25. Mankari
26. Ataippu
27. Munmuticchu
28. Kankalanki
29. Nalliruppu
30. Amirta Kalam
31. Ottu
32. Utirakalam
33. Muntirukki
34. Urakkakalam
35. Karakkuttu (kakkattai)
36. Cimai
37. Kilimekam.

General Remedial measures of Treatment.

1. The afflicted must be helped to sit up and care must be taken when he is lifted.
2. Chest and the back must be massaged gently and carefully.
3. The afflicted should be helped to expand his sides and his hands should be kept stretched and joined.
4. The nerves are carefully stimulated and the hands are kept joined behind the neck.
5. Remedial treatment for restoring mobility of limbs must be given stage by stage and mild pressing with foot may prove effective too.
6. The right of the back has to be a massaged by the right hand and the left of the back by the left hand.
7. After trying these remedial measures medication (internal) can be arranged. This depends upon the condition of the patient.

கருத்தான கழுத்தின்கீழ் மூலா தாரம்
    கணக்குடனே எழுந்தவர்மம் முப்பத்து நாலு
திருத்தமாய் முப்பத்து நாலு வர்மம்
    செப்புகிறேன் கடிகைகுணம் காலம் பாரே
கருத்தான காலமுடன் கருவுஞ் சொன்னேன்
    கழுத்தின்மேல் எழுந்தவர்மம் முன்னே சொன்னேன்
திருத்தமாய்க் கழுத்தின்கீழ் மூலா தாரம்
    விதமுடனே சொல்லியதில் விளம்பு வேனே. (41)

கழுத்திற்கு மேலே உள்ள முப்பத்தேழு வர்மங்கள் கூறப்பெற்றன. (வர்ம எண் 1 முதல் 36 ஈராக; செவிக்குத்தி 1, 2 எனக் கொள்க. பாடல் எண் 1 முதல் 37 முடிய.) இதேபோல கழுத்திற்குக் கீழே மலவாயிலாகிய குதத்தானம் வரையில் இடம்பெறுவனவாகிய முப்பத்து நான்கு வர்மங்களின் குணம், அவற்றிற்குரிய கால அளவு ஆகியவை இனி வரும் பாடல்களில் கூறப்படுகின்றன.

அவ் வர்மங்கள் முறையே,

1. கதிர்
2. கதிர்காமம்
3. புத்திர வர்மம்
4. சத்தி
5. திவளை
6. ஏந்தி
7. அனுமான்
8. கொழுந்து
9. உறுமி
10. அடைப்பு
11. அத்திச்சுருக்கி (சிறியது)
12. அத்திச்சுருகி (பெரியது)
13. முன் சுருதி
14. முன் கழுந்தான்
15. பள்ளை
16. முன்னை
17. அன்னம்
18. துடி
19. கொம்புகுற்றி
20. கூம்பு
21. மூர்த்தி
22. வாய்வு
23. நடுச்சுழி
24. சடப்பிறவர்மம்
25. கிளிப்பிற வர்மம்
26. கை கெட்டி
27. எட்டெல்லு
28. கல்லிடை
29. வலம்புரி
30. இடம்புரி
31. வில்லுறுமி
32. நாங்குகுத்தி
33. அறியந்தன்
34. அணி

என்பவையாகும்.

karuttāṉa kaḻuttiṉkīḻ mūlā tāram
kaṉakkuṭaṉē eḻuntavarmam muppattu nālu
tiruttamāy muppattu nālu varmam
ceppukiṟēṉ kaṭikaikuṇam kālam pārē
karuttāṉa kālamutaṉ karuvuñ coṉṉēṉ
kaḻuttiṉmēl eḻuntavarmam muṉṉē coṉṉēṉ
tiruttamāyk kaḻuttiṉkīḻ mūlā tāram
vitamutaṉē colliyatil viḷampu vēṉē (41)

After gaining a thorough knowledge of the Varmas above the neck we shall now try to gain a knowledge of the 34 varmas between the neck and the pubic cavity. Their locations and symptoms, and remedial measures are described in the following verse.

The 34 varmas are as follows:

1. Katir
2. Katirkamam
3. Puttira Varmam
4. Cakti
5. Tivalai
6. Enti
7. Anuman
8. Koluntu
9. Urumi
10. Ataippu
11. Anthisurukki
12. Atticurukki (large)
13. Mun Suruti
14. Mun Kamuntan
15. Pallai
16. Munnai
17. Annam
18. Tudi
19. Kompukurri
20. Kumpu
21. Moorthy
22. Vayu
23. Naduchuzhi
24. Satapira Varmam
25. Kilippira Varmam
26. Kai ketti
27. Ettellu
28. Kallitai
29. Valampuri
30. Itampuri
31. Villurumi
32. Nankukutti
33. Aniyantan
34. Ani.


38. ***கதிர் வர்மத்தின் குணம்***

விளம்பவே கதிர்வர்மங் கொண்டு தானால்
மெத்தவே செய்குணத்தை விளம்பக் கேளு
தளம்பவே கண்ணிரண்டுந் தள்ளு மப்பா
தலைகுழைந்து கண்டமதைத் தானே சாய்க்கும்
குளம்பவே கக்கலுடன் விக்க லுண்டாம்
கூறியே [1]கடிகைநாள் ஒன்ப தாகும்
வளம்பவே செய்யாதே அசாத்திய மாகும்
வரும்பிரத்தங் கழியுமென்றால் வருந்திச் செய்யே. (42)

"நகையணியுங் கழுத்தின்கீழ் கதிர்வர் மந்தான்"

என்று கூறும் ஒடிமுறிவு நூல் (28) கதிர்வர்மத்தானத்தைக் குறிப்பாகச் சுட்டவில்லை. நகையணியுங் கழுத்தின்கீழ் என்றது மார்பணியின் ஓரளவு அமைப்பைக் கொண்டு சங்குக் குழியினின்றும் ஒட்டைச்சாண் அளவின் கீழ் என்று

பா.வே. 1. கடிகைநாலொன்பதாகும் (4 × 9 = 36 *நாழிகை)*


17
22
14
13
6,7
31
24
33
15
29
21
30
28
20
16
10
26
11
18
34
23
25
37
27
12

(1) கழுத்துக்குமேலே - 37வர்மங்களில்


முன்புறம் - 26 வர்மங்கள்

6, 7. செவிக்குத்தி 1, 2.
10. நட்சத்திர காலம்
11. காம்பூரி வர்மம்
12. மூர்த்தி காலம்
13. அன்னாம காலம்
14. வெட்டு வர்மம்
15. அமிர்தலாந்தை
16. செம்ம காலம்
17. திலத வர்மம்
18. மின்வெட்டி காலம்
20. பட்சி வர்மம்
21. நேம வர்மம்
22. பால வர்மம்
23. இரத்த வர்மம்
24. பச்சை வர்மம்
25. மங்காரி வர்மம்
26. அடைப்பு வர்மம்
27. முன்முடிச்சு
28. கண்கலங்கி
29. நல்லிருப்பு
30. அமிர்த காலம்
31. ஒட்டு வர்மம்
33. முண்டிறுக்கி
34. உறக்க காலம்
37. கிளிமேகம்

(1) In the 37 Varmas above throat

26 - in the Front

6, 7 Cevikkutti, 1,2.
10. Naṭcattiṟa Kālam
11. Kāmpūri Varmam
12. Mūrti Kālam
13. Aṇṇāma Kālam
14. Veṭṭu Varmam
15. Amirtalāntai
16. Cemma Kālam
17. Tilata Varmam
18. Miṉveṭṭi Kālam
20. Paṭci Varmam
21. Nēma Varmam
22. Pāla Varmam
23. Iratta Varmam
24. Paccai Varmam
25. Maṅkāri Varmam
26. Aṭaippu Varmam
27. Muṉmuṭiccu
28. Kaṇkalaṅki
29. Nalliruppu
30. Amirta Kālam
31. Oṭṭu Varmam
33. Muṇṭiṟukki
34. Úṟakka Kālam
37. Kiḷimēkam


1
4
19
5
9
2
3
32
36
8
35

(2) கழுத்துக்கு மேலே – 37 வர்மங்களில்
பின்புறம் – 11 வர்மங்கள்.

1. கொண்டைக்கொள்ளி
2. சிறுங் கொள்ளி
3. பிடரி வர்மம்
4. சுருதி வர்மம்
5. புகழ்ச்சை
8. முடிச்சு வர்மம்

9. பொய்கை காலம்
19. மந்திர காலம்
32. உதிர காலம்
35. கரக்கூட்டு வர்மம் (காக்கட்டை)
36. சிமை வர்மம்

(2) In the 37 Varmas above throat
11 on the Back

1. Koṇṭaik Koḷḷi
2. Ciṟuṅkoḷḷi
3. Pitari Varmam
4. Curuti Varmam
5. Pukaḻccai Varmam
6. Muṭiccu Varmam

7. Poykai Kālam
19. Mantira Kālam
32. Utira Kālam
35. Karakkūṭṭu Varmam (Kākkaṭṭai)
36. Cimai Varmam

கொள்ளுவது பொருத்தமாகிறது. அதாவது மார்பின் இடைப்பகுதியில் மார்புத்தண்டின் மீது இடம் பெறுவது இவ்வர்மமாகும். கண்கள் வெளியே தோன்றும் (பிதுங்கிக்காணும்) நிலையை முதலில் உருவாக்குவது இவ்வர்மம். கதிர் (ஒளி) நரம்புகளைத் தாக்குவது ஆதலின் இப்பெயர் பெறுகிறது. கதிர் போலும் மார்புத்தண்டை இடமாகக் கொண்டது. ஆதலின் இப்பெயர் பெற்றது என்பதும் பொருந்தும்.

இந்த வர்மநோய் கண்களைப் பிதுங்கச் செய்வதோடு, தலை தன்நிலைதளர்ந்து குழையுமாறும் கழுத்துதானே கவிழ்ந்து தொங்குமாறும் செய்யவல்லது. அடிக்கடி விக்கல் ஏற்பட்டு அதன்விளைவாக கக்கிக் கக்கி வாந்தி எடுக்கும் நிலையையும் உருவாக்கும். இதனை ஒன்பது நாளைக்குள் இளக்குதல் வேண்டும். (இங்குக்கடிகை என்றதனால் நாலொன்பது என்பதே பொருந்தும்). இந்தக் காலத்திற்குப் பிறகே மருந்து கொடுத்தல் வேண்டும்.

38. Katir Varmam

viḷampavē katirvarmaṅ koṇṭu tāṉāl
mettavē ceykuṇattai viḷampak kēḷu
taḷampavē kaṇṇiraṇṭuṉ taḷḷu mappā
talaikuḻaintu kaṇṭamatait tāṉē cāykkum
kuḷampavē kakkalutaṉ vikka luṇṭām
kūṟiyē kaṭikaināḷ oṉpa tākum
vaḷampavē ceyyātē acāttiya mākum
varumpirattaṅ kaḻiuymeṉṟāl varuntic ceyyē (42)

"nakaiyaṇiyuṅ kaḻuttiṉkiḻ katirvar mantāṉ"

(Oṭimuṟivu - 28)

Odimurivu does not speak of this varma's location. It is possible to presume that this varma is located below the neck line by the middle of the chest. Perhaps it derives its name from its prominence to expose the nerve fibres of the area to light.

This varma not only causes the bulging of the eyes it also causes the stooping of the neck. It gives the victim hiccups. It also makes him vomit. Remedial (external) treatment must be given within and medication (internal) may follow.

39. கதிர்காம வர்மத்தின் குணம்

வருந்தாமல் கதிர்காம வர்மங் கொண்டால்
வளமாகச் சொல்லுகிறேன் வருந்திக் கேளு
கழுகாமல் கொண்டவுடன் உடல்கு ளிர்ந்து
காசினியில் முறட்டையிட்டு மேல்வ லிக்கும்
தழுவாமல் சன்னியொடு சீத முண்டாம்
தப்பாது நாழிகைதான் ஏழ தாகும்
நழுகாமல் கடிகைநாள் கழியு மானால்
நன்றாகச் செய்துவிடு நன்றாய்த் தானே. (43)

"மன்றான தோளிரண்டங் குலமே நீக்கி
மருவுகின்ற தலமதில்காக் கட்டை வர்மம்
கதியான காலத்துக் கிறையே ரெண்டு
கதிர்காம வர்மமென்று சொல்வார் பாரில்"
(வர்மக்கண்ணாடி, பா.20)

என்பது தோளின் இரண்டங்குலத்துக்குக் கீழே இருப்பது காக்கட்டை (சுரகட்டு); அதன்கீழே இரண்டு விரற்கடை தூரத்தில் அமைவது கதிர்காம வர்மமாகும் எனச் சுட்டுகிறது. ஆனால் விலா எலும்புகளின் கூட்டு மையமாகிய மார்புத் தண்டின் இடைப்பகுதியில் கூம்பு முனைக்கு மேலே நிலைத்திருப்பதே கதிர்காம வர்மம் என்பதைப் பல எடுத்துக்காட்டுகளும் வரைபடங்களும் உணர்த்துகின்றன.

"நகையணியுங் கழுத்தின்கீழ் கதிர்வர் மந்தான்
நலமான இரண்டிறைக்கீழ் கதிர்காம வர்மம்"

என்பது ஒடிமுறிவு கூற்று (28). கதிர்வர்மமும் கதிர்காம வர்மமும் அடுத்தடுத்தமைவனவாகும். இவை கதிர் என்று பெயர் பெறும் இரும்பு முள்ளினைப்போலக் கெட்டியாக அமைந்த மார்புத் தண்டில் அமைந்த உயிர்நிலைகளாதவின் கதிர், கதிர்காமம் என்னும் பெயர்களைப் பெறுகின்றன.

இந்த உயிர்நிலைகளில் அடிபடுமாயின் உடனே சிறுநீரும் மலமும் வெளியாகும்; காது அடைக்கும்; உடல் குளிர்ந்து போக வெறிபிடித்த நிலை ஏற்படும்; உடம்பு வலி, சீதம், சன்னி ஆகியவையும் உண்டாகும். இதனை ஏழு நாழிகைக்குள் குணப்படுத்த முயற்சி மேற்கொள்ள வேண்டும். மூக்கின் நுனியையும் இரண்டு காதுகளையும் முறையே மாறி மாறிப் பிடித்துக் தூக்கிவிட வேண்டும். குதத்தானமாகிய (மலவாய்) மூலாதாரத்தில் ஒரு தட்டு தட்ட வர்ம நோய் நீங்கும். தொடர்ந்து தண்ணீர் ஓதித் தெளித்துச் சுக்கிட்ட கஞ்சியைச் சூடானபதத்தில் உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். திருமேனி எண்ணெய், கியாழம், நெய் ஆகியவற்றையும் முறைப்படிப் பயன்படுத்த வேண்டும்.

39. Katir Kāma varmam

varuntāmal katirkāma varmaṅ koṇṭāl
valamākac collukiṟēṉ varuntik kēḷu
kaḻukāmal koṇṭavutaṉ utalku lirntu
kāciṉiyil muṟaṭṭaiyiṭṭu mēlva likkum
taḻuvāmal caṉṉiyoṭu cita muṇṭām
tappātu nāḻikaitāṉ ēḻa tākum
naḻukāmal kaṭikaināḷ kaḻiyu māṉāl
naṉṟākac ceytuviṭu naṉṟāyt tāṉē (43)

maṉṟāṉa tōlirantaṅ kulamē nīkki
maruvukiṉṟa talamatilkāk kaṭṭai varmam
katiyāṉa kālattuk kiṟaiyē renṭu
katirkāma varmameṉṟu colvār pāril

(Varmakkaṇṇāṭi - 20)

This is located 2 inches below the Karakoottu Varma. It is also said to be located at the midpoint of the sternum. Kadir according to other sources is assisted by diagrams. Kadir according to the verse

nakaiyaniyuṅ kaḻuttiṉkīḻ katirvar mantāṉ
nalamāṉa iranṭiṟaikkīḻ katirkāma varmam."

(Oṭimuṟivu - 28)

Kadir Varmam and Kadir Kama Varma are situated side by side. The word 'Kadir' meaning a nail or spike. Which is like a point of sternum. It thus becomes the name of these varmas.

Injury to this varma causes the victim to urinate, and ease himself immediately. His learning is impaired; fall in temperature leads to delirium, Treated within 7 nazhigais the victum is cured. Holding the patient by his nose or ears, he has to be lifted. Water splashes restores him, gruel with sukku (dry ginger) is given. Thirumeni oil, Kanji with dry ginger and oil may also be administered.

40. புத்திர வர்மம்

நன்றாக விதிமுடிந்த புத்திர வர்மம்
நலமாகக் கொண்டிடுகில் குணத்தைக் கேளு

குன்றாகக் கண்ணிரண்டுங் குழிந்து நட்டுக்
கூர்ம்முடன் தாழ்ந்துமே குறுக்கிக் கூனும்
மன்றான மூலமதில் வாயில் ரத்தம்
மாறியே ஒழுகுமடா மூத்தி ரத்தில்
கன்றான ரத்தமது காணு மானால்
கழியாது நாழிகைஒன் றரைக்குள் தேரே. (44)

"நலமான இரண்டிறைக்கீழ் கதிர்காம வர்மம்
பகையான தோரிறைக்கீழ் புத்திர வர்மம்"

என்னும் ஒடிமுறிவுக் கூற்று (28) கதிர்காம வர்மத்திற்கு ஒருவிரலளவு கீழே இடம் பெறுவது புத்திரவர்மம் என விளக்குகிறது. இதனையே,

"கதிர்காம வர்மமென்று சொல்வார் பாரில்
எதிரான இதற்குஒரு இறைக்குங் கீழே
இதுசத்தி வர்மமென்று இயம்பு வார்கள்"

என்னும் அடிகளில் சத்திவர்மம் என்று குறிப்பிடுகிறது வர்மக்கண்ணாடி (22). இந்நூலில் சத்திவர்மம் என்பது அடுத்த ஒன்றாக விளக்கம் பெறுகிறது.

உடல் கூனிக் குறுகி (ஆமைபோல) குழந்தை நிலையை அடையச்செய்யும் பண்புடையதாதலின் இது புத்திர வர்மம் எனப்பட்டது.

இந்த வர்ம நோய் ஏற்பட்டால் கண்கள் குழிந்து உள்ளே செருகிக் கொண்டு விறைத்துக்கொள்ளும். உடலானது ஆமையைப் போலக் கூனிக் குறுகிப் போகும். மலவாயில், மூத்திரம், வாய் ஆகியவற்றில் மாறிமாறி இரத்தம் கொட்டும். இரத்தம் கொட்டுங்குறி காணுமாயின் ஒன்றரை நாழிகைக்குள் இளக்கியாக வேண்டும். இல்லையேல் அசாத்தியமாகிவிடும்.

கூர்மம் – ஆமை. மூலம் - மலவாய்.

40. Puttira Varmam

nanṟāka vitimutinta puttira varmam
nalamākak kontitukil kuṇattaik kēḷu
kunṟākak kanniranṭuṅ kuḻintu naṭṭuk
kūrmamuṭan tāḻntumē kuṟukkik kūṉum
manṟāṉa mūlamatil vāyil rattam
māṟiyē oḻukumaṭā mūtti raṭṭil
kanṟāṉa rattamatu kāṇu māṉāl
kaḻiyātu nāḻikaiōṉ ṟaraikkuḷ tērē (44)

"nalamāṉa iranṭiṟaikkil katirkāma varmam
pakaiyāṉa nēriṟaikkil puttira varmam"

(Oṭimuṟivu - 28)

katirkāma varmameṉṟu colvār pāril
etirāṉa itaṟkuoru iṟaikkuṅ kiḻē
itucatti varmameṉṟu iyampu vārkaḷ

(Varmakkaṇṇāṭi - 22)

This is one finger below the Kadir Kama Varmam. Varma Kannadi (22) mentions it as Sathi Varmam.

Damage to this Varma makes the person double - bent as if in his second childhood. Hence the name puttira varmam. Eyes become deep - sunken, and the body, double bent looking like a tortoise. Bleeding from the Anus and urinary tract. Remedial treatment should be arranged within 1½ nazhigais failing which the condition may turn for worse.

41. சத்தி வர்மத்தின் குணம்

தேறவே சத்திவர்மங் கொண்டு தென்றால்
செப்புகிறேன் குணந்தன்னைத் தெளிந்து கேளு
மீறவே சரீரமதில் கூடக் கூடே
விறுவிறுத்து இமைதட்டி விழிக்கும் பாரு
(உடல்தளர்ச்சி மயக்க முண்டாம்)
சீறவே சாமநேர் பாய்ஒட் டாது
இயல்பாக விம்மியே வெட்டுந் தேகம்
ஆறவே சன்னியொடு சீத முண்டாம்
அப்பனே அசாத்தியமென் றறைய லாமே. (45)

"கதிர்காம வர்மமென்று சொல்வார் பாரில்
எதிரான இதற்குஒரு இறைக்குங் கீழே
இதுசத்தி வர்மமென்று இயம்பு வார்கள்"

என்பது வர்மக்கண்ணாடி (22); கதிர்காம வர்மத்தை அடுத்து ஒருவிரல் கீழே இடம்பெறுவது சத்தி வர்மம் என்கிறது. ஆனால் கதிர்காமத்தின் ஒரு விரலளவில் புத்திர வர்மத்தைச் சுட்டி, அதன் ஒருவிரல் கீழே இடம் பெறுவதே சத்தி வர்மம்

என்கிறது ஒடிமுறிவு (28). கதிர் வர்மமும் கதிர்காமவர்மமும் மார்புத்தண்டிணிடத்தே ஒன்றன் கீழ் ஒன்றாக அடுத்தடுத்து அமைபவை; புத்திர வர்மம் என்பது கதிர்வர்மத்தின் வலப்புறத்தே ஒரு விரல் அளவில் அமைகிறது; அதனினும் வலப்புறத்தே சத்தி வர்மம் இடம்பெறுகிறது என்பன படத்தில் தெளிவாகின்றன.

உடலெல்லாம் விறுவிறுத்தல்; இமை கொட்டாமல் விழித்துப் பார்த்தல்; உடல்தளர்ந்து மயக்கமடைதல்; ஒருசாம நேரமும் சும்மாஇராது, விம்மி விம்மி உடல் தூக்கித் தூக்கிப் போடுதல்; சன்னியும் சீதமும் மாறிமாறி வருதல் ஆகியவை இவ்வர்மநோயினால் ஏற்படக்கூடிய அறிகுறிகளாகும். இவை சத்தியின் ஆட்டம் போன்ற செயல்களாதலின் இது சத்தி வர்மம் எனப்பட்டது.

41. Catti Varmam


tēravē cattivarmaṅ koṇṭu teṉṟāl
ceppukiṟēṉ kuṇaṇtaṉṉait teḷintu kēḷu
miṟavē carīramatil kūṭak kūṭē
viṟuviṟuttu imaitaṭṭi viḻikkum pāru
(uṭaltaḷarcci mayakka muṇṭām)

ciṟavē cāmanēr pāyoṭ tātu
iyalpāka vimmiyē veṭṭuṇ tēkam
āṟavē caṉṉiyoṭu cīta muṇṭām
appaṉē acāttiyameṉ ṟaṟaiya lāmē (45)

"katirkāma varmameṉṟu colvār pāril
etirāṉa itaṟkuoru iṟaikkuṅ kiḻē
itucatti varmameṉṟu iyampu vārkaḷ"
(Varmakkaṇṇāṭi - 22)

According to Varma Kannadi. One finger below Kadirkama Varma is Sathi varma. But Odimurivu places (28) Puttira Varma at one finger's distance from Kadirkama varma and one finger below the former lies the sathi varma. It becomes clear from the diagram that Kadir Varma and Kadir Kama Varma are present on the sternum one below the other and Puttira Varma is present at a finger's distance on the right and a little further on the same lies the Sathi Varma.

The symptoms of this varma disease are - sweating, looking wide - eyed, feeling extremely weak and out of senses and contorted with pain.


26
5
4
6
33
1
3
2
19
7
18
14
20
8
27
13
15
9
10
17
11
29.30
12
32
25
24
34
21
31
23
22
28

(3) கழுத்துக்குக் கீழே மூலாதாரம் வரை

மார்புப்புறம் – 34 வர்மங்கள்.

1. கதிர் வரமம்
2. கதிர்காம வர்மம்
3. புத்திர வர்மம்
4. சத்தி வர்மம்
5. திவளை காலம்
6. ஏந்தி வர்மம்
7. அனுமான் வர்மம்
8. கொழுந்து வர்மம்
9. உறுமிக் காலம்
10. அடைப்பு வர்மம்
11. அத்திச்சுருக்கி (சிறியது)
12. அத்திச்சுருகி (பெரியது)
13. முன்சுருதிக்காலம்
14. முன்கழுந்தான் காலம்
15. பள்ளை வர்மம்
16. முன்னை வர்மம் (வர்மத்தானம் இல்லை)
17. அன்ன காலம்
18. துடி வர்மம்
19. கொம்புகுற்றிக் காலம்
20. கூம்பு வர்மம்
21. மூர்த்தி காலம்
22. வாயு காலம்
23. நடுச்சுழிக் காலம்
24. சடப்பிற காலம்
25. கிளிப்பிற வர்மம்
26. கை கெட்டிக் காலம்
27. எட்டெல்லு வ்ர்மம்
28. கல்லிடைக் காலம்
29. வலம்புரி வர்மம்
30. இடம்புரி வர்மம்
31. வில்லுறுமிக் காலம்
32. நாங்குகுத்தி வர்மம்
33. அணி வர்மம்
34. அநியந்தன் வர்மம்

(3) Below the neck in the Front side - 34 Varmas.

1. Katir Varmam
2. Katirkāma Varmam
3. Puttira Varmam
4. Catti Varmam
5. Tivaḷai Varmam
6. Yēnti Varmam
7. Anumān Varmam
8. Koḻuntu Varmam
9. Uṟumik Kālam
10. Aṭaippu Varmam
11. Atticcurukki (Ciriyatu)
12. Atticcuṟukki (Periyatu)
13. Muṉcurutik Kālam
14. Muṉkaḻuntāṉ Kālam
15. Paḷḷai Varmam
16. Muṉṉai Varmam (No Varma's Place)
17. Aṉṉa Kālam
18. Tuṭi Varmam
19. Kompukuṟṟik Kālam
20. Kūmpu Varmam
21. Mūrthy Kālam
22. Vāyuk Kālam
23. Naṭuccuḻik Kālam
24. Caṭappiṟa Kālam
25. Kiḷippiṟa Varmam
26. Kaikeṭṭik Kālam
27. Eṭṭellu Varmam
28. Kalliṭaik Kālam
29. Valampuri Varmam
30. Iṭampuri Varmam
31. Villuṟumik Kālam
32. Nāṅkukkutti Varmam
33. Aṇi Varmam
34. Aṉiyantan Varmam

42. [1]தேளே காலம்

அறையவே [1]தேளேவர்மங் கொண்டு தானால்
அகங்கலங்கிக் கண்சிவந்து பதைநீர் ஓடும்
குறையாமல் நாழிகைதான் பத்துக் குள்ளே
கூர்மையுடன் மயங்காமல் இருப்பா னாகில்
நிறையவே இருமலது [2]கூடக் கூடே
நிச்சயமாய்ச் செயங்கள்வந்து உறைக்கும் பாரு
உறையாமல் சன்னியொடு சீதங் கூடில்
உத்தமனே அசாத்தியமது உண்மை தானே. (46)

"அதிரான சத்திவர் மத்தின் கீழே
அப்பனே திவளைஎனும் வர்மம் பாரு"

என்பது வர்மக்கண்ணாடி (22). இதே அடிப்படையில்

"சத்தியென்ற காறையின்கீழ் தோளை வர்மம்"

எனத் திவளையைத் தோளையென்ற சொல்லால் சத்தியின் கீழ் இருப்பதாகவே சுட்டுகிறது ஒடிமுறிவு (29). படங்கள் சத்தியின் மேலே இருப்பதாகச் சுட்டுகின்றன. சங்கு வர்மத்தின் கீழ்க் குழியில் நிலைபெறுவது திவளை எனச்சுட்டுகிறது படுவர்மத்திரட்டு (29). இதனை வாயுவர்மம் என்ற பெயராலும் கூறுகிறது படுவர்மத்திரட்டு.

"சுகமாகக் காறைஎல்லு அருகு பற்றி
தாக்கவே தவளைக்குழி என்று சொல்லும்
தயவான அத்தலத்தில் திவளைக் காலம்"

என்னும் வர்மக்கண்ணாடியின் கூற்றும் (11) இக்கருத்திற்குத் துணையாகிறது. காறை எலும்பின் கீழே உள்ள குழி என்றது சங்கு வர்மத்தையடுத்து குழியைச் சுட்டியதாகும்.

திவளல் என்பது துவளுதல், மெலிதல் என்ற பொருளைத் தருவது. உள்ளங் கலங்கி மெலிவதே இவ்வர்ம நோயின் முக்கியப்பண்பு ஆதலின் இப்பெயர் பெறுகிறது. மேலும் கண்சிவத்தலும் வாயில் நீர்வடிதலும் இந்த வர்ம நோயால் ஏற்படுவனவாகும். பத்து நாழிகைக்குள் மயக்கமும் தோன்றும். உரியகாலத்தில் மயக்கம் ஏற்படவில்லையானால் நாளடைவில் இருமல் விட்டுவிட்டுத் தோன்றி சயரோக நிலைக்குக் கொண்டுவந்து விடும். சன்னியும் சீதமும் மிகுமாயின் அசாத்திய நிலையை அடைந்து விடும்.

பா.வே. 1. திவளைகாலம்; தெவளைகாலம். 2. விட்டு விட்டு

"மானான கண்ணிரண்டும் மூடிப் போகும்
மயங்குமதி உடல்கறுக்கும் உடல்து டிக்கும்"

(வர்ம சூட்சம் - 40)

"அப்பனே மயக்கமுடன் தும்மல் சன்னி
கரைக்கின்ற மழைபோல தண்ணீர் கொட்டும்"

(படுவர்மத்திரட்டு - 29)

என்பனவும் இந்த வர்மத்தின் செயல்களாகின்றன. மழைபோலே தண்ணீர் கொட்டும் பண்பினால் இது திவலை வர்மம் என்று பெயர் பெற்றிருக்கக்கூடும். அதுவே திவளை, தெவளை, தேளை, தோளை எனப்பலவாறாகத் திரிந்திருக்கிறது என்பது சிறப்பு ஆகும்.

மண்ணம் இளக்குதல், நெஞ்சில் தட்டுதல், நாசி, செவிகளைத் தடவித் தூக்கித்தட்டுதல், வசவெண்ணெய் தடவித் தேய்த்தல், நாசி, செவிகளுக்குத் தயிலமிடுதல் ஆகிய மருத்துவ முறைகளைக் கையாண்டு வெந்நீரில் முழுகச் செய்தல்வேண்டும்.

42. Tēḷē Kālam

araiyavē tēḷēvarmaṅ koṇtu tāṉāl
akaṅkalaṅkik kaṅcivantu patainir ōṭum
kuraiyāmal nāḻikaitāṉ pattuk kuḷḷē
kūrmaiyutaṉ mayaṅkāmal iruppā ṉākil
niraiyavē irumalatu kūṭak kūṭē
niccayamāyc ceyaṅkalvantu uraikkum pāru
uraiyāmal caṉṉiyotu citaṅ kūṭil
uttamaṉē acāttiyamatu uṇmai tāṉē (46)

"atirāṉa cattivar maṭṭiṉ kiḻē
appaṉē tivaḷaieṉum varmam pāru."

(Varmakkaṇṇāṭi - 22)

"cattiyeṉra kāraiyinkiḻ tōḷai varmam"

(Otimurivu - 29)

calls it 'tholai' and is said to be located below the sathi. The picture shows it above the sathi Varma. According to Padu Varmathirattu (29) below the Sangu Varma in the depression lies Thivalai Varma. This is also called Vayu Varma in Padu Varmathirattu.

cukamākak kāraiellu aruku parri
tākkavē tavalaikkuli enru collum
tayavāna attalattil tivalaik kālam

(Varmakkannāti - 11)

Verse (11) of Varma Kannadi says the same. The depression below 'Karai' bone is the same as the depression below Sangu Varma.

Thivalai means becoming weak or fragile. The person afflicted feels depressed and helpless. There is also reddening of eyes and watering of the mouth. Loss of consciousness may occur during the first 10 Nazhigais. Incessant coughing may lead to tuberculosis phlegm collects and makes it further complicated.

mānāna kannirantum mūtip pōkum
mayaṅkurmati utalkarukkum utaltu tikkum

(Varma cūtcam - 40)

appanē mayakkamutan tummal canni
karaikkinra malaipōla tannir kottum

(Patuvarmattirattu - 29)

Varma Sootcham (40) maintains that there is loss of light and darkening of skin. Padu Varmathirattu attributes the name to too much watering of eyes and mouth. Thus the Varmam is variously called 'Thivalai'? Thevalai? Tholai. Remedial treatment includes holding the patient by nose and ears, rubbing of muscle and internal medication.

43. ஏந்தி வர்மத்தின் குணம்

உண்மையாய் ஏந்திவர்மங் கொண்டு தானால்
உத்தமனே செய்குணத்தை உணர்வாய்க் கேளு
வண்மையா [1]யுடல்சுமக்கும் அழலு முண்டாம்
வந்திக்குஞ் செவியதனைக் கேட்கா தாக்கும்
தண்மையாய்ச் சன்னியொடு சீத முண்டாம்
தப்பாது நாழிகைதான் ஏழ தாகும்

1. உடல் கழைக்கும் (உடல் களைக்கும் என்பதாதல் வேண்டும்)

நன்மையாய் நாள்விரதங் கழியு மானால்
நலமாகச் செய்திடுநீ நன்றாய்த் தானே. (47)

விலாவெலும்பிற்குக் கீழே எட்டுவிரற்கடையளவில் வலதுபுறமும் இடதுபுறமுமாக அமைவது ஏந்தி வர்மம் எனப்படுகிறது. இதை,

"சதிரான விலாவிலெட்டு இறையிற் றாழே
சேரும்வலம் ஏந்தியிரு புறமு மாமே"

என்ற வர்மக் கண்ணாடியின் கூற்றும் (22),

"சத்தியென்ற காறையின்கீழ் தோளை வர்மம்
தொகுப்பான தோரிறைவலம் ஏந்தி வர்மம்"

என்ற ஒடிமுறிவின் செய்தியும் (29) ஒன்றுபடக் கூறுகின்றன.

உடல்கனத்து அதைத் தாங்கிக் கொள்ளும் நிலையையும், உடலில் சூடு மிகுவதனால் பொருமி மந்தப்படும் நிலையையும் உருவாக்கும் இந்த வர்மத்தின் குணங்களை அடிப்படையாகக் கொண்டு தாங்குதல் என்ற பொருளையுடைய ஏந்தி வர்மம் என்ற பெயரைப் பெறுகிறது. காது கேளாமையும், சன்னியும் சீதமும் உண்டாதலும் மேலும் இதன் குணங்களாகின்றன. ஏழு நாழிகைக்குள் இளக்கப்பெறுதல் வேண்டும்.

43. Ēnti Varmam

unmaiyāy ēntivarmaṅ koṇṭu tāṉāl
uttamaṉē ceykuṇattai uṇarvāyk kēḷu
vaṉmaiyā yutalcumakkum aḻalu muṇṭām
vantikkuñ ceviyataṉaik kēṭkā ṭākkum,
taṉmaiyāyc caṉṉiyoṭu cīta muṇṭām
tappātu nāḻikaitāṉ ēḻa tākum
naṉmaiyāy nāḷvirataṅ kaḻiyu māṉāl
nalamākac ceytiṭunī naṉṟāyt tāṉē (47)

catirāṉa vilāvileṭṭu iṟaiyiṟ ṟāḻē
cērumvalam ēntiyiru puṟamu māmē

(Varmakkaṇṇāṭi - 22)

'cattiyeṉṟa kāṟaiyinkīḻ tōḷai varmam
tokuppāṉa tōriṟaivalam ēnti varmam

(Oṭimuṟivu - 29)

This is located 8 fingers below on the left and right side of the ribs. Similar descriptions of location occurs in Kannadi (22) and Odimurivu (29) too.

As this varma is situated at such a point as to hold the entire body, it has the name 'Enti'. Also it causes the body to hot up and muscles slacken. The other symptoms of this disease are loss of hearing & phlegm.

44. அனுமான் வர்மம்

தானான அனுமான் வர்மங் கொண்டால்
தப்பாது அனுமானக் குன்று போலாம்
மானான காலதனைத் தன்சு வட்டில்
மலர்ந்துடனே கூனியே குன்றிக் கொள்ளும்
கூனாகக் குளிர்ந்துவிடுங் கைகால் குன்றும்
கூறரிய நாழிகைதான் [1]எட்டே முக்கால்
ஊனான நாழிகைதான் கடரு முன்னே
உத்தமனே இதையறிந்து உன்னிப் பாரே. (48)

அக்குளை அடுத்த மார்புப்பகுதியில் முலைக்கண்ணை அடுத்துச் சுற்றிலும் இரண்டிரண்டு விரற்கடை அளவில் அமைவன எட்டு வர்மங்கள். அவற்றுள் முதல் மடக்குப் பகுதியில் நிலைபெறுவது அனுமான் வர்மமாகும். இதனை,

"முறையான முலைக்கண்ணில் தூசி வர்மம்
மூடியிரு விரல்சுற்றி வர்மம் எட்டாம் ...
சொன்னபடி வில்லுவர்மம் அனுமார் வர்மம் ... "

என்ற அடிகளில் கூறுகிறது வர்மக்கண்ணாடி (23- 24).

"குத்தியென்ற தோர்மடக்கில் அனுமார் வர்மம்"

என்பது ஒடிமுறிவு (29).

இந்த வர்ம நோயுண்டானால் கால்கள் தம் சுவடுகளில் நில்லாமல் கூனிக் குன்றிநிற்கும். அனுமனைப்போன்ற இந்த நிலையை உண்டாக்குவதனாலேயே இது அனுமான் வர்மம் எனப்பட்டது. கைகளும் அவ்வாறே குன்றிக் கொள்ளும். குணங்குறிகளைக் கொண்டு இன்ன வர்மத்தானத்தில் அடிபட்டுள்ளது என்பதை அனுமானித்து அறியக்கூடிய வர்மமாதலின் அனுமான வர்மம் எனப்பெயர் பெற்றுள்ளது. புள்ளியிட அனுமான் வர்மமாயிற்று என்பதும் பொருந்தும். எட்டே முக்கால் நாழிகைக்குள் இதனை இளக்க வேண்டும்.

---

1. எட்டேயாகும்

44. Anumān Varmam

tāṉāṉa aṉumāṉ varmaṅ koṇṭāl
    tappātu aṉumāṉak kuṉṟu pōlām
māṉāṉa kālataṉait taṉcu vaṭṭil
    malarṅtutaṉē kūṉiyē kuṉṟik koḷḷum
kūṉākak kuḷirṅtuvituṅ kaikāl kuṉṟum
    kūṟariya nāḻikaitāṉ eṭṭē mukkāl
ūṉāṉa nāḻikaitāṉ kaṭaru muṉṉē
    uṭṭamaṉē itaiyaṟintu uṉṉip pārē. (48)

Close to this armpit at a distance of 2 fingers from the nipple are present 8 varmas. Of them the first is located at the fold of the armpit called Anuman Varmam.

muṟaiyāṉa mulaik kaṇṇil tūci varmam
    mūṭiyiru viralcuṟṟi varmam eṭṭām....
coṉṉapaṭi villuvarmam aṉumār varmam...

(Varmakkaṇṇāṭi - 23-24)

"kuttiyeṉṟa tōrmaṭakkil aṉumār varmam"

(Oṭimuṟivu - 29)

Damage to this Varmam causes instability of the legs and thereby making the person bend and walk like Anuman. Hence the name. The limbs become inactive. (It also gets its name as the symptoms help us to 'presume' (Anumanam) the injury). The condition requires to be treated within 8 nazhigais.

45. கொழுந்து வர்மத்தின் குணம்

ஒன்றான கொழுந்துவர்மங் கொண்டால் கேளு
    உடல்நடுங்கி மயங்குமப்பா குளிர்ச்சை காணும்
மன்றான வாய்மூக்கில் நீரொ லிக்கும்
    மறுகவே கண்டிடுகில் மாண்டு போகும்
பின்றானே சாத்தியத்தில் கொள்ளு மானால்
    பிறைரோகம் வந்திடுமே பிணியுண் டாகும்

சென்றான கொழுந்துவலி வாயு கூடில்
செணமந்தக் கால்நோக்குந் திடங்கண் டாயே. (49)

"கொள்ளவே பெருவிரலோர் இறைக்குத் தாழே
குணமுடனே கொழுந்துவர்மங் கொண்ட பேர்க்கு"
(படுவர்மத்திரட்டு - 7)

திலதவர்மப் பாடலையடுத்து அமையும் இப்பாடலடிகள் இரு புருவங்களினிடையில் (நடுப்புருவம்) ஒருநெல்லளவு கீழே உள்ள திலத வர்மத்தின் கீழே ஒரு பெருவிரலளவில் அமைவதே கொழுந்து வர்மமாகும் என்கின்றன. ஆனால்,

தேர்ந்துமே நட்டெலும் பிடைகுய் யத்தில்
சிறப்பான கொழுந்துநரம் பதுமு றிந்தால்
(ஒடிமுறிவுசாரி - 356)

என்னும் அடிகளில் குய்யத்தின் நட்டெலும்பில் காண்பது கொழுந்துவர்மம் என்று சுட்டப்பெறுகிறது. படுவர்மங்களில் ஒன்றான கொழுந்து வர்மம் திலத வர்மத்தை அடுத்து அமைவதே என்பது சில வரைபடங்களிலும் சுட்டிக்காட்டப்பெறுவது குறிப்பிடத்தக்கது. கண்ணின் நுனிப்பகுதியாகிய கொழுந்தில் அமைவதாலும், மிக மென்மைவாய்ந்த இட அமைப்பு உடையது ஆதலாலும் இப்பெயர் பெறுகிறது.

இவ்வர்ம நோய் கொண்டால் திடீரென உடல் குளிர்ந்து நடுக்கமும் மயக்கமும் ஏற்படும். மூக்கு, கண்கள், செவி, வாய், தாடைஎலும்புகள் ஆகியவை பெரிதும் பாதிக்கப்படும். வாயிலும் மூக்கிலும் நீர்வடிதல், இரத்தம் கொட்டுதல் ஆகிய நிலைகளுக்கும் உள்ளாகக் கூடும். அடிபட்டு ஏழரை நாழிகையைக் கடந்தால் அசாத்திய நிலை ஏற்பட்டுவிடும். எனவே அக்காலத்திற்குள் இளக்க முயற்சி மேற்கொள்ளப் பெறவேண்டும்.

முதலில் இரு கைகளையும் மடக்கி அணைத்துத் தூக்கிச் செம்மையாக உட்காரச் செய்தல் வேண்டும். தொடர்ந்து,

இரண்டு கைகளையும் மெதுவாக உதறிவிடச் செய்தல்,

இரு விலாஎலும்புகளையும் தடவித் தாழ்த்திவிடுதல்,

கழுத்தை மேல், கீழ், வலம், இடமாக மாறிமாறி அசைத்து விடுதல், வர்மத்தலத்தில் ஒத்தடம் கொடுத்தல் ஆகியவற்றை முறையாக மேற்கொள்ள வேண்டும்.

அடிபட்ட இடத்தில் கட்டுப்போடுதல்,

கற்பூரப் பிளாஸ்திரியைப் பயன்படுத்துதல்,

கெந்திராசி நசியம் செய்தல் ஆகியவற்றையுஞ் செய்ய வேண்டும்.

பிட்டவியலை உணவாகத்தருவது சிறந்தது.

45. Koḻuntu Varmam

oṉṟāṉa koḻuntuvarmaṅ kōṇṭāl kēḷu
    uṭalnaṭuṅki mayaṅkumappā kuḷirccai kāṇum
maṉṟāṉa vāymūkkil nīro likkum
    maṟukavē kaṇṭitukil māntu pōkum
piṉṟāṉē cāttiyattil koḷḷu māṉāl
    piṟairōkam vantitumē piṉiyuṉ ṭākum
ceṉṟāṉa koḻuntuvali vāyvu kūṭil
    ceṉamantak kālnōkkun tiṭaṅkaṉ ṭāyē (49)
koḷḷavē peruviralōr iṟaikkut tāḻē
    kuṉamutaṉē koḻuntuvarmaṅ koṇṭa pērkku

(Paṭuvarmattiraṭṭu - 7)

'tērntumē naṭṭelum piṭaikuy yattil
    cirappāṉa koḻuntunaram paṭumu ṟintāl'

(Oṭimuṟivu cāri -356)

This verse (in Padu Varma thirattu) follows the verse which describes Thilaka Varma. This varma is located at Brumadya (point between the eye brows) at a distance of a grain of paddy and below it at a finger's distance lies the Kozhundu varma. But according to verse 356, of Odimurivu sari it is situated in the *Anal region*, Kozhundu varma which is one of the Padu Varmas is located near the Thilartha Varma as shown in some of the diagrams. It acquires its name from its delicate location. But there arises a controversy when it is described as one of the 34 varmas present below the neck.

As a result of damage to this Varma temperature drops, giddiness follows. The sense organs (nose, eyes, ears and the mouth) jaws and the bones are greatly affected. Bleeding and watering of mouth and discharge of watery substance from the nose occur. Unless treated within 7½ nazhigais, the condition turns for worse.

The victim has to be lifted with his hands folded and made to sit up. First both the hands are folded and the person is lifted up and made to sit carefully. Sides and chest are to be massaged. The neck is tilted left and right. Fomenting of the affected part will help. The injured part should be camphor-plastered Nasyam can be administered) *Pittaviyalai* is to be given as diet.

46. உறுமிக்காலம்

திட்டமாய் உறுமியதன் காலங் கொண்டால்
தீரவே சொல்லுகிறேன் திடமாய்த் தானே
நட்டமாய்க் கொண்டவுடன் உறுமு மப்பா
நன்றான அகமதிலே முதிர்ந்து காணும்
சட்டமாய் நாழிகைதான் இருபத் தெட்டு
தப்பாமல் இளக்கிடுநீ அடங்கல் பார்த்துச்
சட்டமாய்க் கடிகையதில் இளக்கா விட்டால்
இயல்பாகக் குறிபலவுங் காட்டும் பாரே. (50)

"ஊரான நரம்பிசை திரியங் குலம்உறுமி" (வர்ம சூட்சம் - 13)

என்ற அடிக்குக் கூம்பிலிருந்து ஆறுவிரலளவிற்குக் கீழே உள்ளது உறுமிக்காலமாகும் என்று உரை காண்பர். அதாவது கொப்பூழிலிருந்து நான்குவிரலளவு மேலே அமைவது ஆகும்.

காகம் கமறுவது போல உறுமல் ஏற்படுவது இதன் அறிகுறிகளில் ஒன்று என்பர். எனவே இது இப்பெயர் பெறுகிறது எனலாம். உறுமுதல் என்பதைப் பன்றியின் ஒலிக்கே குறிப்பிடுவது உண்டு. பன்றியின் உறுமல் போன்ற உறுமல் உண்டாகுமாதலின் இப்பெயர் பெறுகிறது. இதனைப் பன்றி வர்மம் என்றே சில நூல்கள் குறிப்பிடுவதையும் அறிய முடிகிறது.

"நீறான அடப்பம்ரெண்டு சுருக்கி நாலு
நேர்ஒன்று பன்றியொன்று மூத்திர மொன்று"

(வர்ம சூட்சம் - 9)

என்னும் அடிகளில் குறிப்பிடப்பெறும் பன்றிவர்மம் என்பது உறுமிக்காலமேயாகும்.

"ஆனதிலே துடைநடுவில் உறுமி வர்மம்" என்று உறுமி வர்மத்தின் இட அமைப்பைச் சுட்டுகிறது வர்மக்கண்ணாடி என்னுஞ்சுவடி. (பா. 35).

இந்த உயிர்நிலையில் அடிபட்டால் உறுமும் ஒலியே முதலில் தோன்றும். உறுமும் செயல், வர்மங்கொண்டவரின் உள்ளுக்குள்ளேயே வளர்ந்து முதிரும். இதற்குரிய காலம் 28 நாழிகையாகும். இக்காலத்திற்குள் இளக்க முயற்சி செய்யாவிட்டால் மேலும் பல அறிகுறிகள் தோன்றிவிடக்கூடும்.

முறையாக எடுத்து உட்காரவைத்தல், உச்சியில் ஒரு அடி அடித்தல், வர்மத்தின் மறுபுறத்தில், முதுகுவரியில் பன்னிரண்டங்குலம் கீழாகக் காலால் அளவோடு தட்டுதல், தொண்டைக் குழியிலிருந்து கீழ்நோக்கித் தடவிவிட்டு உதறிவிடுதல், நட்டைமுறித்தல் ஆகியவற்றை முறைப்படி செய்து குணமாக்குதல் வேண்டும். தண்ணீர் ஓதித் தெளிப்பது பயன்தரும்.

திடம்-உறுதி. உறுமுதல்-உள்ளுக்குள்குமுறுதலும் வெளியில் உறுமல் ஒலி தோன்றுதலும். அகம்-உள்ளே. முதிர்தல்-மிகுதல், முற்றுதல். தொண்டைப் பதப்பு தொண்டைக்குழி.

46. Uṟumik Kālam

tiṭṭamāy uṟumiyataṉ kālaṅ koṇṭāl
    tiravē collukiṟēṉ tiṭamāyt tāṉē
naṭṭamāyk koṇṭavutaṉ uṟumu mappā
    naṉṟāṉa akamatilē mutirntu kāṇum
caṭṭamāy nāḻikaitāṉ irupat teṭṭu
    tappāmal ilakituni ataṅkal pārttuc
caṭṭamāyk kaṭikaiyatu ilakkā viṭṭāl
    iyalpākak kuṟipalavuṅ kāṭṭum pārē (50)

"ūrāṉa ṉarampicai tiriyaṅ kulamuṟumi"

(Varmacūṭcam 13)

6 fingers below the breasts lies the ūrum kalam i.e. 4 fingers above the navel (umbilical) The afflicted person makes sound like a crow. Hence the name. Urumal is the grunting of a swine. Some texts even have named it paṉṉi (pig) Varmam

"nīṟāṉā aṭappamreṇṭu curukki nālu
    nēroṉṟu paṉṟiyoṉṟu mūttiram oṉṟu"

(Varmacūṭcam -9)

"āṉatilē tuṭaiṉaṭuvil uṟumi Varmam"

(Varmakkaṇṇāṭi - Ms. 35)

Injury to this Varma causes the afflicted to whine like a pig. The time limit for revival is 28 nazhigais.

The person is made to sit properly, He is hit gently on the back of the head 12 inches below the Varma. Slight massage is given with the leg. Rubbing of muscle is to be done from throat downwards. Consecrated water sprinkling may help in easing the congestion in the joints.

47. அடைப்பு வர்மம்

பாரப்பா அடைப்புவர்மங் கொண்டு தானால்
பரிவாகச் செய்குணத்தைப் பகரக் கேளு
சிரப்பா உடல்வெளுத்து வியர்த்துக் காணும்
திடமாகக் கைகால்கள் குளிர்ச்சை காணும்
ஆரப்பா கடிகையது இருபத் தஞ்சு
அதிலிளக்க இளகுமது அறிந்து பாரு
நேரப்பா கடருமென்றால் குறிமாறிப் போகும்
நிச்சயமா யிருந்துயிதில் உணர்வாய்ச் செய்யே. (51)

அடைப்பு வர்மம் என்பது பற்றி இந்நூல் இருபத்து நான்காவது பாடலில் விளக்கப்பெற்றுள்ளது. உடல்வெளுத்து, வியர்த்து, குளிர்ந்துபோதல் இதன் குணங்களாகும் என்பதன் மேலும் சில குறிகள் இப்பாடலில் சுட்டப்பெறுகிறது. நாழிகை இருபத்தைந்து என்பது இப்பாடலில் தரப்பெறும் மாறுப்பட்ட கருத்தாகிறது.

47. Aṭaippu Varmam

pārappā aṭaippuvarmaṅ koṇṭu tāṉāl
parivākac ceykuṇattaip pakarak kēḷu
cirappā uṭalveḷuttu viyarttuk kāṇum
tiṭamākak kaikālkaḷ kuḷirccai kāṇum
ārappā kaṭikaiyatu irupat tañcu
atiliḷakka iḷakumatu aṟintu pāru
nērappā kaṭarumeṉṟāl kuṟimāṟip pōkum
niccayamā yiruntuyitil uṇarvāyc ceyyē (51)

Adaippu Varma has been described in the 24th Verse of this text. The victim grows a pallor perspires and temperature drops. The time space allowed is 25 nazhigais for treatment of the condition and is a matter of controversy.

48. அத்திச் சுருக்கி வர்மம் (சிறியது)

நேர்மையா யத்தியென்ற சுருக்கி வர்மம்
நிச்சயமாய்க் கொண்டிடுகில் குணத்தைக் கேளு
கூர்மையாய் உடல்குளிரும் [1] கூனிப் போகும்
குறியான குன்மவாயு கூடி நிற்கும்
சீர்மையாய் நாழிகைதான் [2] பதினா றுக்குள்

பா.வே. 1. குறுகிப்போகும். 2. பதின்மூன்றுக்குள்.

சிறப்பாக அசாத்தியம் என்று சொல்லி
ஓர்மையாய் விலகிநீ அகல நில்லு
உத்தமனே அசாத்தியமென் றுரைக்க லாமே. (52)

உரைத்திடவே விஷமதனால் உள்ளே நின்று
உறுதியுடன் முந்தியே விஷமுண் டாகி
அரைத்திடவே அசாத்திய குணமே காட்டும்
அதற்குநாள் பதினாறில் மரண மாகும்
உரைத்திடவே செய்தவனைச் சண்டி மாடு
உண்மையாய் வந்திறக்கும் புத்தி தோஷம்
வரைத்திடவே உள்மனையில் ஆடி நிற்கும்
மாநிலத்தில் செய்யாதே மாறி நில்லே. (53)

48. Atticcurukki Varmam (small)

nērmaiyā yattiyeṉṟa curukki varmam
niccayamāyk koṇṭiṭukil kuṇattaik kēḷu
kūrmaiyāy uṭalkuḷirum kūṉip pōkum
kuṟiyāṉa kuṉmavāyu kūṭi niṟkum
cīrmaiyāy nāḻikaitāṉ patiṉā ṟukkuḷ
ciṟappāka acāttiyam eṉṟu colli
ōrmaiyāy vilakiṉī akala nillu
uttamaṉē acāttiyameṉ ṟuraikka lāmē (52)

uraittiṭavē viṣamtaṉāl uḷḷē niṉṟu
uṟutiyuṭaṉ muntiyē viṣāamuṉ ṭāki
araittiṭavē acāttiya kuṇamē kāṭṭum
ataṟkunāl patiṉāṟil maraṇa mākum
uraittiṭavē ceytavaṉaic caṇṭi māṭu
uṇmaiyāy vantiṟakkum putti tōṣam
varaittiṭavē uḷmaṉayil āṭi niṟkum
māṉilattil ceyyātē māṟi nillē (53)

49. அத்திச் சுருக்கி (வலியது)

வகையுறவே இரண்டுக்கும் வேர்ஒன் றாகும்
மருவியதில் விழிதொடுத்து மருவி நிற்கும்
கையுறவே இரண்டுக்கும் குணம்ஒன் றாகும்
நாடியே செய்யாதே விலகி நில்லே

துகையறவே தீர்ந்தது ஏழும் பாரு
சூச்சாதி சூச்சமதைத் துகையாய்ப் பார்த்து
பகையாக மாநிலத்தில் பழியா தேநீ
பார்த்தவவ ரோடிணங்கிப் பாதம் போற்றே. (54)

"விதமான இருவிரற்கீழ் சுருக்கிக் காலம்
தாமிந்த ஒருவிரலில் சிறிய அத்தி" (வர்மக்கண்ணாடி - 25)

"சத்தியமாய் விலாமுண்டெல் இருவிரல் கீழ்
சாற்றுகிறேன் வலியஅத்திச் சுருக்கி வர்மம்
சுருக்கியின்கீழ் இருவிரலிற் சிறிய தாகும்" (ஓடிமுறிவு - 29)

என்னும் அடிகள் விலாமுண்டெலும்பின் இருவிரலளவில் வலிய அத்திச்சுருக்கியும், அதையடுத்து இருவிரற்கீழ் சிறிய அத்திச் சுருக்கியுமென்று அமையும் இருவகை அத்திச் சுருக்கி வர்மங்களைச் சுட்டுகின்றன. வலிய அத்தி என்பது பெரிய அத்தியெனவும் கூறப்படும்.

"அடவாக முண்டெல்லு தனிலி ருந்து
அப்பனே மூணுவிரல் நேரே தாழே
அழகான அத்தியென்ற சுருக்கி வர்மம்"

என்பது வர்ம சூடாமணியின் கூற்று (31).

பெரிய அத்திச்சுருக்கி என்பது முண்டெலும்பின் இருவிரல் உட்புறத்தே இடது மார்பில் நான்கு விரலளவு கீழே உள்ளது. சிறிய அத்தியென்பது அதே அளவில் வலது மார்புப்புறத்தில் நிலைபெறுவதாகும்.

அத்தி என்ற சொல் எலும்பைக் குறிப்பது (ஹஸ்தி). இந்த வர்ம நோயானது எலும்பையே கூனிக் குறுகச் செய்துவிடும் ஆதலின் இந்த வர்மம் அத்திச் சுருக்கி எனப்பட்டது.

இந்த வர்ம நோயினால் உடல் சில்லிட்டுக் கூனாகிவிடும். குன்மவாயு மிகுந்து சண்டித்தனமும் புத்தி மயக்கமும் ஏற்படும்.

சிறிய அத்தி வர்ம நோயினை முழுமையாகக் குணப்படுத்தாது விட்டுவிட்டாலும், உடலில் ஏற்பட்ட விஷத்தைக் கவனியாது விட்டுவிட்டாலும் உள்ளுக்குள்ளேயே வளர்ந்து அசாத்திய நிலையை உருவாக்கிவிடும்.

சிறிய, பெரிய அத்திச்சுருக்கிகள் இரண்டுமே ஒரே காரணத்தால் தோன்றுபவை; ஒரே குணம் உடையவை.

இந்த வர்ம நோயால் உடல் அயர்ந்து, குறுகிப்போகும்; வாய் அடைத்துப்போகும்.

"அய்யவே தேகமது குறுகிப் போகும்
அழகான உடலயர்ந்து அலகு பூட்டும்"
"கோமென்ற வர்மம்ரெண்டும் ஒன்று போலே
குணமென்பார் கடிகையது அஞ்ச ரைக்குள்"

என்பது வர்ம சூட்சம் (49-53)

இதனை, 'உடனிளக்க வேணுமல்லால் உயிர்மீ ளாது' என்றாலும், நோயாளியை எடுத்து இருத்தி, அடிபட்ட மறுபுறத்திலும் உச்சியிலும் தட்டி, விலாப்பக்கங்களைத் தடவி, கழுத்தை அசைத்து இளக்கிவிடவும்; பிற மருந்து முறைகளையும் கையாள வேண்டும்.

49. Atticcurukki Varmam (Big)

vakaiyuravē irantukkum vēron rākum
maruviyatil vilitotuttu maruvi nirkum
kaiyaravē irantukkum kunamon rākum
nātiyē ceyyātē vilaki nillē
tukaiyaravē tirntatu ēlum pāru
cūccāti cūccamatait tukaiyāyp pārttu
pakaiyāka mānilattil paliyā tēni
pārttavava rōtinankip pātam porrē (54)

"vitamāna iruvirarkilc curukkik kālam
tāminta oruviralil ciriya atti" (Varmak kannāti - 25)

"cattiyamāy vilāmuntel iruvi ralkil
cārrukirēn valiyaattic curukki varmam
curukkiyinkil iruviralir ciriya tākum" (Oti murivu - 29)

According to the sources referred to above Valiya Attisurukki lies 2 fingers away from the ribs. The Siriya (small) Athisurukki lies 2 fingers below it 'Valiya' is sometimes replaced by 'periya'.

"atavāka muntellu tanili runtu
appanē mūnuviral nērē tālē
alakāna attiyenra curukki varmam" (Varma cūtāmani 31)

The Athisurukki (big) lies 2 fingers to the rib - bone and four figners below the left breast. 'Siriya Athisurukki' (small' is situated at the same point on the right.

'Athi' means the chest bone or 'uruasthi'. Damage to this

varma makes the victims shrink in body. Hence the name "Athichurukki". The victims suffer from dyspepsia and general weakness. In case of small Athichurukki the condition becomes incurably serious if any poisonous material is left in the body.

"ayyavē tēkamatu kuṟukip pōkum
    aḻakāṉa uṭalayarntu alaku pūṭṭum"
"kōmeṉṟa varmamṟentum oṉṟu pōlē
    kuṇameṉpār kaṭikaiyatu añca raikkuḷ"

(Varmacūṭcam 49-53)

Though it is said that remedial treatment is arranged in time, the condition proves fatal. Remedial methods like lifting of the head and massaging of the affected part and patting on the head and massaging of the affected part of the body will help greatly and proper medication may follow.

50. முன்சுருதிக்காலம்

போற்றவேமுன் சுருதிகாலம் கொள்ளு மானால்
    புகலுகிறேன் செய்குணத்தைப் பொருந்தக் கேளு
மாற்றவே வயிற்றுவலி கொழுத்து முண்டாம்
    மகிழவே சரீரமெல்லாம் வீங்கு மப்பா
சாற்றவே சன்னியது கூடிக் கூடித்
    தப்பாமல் [1]உண்டாகும் சார்வாய்த் தானே
சாற்றவே சாகாத மூலி கொண்டு
    தானரைத்து மேலிலிடச் சாத்திய மாமே. (55)

சுருக்கிவர்மங்களுக்குமேலே நான்கு விரளவிலும் விலாவெலும்பை ஒட்டிச் சிறிது உட்புறத்திலுமாக இடம்பெறுவது முன்சுருதி வர்மமாகும். இந்த வர்மத்தானத்தை,

"சுருக்கியதாம் அதன்பக்கச் சார்பில் தானே
    சார்வில்லா விரல்நாலில்முன் சுருதி வர்மம்"

எனச்சுட்டுகிறது வர்மக்கண்ணாடி (26).

பா.வே. 1. சரீரமெல்லாம் வாங்குமப்பா

"சுருக்கியின்கீழ் இருவிரலிற் சிறிய தாகும்
சொல்லுநால் விரலின்முன் சுருதி வர்மம்"

என்கிறது ஒடிமுறிவு (30).

சுருதி என்னும் காதடைப்பு தோன்றுமுன் ஏற்படக்கூடிய மிகுந்த வயிற்றுவலி, உடலெல்லாம் வீங்குதல் ஆகிய குணங்களையுடைய வர்மமாதலின் இது 'முன்சுருதி' எனப்படுகிறது. உடல் வீங்குவதோடு விட்டுவிட்டுச் சன்னியும் உண்டாவதுண்டு.

இளக்குமுறைகளோடு அமிர்தவள்ளி என்னும் மூலிகையை அரைத்துப் பூசக் குணமாகும்.

50. Muṉcuruti Kālam

pōṟṟavēmuṉ curutikālam koḷḷu māṉāl
pukalukiṟēṉ ceykuṇattaip poruntak kēlu
māṟṟavē vayiṟṟuvali koḷuttu muṇṭām
makiḻavē cariramellām viṅku mappā
cāṟṟavē caṉṉiyatu kūṭik kūṭit
tappāmal uṇṭākuñ cārvāyt tāṉē
cāṟṟavē cākāta mūli koṇṭu
tāṉaraittu mēliliṭac cāttiya māmē (55)

Above the two 'Surukti' Varmas along side the ribs four fingers interior lies the 'munsruthi Varma', This is described as

"curukkiyatām ataṉpakkac cārpil tāṉe
cārvillā viralnālilmuṉ curuti varmam"

(Varmak Kāṇṇāṭi - 26)

"curukkiyiṉkiḻ iruviraliṟ ciṟiya tākum
collunāl viraliṉmuṉ curuti varmam"

(Oṭi muṟivu - 30)

As in the case of Suruti Varma, failure of hearing, excessive pain in the abdomen, swelling of limbs affect the patient. Sometimes the condition develops into a delirious one. Treatment includes application of pasted Amitavalli to the body.

51. [1]முன்கழுந்தான் காலம்

சாத்தியமாம் [1]முன்கழுந்தான் காலங் கொண்டால்
சாற்றுகிறேன் குணந்தன்னைச் சாற்றக் கேளு
மாத்திரையாய் முன்கமர்ந்து அகம்வ லிக்கும்
மைந்தனே [2]கைகாலும் முதிர்ந்து போகும்
சூத்திரமாய்ப் பலன்கேடாம் சன்னி கூடும்
[3]சுகமான கடிகைநாள் அஞ்ச தாகும்
பாத்திரமாய் முக்குணத்தை அறிந்து மாற்றும்
தீரவே மனத்திலெண்ணிப் பார்த்துச் செய்யே. (56)

மார்பெலும்பின் கூம்பு முறைக்குமேல், மார்பகத்தில் இடம்பெறுவது முன்கழுந்தான் காலமாகும். இங்குப் பாடலில் 'முன்கமர்ந்து அகம் வலிக்கும்' என்று கூறப்பெறுகிறது. முன் கமர்ந்தான் என்பது பாடவேறுபாடாகக் கிடைக்கிறது. இவ்வர்மாத்தானத்தை,

"வருதியென்ற நடுமார்பில் முன்க மர்ந்தான்" என்று கூறுகிறது ஒடிமுறிவு நூல் (30).

இந்த வர்ம நோய் ஏற்பட்டால் முன்கமர்ந்து அகம் வலிக்கும் (கமர்தல் – அழுதல், வெடிப்பு ... ?). கைகால்கள் மிகவும் சோர்ந்து போகும். சன்னியும் தோன்றும் என்பன நூல்தரும் செய்தி. இவற்றாலும் வர்மப் பெயரின் காரணம் அறிய இயலவில்லை.

51. Munkamuntān Kālam

cāttiyamām munkamuntān kālaṅ koṇṭāl
cāṟṟukiṟēn kuṇantannaic cāṟṟak kēḷu
māttiraiyāy munkamarntu akamva likkum
maintanē kaikālum mutirntu pōkum
cūttiramāyp palaṉkēṭām caṉṉi kūṭum
cukamāṉa kaṭikaināḷ añca tākum
pāttiramāy mukkuṇattai aṟintu māṟṟum
tiravē maṉattileṇṇip pārttuc ceyyē (56)

This lies on the chest, near the top of the chest-bone (shuram) This is also known as "mun kaḻundan".

"varutiyeṉṟa naṭu mārpil muṉka marntān" (Oṭi muṟivu 30)

1. முன்கழுந்தான் காலம்
2. கைகாலுமறுந்து போகும்.
3. சொற்பெரிய கடிகையப்பா அஞ்ச தாகும்.

Symptoms: chronic chest pain, giddiness, delirium - chest tilts forward and there is pain in the chest. There is extreme tiredness of whole body. There may be delirium also. How this varma gets this name is not clear. Perhaps the stooping of body is a clue.

52. [1]பள்ள வர்மம்

செய்யவே [1]பள்ளவர்மங் கொண்டு தானால்
செப்புகிறேன் குணந்தன்னைத் தெளிந்து கேளு
வெய்யவே ஒருபுறமே குன்றிக் கொள்ளும்
மீறியே வாயில்பதை நுரையுந் தள்ளும்
நையவே வாய்மூக்கில் நீரொ லிக்கும்
நலமான நாழிகைதான் பதினா றாகும்
கையவே கடிகையது கடரு மானால்
கருத்துடனே செய்துவிடு காணா தோடும். (57)

"சார்ந்ததொரு பள்ளைதனிற் பள்ள வரமம்"
(வர்மக்கண்ணாடி - 26)

"வாறெலும்பு நிகழ்ந்ததற்றம் பள்ளை வர்மம்"
(ஒடிமுறிவு - 30)

"இருந்துண்ணும் பள்ளத்தில் பள்ள வர்மம்"
(வர்ம பீரங்கி - 14)

என்பன பள்ளவர்மத் தானத்தைச் சுட்டும் பாடலடிகள். இவை பள்ளவர்மம், பள்ளைவர்மம் என்ற இரு சொற்களை ஆளுகின்றன. பருத்த வயிற்றுப்பகுதியின் கீழ்ப்பக்கவாட்டில் உள்ள பள்ளத்தில் இடம்பெறுவது பள்ள வர்மம் எனப்படுகிறது. இப் பள்ளமாகிய பகுதி முண்டெல்லு, அடைப்பு ஆகிய வர்மங்களுக்கு மேலே குழியாகக் காணப்பெறுவதாகும். முண்டெலும்புக்குழியாகிய பள்ளத்தில் இடம் பெறும் இவ்வர்மம் பள்ள வர்மம் எனப்படுகிறது.

இதனை,

"கேளப்பா அடைப்புவர்மந் தனிலி ருந்து
கெணிதமுடன் இருமூன்று விரலுக் குள்ளே
கீர்த்திபெற்ற பள்ளைவர்மம் அதுக்குப் பேரு"

என்கிறது வர்ம சூடாமணி (34).

பா.வே. 1. பள்ளைவர்மம்.

இந்த வர்ம நோய் ஏற்பட்டால் முதலில் வாயிலும் மூக்கிலும் நீர்வடிய, வாயில் நுரைதள்ளும். தொடர்ந்து உடலில் ஒருபுறமாகக் கூன் ஏற்பட்டுவிடும். பதினாறு நாழிகைக்குள் இதற்கு மருந்து முதலியன கொடுக்காமல் எளிய இளக்கு முறைகளை மட்டுமே செய்ய வேண்டும். பதினாறு நாழிகை கடந்த பிறகு முழுமையான மருத்துவ முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

52. Palla Varmam

ceyyavē pallavarmaṅ kontu tānāl
ceppukirēn kunantannait telintu kelu
veyyavē orupuramē kunrik kollum
miriyē vāyilpatai nuraiyun tollum
naiyavē vāymūkkil niro likkum
nalamāna nalikaitān patinā rākum
kaiyavē katikaiyatu kataru mānāl
karuttutānē ceytuvitu kānā tōtum (57)

"cārntatoru pallaitanir palla varmam"

(Varmak kannāti 26)

"varelumpu nikalntatarram pallai varmam"

(Otimurivu 30)

"iruntunnum pallattil palla varmam"

(Varma piranki - 14)

This Varmam has four names. Pallavarma and pallaivarmam are two of them. Down the belly in the slope of abdomen lies this varma. This region is above the Varmas like mendella Adaippu. As the Varma lies in the depression it is named palla Varmam. The Varma chrislamani locates it medially.

"kēlappa ataippuvarman tanili runtu
kenitamutan irumūnru viraluk kullē
kirtiperra pallai varmam atukkup pēru"

(Varma cūtamani 34)

Damage to this Varmam causes watering of mouth and nostrils. The victim grows a hunch on one side of the back. Remedial treatment must begin within 16 nazhigais which may be followed by medication (internal)

53. முன்னை வர்மம்

ஓடுமடா முன்னையெனும் வர்மங் கொண்டால்
உத்தமனே செய்குணத்தை உரைக்கக் கேளு
நாடுமடா பரிசமதை முறித்து வெட்டும்
நலமான வயிறுபொருமிப் பேதி யுண்டாம்
கூடுவது நாழிகைதான் இருபத் திரண்டு
குறியான கடிகைநாள் கழியு மானால்
நாடுவது அதன்பிரிவு நன்றாய்ப் பார்த்து
நலமாகச் செய்துவிடு நலமுண் டாமே. (58)

பழமை என்னும் பொருளைத்தருவது முன்னை என்னும் சொல். எப்போதோ பட்ட அடியின் காரணமாகச் சிறிதுநாள் கடந்து நோய் ஏற்படுவது முன்னை வர்மம் என்றிருக்கலாம். பிறநூல் எதுவும் இவ் வர்மம் பற்றிக் குறிப்பிடவில்லை. எனவே வர்மத்தானத்தையும் குறிப்பிட இயலவில்லை.

இந்த வர்மநோய் தோன்றினால் வயிறுஊதி வலியும் பேதியும் ஏற்படக் கூடும். வர்மத்தானத்தை அறிந்து தொட்டவுடனே அலறலும் உடல் நடுங்கு வெட்டுதலும் ஏறுபடும். நோய் ஏற்பட்டு இருபத்திரண்டு நாழிகைகழித்து முறையான மருத்துவம் செய்தால் குணம் ஏற்படும்.

முன்னை - பழமை, முதுமை, முன்னோர். பரிசம்- தொடுதல். வெட்டுதல் – திடீர்நடுக்கம் ஏற்படுதல். பொறுமுதல் – ஊதிப்போதல், பருத்தல்.

53. Muṉṉai Varmam

ōṭumaṭā muṉṉaiyeṉum varmaṅ koṇṭāl
uttamaṉē ceykuṇattai uraikkak kēḷu
nāṭumaṭā paricamatai muṟittu veṭṭum
nalamāṉa vayiṟuporumip pēti yuṇṭām
kūṭuvatu nāḻikaitāṉ irupat tiraṇṭu
kuṟiyāṉa kaṭikaināḷ kaḻiyu māṉāl
nāṭuvatu ataṉpirivu naṉṟāyp pārttu
nalamākac ceytuviṭu nalamuṇ ṭāmē (58)

The word 'Munnai' means ancient or old. The person afflicted develops symptoms of his condition long after the injury caused. No other text has mentioned this Varma and so its location is not known.

Injury to this Varma causes enlargement of the stomach, pain in the bowels and diarrhoea follow. A mere touch makes the person scream. Treatment must be given within 22 nazhigais.

54. அன்ன காலம்

நலமான அன்னகாலங் கொண்டு தானால்
நாடிவரும் குணந்தன்னை நவிலக் கேளு
குலமான பனிக்குளிரும் அதிக முண்டாம்
கூடியன்னஞ் செல்லாது குறுகும் பாரு
பிலமான [1]நீர்பிடிக்கும் வயிற்றில் நோவாம்
பிசகாமல் நாழிகைதான் [2]மூணரை யாகும்
பிலமான நாழிகைதான் கடரு மானால்
மேதினியில் செய்துவிடு மேன்மை தானே. (59)

தொப்புள் குழிக்குமேல் நான்கு விரலளவிலும் உறுமி வர்மத்தின் கீழ் இரண்டு விரலளவிலும் நிலைபெறுவது 'அன்னகாலம்' எனப்படுகிறது.

"ஆனதொரு தொப்புள்குழி அன்ன காலம்"
(வர்மக்கண்ணாடி - 28)

"விதமான தொப்புளின்மேல் அன்ன காலம்" (ஒடிமுறிவு - 30)

என்பன அன்னகாலத் தானத்தை உணர்த்துவன.

இந்த வர்மநோய் ஏற்பட்டால் உணவு கொள்ளமுடியாத நிலையை உடனடியாக ஏற்படுத்திவிடுமாதலின் இது அன்னகாலம் எனப்பட்டது.

உணவு செல்லாத நிலை ஏற்படுவதோடு நாளுக்குநாள் உணவு குறையும். மிகுதியான நீர்பிடித்தல், வயிற்றுவலி, குளிர்மிகுதியாதல் போன்ற அறிகுறிகளும் இந்த வர்ம நோயினால் உண்டாகும். மூன்றரை நாழிகைக்குப் பிறகு உரிய மருத்துவ முறைகளைக் கையாள்வது முறையாகும். குணமடையும்.

அன்னம் – சோறு, உணவு. குறுகும் - குறையும்.

54. Aṉṉa Kālam

nalamāṉa aṉṉakālaṅ Koṇṭu tāṉāl
nāṭivaruṅ kuṇantaṉṉai navilak kēḷu
kulamāṉa paṉikuḷirum atika muṇṭām
kūṭiyaṉṉañ cellātu kuṟukum pāru
pilamāṉa nīrpiṭikkum vayiṟṟil nōvām
picakāmal nāḻikaitāṉ mūṇarai yākum
pilamāṉa naḻikaitāṉ kaṭaru māṉāl
mētiṉiyil ceytuviṭu mēṉmai tāṉē (59)

1. நீர்பிடிக்கும் என்பதற்கு மூத்திரம் போகாது கட்டும் என்பதும் உண்டு. பா.வே. 2. பதினாறாகும்.

This varma is located 4 fingers above the navel and 2 fingers below the urumik kalam.

"āṉatoru toppuḷkuḻi aṉṉa kālam" (Varmak Kaṇṇāṭi 28)

"vitamāna toppuḷiṉmēl aṉṉa kālam" (Oṭimuṟivu 30)

Injury to this varma renders the person incapable of eating his food. Hence the name. Stomach pain, fever are other ailments that follow. He must be treated with in 3½ nazhigais.

55. துடிவர்மம்

தானென்ற துடிவர்மங் கொண்டு தானால்
தப்பாமல் சொல்லுகிறேன் சார்ந்து பாரு
மானென்ற [1]உடல்மின்னிச் சுமக்கு மப்பா
மாறியே கண்சிவக்கும் நீரொ லிக்கும்
தேனென்ற நாழிகைதான் இருபத் தேழு
செப்புகிறேன் கடிகையது கடரு மானால்
நாளொன்றுஞ் சொல்லாது அருகில் சென்று
நாடியே செய்துவிடு நலமுண் டாமே. (60)

மார்பில் முலைக்கண்ணில் இடம்பெறுவது துடிவர்மமாகும். உடல் மின்னித் துடிக்குந் தன்மையுடையது ஆதலின் இது துடிவர்மம் எனப்படுகிறது.

"மகிழுவே முலைமார்பில் துடிவர் மந்தான்"

என இதன் இடத்தைச் சுட்டுகிறது ஒடிமுறிவு (30).

"முறையான முலைக்கண்ணில் தூசி வர்மம்
முடியிரு விரல்சுற்றி வர்மம் எட்டாம்
முறையான இதுகளின்பேர் தூசிக மென்றும்
முயன்றதுடி வர்மமென்றும் இன்னு மாமே".

என்னுமடிகளில் மேலும் சில விளக்கங்களைத் தருகிறது வர்மக்கண்ணாடி என்னும் நூல் (23). இந்நூல் முலைக்கண்ணில் இடம் பெறுவதைத் தூசி வர்மம் என்றே சுட்டுகிறது. தூசி வர்மத்தின் அரைவிரற்கீழ் இடம் பெறுவது துடி வர்மம் என்றும், இதேபோலச் சுற்றிலும் மேலும் ஏழு வர்மங்கள் இடம் பெறுகின்றன என்றும் கூறுகிறது.

பா.வே. 1. உடல்விம்மிச் சுமைக்கும் பாரு.

துடிவர்மத்தானத்தில் அடிபட்டால் உடல் மினுமினுப்பாகிக் கனத்துத் தோன்றும். கண்கள் சிவந்து நீரை வடிக்கும். இருபத்தேழு நாழிகைக்குப் பிறகு இந்நோய்க்கு மருத்துவம் மேற்கொள்ளுவது பயன்தருவதாகும்.

துடி - துடித்தல். சுமக்கும் - கனமாகத்தோன்றும்.

55. Tuṭi Varmam

tāṉeṉṟa tuṭivarmaṅ koṇṭu tāṉāl
tappāmal collukiṟēṉ cārntu pāru
māṉeṉṟa uṭalmiṉṉic cumakku mappā
māṟiyē kaṇcivakkum nīro likkum
tēṉeṉṟa nāḻikaitāṉ irupat tēḻu
ceppukiṟēṉ kaṭikaiyatu kaṭaru māṉāl
nāḻonṟuñ collātu arukil ceṉṟu
nāṭiyē ceytuviṭu nalamuṉ ṭāmē (60)

This varma is located on the nipple. Injury to this varma causes excruciating pain. Hence the varma.

"makiḻavē mulaimārpil tuṭivar mantāṉ" (Oṭimuṟivu 30)

"muṟaiyāṉa mulaikkaṇṇil tūci varmam
mūṭiyiru viralcuṟṟi varmam eṭṭām
muṟaiyāṉa itukaḻinpēr tūcika meṉṟum
muyaṉṟatuṭi varmameṉṟum iṉṉu māmē"

(Varmak kaṇṇāṭi 23)

This text says that the varma on the tip of the breast is 'Thiisi Varma'. ½ finger below Thoosi lies the 'Thudi' varma. Similarly around the nipple there are seven more Varmas. Owing to Injury to this varma the skin becomes more shiny and the body bulky. The eyes redden and start watering. Medications should start only after 27 nazhigais.

56. [1] கொம்பகுற்றிக் காலம்

உண்டான [1]கொம்பகுற்றிக் காலங் கொண்டால்
உத்தமனே செய்குணத்தை உரைக்கக் கேளு
விண்டான பனிகுளிரும் அதிக முண்டாம்
[2]பீறியே உள்விறைத்துச் சிமைக்கு மப்பா
[3]பண்டாகச் சறக்குமதி சாரத் தாலே
பாலகனே விசற்புண்டாம் பனிதான் விம்மும்
குன்றான கடிகைபதி னேழு தாகும்
குறியாகக் கடந்ததென்றால் குறித்துப் பாரே. (61)

முலைக்கண்ணில் இடம்பெறும் துடிவர்மத்திலிருந்து இருவிரல் அளவு மேற்புறம் அமைவது கொம்பு குற்றி வர்மமாகும். இதனை,

"மகிழவே முலைமார்பில் துடிவர் மந்தான்
தானென்ற இருவிரல்மேல் கொம்பு குற்றி" என்ற அடிகளில்

கூறுகிறது ஒடிமுறிவு (30-31).

இந்த வர்மத்தானத்திலடிபட்டவுடன் உடலானது மரத்துப்போய், உணர்ச்சியற்று, விறைத்து, மரக்கொம்பு போல நின்றுவிடுமாதலின் 'கொம்புகுற்றி', எனப் பெயர் பெற்றது.

உடல் விறைத்தலோடு சுமையாகவும் கனத்தும் தோன்றும். மிகுதியான குளிர் உண்டாகி, அதனால் சுரத்தோடு கூடிய அதிசார பேதியும் ஏற்படும். மிகுதியான மலங்கழிதலாலே உடல் பறப்பது போன்ற நிலை ஏற்படும். பதினேழு நாழிகைக்குள் இளக்கிப் பின் மருத்துவம் செய்வது பயன்தருவதாகும்.

கொம்பு - மரக்கொம்பு. சிமைத்தல் - சுமையாதல், கனமாகத் தோன்றுதல். சறக்கும் - சுரக்கும் என்றிருத்தல் வேண்டும். சுரக்கும்-மிகுதியாகும். விசற்பு-(விசர்ப்பு) பறத்தல்.

56. Kompa kuṟṟik Kālam (kompu kuttikkālam)

uṇṭāṉa kompakuṟṟik kālaṅ koṇṭāl
uttamaṉē ceykuṇattai uraikkak kēḷu
viṇṭāṉa paṉikuḷirum atika muṇṭām
piṟiyē uḷviṟaittuc cimaikku mappā
paṇṭākac caṟakkumati cārat tālē
pālakaṉē vicaṟpuṇṭām paṉitāṉ vimmum

பா.வே. 1. கொம்புகுத்திக்காலம். 2. மீறியே உள்விரைத்துச் சுமைக்குமப்பா.
3. பிண்டான சரத்திலுமே சாத்தியத்தில், பாலகனே வேர்வையொடு சுரமுங் காணும்.

kunrāna katikaipati nēla tākum
kuriyākak katantatenrāl kurittup pārē (61)

This lies 2 fingers above the 'Thudi' Varma situated on the nipple.

"makilavē mulaimārpil tutivar mantān
tānenra iruviralmēl kompu kurri" (Oti murivu 30-31)

Injury to this varma causes stiffness of the body and it becomes numb and insensitive like a dry stick. Hence the name.

The body also becomes heavy and cold. There is also fever accompanied by diarrhoea. Excessive motion weakens the body. Remedial treatment must be given within 17 nazhigais. Medication (internal) may follow.

57. கூம்பு வர்மத்தின் குணம்

பாரப்பா கூம்புவர்மங் கொண்டு தானால்
பரிவான செய்குணத்தைப் பகரக் கேளு
பகரவாய் மூக்கில்பதை நீரொ லிக்கும்
நுவலுகிறேன் ரத்தமுண்டாம் வயிறு விம்மும்
பகரவே குறுவேர்வை கூடி நிற்கும்
குறியான நாழிகைதான் அறுமூன் றுக்குள்
நுகரவே செய்யாதே அசாத்திய மாகும்
நுகராமல் விலகிநீ அகல நில்லே. (62)

மார்பெலும்புத் தண்டின் நுனியிலமையும் கூம்பெலும்பினிடை இடம் பெறுவது கூம்புவர்மம் எனப் பெறும். இந்த வர்மம் நிலைபெறும் இடம் கூம்பு எலும்பு ஆதலின் இடத்தின் பெயரால் பெயர்பெறுகிறது.

"முறைபோலே விரல்சுற்றிக் காலம் எட்டாம்
துன்னுமிந்த முடிப்பதன்கீழ் கூம்பு வர்மம்"

எனக் கூம்புவர்மத்தின் இடத்தைச்சுட்டுகிறது வர்மக்கண்ணாடி (24). முலைக் கண்ணில் இடம்பெறும் தூசிவர்மத்தைச் சுற்றியுள்ளவை எட்டு. அவை தூசிகம், துடி, படி, கழலை, திவளை, மூளை, வில்லு, அனுமார் என்பன. இவற்றின் முடிவில் அமையும் கூம்பு ஆகிய முடிப்பின் கீழ் இடம்பெறுவது கூம்பு வர்மம் என்ற விளக்கத்தைப் பெறவைக்கிறது வர்மக்கண்ணாடி. இதனை,

"தப்பாது கூம்பினகம் கூம்பு வர்மம்" என்கிறது ஒடிமுறிவு (31).

"மாறுமோலை கண்ணருகில் இறைகீழ் அனுமார்
முட்டியில் கூம்பு வர்மந் தானே"

என்பது வர்ம பீரங்கி (13).

இந்த வர்ம நோய் ஏற்பட்டால் வாயிலும் மூக்கிலும் நீர்வடியும்; இரத்தமும் கொட்டும்; வயிறு விம்மி ஊதிப்போகும்; குறுவேர்வை தோன்றும். இவ் வர்மத்தின் அசாத்திய காலமாகிய பதினெட்டு நாழிகைவரை மருத்துவம் செய்தல்கூடாது. எளிய இளக்குமுறைகளைக் கையாண்டு நாழிகை கழிந்து முறையான மருத்துவம் மேற்கொள்ள வேண்டும்.

கூம்பு - மார்புஎலும்புத்தண்டின் நுனிப்பகுதியின் பெயர். குறுவேர்வை சிறுவியர்வை. அறுமூன்று (6 × 3 = 18) ஆறுமூன்று. பதினெட்டு.

57. Kūmpu Varmam

pārappā kūmpuvarmaṅ koṇṭu tāṉāl
parivāṉa ceykuṇattaip pakarak kēḷu
pakaravāy mūkkilpaṭai nīro likkum
nuvalukiṟāṉ rattamuṇṭām vayiṟu vimmum
pakaravē kuṟuvērvai kūṭi niṟkum
kuṟiyāṉa nāḻikaitāṉ aṟumūṉ ṟukkuḷ
nukaravē ceyyātē acāttiya mākum
nukarāmal vilakiṉi akala nillē (62)

On the chest-bone two fingers above the chest is this varmam.

"muṟaipōlē viralcuṟṟik kālam eṭṭām
tuṉṉuminta muṭippataṉkiḻ kūmpu varmam"

(Varmak kaṇṇāṭi 24)

Around the Thoosi Varma on the nipple are the eight varmas viz Thoosikal, Thudi, Padi, Kazhalai, Thiralai, Moolai, Villu and Anumar, At the end of these lies Koombu Varma

"tappātu kūmpiṉakam kūmpu varmam" (Oṭimuṟivu 31)

"māṟumōlai kaṇṇaṟukil iṟaikiḻ aṉumār
muṭṭiyil kūmpu varman tāṉē" (Varmapiraṅki 13)

Discharge of watery substance from mouth and eyes, bleeding and swelling of stomach are the symptoms. No treatment should be

attempted upto the end of the first 18 nazhigais. Proper medication should start only thereafter.

58. [1]மூர்த்தி காலத்தின் குணம்

நில்லேநீ [1]மூர்த்திகாலங் கொண்டு தானால்
நிச்சயமாய் மூத்திரம்போம் துள்ளி வீழும்
வில்லேநீ ஓர்வேளை தொடர்ந்து சாயும்
மீறியே கொண்டுதானால் குணத்தைக் கேளு
சில்லேநீ பகுப்புடனே சோரை யுண்டாம்
செப்புகிறேன் [2]நாழிகையோ ரிருபத் தெட்டு
அல்லவே அடவுமுறை செய்ய வேண்டாம்
அப்புறமே செய்துவிடு அருந்து வானே. (63)

மூத்திர காலம் என்பதே இங்குத் தவறுதலாக மூர்த்திகாலம் என்று கொடுக்கப் பெற்றுள்ளது. சுவடியில் உள்ள பெயரை மாற்ற முடியாத நிலையில் பாடவேறுபாடாக மட்டும் சுட்டப்பெற்று உரை எழுதப்பெறுகிறது. இந்த வர்மத்தின் குறிப்பிடத்தக்க முதல் அறிகுறியாவது தொடர்ந்தும், அவ்வப்போது சொட்டுச் சொட்டாகவும் சிறுநீர் போதலேயாகும். அதனாலேயே மூத்திரகாலம் என்று பெயர் பெறுகிறது.

உறுமிவர்மத்தின் நேர் கீழேயும் கொப்பூழின் (தொப்புள்) கீழ் நான்குவிரல் தூரத்திலும் இடம்பெறுவது மூத்திர காலம் ஆகும்.

"ஓமிந்த தொப்புளுக்குள் விரல்நா லுக்குள்
உற்றதொரு மூத்திரத்தின் கால மாகும்"

(வர்மக்கண்ணாடி - 29)

"ஏனென்ற தொப்புளின்கீழ் மூத்திர வர்மம்" (ஒடிமுறிவு - 31)

என்பன மூத்திரகாலத்தின் இடத்தைச் சுட்டுவனவாகும்.

"உதறவே தொப்புள்நால் விரலின் கீழே
உத்தமனே மூத்திர கால மாகும்" (வர்மக்கண்ணாடி - 21)

"கேளப்பா உறுமியென்ற வர்மத்தி லிருந்து
தானேநால் விரலுக்கு நேரே தாழே
கீர்த்திபெற மூத்திரத்தின் கால மப்பா" (வர்மசூடாமணி - 25)

என்பனவும் இவ் வர்மத்தானத்தைப் பற்றிய விளக்கங்களைத்தருகின்றன.

பா.வே. 1. மூத்திர காலம். (இதுவே சரி) 2. கடிகைபதி னெட்டே முக்கால்

இந்த வர்மத்தில் அடிபட்டால் சிறுநீர் விட்டுவிட்டுத் துள்ளித்துள்ளியும், சொட்டுச் சொட்டாகவும், சிலசமயம் தொடர்ந்தும் போகும். உடல் சில்லிட்டுச் சோர்வடைதலும் உண்டு.

"வட்டமாம் நினைவுகெட்டு மயங்கிப் போகும்
வரிசையாய் முறட்டையிடும் சயனித் தாப்போல்"
(வர்ம சூட்சம் - 58)

"சிதறவே கண்விழித்துப் பார்க்கும் பாரு
சிறப்பாக வேவிளித்தால் செவிகே ளாது"
(வர்ம கண்டி - 21)

என்பனவும் மூத்திர காலத்தின் அறிகுறிகளாகக் கூறப்படுகின்றன.

தூக்கிக் குத்தி இருக்கச் செய்து நெஞ்சுமுதல் பீசம்வரை தடவிவிட்டு அரிசியுடன் இஞ்சி சேர்த்துக் கஞ்சியூட்ட இளகும்.

இருபத்தெட்டு நாழிகைவரை மருந்து முறைகளைக் கையாள வேண்டாம்; அந்த நாழிகை கழிந்த பிறகு மருத்துவம் செய்யக் குணமாகும் என்பது நூல் கருத்து.

துள்ளிவீழும் - சொட்டுச் சொட்டாய்ப் போகும், விட்டுவிட்டுப் போதல். சோரை - சோர்வு, அசதி. அடவுமுறை - அடங்கல் முறை, மாற்றுவர்மம் கண்டு இளக்கும்முறை.

58. Mūrtti Kālam

nillēṉi mūrttikālaṅ koṇṭu tāṉāl
  niccayamāy mūṭṭirampōm tuḷḷi viḻum
villēṉi ōrvēlai toṭarntu cāyam
  miṟiyē koṇṭutāṉāl kuṇattaik kēḷu
cillēṉi pakupputaṉē cōrai yuṇṭām
  ceppukiṟēṉ nāḻikaiyō rirupat teṭṭu
allavē aṭavumuṟai ceyya vēṇṭām
  appuṟamē ceytuviṭu aruntu vāṉē (63)

It is a mistake to call Mutira Kalam as the Murti kalam. As the name in the manuscript remains *uncorrected* the real name is taken for another reading. The significant symptom of this varma disease is that there is frequent urination in small quantities (in drops) Hence the name.

This lies just below the Urumi Varma four fingers below the

ōminta tōppulukkul viralnā lukkul
urratoru muttirattin kāla mākum

(Varmak Kannati 29)

"ēnenra toppulinkil mūttira varmam" (Otimurivu 31)

"utaravē toppulnāl viralin kilē
uttamanē mūttirak'kāla mākum" (Varma kanti 21)

"kēlappā urumiyenra varmatti liruntu
tānēnāl viralukku nērē tālē
kirttipera mūttirattin kāla mappā" (Varmacūtāmani 25)

Injury to this varma causes frequent (in drops) or continuous micturition. The body becomes cold and weak.

"vattamām ninaivukettu mayankip pōkum
varicaiyāy murattaiyitum cayanittāppōl"

(Varma cūtcam - 58)

"citaravē kanvilittup pārkkum pāru
cirappāka vēvilittāl cevikē lātu" (Varmakanti 21)

The person is lifted and made to sit and massaged. He takes rice kanji with ginger for food. Treatment should not be given until 28 nazhigais. He becomes amenable to treatment only after this period of time.

59. வாயு காலம்

அருந்தவே சொல்லுகிறேன் வாயு காலம்
அப்பனே கொண்டிடுகில் குணத்தைக் கேளு
திருந்தவே குளிருபனி வாயுக் குன்மம்
[1]சியலான அழல்வேர்வை சீற லுண்டாம்
பொருந்தவே பறந்தாற்போல் போகு மப்பா
புகழான அடங்கல்பார்த் தறிந்து செய்யே
வருந்தவே தீருமடா மனம்உ ரைத்து
மைந்தனே செய்துவிடு சாத்திய மாமே. (64)

பா.வே. 1. சியலான தழல்வேர்வை விறய லுண்டாம்.

"இடுமே சங்கின் மையத்தில் இரண்டு நெல்லின் மேலாக
படுமே குத்து அடிகொண்டால்...... " (படுவர்மம் - 24)

"திருமென்றார் இதன்கீழ்க்குழியில் மையம் பற்றித்
திறமான வாயுவர்மங் கொண்டு தானால்" (மேல் நூல் - 29)

என்னும் அடிகள் சங்கின் மையத்திற்குக் கீழே குழியில் இடம் பெறுவது வாயு வர்மமாகும் எனச் சுட்டுகின்றன. ஆனால்.

"எட்டுமுனை யெல்லதிலும் வாயு காலம்" என்னும் ஒடிமுறிவு (31)ச் செய்தி எட்டெல்லு எனப்பெறும் எலும்புக் கூட்டின் இறுதிப் பகுதியாகிய அண்டகோசம் எனப்பெறும் பீசப்பைக்கு மேலே இடம் பெறுவது வாயுக்காலம் எனச் சுட்டுகிறது. வாயுமிகுதியினால் குன்ம நோயாகிய தீராத வயிற்று வலியை உண்டாக்குமாதலின் இது வாயுகாலம் எனப்பெயர் பெறுகிறது.

இது குறிர்மிகுந்து வாயுக்குன்ம நோயை உண்டாக்குவதோடு, மிகுதியான வெப்பத்தையும் வேர்வையையும் உண்டாக்கிச் சீறும் குணத்தை உருவாக்கிவிடும். பறப்பது போன்ற உணர்வையூட்டும்.

" ...... அப்பனே மயக்கமுடன் தும்மல் சன்னி
...... கண்சிவந்து நாக்கிழுத்து முதிர்ந்து கொள்ளும்... "
என்பனவும்

இவ்வர்மத்தின் பண்புகளாகும் என்று கூறுகிறது படுவர்மத்திரட்டு (29).

நெஞ்சில் ஒருதட்டு தட்டி, மூக்கு, செவிகளைத் தடவலித்து விடுதல், இடுப்புப் பாகங்களைத் தடவிவிடுதல் ஆகிய பொது இளக்குமுறைகளை முதலில் செய்து இந்த வர்ம நோயை இளக்குதல் வேண்டும். தொடர்ந்து வசவெண்ணெயைச் சூடுபறக்கத் தேய்த்து வெந்நீரில் முழுகச் செய்தல் வேண்டும். உள்ளுக்கு மருந்து, படலாதி நெய் ஆகியவற்றை அளவோடு கொடுத்துவர வேண்டும். எவ்வாறாயினும் மூன்று மாதம் கழித்துச் சுரநோய் வரக்கூடும். அப்போது குக்கிடக்கியாழம் கொடுக்கக் குணமாகும்.

வாயு - காற்று, மூச்சு, வாதம். அழல் – தீ, வெப்பம்.

59. Vāyu Kālam

aruntavē collukiṟēṉ vāyu kālam
appaṉē koṇṭiṭukil kuṇattaik kēḷu
tiruntavē kuḷirupaṇi vāyuk kuṉmam
ciyalāṉa aḻalvērvai ciṟa luṇṭām
poruntavē paṟantārpōl pōku mappā

pukaḻāṉa ataṅkalpārt taṟintu ceyyē
varuntavē tirumaṭā maṉamu raittu
maintaṉē ceytuviṭu cāttiya māmē (64)

"iṭumē caṅkiṉ maiyattil iranṭu nelliṉ mēlāka
paṭumē kuttu aṭikoṇṭāl" (Paṭuvarmam 24)

"tirumeṉṟār itaṉkiḻ kuḻiyil
maiyam paṟṟit
tiṟamāṉa vāyuvarmaṅ koṇṭu tāṉāl" (paṭuvarmam 29)

"eṭṭu muṉai yellatilum vāyu kālam" (Oṭimuṟivu -31)

It is said to lie on the notch below the mid point of the 'songu' - But Odimurivu (31) says that it lies at the base of the chest cage. The symptoms of this varma are 'gulma' (a type of abdominal disease where in there is abdominal lump anu pain) and stomach pain. Hence the name. It also causes increased heat in the body due to which there is sweating and tension (anger). The person has a floating sensation.

"appaṉē mayakkamutaṉ tummal caṉṉi
kaṇcivantu nākkiḻuttu mutirntu koḷḷum"

(Paṭuvarmat tiraṭṭu 29)

Padu Varma thirattu (29) says there will be giddiness sneezing, delirium, redness of eyes and the tongue gets paralysed.

A pat is given on the chest. The nose and ears are rubbed and massaged. The hip region is also massaged. These general remedial methods are to be adopted. He is made to take a hot vasanai oil bath. Medicine and other preparations may be administrated. The victim may suffer a (urination) bout of fever at the end of the third month he has to be given chicken soup and put on his foot.

60. [1]நடுச்சுழிக் காலம்

சத்தியமாய் [1]நடுச்சுழிக்குக் காலங் கொண்டால்
சார்ந்துவருங் குணந்தன்னைச் சார்ந்து கேளு
புத்தியாய்க் கொண்டவுடன் வயிறும் ஊதும்
பொருந்தியே வாயுவிம்மி உள்ளு ருக்கும்

பா.வே. 1. நடுச்சுருக்கிக்காலம்

வெற்றியாய் வெகுநாளாய்க் குறையில் லாமல்
　　வேகித்து வாயுவிம்மிக் கைகால் கோச்சும்
சித்தியாம் கபாலநீர் அழிவு முண்டாம்
　　செப்புகிறேன் பலநோய்க்கும் திடம்கண் டாயே. (65)

எட்டுமுனை எலும்புக்கூட்டின் இறுதியில் இடம்பெறும் வாயுக் காலத்திற்கு மேலே சுமார் நான்கு விரலளவில் இடம்பெறுவது நடுச்சுழிக் காலம் எனப்பெறுகிறது. இவ்விடத்தை,

"பானென்ற பதினாறு எல்லி லுந்தான்
　　பாடுகிறேன் நடுச்சுருக்கி பகர்ந்து பாரு"

என்று சுட்டிக்காட்டுகிறது ஒடிமுறிவு நூல் (31). இவ்வர்மம் எட்டெலும்பின் நுனியில் இடம்பெறும் வாயுகாலத்திற்கும் கொப்பூழின் கீழ் இடம் பெறும் மூத்திர காலத்திற்கும் நடுவில் இடம்பெறுவதாலும், பதினாறு எலும்புகளின் கூட்டத்தினிடையே இடம்பெறுவதாலும் அமையும் இட அடிப்படையில் நடுச்சுழிக்காலம் எனப் பெயர் பெறுகிறது. இதனை நடுச்சுருக்கி என்று ஒடிமுறிவு கூறுகிறது.

இந்த வர்மத்தானத்தில் அடிபட்டவுடனே வயிறு ஊதிப்போகும். இந்த நோயானது வாயு மிகுந்து வலியை உண்டாக்கி உடலை உருக்கிவிடும்; வாயு மிகுதியாகி மேகம்படர்வதுபோல விரைந்து கை, கால்களைச் சோர்வடையச் செய்துவிடும்; தலை மண்டையிலிருந்து நீர்வடியச்செய்யும். இவ்வாறு தலை முதல் கால்வரையிலான பல உறுப்புகளையும் வருத்தும் நோய்களுக்குக் காரணமாகி விடுவதாலும் (நடுநாயகமாதல்) இது நடுச்சுழிக்காலம் எனப்படுகிறது.

வர்மக்கண்ணாடி என்னும் நூல் இந்த வர்மத்தானத்தைக் கூறும்போது,

'கூறெட்டு எல்லினிடைச் சுருக்கி வர்மம்' எனச்சுட்டுகிறது. மேலும் பள்ளைவர்மத்தை அடுத்ததாகவும் வரிசைப்படுகிறது.

நடுச்சுழி – இடைப்பகுதி. விம்முதல் – பருத்தல் (மிகுதியாதல்). - உள் உருக்கும் உடலை உருக்கிவிடும், மெலியச் செய்யும். கபாலம் - தலையோடு. அழிவு-அழிதல், வெளியாகி வீணாதல்.

60. Naṭucculik Kālam

cattiyamāy naṭucculikkuk kālaṅ konṭāl
　　cārntuvaruṅ kuṇantaṉṉaic carntu kēḷu
puttiyāyk konṭavutaṉ vayirum ūtum
　　poruntiyē vāyuvimmi uḷḷu rukkum
verriyāy vekunāḷāyk kuraivil lāmal
　　vēkittu vāyuvimmik kaikāl kōccum

cittiyām kapālanir alivu muntām
ceppukirēṉ palanōykkum titamkaṉ tāyē (65)

Approximately four fingers above the Vayu varma lies the Nadusuzhi Kalam.

"pāṉeṉra patiṉāru elli luntāṉ
pāṭukirēṉ natuccurukkip pakarntu pāru"

(Otimurivu nūl 31)

This gives the location of this varmam between the vayu kalam and moothira kalam and among the 16 bones. Hence the name nadusuzhi kalam. This text (Odimurivu) calles it Nadu surukki.

Injury to this varma immediately causes distention of the abdomen; vayu condition increases; pain of body is accompanied by decay of flesh. The victim becomes weak and weaker in body just like the spread of the stormy clouds in the sky. Watery discharge from the skull is noticed. As the body from head to foot is affected it is called Nadusuzhi meaning 'Central or focal'. In Varma Kannadi this varma is called Surukki Varmam, situated adjacent to Pallai Varmam.

"Kūrettu ellinitaic curukki varmam" (Varmakkannāti - 26)

61. [1]சடப்பிற காலத்தின் குணம்

வினையான [1]சடப்பிற காலங் கொண்டால்
வினையாகச் செய்குணத்தை விதிக்கி றேனே
பனியாகிக் கண்ணிரண்டும் விழித்தி ருக்கும்
பாடுகிறேன் வாய்பதைநீர் அடைந்து சாயும்
கனியான கடிகைபதி னஞ்ச தாகும்
காசினியில் இளகாமற் குறிகள் மாறும்
தீவினைகள் செய்துவிடும் கடிகை விட்டால்
செப்புகிறேன் அதற்குமுன்னே இளக்கிக் கொள்ளே. (66)

விலா முண்டெலும்பின்கீழ் அமையும் சிறிய, பெரிய அத்திச் சுருக்கிகளை யடுத்து இடுப்பின் முன்பக்கத்தில் அமைவது சடப்பிறவர்மம் என்பதைப் படம் சுட்டுகிறது. ஆனால்,

---

1. சிப்பிறவர்மம்

" ...... பாடுகிறேன் நடுச்சுருக்கி பகர்ந்து பாரு
மானென்ற தையடுத்து ஜடப்பிற வர்மம்" என்று கூறும் ஒடிமுறிவு (31)ச் செய்தி கொப்பூழின் கீழ் இடம்பெறும் நடுச்சுருக்கியை அடுத்து சடப்பிறவர்மம் அமைவதாகத் தெரிவிக்கிறது. இவ்வர்மத்தானத்தை,

"நின்றதினா லிறைக்கீழ்க்கை கூட்டுக் காலம்
பாரதன்கீழ் இரண்டிறைக்குள் சடைப்பிற வர்மம்"

என்று சுட்டுகிறது வர்மக்கண்ணாடி (26). ஆனால் இதே வர்மக்கண்ணாடியின் வேறுசுவடியில் "சடைப்பிறவர்மம்" என்ற சொல்லுக்கு, அடைப்பின் வர்மம் என்ற பாடவேறுபாடு கிடைக்கிறது.

இந்த வர்மத்தானத்தில் அடிபட்டால் கண்களிரண்டும் விழித்தபடியே வெற்றுச் சடம்போல நின்றுவிடுமாதலின் இது சடப்பிறம் எனப்படுகிறது. கண்கள் விழித்த நிலையில் இருக்க வாயில் நொப்பும் நுரையுமாக நீர்ப்பெருக்கு உண்டாகும். இதனைப் பதினைந்து நாழிகைக்குள் இளக்காவிடில் மேலும் பல கொடிய குறிகளும் நோய்களும் தோன்றக்கூடும்.

சடப்பிறம் - சடம் - உடல், சடம்போல் நிற்றல். சாயும்-கொட்டும். அடைந்துசாயும் - மிகுதியாக வடியும்.

61. Caṭappiṟa Kālam

vinaiyāna catappira kālan kontāl
vinaiyākac ceykunattai vitikki rēnē
paniyākik kannirantum vilitti rukkum
pātukirēn vāypatainir ataintu cāyum
kaniyāna katikaipati nanca tākum
kāciniyil ilakāmar kurikal mārum
tivinaikal ceytuvitum katikai vittāl
ceppukirēn atarkumunnē yilakkik kollē (66)

Close by the surukki varmas on the front of the hips sadappira varmam is placed as shown in the diagram -

"pātukiren natuccurukki pakarntu pāru
mānenra tataiyatuttu jatappira varmam"(Oti murivu - 31)

Below the navel adjacent to the nadusurukki lies the sadappira.

"ninrathinā yiraikkilkkai kūttuk kālam
pāratankil irantiraikkul cataippira varmam"

(Varmakkannāti - 26)

Some versions of varma kannadi describes it as Adaippu varma instead of Sadappira varma. Injury to this varma causes the bulging of the eyes and they look like those of a dead body. Hence the name (sadam – means dead body). There is frothy discharge from the mouth. If this is not cured within 15 nazhigais it may complicate further the condition.

62. கிளிப்பிற வர்மத்தின் குணம்

இளக்கவே கிளிப்பிற வர்மங் கொண்டால்
கெணிதமுடன் சொல்லுகிறேன் கெருவாய்க் கேளு
திளக்கவே கண்ணிரண்டும் முழித்தி ருக்கும்
திடமாக நடனமிடும் முறிந்து வெட்டும்
விளமான நாழிகைதான் பதினஞ் சாகும்
வெறியுடனே யிளகாமல் குறிகள் மாறி
நிளக்கவே நின்மமது கூடி நிற்கும்
நிச்சயமா யசாத்திய மாகுந் தானே. (67)

கொப்பூழுக்கு நேரே இடமும் வலமுமாக நான்கு விரலளவில் இடம் பெறுவது கிளிப்பிறவர்மம் எனப்படுகிறது. சடப்பிற வர்மத்திற்கும் கொப்பூழுக்குமிடையே அமைவது என்பதும் ஒன்றே. இதனை,

"பாரதன்கீழ் இரண்டிறைக்குள் சடைப்பிற வர்மம்
நாலிறைமேல் கிளிமேக வர்ம மென்பார்"

என வர்மக்கண்ணாடியும் (26).

"மானென்ற ததையடுத்து ஜடப்பிற வர்மம்
பகருமோர் இறைமேலே கிளிப்பிற வர்மம்"

என ஒடிமுறிவும் (31) எடுத்துக் காட்டுகின்றன. இவற்றுள் வர்மக்கண்ணாடி கூறும் கிளிமேக வர்மம் என்ற சொல்லுக்குக் கிளிப்பிறவர்மம் என்ற பாடவேறுபாடு கிடைத்துள்ளது. அதுவே சரியானசொல் ஆதலின் இந்த எடுத்துக்காட்டும் இங்கே கொடுக்கப்பெறுகிறது.

கண்களிரண்டும் விழித்து இப்படியும் அப்படியுமாகக் கிளிநடனமிடுவது போன்று சுழன்று திரியும் குணம் இந்த வர்மத்தின் அறிகுறியாதலின் இது கிளிப்பிறம் எனப் பெறுகிறது. கண்கள் சுழலுவதோடு அவ்வப்போது கண்துடித்து வெட்டுவதும் இதன் குணமாகும். இதனைப் பதினைந்து நாழிகைக்குள் இளக்காவிடில் வெவ்வேறு அறிகுறிகள் தோன்றி அசாத்தியநிலையைப் பெற்றுவிடும்.

கிளிப்பிறம் - கிளிபோல் நிற்றல். நடனமிடுதல்-இப்படியும் அப்படியுமாகச் (நடனமாடுவது போல) சுழலுதல். நின்மம்-வலி

62. Kilipira Varmam

ilakkavē kilippira varmaṅ konlāl
kenitamutan collukirēn keruvāyk kēlu
tilakkavē kannirantum mulitti rukkum
titamāka natanamitum murintu vettum
vilamāna nālikaitān patinañ cākum
veriyutanē yilakāmal kurikal māri
nilakkavē ninmamatu kūti nirkum
niccayamā yacāttiya mākun tānē (67)

This lies four fingers both on the right and the left of the navel i.e. between the navel and the sadappira varmam.

"pāratankil irantiraikkul cataippira varmam
ñaliraimēl kilimēka varma menpār" (Varmak kannati 26)

mānenra tataiyatuttu jatappira varmam
pakarumōr iraimēlē kilippira varmam

(Otimurivu 31)

Kilipirakalam is mentioned as kilimega Varma in Varma Kannadi. But the former is more suitable.

Damage to this causes the eyes to roll around as if it were those of a parrot and so it has been named thus. This condition must be treated within 15 nazhigais. Otherwise it lapses into a complicated one.

63. கைகெட்டிக் காலத்தின் குணம்

காலமென்ற கைக்கெட்டிக் காலங் கொண்டால்
கருதுகிறேன் குணந்தன்னைக் கனிவாய்க் கேளே
[1]சாலமென்ற ரசமதுவும் வீழ்ந்து தாழும்
தப்பாது குறிபலதும் சார்ந்து நிற்கும்
உலவுகின்ற கடிகைபன்னி ரண்ட தாகும்
உத்தமனே கடிகைநாள் கழியு மானால்

---

1. தலமென்ற புஜமதுவும்.

அலகியே நில்லாதே அருகில் நின்று
அப்பனே தடவிஅன்னம் அருந்து வாயே, • (68)

காக்கட்டைக் காலம் என்று கூறிய சுவடிச்செய்தி கரக்கூட்டுக் காலமாக இருக்க வேண்டும் எனக்கூறப்பட்டது (வர்.34). இது தோளின் மீது (முதுகுப்புறம்) பொருந்துவதுதாகும். அதற்குநேர் எதிரே முன்புறத்தில், மார்பெலும்புகள் ஒன்றோடொன்று பின்னி நெருங்கியுள்ள அடைப்பு என்னும் பகுதியில் இடம் பெறுவது கைகெட்டிக் காலம் ஆகும். இதனை,

"அல்லுமேல் அடப்பின்கீழ் கை கூட்டுக் காலம்" எனச் சுட்டுகிறது வர்மக்கண்ணாடி (28). ஒடிமுறிவு என்ற நூலும் "வர்மமடா அடப்பதில்கை கெட்டி வர்மம்" (32) என்றே கூறுகிறது. கைபுயத்தோடு இணைந்து கெட்டிப்படும் நிலையில் கூடிநிற்குமிடத்தில் நிலை பெறும் வர்மமாதலின் 'கை கெட்டி வர்மம்' எனப்படுகிறது.

இந்த வர்மத்தானத்தில் அடிபட்டால் புயமானது சோர்ந்து செயலற்றுப் போகும். வர்ம நோய்க்குரிய பல அறிகுறிகளும் தோன்றக்கூடும். இதனை நாழிகைக் கடக்கவிடாமல் பன்னிரண்டு நாழிகைக்குள் இளக்க வேண்டும்.

சாலமென்ற ரசம்-பொருத்தாகிய சக்திகள், சக்தி-புயத்தின் வலிமை. தடவி - தடவிக்கொடுத்து. அன்னம்-உணவு. அருந்துவாய் - (நோய்வாய்ப்பட்டவ்ருக்கு) அருத்துவாய் - ஊட்டுவாய்.

63. Kaikkeṭṭik Kālam

kālameṉṟa kaikkeṭṭik kālaṅ koṇṭāl
karutukiṟēṉ kuṇantaṉṉaik kaṉivāyk kēḷē
cālameṉṟa racamatuvum viḻntu tāḷum
tappātu kuṟipalavum cārntu niṟkum
ulavukiṉṟa kaṭikaipaṉṉi ranta tākum
uttamanē kaṭikaināḻ kaḻiyu māṉāl
alakiyē nillātē arukil niṉṟu
appanē taṭaviaṉṉam aruntu vāyē (68)

This kalam is based in the Adaippu region on the front of the shoulder on the back of which is located kakkattai Karakkollu kalams. This is described as 'Allumel adaippu keezh Kaikootothu Kalam in Varma Kannadi (28) and odimurivu (32) calls it Varmamada Adapathil kaiketti varmam as it is located at the shoulder joint. (the spot where shoulder and the arm meet.)

"allumēl aṭappinkiḻkai kūṭṭuk kālam" (varmak kaṇṇaṭi 28)
"varmamaṭā aṭappatilkai keṭṭi varmam" (Oṭi muṟivu 32)

64. எட்டெல்லு வர்மம்

அருந்தவே எட்டெல்லு வர்மங் கொண்டால்
ஆளினொரு புறமாகக் குன்றிக் கொள்ளும்
திருந்தவே வாய்மூக்கில் நீரொ ழிக்கும்
சியலர்ன பனிகுளிரும் சீறி நிற்கும்
விருந்தவே வயிறுவெட்டி விறைக்கு மப்பா
விதமான அன்னமது அகல வாங்கும்
திருந்தவே [1]கடிகைபத் தொன்ப தாகும்
சியலாக அதற்குமுன் அறிந்து செய்யே. (69)

முண்டெலும்புக் குழியாகிய பள்ளத்தில் இடம் பெறும் பள்ளைவர்மத்துக்கு மேலே இருவிரல் அளவில் இடம் பெறுவது எட்டெல்லு வர்மமாகும். எட்டு எலும்புகளின் கூட்டத்து ஓரம் இடம் பெறுதலின் இது எட்டெல்லு வர்மம் என்றே பெயர் பெறுகிறது. எட்டெல்லின் முனையில் வாயுகாலம் என்று சுட்டிய ஒடிமுறிவு நூல்,

"வர்மமடா அடப்பதில்கை கெட்டி வர்மம்
மருவியே யதன்மேலே எட்டெல் வர்மம்" (32)

என்று அமைக்கிறது. வர்மக் கண்ணாடி என்னும் நூல்

" ...... சார்ந்ததொரு பள்ளைதனில் பள்ள வர்மம்
கூரெட்டு எல்லினிடைச் சுருக்கி வர்மம்" என்கிறது.

எட்டெல்லு வர்மமானது, மார்புப்பகுதியில் இடம்பெறும் கைகெட்டிக்குமேல் இடம் பெறுவது என்று கூறுவது முதல் நூல். பள்ளைக்குமேல் இடம் பெறுவதைச் சுருக்கி என்று கூறிவிடுகிறது இரண்டாவது நூல். படத்தின் அடிப்படையில் பள்ளைக்கு மேல் இடம் பெறுவது எட்டெல்லு வர்மமாகிறது.

இந்த வர்ம நோய் கொண்டவரின் உடல் ஒருபுறமாகக் குன்றிக் கூனிக் கொள்ளுவதும், வாயிலும் மூக்கிலும் நீர்வடிவதும், மிகுதியான குளிர் நடுக்க அதனால் உடல் சீறி நிற்பதும், வயிறு ஊதி விறைத்துக் காண்பதும் இந்த வர்மத்தின் அறிகுறிகளாகும். மேலும் நோய் கொண்டவர் பசிமிகுந்து அளவுக்கு மிகுதியான உணவை உண்பதும் உண்டு. இதனைப் பத்தொன்பது நாழிகைக்குள் இளக்குதல் வேண்டும்.

எட்டெல்லு - எல்லு - எலும்பு . எட்டுஎலும்புகள் கூடுமிடம். ஆள்-மனிதன். குன்றுதல்- (ஒருபுறமாக) வளைதல், சாய்தல். அகலவாங்கும்-மிகுதியாக உண்ணச்செய்யும்.

பா.வே. 1. கடினகபம் தோன்றலாகும்.

64. Ettellu Varmam

aruntavē ettellu varmaṅ koṇṭāl
　　āḻinoru puṟamākak kuṉṟik koḷḷum
tiruntavē vāymūkkil nīro likkum
　　ciyalāṉa paṉikuḷirum ciṟi niṟkum
viruntavē vayiruvetti viṟaikku mappā
　　vitamāṉa aṉṉamatu akala vāṅkum
tiruntavē katikaipat toṉpa tākum
　　ciyalāka ataṟkumuṉ aṟintu ceyyē (69)

"varmamaṭa aṭappatilkai ketti varmam
　　maruviye yataṉmēlē eṭṭel varmam" (Otimuṟivu 32)

" cārntatoru paḷḷaitaṉil paḷḷa varmam
kūreṭṭu elliṉitaic curukki varmam" (Varmakkaṇṇāṭi

This is situated 2 fingers above the Palla Varmam which is located at the depression of the mundelumbu. As this is located on the spot of eight bones it is called "Ettellu" odimurivu (32) says that Vayu Varmam lies at this zone of the eight bones. This text places it above the Kaiketti Varmam which is located in the chest. But Varma kannadi says that the varma above the Pallai Varma is curukki. According to the figure provided Ettellu lies above the Pallai Varmam.

The person afflicted becomes hunch - backed on one side. Watery secretions from the mouth and nose is noticed. The body becomes cold and stiff. There is distention of the abdomen. The person feels excessively hungry and eats like a glutton. Condition must be treated within 17 Nazhigais.

65. [1]கல்லிடைக் காலத்தின் குணம்

நல்லோர்க்காம் [1]கல்லிடைக் காலங் கொண்டால்
　　நவிலுகிறேன் செய்குணத்தை நன்றாய்க் கேளு
பொல்லாத உடல்வியர்த்துக் குளிர்ந்து போகும்
　　பூதலத்தில் [2]முன்னாகப் பரலி லேறும்
தொல்லாத வாயில்பதை நுரையுந் தள்ளும்
　　தொகுப்பாக நாழிகைதான் இருபத் தொன்று

பா. வே. 1. கல்லெடைக்காலம்; கல்லடைக்காலம். 2. விதையிரண்டும் மேலே யேறும்

இல்லாமல் இக்குணங்கள் இருக்கு மாகில்
இப்பொருளே ஆராய்ந்து உன்னிச் செய்யே. (70)

பீசம் எனப்பெறும் ஆண்குறியின் கீழே இடம்பெறுவது கல்லிடைக்காலம் ஆகும். இரண்டு விதைகளுக்கிடையில் நிலைபெறுவதால் இது இப்பெயர் பெறுகிறது. இரண்டு விதைகளும் இரண்டு கற்களாகக் கொள்ளப்பெற்று அக்கற்களினிடை நிலைபெறும் வர்மம் கல்லிடைக்காலம் எனப்பெறுகிறது. இவ் வர்மம் கல்லடைக் காலம், கல்லெடைக் காலம் என்றெல்லாம் குறிப்பிடப்படுகிறது. இந்த வர்மத்தில் அடிபட்டால் விதைகள் இரண்டும் மேலே ஏறி குழிபோன்ற அறைக்குள் அடங்கிவிடுவதால் கல் என்று சுட்டும் விதைகளின் அடைப்பு என்னும் பொருளில் கல்டைக்காலம் என்பதும் பொருந்தக்கூடியதே.

"கொப்புள்கீழ் விரல்நாலில் மூத்திரம் வீசும்
மாத்திரைகல் லெடைக்காலம் மைத்தண் டத்தின்"

என்பது வர்மபீரங்கியின் கூற்று (16).

"வேமிந்த வித்திரண்டும் பதிந்த சார்பில்
விதமான கல்லிடையின் கால மாகும்"

(வர்மக்கண்ணாடி - 29)

"தர்மமடா உந்தியின்கீழ் கல்லிடைய தாகும்" (ஒடிமுறிவு - 32)

என்பன உந்தி எனப்பெறும் கொப்பூழின்கீழ் நான்கு விரலளவில் மூத்திரகாலமும், அதன்கீழ் இரண்டு விதைகளுக்குமிடையில் கல்லிடைக்காலமும் அமைகின்றன என்பதை உணர்த்துகின்றன.

இந்த வர்ம நோய் ஏற்பட்டால் உடல் முழுவதும் வியர்த்துச் சில்லிட்டுப் போகும். முதலில் விதைகள் இரண்டும் மேலே ஏறி விதைக்குழியில் தங்கிவிடும். வாயில் நுரைதள்ளும்.

"ஆரப்பா கல்லிடையின் காலம் சொல்வேன் ... ...
ஊரப்பா மானுடர்க்குக் கொண்டு தானால்
உத்தமனே விதையிரண்டுங் காணா தப்பா"

என்பது வர்ம சூத்திரம் (30).

"போடவே கல்லிடைக் காலங் கொண்டால் ...
சணத்திலே வித்துரெண்டும் வெளிகா ணாது"

(வர்மகண்டி - 24)

"கீழிறங்கி நிற்குமடா பீசந் தானும்

புரியாமல் வித்துவர்மம் என்பார் லோகர்...
பாரப்பா உடலெங்கும் வேர்வை காணும்
பத்திரமாய்க் கண்ணுரெண்டும் ஏறே வாங்கும்
வாங்குமடா வித்ததுவும் அறைக்குள் ஏறும்"

(வர்ம சூடாமணி - 27)

என்பனவற்றால், கல்லிடைக்காலத்தைச் சிலர் வித்துவர்மம் என்று தவறாகக் கூறுவர்; இவ்வர்மம் ஏற்பட்டால் இரண்டு விதைகளும் மேலே உள்ள அறையில் ஏறி அடங்கிவிடுவதோடு பீசமானது கீழே இறங்கிவிடக்கூடும்; உடல் வியர்க்கும; கண்கள் மேலே செருகும் என்னும் கருத்துகளும் புலப்படுகின்றன.

இதனை இருபத்தொரு நாழிகைக்குள் இளக்க வேண்டும். விழுந்தவனை எடுத்திருத்தி, உச்சியில் ஒரு தட்டுதட்டி, உடல் முழுவதும் தடவிவிட்டு, விதைக்களுக்கிடையில் நான்கு விரல்தூரம் கீழே நன்றாக அழுத்திவிட விதை இறங்கும். துணியை நனைத்துச் சுற்றிவைக்கக் குணமாகும்.

கல் - விதை. பரல் - விதை.

65. Kalliṭaik Kālam

nallōrkkām kalliṭaik kālaṅ koṇṭāl
navilukiṟēṉ ceykuṇattai naṉṟāyk kēlu
pollāta uṭalviyarttuk kuḷirntu pōkum
pūtalattil muṉṉākap parali lēṟum
tollāta vāyilpatai nuṟaiyun taḷḷum
tokuppāka nāḻikaitāṉ irupat toṉṟu
illāmal ikkuṇaṅkaḷ irukku mākil
ipporuḷai āráyntu uṉṉic ceyyē (70)

This is located beneath the male genitals. The term 'Kal' or stone means testes here. This is also called Kalladai or Kaledai Kalam. Injury to this varma causes blocking in the testes and rupture of the wall of abdomen leading to hernia

"koppuḷkiḻ viralnālil mūttiram vicum
māttiraikal leṭaikkālam maiṭṭaṉ ṭaṭṭiṉ

(Varmapiraṅki 16)

"vēminta vittirantum patinta cārpil
vitamāṉa kalliṭaiyiṉ kāla mākum"

(Varmak Kaṇṇāṭi - 29)

"tarmamaṭa untiyinkīḻ kalliṭaiya tākum" (Oṭimurivu 32)

describe its location. 4 fingers below the navel lies the Muthira Kalam and in between the two testes lies Kallidai Kalam.

Injury to this varma causes sweating of the body and numbness of limbs. There is frothy discharge from the mouth.

"ārappā kalliṭaiyin kālam colvēn
ūrappā mānutarkkuk kontu tānāl
uttamanē vitaiyirantuṅ kāṇā tappā" (Varma cūttiram 30)

"pōṭavē kalliṭaik kālaṅ konṭāl
canattilē vittiranṭum veḷikā ṇātu" (Varmakanṭi 24)

"kiliraṅki nirkumatā picam tānum
puriyāmal vittuvarmam enpār lōkar
pārappā uṭaleṅkum vērvai kāṇum
pattirāmāyk kaṇṇurenṭum ēṟē vāṅkum
vāṅkumaṭā vittatuvum araikkuḷ ērum"

(Varma cūtamaṇi 27)

These sources wrongly call it Vittu Varmam. The other symptoms of this Varma are that the penis may become limp and drooping. There will be sweating and the eyes move upwards.

Treatment must be given within 21 nazhigais. The injured person must be made to sit up and the top of the head is patted. The entire body is given a message. The area below the Varma point is pressed with fingers so as to make it move to its original position dressing with cloth-dipped in water is done.

66. வலம்புரி வர்மம்

உன்னியே வலம்புரிதான் கொண்டு தானால்
உத்தமனே மலசலங்கள் அடைத்துக் கொள்ளும்
மன்னியே வயிறூதும் சுவாசம் முட்டும்
மைந்தனே கைகாலும் முதிர்ந்து போகும்
நன்னியே நாழிகைதான் [1]தொண்ணூற்றாறு

பா.வே. 1. தொண்ணூறாகும்.

நாடியே செய்யாதே விரதம் விட்டால்
பன்னியே குருபரனைத் தியானம் செய்து
பதறாமல் செய்துவிடு பறக்குந் தானே. (71)

கல்லிடைக் காலத்தை யடுத்துத் தண்டேறி வர்மமும், அதனையடுத்து வலது புறத்தில் ஒருவிரல் அளவில் வலம்புரி என்னும் வர்மமும், இடதுபுறத்தில் இடம்புரி என்னும் வர்மமும் இடம் பெறுகின்றன. இதனை,

"மாத்திரைகல் லிடைக்காலம் மைத்தண் டத்தின்
மகிழும்வலம் ஓரிறையில் வலம்புரி யிடம்புரி"

என்ற வர்மபீரங்கிச் செய்தி (16) உணர்த்துகிறது. மேலும்,

" விதமான கல்லிடையின் கால மாகும்
போமிந்தத் தண்டேறி இறைக்குத் தாழே
புனிதமாம் வலம்புரியின் கால மாச்சே"

என்ற வர்மக் கண்ணாடியின் கூற்றும் (29)இதை வெளிப்படுத்துகிறது.

"தர்மமடா உந்தியின்கீழ் கல்லிடைய தாகும்
தப்பாது இதையடுத்து வலம்புரியு மென்ன"

என்பது ஒடிமுறிவு (32). இதையொட்டிப் படத்திலும் கொப்பூழின் வலப்புறத்தில் வலம்புரி வர்மம் குறிப்பிடப்படுகிறது.

இந்த வர்மத்தானத்தில் அடி ஏற்பட்டால் மலம், மூத்திரம் ஆகியவை வெளியேறா. வயிறு ஊதிப்போகும். மூச்சு வெளிவிடமுடியாமல் திணறல் ஏற்படும். கை, கால்கள் சோர்வடையும். இதனைத் தொண்ணூற்றாறு நாழிகைக்குள் குணப்படுத்த வேண்டும்.

வலம்புரி — வலப்பக்கம் இடம்பெறுவது. மலசலம் — மலமும் சிறுநீரும். அடைத்துக்கொள்ளுதல் – வெளிவராது போதல். முதிர்தல் - சோர்வடைதல்.

66. Valampuri Varmam

uṉṉiyē valampuritāṉ koṇṭu tāṉāl
uttamaṉē malacalaṅkaḷ aṭaittuk koḷḷum
maṉṉiyē vayirūtum cuvācam muttum
maintaṉē kaikālum mutirntu pōkum
naṉṉiyē nāḻikaitāṉ toṇṇūṟ ṟāṟu
nāṭiyē ceyyātē viratam viṭṭāl
paṉṉiyē kuruparanait tiyāṉam ceytu
patarāmal ceytuviṭu paṟakkuṉ tāṉē (71)

Close to the Kallidai Kalam lies the thanderi Varmam. To its right at a distance of one finger lies the Valampuri Varmam and on the left side lies the Idampuri.

So its location is described -

"māttiaikal letaikkālam maittan tattin
makilumvalam ōriraiyil valampuri yitampuri"

(Varmapiraṅki - 16)

"vitamāna kallitaiyin kāla mākum
pōmintat tantēri iraikkuk kīlē
punitamām valampuriyin kāla māccē"

(Varmakkannāti - 29)

"tarmamatā untiyinkīl kallitaiya tākum
tappātu itaiyatuttu valampuriyu menna"

(Otmurivu - 32)

The diagram places Valampuri Varmām on the right side of the navel.

Injury to this Varma affects the easy passing of urine and faeces. Distention of abdomen occurs. Breathing becomes very difficult, weakness in the hands and legs is felt. The victim must be given treatment within 96 nazhigais.

67. [1]**வெல்லுறுமிக் காலம்**

பார்க்குமென்ற [1]வெல்லுறுமி கொண்டு தென்றால்
பாடுகிறேன் செய்குணத்தைப் பகர்ந்து கேளு
தீர்க்கவே அடிவயிற்றில் தரிப்பில் லாகும்
செப்புகிறேன் மதிமயங்கி மயக்க முண்டாம்
நீர்க்கவே பித்தரைப்போல் ஆடி நிற்கும்
நிச்சயமாய்ச் சன்னியொடு சீதம் உண்டாம்
பார்க்கவே கடிகைபதி னெட்ட தாகும்
பாலகனே நரம்பறிந்து பார்த்துச் செய்யே. (72)

"விதமான கல்லிடையின் கால மாகும்
போமிந்த தண்டேறி இறைக்குக் கீழே

பா.வே. 1. வில்லுறுமிக் காலம்.

புனிதமாம் வலம்புரியின் கால மாச்சே (29)
ஆச்சுதே அதனருகே இடம்புரிக் காலம்
அளவாக அதனருகில்வில் லுறுமி யென்பார்" (30)

என்னும் வர்மக்கண்ணாடியின் வரிசை முறைப்படி வில்லுறுமி என்னும் இந்த வர்மத்தானத்தை உணர முடிகிறது. கல்லிடைக்காலமென்பது தெளிவாக உணரும் இடத்தையுடையது. அதையடுத்துத் தண்டேறியும் வலம்புரி இடம்புரிகளும் அமைய, அவற்றின் அருகில் இடம் பெறுவது வில்லுறுமியாகும் என்பதே தெளிவுபடுத்தப்பெறுவது. ஆனால் படம்,

உந்தியின் கீழ் கல்லிடை,
இதையடுத்து வலம்புரி,

"கர்மமடா வில்லுறுமிரெண் டிறையி லாகும்" என்னும் ஒடிமுறிவு நூலின் (32) வரிசைப்படி வலம்புரியையும் வில்லுறுமியையும் மட்டும் அமைத்துக்காட்டுகிறது.

இந்த வர்மநோய் ஏற்பட்டால் அடிவயிறு நிலைகொள்ளாது கலங்கும். மயக்கம் ஏற்பட்டு, அறிவு மயங்கிப் பித்துப்பிடித்தவரைப் போன்று ஆடும்நிலை உருவாகிவிடும். சன்னியும் சீதமும் உண்டாகும்.

"கேளப்பா வில்லுபோல் வளைந்து கொண்டு
விரைவாகக் கண்ணடைத்துக் கிடக்கும் பாரு"

என்ற வர்மசூடாமணியின் அடிகள் இந்த வர்மத்தின் பெயர்க்காரணத்தை ஓரளவு விளக்குகிறது. வயிற்றுக்கலக்கம், அறிவு மயக்கம், பித்துபிடித்தநிலை இவற்றால் உறுமல் ஒலியும் ஏற்படக்கூடும். அவ்வாறாயின் பெயர்பொருந்திவிடும். பதினெட்டு நாழிகைக்குள் இதனை இளக்க வேண்டும்.

வெல்லுறுமி - உறுமிவெல்லுதல், உறுமிஇடம் பெறுதல். உறுமி-உறுமுதல்ஒலி இருமல்கூடி நிற்பது (வில்லுறுமி - வில்போல் வளைதலும் உறுமுதலுமாகிய குறிகள்) தரிப்பில்லாகும் - தரிப்பு இல் ஆகும் – இருப்பிடம் தரிப்பு இல்லையாதல். தரிப்பு - இருப்பிடம். நரம்பு - வர்மத்தானம்.

67. Vellur̲umik Kālam (Villur̲umik kālam)

pārkkumen̲r̲a vellur̲umi kontu ten̲r̲āl
pāṭukir̲ēn̲ ceykun̲attaip pakarntu kēlu
tirkkavē aṭivayir̲r̲il tarippil lākum
ceppukir̲ēn̲ matimayaṅki mayakka muntām
nirkkvē pittaraippōl āṭi nir̲kum

niccayamāyc canniyotu citam untām
pārkkvē katikaipati netta tākum
pālakanē naramparintu pārttuc ceyyē (72)

"vitamāna kallitaiyin kāla mākum
pōmintat tantēri iraikkuk kilē
punitamām valampuriyin kāla māccē"

(Varmakkannāti - 29)

"āccutē atanarukē itampurik kālam
alavāka atanarukilvil lurumi yenpār"

(Varmak kannāti - 30)

"karmamatā villurumiren tiraiyi lākum"

(Otimurivunūl - 32)

"kēlappā villupōl valaintu kontu
viraivākak kannataittuk kitakkum pāru"

(Varma cūtāmani)

The position of Kallidai Kalam is clear and that the Varmas Thanderi Valampuri, and Idampuri are situated by its side and near them lies Villurumi Kalam. But the figure shows the Kallidai below the abdomen and nearby is Valampuri. Odimurivu (32) lists only Valampuri and Villurumi.

Injury to this varma proves harmful to the abdomen following giddiness, the patient lapses into and soon suffers from mental disorder, he develops delirium. Varma soodamani says that the body bends like a bow and the person groans. Hence the name. Stomach is upset. The condition must be treated within 18 nazhigais.

68. [1]நாரங்குத்தி வர்மம்

பார்த்துநீ செய்யவே [1]நாரங் குத்திப்
பாலகனே கொண்டிடுகில் குணத்தைக் கேளு
நேர்த்தியாய்ச் சரீரமெல்லாம் வீங்கு மப்பா
நிச்சயமாய் மூக்கடைச்சு விளரும் விம்மும்

பா.வே. 1.நாங்குகுத்தி, நாங்குகுற்றி, நாரங்குற்றி.

பார்த்துடனே முறைக்குமுறை செய்ய வேண்டாம்
பாடுகிறேன் அசாத்திய மென்று சொல்லிப்
பார்க்கவே கடிகைபதி னெட்டு சென்றால்
பரிவறிந்து செய்துவிடு பலனுண் டாமே. (73)

நாங்கு குத்தி என்னும் இந்த வர்மநோய் உடலைவீங்கச் செய்வதால் தன்னம்பிக்கையின்றி தைரியமிழந்து சோம்பலாய் இருக்கச் செய்துவிடுமாதலின் இது இப்பெயர் பெறுகிறது.

வில்லுறுமிக் காலத்தையடுத்து அமைவது நாங்குகுத்தியாகும். இந்த வர்மம் நாரங்குத்தி, நாலங்குத்தி என்ற என்ற பெயர்களாலும் சுட்டப்பெறுகிறது.

'வாச்சுதுவில் லுறுமிநாலங் குற்றிக் காலம்'

(வர்மக்கண்ணாடி - 30)

"கர்மமடா வில்லுறுமிரெண் டிறையி லாகும்
. . . . .
அர்ப்பமடா இதையடுத்து நாங்கு குத்தி" (ஒடிமுறிவு - 32)

என்பன நாங்கு குத்தியின் இடத்தைச்சுட்டுகின்றன. இது வில்லுறுமியை அடுத்து அதன் கீழேயன்றி நேர்பக்கத்தே இடம்பெறுகிறது என்பதைக் கூறுகின்றன.

இந்த வர்மநோய் உடம்பை வீங்கச்செய்வதோடு வெளேரென வெளுக்கவும் செய்யும். மூக்கடைப்பு ஏற்பட்டு மூச்சுத்திணறுதலும் விம்முதலும் உண்டாகும். இதற்கு உடனடியாக மருத்துவம் மேற்கொள்ளக்கூடாது. இது அசாத்தியம் என்று கூறித் தாமதித்துப் பதினெட்டு நாழிகைக்குப் பிறகு இளக்கக் குணம் ஏற்படும். நாங்கு – சோம்பல் (நாரம்-பாசி) நாங்குகுத்தி-சோம்பலை உண்டாக்குவது. விளருதல்- மூச்சுத்திணறுதல், உடல்வெளுத்தலும் கூறலாம்.

68. Nāraṅkutti Varmam

pārttuni ceyyavē nāraṅ kuttip
pālakanē kontitukil kuṇattaik kēlu
nērttiyāyc cariramellām viṅku mappā
niccayamāy mūkkataiccu vilarum vimmum
pārttutanē muraikkumurai ceyya vēṇtām
pāṭukiṟēṉ acāttiyam meṉṟu collip
pārkkvē katikaipati nettu ceṉṟāl
parivarintu ceytuvitu palaṉuṇ ṭāmē (73)

Swelling of body is noticed. The afflicted person loses his self confidence and courage. He becomes lazy. Hence the name. This lies next to the Villurumikkalam.

This is also called Nalanguthi.

"vāccutuvil luṟuminālaṅ kuṟṟik kālam"

(Varmak kaṇṇāṭi - 30)

"karmamaṭā villuṟumiren̠ tiṟaiyi lākum

arppamaṭā itaiyaṭuttu nāṅku kuṭṭi" (Oṭimuṟivu - 32)

These verses maintain that Naranguthi lies at the same level and not below Villurumi Varmam. This varma causes swelling of body and the body grows pale. The victim feels some kind of blocking in the nose, he gasps for breath. Remedial treatment should start immediately. Cure is possible if treated within 18 nazhigais.

69. [1]அனியந்தான் வர்மம்

[1]அனியந்தான் வர்மத்தின் குணத்தைக் கேளு
[2]அயதிகெடும் போதம்வரும் அடுத்த டுத்துக்
கனியாகப் பொருததனு மேழு நாலில்
கலங்கியே மதிமயங்கிப் போத மாறும்
சனியாக மயங்கிவிடும் குறிகள் மாறும்
தப்பாது நாழிகைதான் [3]அன்பத் தெட்டு
வினையாகக் கடிகையது கடரு மானால்
வித்தையைநீ செய்துவிடு விலகுந் தானே. (74)

அநியந்த வர்மம் என்பதே சரியான சொல்லாகலாம். நியமம் அல்லாத அநியமச் செயல்களை யுண்டாக்கக்கூடிய வர்மம் ஆதலின் இப்பெயர் பெறுகிறது. (நியந்தம் × அநியந்தம் -நியம × அநியமங்களை முடிவாகக் கொண்டது.)

இந்த வர்மநோய் ஏற்பட்ட காலத்து உடலும் உள்ளமும் சோர்வடையாது, தெளிவான அறிவோடு இருப்பது உண்டு. நோய் கண்ட ஏழு நாட்களுக்குள் இந் நிலைமாறி மதிமயங்குதலும், அறிவுகெடுதலும், உள்ளமும் உடலும் சோர்வடைதலும் ஆகிய குறிகள் தோன்றிவிடும்.

பா.வே. 1. அனியந்தவர்மம், அணியந்த வர்மம்
2. அயதி வரும் போதம் கெடும்
3. பதினெட்டாகும்.

நாங்குகுத்தி வர்மத்தின் அரைவிரலளவின்கீழ் இடம் பெறுவது இந்த அநியந்த வர்மம் என்பதை.

"அர்ப்பமடா இதையடுத்து நாங்கு குத்தி
அரையிறைக்கீழ் அணியந்த மணியு மாகும்"

என்னும் ஒடிமுறிவுப் பாடலடிகள் (32) உணர்த்துகின்றன. இந்த வர்மம் கண்ட ஐம்பத்தெட்டடு நாழிகை கழித்து இளக்கு முறைகளைக்கையாண்டு மருந்தும் கொடுக்கக் குணமாகும்.

நியந்தம் - முறைமை. அநியந்தம் - முறையற்ற செயல். அயதி - அசதி, சோர்வு. போதம் அறிவு, தெளிவு. போதம்மாறும் - அறிவுகெடும்.

69. Aṉiyantāṉ Varmam

aṉiyantāṉ varmattiṉ kuṇattaik kēḷu
ayatikeṭum pōtamvarum aṭutta ṭuttuk
kaṉiyākap porutataṉu mēḷu nāḻil
kalaṅkiyē matimayaṅkip pōta māṟum
caniyāka mayaṅkiviṭum kuṟikaḷ māṟum
tappātu nāḻikaitāṉ aṉpat teṭṭu
viṉaiyākak kaṭikaiyatu kaṭaru maṉāl
vittaiyaiṉi ceytuviṭu viḷakun tāṉē (74)

It is actually Aniyantha Varmam as it causes unnatural symptoms. Hence the name.

Injury to this Varma does not cause damage to the mind. The person continues to be in his senses. But within 7 days develops a feeling of uncertainty, failure of reasoning and listlessness.

"arppamaṭā itaiyaṭuttu nāṅku kutti
araiyiṟaikkīḻ aṇiyanta maṇiyu mākum"

(Oṭimuṟivu - 32)

This varma is present 1/2 finger below the Naranguthi Varma says Verse (32) of odimurivu. The condition requires to be treated within 58 nazhigais. External treatment may be followed by the internal.

70. [1]*அணியந்தன் வர்மம் (அணிவர்மம்)*

விலகுமென்ற [1]அணியந்தன் வர்மங் கொண்டால்
மேதினியில் செய்குணத்தை விளம்பக் கேளு
பலமான சரீரமெல்லாம் விளரிக் குத்தும்
பரதவித்து அங்கமெல்லாம் பரிவாய் விம்மும்
குலமான நாழிகைதான் ஐம்பத் தொன்று
குறிகுணங்கள் அறிந்துநீ கூர்ந்து செய்து
நலமாக இருபுறமும் தடவி விட்டால்
நாடியே தீருமென்று நலம்சொன் னோமே. (75)

முன்சொன்ன அறியந்த வர்மத்தின் வேறுபட்டது ஆதலின் இதனை '*அணிவர்மம்*' என்று கொள்ளுவதே பொருந்துகிறது. வேறு சுவடிப்பாடமும் அணிவர்மம்' என்றே குறிக்கிறது.

மார்புப்பகுதியில் முலைக்கண்ணையடுத்து அமையும் அனுமான் வர்மத்திற்கு நேரே அக்குளின் அருகில் இடம்பெறுவது அணிவர்மம் என்பதைப் படம் விளக்குகிறது. ஆனால்,

"வாச்சுது வில்லுறுமி நாங்கு குற்றி
வகையான காலமிதில் விரல்நா லின்மேல்
காச்சுதே அணிவர்மம் ஆகும் பாரு"

என்று அணிவர்மத்தானத்தைச் சுட்டுகிறது வர்மக்கண்ணடி (30).

உடல் வெளுத்துக் குத்தலுங் குடைச்சலுமாகி நொந்து விம்மும் நிலையை உருவாக்குவதே இந்த வர்மத்தின் அறிகுறியாகும். ஐம்பத்தொரு நாழிகைக்குள் உடலின் முன்புறமும் பின்புறமும் நன்றாகத் தடவிவிட்டு இளக்கி மருந்து கொடுக்கக் குணமாகும்.

விளருதல்-வெளுத்தல். அங்கம் - உடல். பரிவு-இரக்கம், பரிதாபம். தடவுதல்-இளக்கல் முறையில் ஒருவகை.

70. Aṉiyantaṉ Varmam (Aṇi Varmam)

vilakumeṉṟa aṉiyantaṉ varmaṅ koṇṭāl
mētiṉiyil ceykuṇattai viḷampak kēḷu
palamāṉa carīramellām viḷarik kuttum
paratavittu aṅkamellām parivāy vimmum

1. அணிவர்மம் (இதுவேசரி)

kulamāṉa nāḻikaitāṉ aimpat toṉṟu
    kuṟikunaṅkaḷ aṟintuṇi kūrntu ceytu
nalamāka irupuṟamum taṭavi viṭṭāl
    nāṭiyē tirumeṉṟu nalamcoṉ nōmē (75)

As we have seen earlier 'Aniyantha' (Verse 74) it is proper to call this Varma 'Ani varmam'. Other texts too read the same. Varmakannadi (30) locates it 4 fingers above the Villurumi Kalam.

"vāccutu villuṟumi nāṅku kuṟṟi
    vakaiyāṉa kālamitil viralnā linmēl
kāccutē aṇivarmam ākum pāru" (Varmakkaṇṇāṭi -30)

The body becomes pale and there is pain and pricking sensation all over the body. Massaging of the front and the back may be done. Treatment internal within 51 nazhigais will give it complete cure.

அடங்கல் முறை

ஓமென்ற வர்மம்முப் பத்து நாலு
    உத்தமனே சொல்லிவிட்டேன் உண்மை யாகத்
தாமென்ற கடிகையது காலஞ் சொன்னேன்
    தப்பாமல் சொல்லிவிடக் கருவுஞ் சொன்னேன்
சீமென்று இருபுறமும் எடுத்தி ருத்திச்
    சிறப்பாக வாரியிரு புறம சைத்துக்
கூனென்ற அடங்கலது பார்த்துச் செய்யக்
    கொண்டவர்மம் இளகிப்பின் கூறக் கேளு. (76)

கழுத்துமுதல் குதம் ஈறாக நிலைபெறும் வர்மங்கள் முப்பத்து நான்கும் முறையாக விளக்கப்பெற்றன. (வர்மம் 37 முதல் 70 ஈறாக; அத்திச் சுருக்கி - சிறியது, பெரியது; வலம்புரி, இடம்புரி என்பன உட்பட பாட்டு எண் 42 முதல் 75 வரை.) இந்த முப்பத்து நான்கிற்குமுரிய கருப்பொருளாகிய பண்புகளும், அவை நிலைபெறும் கால அளவைகளும் வெளிப்படையாகக் கூறப்பெற்றன. அவ்வவற்றிற்குரிய அடங்கல் முறைகளை அறிந்து முறையாக இளக்குதல் வேண்டும். முதலில் வர்ம அடி கொண்டவரை எடுத்து இருத்துவது என்பதே சிறந்த முதல் முறையாகும். அவ்வாறு உட்காரச் செய்வதற்கு முன், பின் ஆகிய இரண்டு பக்கங்களிலுமாக அணைத்துப் பிடித்துத் தூக்கி இருத்துதல் வேண்டும். உடனே இரண்டு பக்கங்களிலுமாக உலுக்கி அசைத்துத் தடவுதல் முறையைக் கையாண்டு இளக்குதல் வேண்டும்.

கரு-உட்பொருள். அடங்கல்- இளக்குமுறைகளில் ஒன்று; மாற்றுவர்மங்களைக் கொண்டு இளக்குதல்.

The Methods of Aṭaṅkal

ōmeṉṟa varmammup pattu nālu
uttamaṉē collivittēṉ uṇmai yākat
tāmeṉṟa kaṭikaiyatu kālañ coṉṉēṉ
tappāmal collivitak karuvuñ coṉṉēṉ
cīmeṉṟu irupuṟamum eṭutti ruttic
ciṟappāka vāriyiru puṟama caittuk
kūṉeṉṟa aṭaṅkalatu pārttuc ceyyak
koṇṭavarmam iḷakippiṉ kūṟak kēḷu (76)

The varmas lying in the area between the neck and the buttocks have been described in detail. They are 34 varmas, (from 37 to 70) if taken separately the small, and the big or Idamburi and Valamburi.

Then from 42 to 72. These 34 have been discussed in detail. Their locations, resultant ailments and remedial treatment have also been explained. Their respective Adangal methods (remedial measures) have been detailed. First the injured person is held by his head and foot, and the body is given a few jolts. Massage follows.

முதுகில் வர்மத் தொகை

கூறியபின் ஒருபுறமே சொல்லி விட்டேன்
குணமாக மறுபுறமே கூறக் கேளு
வீறாக முதுகில்வர்மம் [1]பதினொன் றாகும்
விதமாகச் செய்குணமும் விவர மாக
மாறாத பதினாறு வர்மந் தன்னை
மைந்தனே சொல்லுகிறோம் மருவி நீயும்
தேறாகச் சொல்லுகிறேன் திறம தாகச்
செப்புகிறேன் அருகிருந்து அறிந்து பாரே. (77)

பா.வே. 1. பதினாறாகும் (இதுவேசரி)

உடம்பின் முன்புறம், பின்புறங்களாகிய மார்புப்பகுதி, முதுகுப்பகுதி ஆகிய இரண்டில், கழுத்து தொடங்கிக் குதம்வரையிலான மார்புப்பகுதியில் அடங்கியுள்ள முப்பத்து நான்கு வர்மங்கள் விளக்கப்பெற்றன. இனி முதுகுப்புறத்தில் நிலை பெறுவனவாகிய பதினாறு வர்மங்களுக்கான குணங்களையும் அவை நிலைபெறுங் காலங்களையும் கூறுகிறது இந்நூல். விளக்கவிருக்கும் பதினாறு வர்மங்களாவன:

1. அரளி
2. மென்மை
3. விநோதம்
4. அல்லி
5. உள்ளெல்லு
6. பின்னெல்லு
7. அரசவர்மம்
8. அழல்
9. உள்வர்மம்
10. பூணூல்
11. தட்டு
12. தப்பிறம்
13. மலப்பிறம்
14. தும்மி
15. பிணக்கு
16. எல்முடிச்சு

முதுகுப்பகுதியில் இடம் பெறுவனவாகப் பதினாறு வர்மங்களைச் சுட்டும் இந்நூல் முதல் பதினைந்து வர்மங்களின் குணத்தை மட்டுமே விளக்குகிறது. எல்முடிச்சு என்னும் இறுதி வர்மம் பற்றிய விளக்கம் நூலுள் இடம்பெறவில்லை.

ஒருபுறம் என்றது மார்புப்பக்கத்தையும் (முன்பக்கம்), மறுபுறம் என்றது முதுகுப்புறமாகிய பின்பக்கத்தையும் சுட்டின.

The list of Varmas on the Back


kūriyapin orupuramē colli vittēn
kuṇamāka marupuramē kūrak kēlu
viraka mutukilvarmam patinon rākum
vitamākac ceykuṇamum vivara māka

mārāta patināṟu varman taṉṉai
maintaṉē collukirōm maruvi niyum
tērākac collukiṟēṉ tiṟama tākac
ceppukiṟeṉ arukiruntu aṟintu pārē (77)

On the trunk of the body (part of body apart from head, arms and legs) on the anterior sides. There are 34 varmas which have been discussed. There are 16 varmas situated on the posterior part which will be discussed in the following verses:

1. Arali
2. Menmai
3. Vinodam
4. Alli
5. Ullellu
6. Pinnellu
7. Arasa Varmam
8. Azal
9. Ulvarmam
10. Poonul
11. Thattu
12. Thappiram
13. Malappiram
14. Thummi
15. Pinakku
16. Elmudichu

Of these 16 varmas lying on the back this text explains only 15. The last one viz. "Elmudichu" Varmam has not been explained. Orupuram here means the front (anterior) 'Marupuram' means the back (posterior).


2
10
3
12
5
4
11
7
6
8
13
16
14
9
15

(4) கழுத்துக்குக் கீழே மூலாதாரம் வரை
முதுகுப்புறம் - 16 வர்மங்கள்

1. அரளி வர்மம்
2. மென்மை வர்மம்
3. விநோத வர்மம்
4. அல்லி வர்மம்
5. உள்ளெல்லு வர்மம்
6. பின்னெல்லு வர்மம்
7. அரச வர்மம்
8. அழல் வர்மம்
9. உள் வர்மம்
10. பூணூல் காலம்
11. தட்டு வர்மம்
12. தப்பிற வர்மம்
13. மலப்பிற வர்மம்
14. தும்மி வர்மம்
15. பிணக்கு வர்மம்
16. எல்முடிச்சு (நூலில் இடம் பெறவில்லை)

(4) Below the neck
On the Back Side - 16 Varmas

1. Arali Varmam
2. Menmai Varmam
3. Vinōta Varmam
4. Alli Varmam
5. Ullellu Varmam
6. Pinnellu Varmam
7. Arasa Varmam
8. Alal Varmam
9. Ul Varmam
10. Pūnūl Varmam
11. Tattu Varmam
12. Tappira Varmam
13. Malappira Varmam
14. Tummi Varmam
15. Pinakku Varmam
16. Elmuticcu Varmam (Not in the text)

71. [1]அரளிவர்மம்

அறியவே [1]அரளிவர்மங் கொண்டு தானால்
அப்பனே வயிறூதும் [2]அன்னம் பேசும்
விறலியமுங் கொண்டநாள் விட்டு மாறும்
விரதநாள் அஞ்சதனில் வீக்க முண்டாம்
இரளியதிற் பனிகுளிரும் அதிக முற்று
இயல்பான [3]வயிற்கடுத்து விதன முண்டாம்
கரளியநல் நாழிகைதான் இருபத் தாறு
கடந்ததென்றால் கண்டுநீ கருத்தால் செய்யே. (78)

அரளி வர்மத்திற்கு அரணிவர்மம் என்ற பாடவேறுபாடும் காணப்பெறுகிறது. வயிறு ஊதி, அன்னத்தை வெறுக்கச்செய்து, வயிற்றுக்கடுப்பு மிகுந்து பெரும் வேதனையைத் தந்து மிகவும் அஞ்சத்தக்க உணர்வுகளை உண்டாக்கிவிடும் இந்த வர்மம், அரளுதல் (மிகவும் பயந்து அஞ்சுதல்) என்ற பொருளில் அரளி வர்மம் என்று கொள்ளுவது பொருந்தும். இந்த வேதனைகளோடு உடல் வீங்குதலும் குளிர்மிகுதலும் உண்டாகும்.

"அப்பாகேள் முதுகில்வர்மம் பதினா றாகும் ...
தப்பாமல் மார்பின்கீழ் அரளி வர்மம்"

என்று இந்த வர்மத்திற்கான இடத்தைச் சுட்டுகிறது ஒடிமுறிவு (37). மார்புக்கு நேர் பின்புறம் (முதுகில்) முதுகுத்தண்டினிடையே இடம் பெறுவது இந்த வர்மம். அதாவது பிடரி வர்மத்தையடுத்து ஒட்டைச் சாண் தூரத்தில் நிலைபெறுவதாகும்.

இதற்குரிய காலம் இருபத்தாறு நாழிகையாகும். அக்காலம் கழிந்தபிறகு மருத்துவம் செய்வது நல்லது.

அரளி - அரளுதல் - அஞ்சுதல், பயப்படுதல்.

71. Araḷi Varmam (Araṇi varmam)

ar̲iyavē araḷivarma koṇṭu tānāl
appan̲ē vayir̲ūtum an̲n̲am pēcum
vir̲aliyamuṅ koṇṭanāḷ viṭṭu mār̲um
viratanāḷ añcatan̲il vīkka muṇṭām
iraḷiyatir̲ paṇikuḷirum atika mur̲r̲u
iyalpān̲a vayir̲kaṭuttu vitan̲a muṇṭām

பா.வே. 1. அரணிவர்மம், 2. வெறுக்குமன்னம்,
3.வயிற்குளுந்து சஞ்சாரமுண்டாம்.

karaḻiyanal nāḻikaitāṉ irupat tāṟu
katantateṉṟāl kaṇṭuni karuttāl ceyyē (78)

Arali is also called Arani. Abdominal swelling, lack of interest in eating, abdominal pain are some of the symptoms of the affliction, this varma causes. This is named Arali as it causes "Araluthal" (screaming while in pain and distress).

The victim suffers an attack of chill too.

"appākēḷ mutukilvarmam patiṉā ṟākum

tappāmal mārpiṉkiḻ araḷi varmam" (Oṭimuṟivu - 37)

A little below the chest is this varmam i.e. on the back along the vertebrae at a distance of one span from the pidari varmam. This is to be treated within 26 nazhigais and only after this internal medication should start.

72. [1]மென்வர்மம்

செய்யவே [1]மென்வர்மங் கொண்டு தானால்
செப்புகிறேன் குணந்தன்னைத் தெளிவாய்க் கேளு
பய்யவே மூத்திரந்தான் அடைந்து சாயும்
பாலகனே வயிறூதி நீரே பொருமும்
துய்யவே தேகமதில் வீக்க முண்டாம்
தொகுப்பான சுவாசமது மேல்வ லிக்கும்
ஐயவே கடிகைநாள் ஆற தாகும்
அப்பனே கடருமென்றால் அறிந்து பாரு. (79)

"தப்பாமல் மார்பின்கீழ் அரணி வர்மம்
சாற்றுகிறேன் நாலிறைக்கீழ் மேன்மை வர்மம்"
(ஒடி முறிவு - 37)

என்னும் அடிகள் அரணி (அரளி) வர்மத்தின் கீழ் நான்கு விரலளவில் அமைவது மேன்மை வர்மம் என்பதை உணர்த்துகின்றன.

இந்த வர்ம நோய் ஏற்பட்டால் அடிக்கடி மூத்திரம் மிகுதியாகப் பெருகும். வயிறு ஊதி உடம்பெல்லாம் நீர்கசியத் தொடங்கிவிடும். உடலில் வீக்கமும் ஏற்படும். இந்தப் பலவகையான தொல்லைகளினால் மேல்மூச்சு மிகுதியாகி மார்பு வலிக்கும். மேல் மூச்சுவாங்கும். இத்தன்மையினாலேயே இது மேன்மை வர்மம்

பா.வே. 1.மேன்மை வர்மம்

என்று பெயர் பெற்றுள்ளது. ஆறு நாழிகைக் கடந்த பிறகு இந்த வர்ம நோய்க்கு மருத்துவம் மேற்கொள்ளவும்.

அடைந்துசாயும் – மிகுதியாக வெளியாகும். பொருமுதல் – (நீர்) ஊறிக்கசிதல்: மேல்வலிக்கும் - மேல்மூச்சு வாங்கும்.

72. Men varmam (Mēnmai Varmam)

ceyyavē menvarmaṅ kontu tānāl
ceppukirēn kunantannait telivāyk kēlu
payyavē mūttirantān ataintu cāyum
pālakanē vayirūti nirē porumum
tuyyavē tēkamatil vikka muntām
tokuppāna cuvācamatu mēlva likkum
iyavē katikaināl āra tākum
appanē katarumenrāl arintu pāru (79)

"tappāmal mārpinkil arani varmam
cārrukirēn nāliraikkil mēnmai varmam"

(Otimurivu - 37)

The above verse of odimurivu says that 4 fingers below Arali Varma lies menmai varma.

If this varma is affected there is frequent and excessive micturition. The abdominal distention is followed by swelling of parts of body. Due to this there is excessive palpitation which causes pain in chest. Hence the name. Treatment should start after six nazhigais.

73. விநோத வர்மம்

பாரடா விநோதவர்மங் கொண்டு தானால்
பாடுவேன் வருங்குணத்தைப் பகரக் கேளு
சீரடா தளர்ச்சியுடன் தாக முண்டாம்
செப்பிய கடிகைதான் ஏழு ரைக்குள்
கூறடா மரணமது வருவ தாகும்
கூறியநற் கடிகையது கடரு மானால்
[1]நாரடா விரதநாள் ஏழு மானால்
நலமாகச் செய்துவிடு மாளா தாமே. (80)

1. நாளடா கடிகையது எழுமூன் றுக்குள் நலமாகச் செய்துவிடு

விநோத வர்மம் என்னும் இந்த வர்மத்தானத்தில் அடி ஏற்பட்டால் ஏழரை நாழிகைக்குள் மரணம் ஏற்படக்கூடுமாதலின் இது இப்பெயர் பெறுகிறது.

முதுகுத்தண்டினிடத்து அரணிவர்மத்தின் நேர் கீழே மேன்மை வர்மத்திலிருந்து ஏழு விரல் அளவு கீழே நிலைபெறுவது விநோத வர்மம் ஆகும். இந்தத் தானத்தை ஒடிமுறிவு என்னும் நூல்,

"சாற்றுகிறேன் நாலிறைக்கீழ் மேன்மை வர்மம்
மப்பான தேழிறைக்கீழ் விநோத வர்மம்"

என்று சுட்டுகிறது. (37)

இந்த வர்ம நோய் ஏற்பட்டால் உடல் தளர்ச்சியடையும். தண்ணீர்த்தாகம் மிகுதியாகும். ஏழரை நாழிகை நேரங்கடந்து விட்டால் அதன்பிறகு ஏழு நாட்களுக்குள் வர்ம மருத்துவமுறைகளினால் குணமாக்கிவிடலாம்.

விநோதம் - புதுமை, பகைமை. மிகுந்த கெடுதியை உண்டாக்குவதால் இது ஒரு புதுமையான (விநோதமான) வர்மமாயிற்று.

73. Vinōta Varmam

pāratā vinōtavarmaṅ koṇṭu tāṉāl
pātuvēṉ varuṅkuṉattaip pakarak kēḷu
ciṟatā taḷarcciyutaṉ tāka muṇṭām
ceppiya kaṭikaitāṉ ēḻa raikkuḷ
kūṟatā maraṇamatu varuva tākum
kūṟiyaṉaṟ kaṭikaiyatu kaṭaru māṉāl
nāratā viratanāl ēḻu māṉāl
nalamākac ceytuviṭu māḷā tāmē (80)

Injury to this varma may cause death within 7½ nazhigais. Hence the name. Straight below the Arali Varmam close to the back bone (spinal cord) and seven fingers away from Menmai varmam lies vinodha varmam. The text odimurivu gives this description of its location in verse (37)

"cāṟṟukiṟēṉ nāliṟaikkīḻ mēṉmai varmam
mappāṉa tēḻiṟaikkīḻ vinōta varmam" (Oṭimuṟivu 37)

Damage to this varma weakens the body and makes the person feel extremely thirsty. If he survives the first 7½ nazhigais. He may then be medically treated successfully.

74. அல்லி வர்மம்

மாளாத அல்லிவர்மம் கொண்டு தானால்
மைந்தனே செய்குணத்தை வருந்திக் கேளு
தாளாது கொண்டவுடன் பனிகு ளிரும்பார்
தப்பாது நாழிகைதான் ஏழ தாகும்
மாளப்பா குறங்களியும் வயிறு மூதும்
[1]தப்பாத நாழிகையே அன்பத் தேழாம்
வாளப்பா மரணமது உண்டா மென்று
மாமுனிவர் தாமுரைத்த வார்த்தை யாமே. (81)

"மப்பான தேழிறைக்கீழ் விநோத வர்மம்
மகத்தான தஞ்சிறைக்கீழ் அல்லி வர்மம்"

என்னும் ஒடிமுறிவு நூல் (37) விநோதவர்மத்தின் கீழே ஐந்து விரற்கடை அளவில் அல்லிவர்மம் இடம்பெறுகிறது என்று உணர்த்துகிறது. ஆனால் விநோத வர்மத்தின் கீழே சிறிது வலப்புறமாக அமையும் உள்ளெல்லு வர்மத்தின் நேர்கீழே இரண்டு விரலளவில் அல்லி வர்மம் அமைவதாகப் படம் சுட்டுகிறது.

அல்லிவர்மத்தானத்தில் அடிபட்டால் குளிர் மிகுதியாகும். ஒலிக்குறி மிகுதியாகும். வயிறு ஊதிப்போகும். இந்த அறிகுறிகள் நீங்காது ஏழுநாழிகை கடந்து போனால் ஐம்பத்தேழு நாழிகைக்குள் மரணம் ஏற்படக்கூடும். இது முனிவர் வாக்காகும். பா.வே. தயவான நாழிகைதான் ஏழு பத்தில்.

74. Alli Varmam

mālāta allivarmam koṇṭu tāṉāl
maintaṉē ceykuṇattai varuntik kēḷu
tāḷātu koṇṭavuṭaṉ paṉiku ḷirumpār
tappātu nāḻikaitāṉ ēḻa tākum
māḷappā kuṟaṅkaḷiyum vayiṟu mūtum
tappāta nāḻikaiyē aṉpat tēḻām
vāḷappā maraṇamatu uṇṭā meṉṟu
māmuṉivar tāmuraitta vārttai yāmē. (81)

"mappāṉa tēḻiṟaikkīḻ vinōta varmam
makattāṉa tañciṟaikkīḻ alli varmam

(Oṭimuṟivu - 37)

பா.வே. 1. தயவான நாழிகைதான் ஏழு பத்தில்.

Below the vinoda varmam at a distance of five fingers lies the Alli Varmam. But the diagram suggests that below slightly to the right of vinoda varma lies the "ullellu" varma below which at a distance of two fingers lies the "Alli Varmam" Injury to Alli Varmam causes excessive coldness of body *Olikkuri.* The abdomen becomes flatulent. If not treated within 7 nazhigais then death occurs within 57 nazhigais so have said the saints.

75. [1]உள்ளெல்லு வர்மம்

[2]வாறான [1]உள்ளெல்லு வர்மங் கொண்டால்
மைந்தனே பனிகுளிரும் அனலு முண்டாம்
வீறான கபாலமது அடைத்து விம்மும்
மேதினியில் சேரிருமல் அயதி யுண்டாம்
கூறான சுவாசமது மேல்வ லிக்கும்
குணமான [3]நாழிகைநா ளாற தாகும்
மாறாத குணங்கள்நீ அறிந்து கொண்டு
மைந்தனே செய்துவிடு மாறுந் தானே. (82)

" மகத்தான தஞ்சிறைக்கீழ் அல்லி வர்மம்
ஒப்பான தொட்டையின்கீழ் ஊனெல் வர்மம்"

என்று இந்த வர்மத்தானத்தைச் சுட்டுகிறது ஒடிமுறிவு (37). அதாவது அல்லி வர்மத்தின் கீழே ஒரு ஒட்டைச்சாண் அளவில் இடம் பெறுவது உள்ளெல்லு வர்மம் (ஊனெல் வர்மம்) எனச் சுட்டுகிறது. ஆனால் அல்லி வர்மத்திற்கு இரண்டு விரல் அளவு மேலே உள்ளெல்லு இடம்பெறுவதாகப் படம் சுட்டுகிறது.

கபாலம் எனப்பெறும் தலையோடாகிய உள்ளெலும்பைப் பெரிதும் பாதிக்கும் செயலை உடைய வர்மமாதலின் இது உள்ளெல்லு வர்மம் எனப்பட்டது. ஊனெல்லு என்பது பொருந்தாததாகிறது. இந்த வர்மத்தானத்தில் அடி ஏற்பட்டால் தலையோடு முழுமையும் இறுகினாற்போன்று பெருங்கலக்கம் ஏற்படும். உடல் முழுமையும் நெருப்புபோலக் கொதிக்கக் குளிர் மிகுதியாகி நடுங்கும். தொடர்ந்து உண்டாகும் இருமலால் உடல் சோர்ந்து போகும். மேல் மூச்சு வாங்குதல் வெளிப்படையாகும். ஆறுநாழிகைக்குள் இதனை இளக்க முயற்சிசெய்ய வேண்டும். குணமாகும்.

பா.வே. 1. ஊனெல்லு வர்மம் 2. வாறானதூனெல்லு வர்மங்
3. நாழிகைதா னொன்ற தாகும்.

உள்ளெல்லு - காபால எலும்பு. அனல்- நெருப்பு, சூடு. சேர் இருமல்-தொடர்ந்து வரும் இருமல்.

75. Uḷḷellu varmam (ūṉellu varmam)

vāṟāṉa uḷḷellu varmaṅ kontal
maintaṉē paṉikuḷirum aṉalu muṇṭām
vīṟāṉa kapālamatu ataittu vimmum
mētiṉiyil cērirumal ayati yuṇṭām
kūṟāṉa cuvācamatu mēlva likkum
kuṉamāṉa nāḻikainā lāṟa tākum
māṟāta kuṉaṅkaḷni aṟintu kontu
maintaṉē ceytuviṭu māṟuṉ tāṉē (82)

makattāṉa tañciṟaikkīḻ alli varmam
oppāṉa toṭṭaiyiṉkīḻ ūṉel varmam (Oṭimuṟivu - 37)

Below the alli varma one span away lies the ullellu varmam. (Unel varmam). But the diagram shows that ullellu varmam is 2 fingers above the Alli varmam.

Injury to this varma causes extensive damage to the skull (ullellu means the skull bone). Hence the name ullelluvarma. There is a feeling of hardening of the skull. Temperature drops and as a result shivering develops and also coughing. Remedial treatment must be given within six nazhigais.

76. [1]பின்னெல்லு வர்மம்

தானான [1]பின்னெல்லு வர்மங் கொண்டால்
தப்பாத குணந்தன்னை உற்றுக் கேளு
மானென்று கொண்டவுடன் இரும லுண்டாம்
மருவியே செம்மையுண்டாம் வாட்டுந் தேகம்
கூனென்ற சத்தமது அடைக்கும் பாரு
குணமான நெஞ்சில்கபம் வலித்துக் குத்தும்
மானென்ற அழலுடனே இரத்த முண்டாம்
மாறெட்டுக் கடிகைசென்றால் மருவிச் செய்யே. (83)

பா.வே. 1. பின்னல் வர்மம்

உள்ளெலும்பாகிய கபாலத்தைப் பாதித்த வர்மத்தைப் போலப் பின் எலும்புகளைப் பாதிப்பதனால் ஏற்படும் நோய்களை அறிகுறியாக உள்ளது ஆதலின் இது பின்னெல்லு வர்மம் எனப்படுகிறது.

"ஒப்பான தொட்டையின்கீழ் ஊனெல் வர்மம்
ஒருநான்கு இறையின்கீழ்ப் பின்னல் வர்மம்"

(ஒடிமுறிவு - 37)

என்னும் அடிகள் உள்ளெல்லு வர்மத்திற்கு நான்கு விரல் அளவு கீழே உள்ளது பின்னல் வர்மம் (பின்னெல்லு) எனச் சுட்டுகின்றன. ஆனால் படமோ அல்லிவர்மத்திற்கு ஒட்டைச்சாண் அளவு கீழே பின்னலைச்சுட்டிக் காட்டுகிறது.

இந்த வர்மத்தில் நோய் ஏற்பட்டால் உடனே இருமலை உண்டாக்கும். உடல் கன்த்துச் சிவந்து போகச் செய்து பெருந்துன்பத்தை உருவாக்கும். ஒலி வெளிவ்ராது குரலை அடைக்கச் செய்யும். நெஞ்சில் கபத்தை உருவாக்கி உடல் வலியையும் குத்தலையும் ஏற்படுத்தும். உடல் நெருப்பாய்க் கொதிக்க (வாயில்) இரத்தம் கக்கச் செய்யும். எட்டுநாழிகை கடந்தபிறகு மருத்துவம் செய்ய நல்ல பலன் கிடைக்கும்.

பின்எல்லு - பின்பக்க எலும்பு. செம்மை - செந்நிறம். சத்தம்-ஒலி, குரல்.

76. Pinnellu Varmam

tānāna pinnellu varmaṅ kontal
tappāta kunantannai urruk kēlu
mānenru kontavutan iruma luntām
maruviyē cemmaiyuntām vāttun tēkam
kūnenra cattamatu ataikkum pāru
kunamāna neñcilkapam valittuk kuttum
mānenra alalutanē iratta muntām
māretṭuk katikaicenrāl maruvic ceyyē (83)

Just as Damage to the skull gives its varmam the name *Ullellu* so does damage to back bone gives it the name *pinnellu.*

oppāna tottaiyinkil ūnel varmam
orunānku iraiyinkil pinnal varmam

(Otimurivu - 39)

According to this verse 4 fingers below the ullellu varmam lies the

pinnellu varma. But the diagram shows its location one span below the alli varmam.

Injury to this varma makes the victim cough incessantly and the body inflate. Voice is affected. Accumulation of phlegm in the chest causes pain of body. The body becomes very hot and the person vomits blood. Treatment given after 8 nazhigais ensures recovery.

77. அரச வர்மம்

செய்யவே அரசவர்மங் கொண்டு தானால்
    செப்புகிறேன் குணந்தன்னை யறிந்து கேளு
பையயவே [1]மாறுவதில் செழிக்க முண்டாம்
    பாடுகிறேன் பனிகுளிரும் அதிக மாகும்
நையயவே [2]சர்த்தனுண்டாம் அதிசாரம் உண்டாம்
    நலமான நாழிகைதான் [3] ஐம்பத் தொன்று
தையயவே செய்யாதே விலகி நில்லு
    தொகுப்பாக இதையறிந்து தொகுத்துப் பாரே. (84)

"பின்னலின் நாலிறைக்கீழ் அரச வர்மம்" என்கிறது ஒடிமுறிவு (38). (பின்னல்- இங்குப்பின்னெல்லு எனப்படுவது) ஆனால் படம் பின்னெல்லின் சிறிது மேலே சுட்டுகிறது. அதாவது முதுகுத்தண்டையொட்டிப் பின்னெல்லின் சிறிது மேலே எதிர்புறத்தில் அமைவது அரச வர்மமாகும் என்பதாகச் சுட்டுகிறது. பலவகை நோய்களின் முற்றிய நிலையாகிய சர்த்திகுன்மத்தை உண்டாக்கும் வர்மமாதலின் இது அரச வர்மம் எனப்பட்டது.

இந்த வர்மத்தானத்தில் அடிபட்டால் சுரமும் பேதியும் சேர்ந்த அதிசார நோயை உண்டாக்கும். அந்நோய் முற்றி மலங்கட்டுதல், திமிர் உண்டாதல், பலங்குறைதல், நரம்பு வீங்குத்ல ஆகிய குணங்களையுடைய சர்த்தி என்னும் குன்ம நோயாகமாறும். மிகுதியாகக் குளிருதல், பாதம் வீங்கிப்போதல் ஆகிய அறிகுறிகளும் தோன்றும். ஐம்பத்தொரு நாழிகைவரை பொதுவான இளக்குமுறைகளை மட்டுமே கையாண்டு, இந்த நாழிகை கழிந்தபின் மருத்துவம் மேற்கொள்ள வேண்டும்.

செழிக்கம் – தடை சர்த்தன் – சர்த்திகுன்மநோய்

---

1. பாதமதில் வீக்கமுண்டாம்.
2. சர்த்திலதி சாரம் காணும்
3. முப்பத்தொன்று.

77. Araca Varmam

ceyyavē aracavarmaṅ koṇṭu tānāl
ceppukiṟēṉ kuṇantaṉṉai yaṟintu kēḷu
paiyyavē māṟuvatil ceḷikka muṇṭām
pāṭukiṟēṉ paṇikuḷirum atika mākum
naiyyavē carttaṉuṇṭām aticāram uṇṭām
nalamāṉa naḷikaitāṉ aimpat toṉṟu
taiyyavē ceyyātē vilaki nillu
tokuppāka itaiyaṟintu tokuttup pārē (84)

"piṉṉaliṉ nāliṟaikkiḻ araca varmam" (Oṭimuṟivu - 38)

Odimurivu 38 states that Arasa Varmam is located a little below pinnellu. But the figure shows it above pinnellu. Slightly above the pinnellu adjacent to the spinal cord on the opposite side lies the Arasa Varmam. As it causes a sarthagunam an advanced state at which culmination of several ailments takes place. Hence it is called Arasa Varmam.

Injury to this varma causes fever, and loose motion, it may at times cause constipation. It causes numbness, and weakness of limbs. It leads to the gulma disease called sarthi. Swelling of the feet is also noticed. Remedial tretment (external) can be given intially. After 51 nazhigais internal medication can start.

78. அழல் வர்மம்

தொகுப்பான அழல்வர்மங் கொண்டு தானால்
சொல்லுகிறேன் அழல்மீறி உடல்ம யங்கும்
வகுப்பான இழுப்பினிலே அதிக மாகும்
வகையான நாழிகைதான் ஏழ தாகும்
தொகுப்பான அழல்மீறி சன்னி யுண்டாம்
சொல்லுகிறேன் கடிகையது கடந்து தானால்
வகுப்பான அடங்கலது செய்து பார்த்து
வகையான ஏறண்டத் தெண்ணெய் கொள்ளே. (85)

உடல் முழுமையும் நெருப்புபோலக் கொதிப்பேறி மயக்கம் உண்டாகும் நிலையை உருவாக்கும் வர்மம் ஆதலின் இது 'அழல் வர்மம்' எனப் பெறுகிறது. இந்தக் காரணப் பெயரைக்குறித்து 'அழல்மீறி உடல்மயங்கும்' என்று இந்தப் பாடலே சுட்டிக் காட்டுகிறது.

இந்த வர்மம் அரசவர்மத்தின் கீழ் ஐந்து விரலளவில் முதுகுத்தண்டைச் சார்ந்து இடம் பெறுவதாகும்.

"பின்னலின் நாலிறைக்கீழ் அரச வர்மம்
பிசகாமல் அஞ்சிறைக்கீழ் அழல்வர் மந்தான்"

(ஒடிமுறிவு - 38)

அழல் வர்மம் என்னும் இந்த வர்மத்தானத்தில் அடிபட்டால் உடம்பு மிகவும் சூடேறி மயங்குவதோடு உடல் சக்தி இழந்து சன்னியும் உண்டாகிவிடும். ஏழு நாழிகை கழிந்தபிறகு இளக்கு முறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இந்த வர்மநோய்க்கு ஆமணக்கெண்ணெயை, (ஏரண்டத்தெண்ணெய்) உள்ளுக்குக் கொடுப்பது நல்லது.

அழல்-நெருப்பு, சூடு. இழப்பு - உடல்பலம் இழத்தல். கடந்துதானால்-கடந்தது ஆனால், (காலம்) கடந்தால். ஏரண்டத்தெண்ணெய் - ஆமணக்கெண்ணெய் (விளக்கெண்ணெய்).

78. Alal Varmam

tokuppāna alalvarman kontu tānāl
collukirēn alalmiri utalma yankum
vakuppāna ilappinilē atika mākum
vakaiyāna nalikaitān ēla tākum
tokuppāna alalmiri canni yuntām
collukirēn katikaiyatu katantu tānāl
vakuppāna atankalatu ceytu parttu
vakaiyāna ērantat tenney kollē (85)

As this varma causes a terrible rise in temperature which leads to giddiness it is named Azhal Varmam. (Azhal - fire)

This varma lies 5 fingers below the Arasa Varmam close to the spinal cord

"pinnalin nāliraikkil araca varmam
picakāmal añciraikkil alalvar mantān"

(Otimurivu - 38)

Injury may even lead to delirium. Treatment should start only after the first 7 nazhigais. Castor oil can be prescribed as a medicine to be consumed by the victim.

79. [1]உள்வர்மம்

உண்டான [1]உள்வர்மங் கொண்டு தானால்
உத்தமனே செய்குணத்தை உரைக்கக் கேளு
உண்டான பனிகுளிரும் அதிக முற்று
மேல்வலித்து வாயில்பதை நுரையுந் தள்ளும்
குன்றான சன்னியொடு சீதம் கூடி
கூட்டியே மாட்டிவிடும் மரண மாகும்
[2]சுண்டான கடிகைபத் தொன்ப தாகும்
கழியுமென்றால் செய்துவிடு கனமாய்த் தானே. (86)

அழல் வர்மத்தின் கீழே நான்கு விரலளவில் இடம்பெறுவது உள்வர்மமாகும்.

" பிசகாமல் அஞ்சிறைக்கீழ் அழல்வர் மந்தான்
உள்ளெல்லு நாலிறைக்கீழ்" (ஒடிமுறிவு - 38)

படம் இந்த வர்மத்தைச் சுட்டவில்லை.

உள்வர்மம் என்னும் இந்த வர்ம நோய் ஏற்பட்டால் மிகுதியான குளிர் உண்டாகும்; மூச்சுத்திணறியநிலையில் மேல் வலிப்பும் ஏற்படும்; வாயில் நுரை தள்ளும்; சன்னியும் சீதமும் உண்டாகும். பத்தொன்பது நாழிகை கழிந்தபிறகு இளக்க முற்படுவது பயன்தரும்.

தலையின் உள்ளுறுப்புகளுள் முதன்மைவாய்ந்ததாகிய மூளையைப் பெரிதும் பாதிக்கும் வர்மமாதலின் இது 'மூளைவர்மம்' எனப்படுகிறது. இந்த நூல் உள் வர்மம் என்று கூறுகிறது.

79. Uḷ Varmam

uṇṭāna uḷvarmaṅ koṇṭu tānāl
uttamaṉē ceykuṇattai uraikkak kēḷu
uṇṭāna paṉikuḷirum atika muṟṟu
mēlvalittu vāyilpatai nuraiyun taḷḷum
kuṉṟāna caṉṉiyoṭu cītam kūṭi
kūṭṭiyē māṭṭiviṭum maraṇa mākum
cuṇṭāna katikaipat toṉpa tākum
kaḻiyumeṉṟāl ceytuviṭu kaṉamāyt tāṉē (86)

"picakāmal añciṟaikkīḻ aḻalvar mantāṉ
uḷḷellu nāliṟaikkīḻ" (Oṭimuṟivu - 38)

பா.வே. 1. மூளைவர்மம். 2. கண்டாயோ கடிகையது ஒன்பதாகும்.

Four fingers right below the Azhal Varmam this varmam is situated (odimurivu 38). The figure provided does not indicate this varmam.

In case of this varma the afflicted person develops severe cold and suffers from hard breathing. He may even have an epileptic fit. Frothy discharge through the corner of the mouth is noticed.

Treatment should be given only after 19 nazhigais. As the affliction paralyses the brain very much the varmam has been named as Ulvarmam (ul meaning the inside of the head (brain). Ulvarma, when injured, causes excessive chillness. The victim gasps for breath; goes into convulsions; frothy discharge from the mouth is noticed. The condition may lapse into a delirious one. Treatment must start after 19 nazhigais to be successful. As it causes damage to the important organ, the brain, it is also called Moolai Varmam (Moolai means Brain).

80. *பூணூல் காலம்*

தானான பூணுநூல் காலங் கொண்டால்
    தப்பாது செய்குணத்தைச் சாற்றக் கேளு
கோனான அழலுடனே இரும லுண்டாம்
    தப்பாது மயங்கியுடன் மாறும் (பாரு)
மானான மண்டையிலே [1]விதன முண்டாம்
    மாறியே உள்விறைத்து மயங்கு மப்பா
கோனான குறிகளைநீ அறிந்து கொண்டு
    கூறியே செய்துவிடு குணமுண் டாமே. (87)

முதுகுப்புறத்தில் இடம்பெறும் வர்மங்களுள் ஒன்று பூணூல் காலம் 'காணரிய திவளைநீர் முதுகிற் பூணூல்' (வர்ம பீரங்கி - 15)

"முன்னெல்லு ஒட்டையின்கீழ் ஆணிக் காலம்
    மூன்றிறையில் பூணூலும் ஒழிந்து பாரு" (ஒடிமுறிவு - 38)

என்பன முன்னெல்லுவர்மம், ஆணிக்காலம் இவற்றையடுத்து ஆணிக்காலத்திலிருந்து மூன்று விரல் கீழே அமைவது பூணூல் வர்மம் என்பதைப் புலப்படுத்துகின்றன.

உடலில் சூடு மிகும். வறட்டு இருமல் ஏற்படும். மயக்கம் உண்டாகும்.

பா.வே. 1. சினத்துக்காணும்.

மண்டையில் மிகுதியான வலியால் வேதனையுண்டாகும். உடல் விறைத்துச் சோர்வடையும். இக்குறிகள் பூணூல் காலத்தில் . அடிபட்டவர்களுக்கு ஏற்படக்கூடும்.

விதனம் – வேதனை. விறைத்தல் – மரத்துப்போதல், முறைப்பாய்நிற்றல்.

80. Pūṇūl kālam

tāṉāṉa pūṇuṇūl kālam koṇṭāl
    tappātu ceykuṇattaic cāṟṟak kēḻu
kōṉāṉa aḻaluṭaṉē iruma luṇṭām
    tappātu mayaṅkiyuṭaṉ māṟum (pāru)
māṉāṉa maṇṭaiyilē vitaṉa muṇṭām
    māṟiyē uḷviṟaittu mayaṅku mappā
kōṉāṉa kuṟikaḷaiṉi aṟintu koṇṭu
    kūṟiyē ceytuviṭu kuṇamuṇ ṭāmē (87)

This is one the Varmas based in the back.

“kāṇariya tivaḷainīr mutukiṟ pūṇūl” (Varma piraṅki - 15)

“muṉṉellu oṭṭaiyiṉkīḻ āṇik kālam
    mūṉṟiṟaiyil pūṇūlum oḷintu pāru” (Oṭimuṟivu - 38)

It is close to the munnellu and anikalam, and 3 fingers below the latter.

Temperature rises : giddiness and head ache is experienced. The victim feels extremely tired.

81. தட்டுவர்மம்

தட்டுவர்மங் கொண்டிடுகில் குணத்தைக் கேளு
    தப்பாமல் அழலேறி உடனே மாறும்
கட்டியதோர் விரதநாள் ஏழ தாகும்
    குறையான நாழிகையும் இருப தாகும்
கட்டமாய்ப் பனிகுளிரும் அழலு முண்டாம்
    கனமான [1]இளைப்பிருமல் சன்னி கூடும்
வட்டமாய் விரதநாள் இருபத் தெட்டு
    மைந்தனே கடருமென்றால் வருந்திச் செய்யே. (88)

பா.வே. 1. குழைப்பிருமல்

இந்தத் தட்டுவர்மம் என்னும் பெயர் பொதுவானது. குறிப்பிட்ட ஒரு வர்மத்தானத்தில் இடம்பெறும் தனி வர்மம் அன்று. தொடுவர்மம், படுவர்மம் என்பன போன்ற ஒரு வகையே தட்டுவர்மம் என்பது. தட்டுவர்மங்களின் பொதுப் பண்புகள் இங்கே கூறப்பட்டுள்ளன.

தட்டுவர்மநோய் கொண்டால் உடல் சூடாகிக் காண்பதும், உடனே சில்லிடுவதும் அடிக்கடி ஏற்படும். சூடுகாண்பது போலவே மிகுதியான குளிரும் ஏற்படுவதுண்டு. கோழை மிகுந்து மூச்சுத் திணறி இருமல் உண்டாகும். சன்னியும் ஏற்படும். தட்டுவர்மங்கள் ஏற்பட்டால் இருபது நாள் முதல் இருபத்தெட்டு நாள் வரை, மருத்துவம் செய்து குணப்படுத்தக் கூடிய நாட்களாகும். ஆயினும் முதல் ஏழு நாட்கள் கடுமையான பாதிப்புகளுக்கு உரியவையாகும்.

விரதநாள் - உரியநாள், நியமநாள். இளைப்பிருமல் - மூச்சுத் திணறலுடன் கூடிய இருமல் (ஆஸ்துமா) இளகி இளகி இருமுதல். கடருதல்-கடத்தல்.

81. Taṭṭu Varma

taṭṭu varmaṅ koṇṭiṭukil kuṇattaik kēḷu
    tappāmal aḻalēṟi uṭaṉē māṟum
kaṭṭiyatōr viratanāḷ ēḻa tākum
    kuṟaiyāṉa nāḻikaiyum irupa tākum
kaṭṭamāyp paṉikuḷirum aḻalu muṇṭām
    kaṉamāṉa iḷaippirumal caṉṉi kūṭum
vaṭṭamāy viratanāḷ irupat tettu
    maintaṉē kaṭarumeṉṟāl varuntic ceyyē (88)

The name 'Thattu' varma is a general one, and not the name of a particular varma. It generally means varmas such as Thoduvarmam, padu varmam. They are described here.

When a Thatu varma is affected temperature shoots up and comes down suddenly. There will be accumulation of phlegm followed by wheezing and coughing. Medical treatment should include drugs to be consumed and this should be completed within a period of 27 or 28 days. The first seven days are very critical days.

82. தப்பிற வர்மம்

வருந்தியே தப்பிறவர்மங் கொண்டு தானால்
    மைந்தனே சொல்லுகிறேன் மருவிக் கேளு
அருந்தியே அயதியுடனேம மாறும்

அப்பனே நாழிகைதான் ஏழுக் குள்ளே
வருந்தவே பனிகுளிரும் அழலு முண்டாம்
[1]மாறுமப்பா நாழிகைதான் ஏழுக் குள்ளே
அருந்தவே அடுத்துவரும் சன்னி சீதம்
அப்பனே அசாத்தியமென் றறிய லாமே. (89)

பரந்த வலிய எலும்பாகிய முதுகெலும்பின் கீழே ஆறுவிரல் அளவில் நிலை பெறுவது தப்பிறவர்மம் எனப்படுகிறது.

"வன்னெல்லின் ஆறிறைக்கீழ் தப்பிற வர்மம்" (ஒடிமுறிவு - 38)

தப்பிற வர்மத்தானத்தில் அடிபட்டால் உடன் சோர்வடைந்து செயல் முறைகளெல்லாம் மாறிப்போகும். உடலில் மிகுதியான குளிரும் தணல் வீசும் தன்மையும் காணப்பெறும். சீதமும் சன்னியும் மிகவிரைவில் தோன்றும். இந்தக் குறிகுணங்கள் அடிக்கடி மாறித்தோன்றும். ஏழு நாழிகைக்குள் இம்மாற்றங்கள் நிகழும். இந்த வர்மம் அசாத்திய நிலை வாய்ந்தது.

நேமம் - நியமம், முறையானவை.

82. Tappira Varmam

varuntiyē tappiravarman koṇṭu tāṉāl
maintaṉē collukiṟēṉ maruvik kēḷu
aruntiyē ayatiyuta nēma māṟum
appaṉē naḻikaitāṉ ēḻuk kuḷḷē
varuntavē paṉikuḷirum aḻalu muṇṭām
māṟumappā nāḻikaitāṉ ēḻuk kuḷḷē
aruntavē atuttuvarum caṉṉi cītam
appaṉē acāttiyameṉ ṟaṟiya lāmē (89)

This varma is located in the zone of back bone -

'vaṉṉellin aṟiṟaikkīḻ tappiṟa varmam (Odimurivu - 38)

(verse - odimurivu - 38) Injury to the thappira varma renders the limbs immobile. The body either hots up or cools down excessively. The condition may develop into a delirious one. These symptoms keep changing now and then. These changes disappear within 7 nazhigais. The condition is incurable.

பா.வே. 1. மைந்தனே மாறுமடா குறிகள் எல்லாம் (இந்தப் பாடமே சரியாகும்)

83. மலப்பிற வர்மம்

அறியவே மலப்பிற வர்மங் கொண்டால்
 அப்பனே வயிறூது மூத்திரம் வீழும்
குறையான பனிகுளிரும் அதிக முற்று
 கூடியே மலமடைத்துக் குன்ம மானால்
விறையான தேகமதை விரும்ப வேண்டாம்
 விரண்டோடி அசாத்திய மென்று சொல்லில்
நிறையான கடிகையது எட்ட தாகும்
 நிச்சயமாய் விலகியே அகல நில்லே (90)

"வன்னெல்லின் ஆறிறைக்கீழ் தப்பிற வர்மம்
 மாத்திரையாம் ஒட்டையின்கீழ் மலப்பிற வர்மம்"
(ஒடிமுறிவு - 38)

என்பது முதுகெலும்பின் கீழ் இடம்பெறும் தப்பிறவர்மத்தையடுத்து ஒரு ஒட்டைச்சாண் அளவு கீழே இடம் பெறுவது மலப்பிற வர்மமாகும் என்பதை உணர்த்துகிறது.

மலப்பிற வர்மத்தானத்தில் அடிபட்டால் முதலில் வயிறு ஊதிப்போகும். மூத்திரம் மிகுதியாகக் கழியும். மிகுதியாகக் குளிரும். மலங்கட்டும். இக்குறிகள் மிகுதியாகிக் குன்ம நோயாகவும் மாறிவிடும். அப்போது வயிறு பொருமுதல் முதலான அறிகுறிகள் தோன்றும். உடல் விறைத்துப்போகும். எட்டு நாழிகைக்குள் இக்குறிகள் மிகுந்து காணப்பட்டால் அது அசாத்தியநிலையேயாகிவிடக் கூடும்.

ஊதுதல் – உப்புதல், வீங்குதல். மலம் - அழுக்கு, கழிவு. குன்மம் - குன்மநோய், வயிற்றுவலி.

83. Malappiṟa Varmam

aṟiyavē malappiṟa varmaṅ koṇṭāl
 appaṉē vayirūtu mūttiram vīḻum
kuṟaiyāṉa paṉikuḷirum atika muṟṟu
 kūṭiyē malamaṭaittuk kuṉma māṉāl
viṟaiyāṉa tēkamatai virumpa vēṇṭām
 viraṇṭōṭi acāttiya meṉṟu collil
niṟaiyāṉa kaṭikaiyatu eṭṭa tākum
 niccayamāy vilakiyē akala nillē (90)

"vaṉṉellin āṟiṟaikkīḻ tappiṟa varmam
 māttiraiyām oṭṭaiyiṉkīḻ malappiṟa varmam"
(Oṭimuṟivu - 38)

This lies at a distance of one span from thappira varma which is near the back bone. There is increased micturition, excessive chillness of body and also constipation. These symptoms may increase and may lead to kunma condition. The victim may suffer from severe colic and sweat. If the condition turns for worse it may prove incurable.

84. தும்மி வர்மம்

நில்லேநீ தும்மிவர்மங் கொண்டு தானால்
நிச்சயமாய்ச் செய்குணத்தை நிகழ்த்தக் கேளு
சில்லெனகொட் டாவிவிட்டுத் தும்ம லுண்டாம்
சிறப்பான வயிறூதும் வாயு விம்மும்
கல்லெனவே நாழிகைதா னஞ்சுக் குள்ளே
கட்டுடனே செய்துவிடு கருத்த னாமே
நில்லெனவே கடிகையது கடரு மானால்
நிச்சயமாய் அசாத்திய மாகுந் தானே. (91)

கொட்டாவிவிட்டுத் தும்முதலே முதல் அறிகுறியாதலின் இந்த வர்மம் தும்மிவர்மம் என்று கூறப்பெறுகிறது. மலப்பிற வர்மத்தின் கீழ் ஒரு ஓட்டைச்சாண் அளவில் நிலைபெறுவது தும்மி வர்மமாகும்.

"மாத்திரையாம் ஓட்டையின்கீழ் மலப்பிற வர்மம்
மாத்திரையாம் ஓட்டையின்கீழ் தும்மிக் காலம்"
(ஒடிமுறிவு - 39)

தும்மி வர்மநோய் கொண்டால் கொட்டாவியும் தும்மலும் தொடர்ந்து ஏற்படுவதோடு வயிறும் ஊதிப்போகும். வாயு மிகுதியாகும். இதனை ஐந்து நாழிகைக்குள் இளக்குதல் வேண்டும். இல்லையேல் அசாத்தியநிலையை அடைந்து விடக்கூடும்.

"சேருவார் தும்மியென்ற காலங் கொண்டால்
செகமதனி லடிக்கடியே தும்மல் உண்டாம்
பாருமேநாசி கருகருக்கும் நீரும் பாயும்
பாயுமடா ரத்தமதும் மூக்கி னூடே"
(தொடுவர்மத்திரட்டு - 96)

என்பனவும் தும்மிவர்மத்தின் குணங்களாகின்றன.

தும்மி - தும்முதல், தும்மல் என்னும் செயலால் வந்த பெயர்.

84. Tummi Varmam

nillēni tummivarmaṅ koṇṭu tāṉāl
niccayamāyc ceykuṇattai nikaḻttak kēḷu
cillenakoṭ tāvivittut tumma luṇṭām
ciṟappāṉa vayirūtum vāyu vimmum
kalleṉavē nāḻikaitā ṉañcuk kuḷḷē
kaṭṭutaṉē ceytuviṭu karutta ṉāmē
nilleṉavē kaṭikaiyatu kaṭaru māṉāl
niccayamāy acāttiya mākuṉ tāṉē (91)

Yawning and sneezing are the first symptoms which immediately develop. Hence the name. This varma lies one span below the Malappira varma.

"māttiraiyām oṭṭaiyiṉkīḻ malappiṟa varmam
māttiraiyām oṭṭaiyiṉkīḻ tummik kālam" (Oṭimuṟivu - 39)

flatulence of abdomen is the ailment which has to be treated within 5 nazhigais, failing which it becomes incurable.

"cēruvār tummiyeṉṟa kālaṅ koṇṭāl
cekamataṉi laṭikkaṭiyē tummal uṇṭām
pārumēṉāci karukarukkum nīrum pāyum
pāyumaṭā rattamatum mūkki nūṭē"

(Toṭuvarmattiraṭṭu - 96)

Discharge of water through nose and bleeding could also be noticed.

85. பிணக்கு வர்மம்

தானான பிணக்குவர்மங் கொண்டு தானால்
தப்பாமல் செய்குணத்தைச் சாற்றக் கேளு
கோனாகக் கொண்டவுடன் குழைந்து வீழும்
[1]பிசகாமல் தாரையிறங் கியேஓட் டாது
மானான மலசலங்கள் அடைத்துக் கொள்ளும்
மைந்தனே செயநீரு மருகல் தீரும்
தேனாகத் தீர்ந்திடுகில் தெளிவே றாது
செப்புகிறேன் இந்தவர்மந் திடம்சொன் னோமே. (92)

பா.வே. 1. குணமாகத் தாரைநடு விலகி நிற்கும்.

தும்மி வர்மத்தின் கீழேயும், முதுகுத்தண்டின் இறுதியிலும் இடம் பெறுவது பிணக்குவர்மம் ஆகும். இந்த அமைப்பு,

"மாத்திரையாம் ஒட்டையின்கீழ் தும்மிக் காலம்
மருவியே பிணக்குவர்மம் மைந்தா சொல்வேன்"

(ஒடிமுறிவு - 39)

என்று மட்டுமே குறிப்பிடப்படுகிறது. தாரை என்னும் நடுநாடியின் உச்சியே முதுகுத்தண்டின் இறுதியாதலின் நடுநாடியின் உச்சியே இந்த வர்மத்தானம் எனலாம். இந்த வர்மத்தில் அடிபட்டால் அந்த நடுநாடியே சற்று விலகி ஒதுங்கிநிற்கும் என்பர். இதனாலேயே இது பிணக்கு வர்மம் எனப்படுகிறது.

பிணக்கு வர்மநோய் ஏற்பட்டவுடன் நடுநாடியானது சற்றுக்கீழ் இறங்கி விலகி ஒட்டாமல் நிற்பதனால் நோய் கொண்டவர் சுருண்டு விழுவர். மலசலங்கள் கட்டிப்போகும். சிறுநீர் கட்டுவதோடு சுரத்தில் சிறிது சிறிதாகக் குறைந்து அற்றுப்போகும். சிறுநீர்சுரத்தல் அற்றுப் போகுமாயின் உடல் தெளிவடையாது; அசாத்தியநிலையை அடைந்துவிடும்.

பிணக்கு - மாறுபாடு. தாரை - நடுநாடி. செயநீர் - சிறுநீர் அருகல்-குறைதல், சுருங்குதல். தெளிவு - தேற்றம், தேறுதல். திடம்-பலமடைதல், இயலாநிலை பெறுதல்.

85. Piṇakku Varmam

tanānā piṇakkuvarmam koṇṭu tāṉāl
tappāmal ceykuṇattaic cārrak kēḷu
kōṇākak koṇṭavutaṉ kuḻaintu viḻum
picakāmal tāraiyiṟaṅ kiyēoṭ tātu
māṉāṉa malacalaṅkaḷ aṭaittuk koḷḷum
maintaṉē ceyaṉīru marukal tīrum
tēṉākat tīrntiṭukil teḷivē ṟātu
ceppukiṟēṉ intavarmam tiṭamcoṉ ṉōmē (92)

Below the 'thummi' varma at the base of the spinal cord is the pinakku varma.

"māttiraiyām oṭṭaiyiṉkīḻ tummik kālam
maruviyē piṇakkuvarmam maintā colvēṉ"

(Oṭimuṟivu - 39)

The tip of the nerve tharai is at the base of the spinal cord and can be said to be the location of this Varma. Injury to this varma

may cause the shifting of the nerve centre itself and as it lies apart it is called pinakku (change of place).

The nadu nadi moves a little away and settles down and as such causes the victim to crumble and fall down. He ceases to pass urine and motion. He has fever too. If the condition remains untreated it grows into an incurable one.

முதுகுவர்ம அடங்கல்

சொன்னோமே முதுகில்வர்மம் பதினா றுந்தான்
　　தொகுப்பாகச் சொல்லிவிட்டேன் தொகுத்துப் பாரு
பின்னேநீ எடுத்திருத்திக் கைபி ணைத்துப்
　　பிசகாமல் முதுவரியி லேந்திப் பின்பு
முன்னேகேள் இடவலவும் திரிச்சுக் கெட்டி
　　விசகட்டி இருபுறமும் சவட்டி விட்டு
முன்னேயே சொன்னதொரு [2]பத்து மிட்டால்
　　[3]முக்கியமாய்த் தீருமிது உற்றுப் பாரே. (93)

முதுகுப்பகுதியில் இடம்பெறும் பதினாறு வர்மங்கள் (இந்நூலில் பதினைந்து மட்டுமே) இங்கு விளக்கம் பெற்றன. இந்தப் பதினாறு வர்மங்களுக்கும் பொது வகையான இளக்கு முறைகள் சிலவற்றைக் குறிப்பிடலாம். இளக்கு முறைகளுள் முதல் நிலையான அடங்கல் முறைகளிலும் இந்தப் பதினாறுக்கும் பொதுவான சிலவற்றைக் குறிப்பிடலாம் அவை –

வர்ம அடிபட்டவரை அணைத்துத்தூக்கி நிலையாகச் சமமான தரையில் உட்காரவைக்க வேண்டும். தூக்கும்போது அவருடைய இரண்டு கைகளையும் தூக்குவோர் தம் முதுகுப்புறத்தில் அணைத்துப் பிடித்துக் கொள்ளுமாறு செய்ய வேண்டும். கீழே உட்காரவைத்த பின்பு அக் கைகளைத் தூக்கி இடப்புறமாகவும் வலப்புறமாகவும் மாற்றி மாற்றி அசைக்கச் செய்ய வேண்டும். பிறகு மேலுங் கீழுமாகவும் மாத்திரை மீறாமல் அசைத்துவிடுதல் வேண்டும். இவ்வாறு பலமுறை மாறிமாறிச் செய்யச் செய்து. முதுகில் ஏதேனும் ஒரு ஏற்ற பற்றுப் போடுதல் வேண்டும்.

1. மல்லிக் கியாழத்தில் சந்தனத்தை அரைத்துப் போடுதல்

பா.வே. *1*. காலில் வர்மங்கள்　　2. பற்றுமிட்டால்
3. மாறுமிது காலில்வர்மம் பதினொன் றாமே.

2. தேவதாரம், சாதிலிங்கம் ஆகியவற்றைக் கற்பூரவல்லிச் சாற்றிலரைத்து வெதுப்பிப் போடுதல்

3. சர்வாங்கத் தயிலத்தைத் தேய்த்தல்

போன்ற பற்றுவகைகளுள் ஒன்றைக் கையாளலாம்.

இருத்தல் - உட்காரச்செய்தல். பிணைத்தல் - கட்டுதல், சேர்த்து வைத்தல். முதுவரி - முதுகுப்புறம். இடவலவும் - இடது பக்கமும் வலது பக்கமும். திரிச்சுக் கட்டுதல் - மாற்றிக் கட்டச்செய்தல். விசகட்டி - விசைகட்டி, வேகத்தைக் குறைத்து, சவட்டுதல்-அசைத்தல். பத்து-பற்று, பொருந்தத் தடவிவிடுதல்.

Mutuku Varma aṭaṅkal
The Adaṅkals of Varmas on the Back region

coṉṉōmē mutukilvarmam patiṉā ṟuntāṉ
tokuppākac collivittēṉ tokuttup pāru
piṉṉēṉi etuttiruttik kaipi ṇaittup
picakāmal mutuvariyi lēntip piṉpu
muṉṉēkēḻ itavalavum tiriccuk keṭṭi
vicakaṭṭi irupuṟamum cavaṭṭi viṭṭu
muṉṉēyē coṉṉatoru pattu miṭṭāl
mukkiyamāyt tirumitu uṟṟup pārē (93)

There are 16 varmas situated on one's back. (In this text only 15 are described). There are general remedial measures for all of them prescribed. Some of them are mentioned here. The first of these is the *Adangal*.

The person afflicted is carefully lifted and made to sit on even surface. After making him sit the hands are moved left and right and up and down. Then any one of the following treatments may be tried.

1. Decoction of *corriander* seeds with the paste of sandal wood.

2. Paste of Devadaram sati Lingam etc. to be ground in the juice of Karpooravalli.

3. Applying Sarvanga Thailam.

86.[1] தெச்சணைக் காலம்

பாரேநீ [1]தெச்சணையின் காலங் கொண்டால்
பாடுகிறேன் முன்னதனைப் பகர்ந்து கேளு
சீரேகேள் உள்முறிந்தோ ரிறையுந் தாழ்ந்தால்
சீரழிந்து கொன்றிடுமே ஏழுக் குள்ளே
வாரேநீ பனிகுளிரும் வேர்வை யுண்டாம்
பாலகனே அஞ்சேழுங் கழியு மானால்
காரெனவே அவனுடைய சுக்கிலந் தன்னைக்
கணக்குடனே செய்துவிடு கருத்த னாமே. (94)

கால்பாதத்தின் மேல்புறத்தில், நடுப்பகுதி நரம்பினிடையில் இடம் பெறுவது தெட்சணைக்காலமாகும். உடலின் தென்கோடியில் அமையும் உறுப்பாகிய பாதத்தில் நிலைபெறுவது ஆதலின் தெட்சணைக்காலம் எனப்பெறுகிறது.

"பாரடா காலில்வர்மம் பதினொன் றாகும்
பண்பான தெட்சணைசுண்டோ தரியு மாகும்"

(ஒடிமுறிவு - 41)

இந்நூலில் காலில் இடம்பெறும் பதினொரு வர்மங்களில் தெட்சணையும் கண்டோதரியும் ஆகிய இரண்டுவர்மங்களும் அடங்கும் என்ற பொதுச்செய்தியைமட்டுமே கூறுகிறது. சரியான அமைவிடத்தைச் சுட்டவில்லை.

தெட்சணைக்காலம் என்னும் இந்த வர்மத்தானத்தில் அடிபட்டு உட்புறமுள்ள நரம்போ எலும்போ முறிந்து போகும். இத்தகு முறிவு ஏற்பட்டுவிட்டால் அடிபட்டோர் ஏழு நாளிகைக்குள் சீரழிவர். இந்த வர்ம அடியினால் மிகுதியான குளிரும் வேர்வையும் உண்டாகும். இந்த அறிகுறியுடன் முப்பத்தைந்து நாழிகைக் கடந்து விடுமேயானால் சரிசெய்துவிடலாம். முதலில் நோய் கண்டவருக்கு ஏற்பட்டுள்ள சுக்கிலக் கழிவை நீக்கிவிட்டால் வரும நோய் முழுக்குணம் பெற்றுவிடும்.

தெட்சணை - தெட்சணம் – தெற்கு. முறிதல்- ஒடிதல். இறை - கைவிரல் கன அளவு. அஞ்சேழு - முப்பத்தைந்து (5× 7). சுக்கிலம் - இந்திரியம்

86. Teccaṇaik kālam

pārēṉī teccaṇaiyiṉ kālaṅ koṇṭāl
pāṭukiṟēṉ muṉṉataṉaip pakarntu kēḷu
cirēkēḷ uḷmuṟintō riṟaiyun tāḻntāl

பா.வே. 1. தெட்சணைக்காலம்

ciralintu konritumē ēluk kullē
vārēni panikulirum vērvai yuntām
pālakanē añcēlum kaliyu mānāl
kārenavē avanutaiya cukkilan tannaik
kanakkutanē ceytuvitu karutta nāmē (94)

On the mid - foot, this Varmam occupies the nerve centre. As it lies on the foot at the down end of the body it is called Decchanai Kalam.

"pāratā kālilvarmam patinōn rākum
panpāna tetcanaicuntō tariyu mākum"

(Otimurivu - 41)

This text describes 11 varmas which include the Decchanai and Sundothari varmas, but no correct position is indicated.

Usually when this varma is injured, damage is caused to nerves or bones. The condition of the patient worsens within 7 Nazhigais. He sweats and has a fever. If the person survives beyond 35 nazhigais, he is past danger and can be revived back to normal. If discharge of semen is controlled, the person can be cured completely.

87. [1]சுண்டோதறி வர்மம்

கருத்துடனே [1]சுண்டோதறி வர்மங் கொண்டால்
கணக்குடனே செய்குணத்தைக் கருத்தாய்க் கேளு
திருத்தமுடன் தேகமது [2]துடிப்புண் டாகும்
செப்புகிறேன் நீர்பெருகுஞ் செப்பக் கேளு
விருப்பமுடன் சொல்லுகிறேன் விரும்பிப் பார்த்தால்
விம்மல்கொண்டு கொல்லும்நாள் பதினா றாகும்
வருத்தமாய்ச் செய்யாதே விலகி நில்லு
வரும்வாதம் கழியுமென்றால் மகிழ்ந்து செய்யே. (95)

காலில் இடம்பெறும் பதினொரு வர்மங்களில் ஒன்று சுண்டோதறி வர்மம் ஆகும். தெட்சிணைக்காலத்திற்கு இரண்டு விரலளவு மேலே அமைவது.

"ஒன்றான விரத்தியென்ற கால மாகும்
உரையதன்மேல் ரெண்டிறைக்குள் சுண்டோதரி என்பர்"

பா.வே. 1. சுண்டோதிரி, சுண்டோதரி. 2. துடிரெண்டாகும்.

என்பது வர்மக்கண்ணாடியின் கூற்று (33). விரத்தி என்ற வர்மம் பற்றி இந்தநூல் கூறவில்லை. சுண்ட உதறுதல் பண்பைப் பெற்றது ஆதலின் சுண்ட உதறி - சுண்டோதறி எனப்பெயர் பெற்றது. உடலின் இயல்புத் தன்மைக்குச் சிறிதும் இடங்கொடாமல் உதறித் தள்ளித் துடிப்புத் தன்மையை உண்டாக்குவது இந்த வர்மநோயின் இயல்பு என்பதனால் பெறும் பெயராகும்.

சுண்டோதறி வர்மநோய் ஏற்பட்டால் உடலானது தன்நிலையில் இல்லாது மிகுதியாகத் துடிக்கும். உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டும்; சிறுநீரும் மிகுதியாகக் கழியும். தேம்பி விம்மும் செயல் உண்டாகும். சிலநாட்களில் வாதநோயும் உண்டாகும். பதினாறு நாட்களுக்குள் வாதம் முதலியன இல்லாமலிருக்குமானால் நோய் நீக்க மருத்துவம் மேற்கொள்ளலாம்.

"காரடா சத்திமிடும் நாக்குஉள் வாங்கும்
    காணாது தேகமெல்லாம் நடுக்க முண்டாம்
சீரடா அகங்குளிரும் விறயல் தோன்றும்
    செகமறையும் நயனந்தான் வெளியு மில்லை"

(தொடுவர்மத்திரட்டு - 98)

என்னும் அடிகள் நடுக்கத்தோடு நாக்கு உள்ளே இழுத்துக்கொள்ளும். உள்ளே எல்லாம் சில்லிட்டு உடம்பு விறைத்துப் போகும்; கண்கள் ஒளி இழக்கும் என்பனவற்றையும் இவ்வர்மத்தின் குணங்களாக்குகின்றன.

சுண்டோதறி - கண்ட உதறி – அடியோடு வற்றுமாறு உதறித் தள்ளுதல். சுண்டுதல் - வற்றுதல். நீர் - சிறுநீர்.

87. Cuṇṭōtaṟi Varmam

karuttutaṉē cuṇṭōtaṟi varmaṅ koṇṭāl
    kaṇakkutaṉē ceykuṇattaik karuttāyk kēḷu
tiruttamutaṉ tēkamatu tuṭippuṇ ṭākum
    ceppukiṟēṉ nīrperukuñ ceppak kēḷu
viruppamutaṉ collukiṟēṉ virumpip pārttāl
    vimmalkoṇṭu kollumnāḷ patiṉā rākum
varuttamāyc ceyyātē vilaki nillu
    varumvātam kaḻiyumeṉṟāl makiḻntu ceyyē (95)

oṉṟāṉa virattiyeṉṟa kāla mākum
    uraiyataṉmēl reṇṭiraikkuḷ cuṇṭōtari"

(Varmakkaṇṇāṭi - 33)

Sundodari is one of the eleven varmas on the foot. Which lies 2 fingers above the Decchina Kalam. Varma Kannadi Text (verse 33)

says that it is near the viratti varma. But 'Viratti' is not mentioned in this text. As it causes complete or total emaciation it is called Sundodari (Sunda udaruthal - means complete drying) the injury to this Varma completely paralyses the functions of the body. Movement seems jittery, sweating and excessive micturition result. The patient cries in pain. He may suffer an attack of paralysis. If this does not happen within 16 days treatment will restore him to health.

"kāratā cattamitum nākkuul vāṅkum
    kānātu tēkamellām naṭukka muṇṭām
cirata akaṅkulirum virayal tōṉṟum
    cekamaraiyum nayaṉantāṉ veḷiyu millai"

(Toṭuvarmattiraṭṭu - 98)

Verse 98 of thodu varma thirattu says, there will be shivering and the tongue is withdrawn into the mouth. There will also be sweating of the body, eye sight becomes dull.

88. [1]சூட்டு வர்மம்

மகிழ்ந்துநீ செய்திடவே [1]சூட்டு வர்மம்
    மைந்தனே கொண்டிடுகில் குணத்தைக் கேளு
இகழ்ந்துடனே குளிருபனி இளகு மப்பா
    இசைவான கைகாலும் முடக்கிக் கொள்ளும்
நிகழ்ந்துடனே யேரண்டத் தயிலம் விட்டு
    நிச்சயமாய்த் தடவிநீ இளக்கிக் கொள்ளே
மகிழ்ந்துடனே செய்துவிடு மாறும் பாரு
    மனமுறுதி கொண்டுநீ வகையாய்ச் செய்யே. (96)

கால் பெறுவிரலின் உட்பகுதியில் இடம்பெறுவது சூட்டு வர்மமாகும்.

"ஆரடா பெருவிரல்மேல் சுட்டு வர்மம்" (ஒடிமுறிவு - 41)

" நவிலுகிறேன் பெருவிரல் இறைக்கு மேலாம்
ஒன்றான விரத்தியென்ற கால மாகும்" (வர்மக்கண்ணாடி - 33)

என்பது பெருவிரலின்மேல் ஒரு விரலளவில் இடம் பெறுவதை 'விரத்திகாலம்' எனச்சுட்டுகிறது.

குளிர்குறைந்து கை, கால்கள் முடக்கிக்கொள்ளும் இயல்புகளையுடையது சூட்டு வர்மநோய். கை, கால்கள் முடக்கி, கொள்ளும் நிலையைக் குணப்படுத்த

பா.வே. 1. சுட்டுவர்மம்

ஏரண்டத் தயிலத்தைப் பயன்படுத்தலாம்.

சூடு போட்டதுபோல கை, கால்களை முடக்கிவிடும் தன்மையை உடையது ஆதலின் இது சூட்டு வர்மம் எனப்பெறுகிறது. இதுவே சுட்டுவர்மம் எனக் குறிப்பிடப்படுகிறது.

சூட்டுவர்மம் - சூடுபோடுதலின் குணத்தையுடையது. ஏரண்டம் - ஆமணக்கு.

88. Cūṭṭu Varmam

makiḻntunī ceytitavē cūṭṭu varmam
maintaṉē koṇṭitukil kuṇattaik kēḷu
ikaḻntutaṉē kuḷirupaṇi ilaku mappā
icaivāṉa kaikālum muṭakkik koḷḷum
nikaḻntutaṉē yēraṇṭat tailam viṭṭu
niccayamāyt taṭavinī ilakkik koḷḷē
makiḻntutaṉē ceytuviṭu māṟum pāru
maṉamuṟuti koṇṭunī vakaiyāyc ceyyē (96)

"ārata peruviralmēl cuṭṭu varmam" (Oṭimuṟivu - 41)

naviluki̱ṟēṉ peruviral iṟaikku mēlām
oṉṟāṉa virattiyeṉṟa kāla mākum" (Varmak kaṇṇāṭi - 33)

This lies on the underside of the big toe. odimurivu 41, Varmakannadi - 33 says that one finger above the bigtoe lies the Viratthi Kalam.

The symptoms are that the temperature drops, limbs stiffen crippled. Condition can be treated with castor oil. Excessive heat of body makes it unfunctional. Hence the name (soottu - heat). This is also called 'suttu' varma.

89. மணிபந்த வர்மம்

வகையான மணிபந்த வர்மங் கொண்டால்
வருவிவருங் குணந்தன்னை வருந்திக் கேளு
துகையாகக் [1]கடிப்பிளகி வீங்கு மப்பா
தொகுப்பாகச் சன்னியொடு சீத முண்டாம்
பகையான [2]அறுபதிலே அழிந்து வீழும்
(புழிசெய்யு [3]மாயிரண்டில் அசாத்திய மாகும்

பா.வே. 1. கழைப்பிளகி (களைப்பிளகி). 2.யணியதிலே கொள்ளுமானால்
3. மையிரண்டில்.

நகையான இக்குணங்க ளறிந்து நீயும்
நாடியே செய்யாதே நாடிப் பாரே). (97)

கணுக்காலின் முன்புறத்தில் சிறுவிரலுக்கு நேர் இறுதியில் இடம்பெறுவது மணிபந்த வர்மம். காலின் மணியாகிய சதங்கை பந்திக்கப்பெறும் இடத்தில் நிலைபெறுவதாதலின் இது மணிபந்த வர்மம் எனப்படுகிறது.

"ஆரடா பெருவிரல்மேல் சுட்டு வர்மம்
அப்பனே அஞ்சிறைமேல் மணியின் பந்தம்"
(ஒடிமுறிவு - 41)

பெருவிரல் மேல் இடம்பெறும் சுட்டு வர்மத்தினின்றும் ஐந்து விரலளவு மேலே உள்ளது மணிபந்தம் ஆகும். பிறநூல்கள் கையிலுள்ள மணிபந்தத்தை மட்டுமே கூறுகின்றன. அவை காலில் இடம்பெறும் மணிபந்தத்தைக் கோணச்சன்னி எனச் சுட்டுகின்றன.

மணிபந்த வர்மத்தானத்தில் அடிபட்டால் அடிபட்ட இடத்திலுண்டாகும் வலி நீங்கலாம். ஆனால் வர்மத்தானத்தில் வீக்கம் ஏற்படும். சன்னியும் சீதமும் உண்டாகும். இந்த வர்மநோயை விரைவில் குணப்படுத்தாதுவிட்டால் அறுபது நாளைக்குள் அழிவை உண்டாக்கிவிடும். இரண்டாவது நாளையிலேயே அதற்குரிய அறிகுறிகளைக் காட்டிவிடும். மேற்கொண்டும் மருத்துவம் செய்யத் தொடங்கினால் மருத்துவருக்குப் பழியே உண்டாக்கிவிடும்.

மணிபந்தம் - மணிக்கட்டு. கடிப்பு - கடிபட்டகாயம், நோய். கடிப்பு இளகுதல்-கடிபட்ட இடம் - அடிபட்ட இடத்தில் வலி நீங்குதல். களிப்பிளகி எனக்கொண்டு (பா.வே.) களைப்புநீங்கி எனவுமாம். அணியதிலே என்ற பாடங்கொள்ள மணிபந்தத்தில் என்று பொருள்படும். துகையாக - முழுவதுமாக. ஐயிரண்டில் - (பா.வே.) பத்தாம்நாளில்.

89. Manipanta Varmam

vakaiyāṉa maṇipanta varmaṅ koṇṭāl
varuvivaruṅ kuṇantaṉṉai varuntik kēḷu
tukaiyākak kaṭippiḷaki viṅku mappā
tokuppākac caṉṉiyoṭṭu cīta muṇṭām
pakaiyāṉa aṟupatilē aḻintu viḻum
(paḻiceyyu māyiraṇṭil acāttiya mākum
nakaiyāṉa ikkuṇaṅka ḷaṟintu niyum
nāṭiyē ceyyātē nāṭip pārē) (97)

This varma is located on the inside of the foot towards the little toe. As it lies very close to the ankle it is called Manibandha Varmam.

"ārața peruviralmēl cuțțu varmam
appanē añciraimēl maniyin pantam"

(Otimurivu - 41)

Manibanda Varma lies five fingers above the soottu varma which lies above the big toe. (odimurivu 41)

The pain at the site of injury may subside, but inflammation stays on. If this condition is not treated immediately within 60 nazhigais it may prove fatal. The prognosis is often found not good.

90. பச்சணி வர்மம்

நாட்டமாய்ப் பச்சணியாம் வர்மங் கொண்டால்
நலமான செய்குணத்தை நவிலக் கேளு
கூட்டமாய் [1]அஞ்சுதனில் குணமே தென்றால்
கூடியதோர் குளிருபனி தளர்ச்சை யுண்டாம்
நாட்டமாய் [2]நாழிகைதான் முப்பத் தொன்று
நவிலவே செய்துவிடு நன்றாய்த் தானே
நாட்டியே நாழிகைதான் கடரு மானால்
நலமாக விலகிநீ அகல நில்லே. (98)

காலின் சுண்டுவிரலையடுத்த விரலின்மீது (விரற்குழியில்) இடம் பெறுவது பச்சணி வர்மம் எனப்படுகிறது. இதனைப் பட்சணி என்ற சொல்லால் குறிப்பதும் உண்டு.

" அப்பனே அஞ்சிறைமேல் மணியின் பந்தம்
கூரடா கிடையின்கீழ் பட்சணி வர்மம்" (ஒடிமுறிவு - 41)

மணிபந்த வர்மத்தின் கீழ் ஒரு விரற்கடையில் பட்சணி வர்மம் நிலைபெறுகிறது என்பது இக்கூற்று.

பச்சணி வர்மத்தானத்தில் அடிஏற்பட்டால் ஐந்து நாழிகைக்குள் மிகுந்த குளிரும், உடல்தளர்ந்து சோர்வடைதலும் ஏற்பட்டுவிடும். இதனை முப்பத்தொரு நாழிகைக்குள் இளக்குதல் வேண்டும். இல்லையேல் நீக்கமுடியாத நிலை ஏற்பட்டுவிடும்.

தளர்ச்சை – தளர்ச்சி, சோர்வு, மெலிவு. கடருதல் - கடத்தல்

பா.வே. 1. அஞ்சி நீ குணமேதென்றால் 2. நாழிகைமுப்பத் தொன்ப தாகும்.

90. Paccaṉi Varmam

nāṭṭamāyp paccaṉiyām varmaṅ koṇṭāl
    nalamāṉa ceykuṇattai navilak kēḷu
kūṭṭamāy añcutaṉil kuṇamē teṉṟāl
    kūṭiyatōr kuḷirupaṇi taḷarccai yuṇṭām
nāṭṭamāy naḻikaitāṉ muppat toṉṟu
    navilavē ceytuviṭu naṉṟāyt tāṉē
nāṭṭiyē naḻikaitāṉ kaṭaru māṉāl
    nalamāka vilakiṉi akala nillē (98)

appaṉē añciṟaimēl maṇiyiṉ pantam
kūraṭā kiṭaiyiṉkiḻ paṭcaṇi varmam (Oṭimuṟivu - 41)

This is based in the depression in the toe next to the small toe. It is also called patchini varmam. Odimurivu 41 - says that pacchini lies one finger below the Manibandha Varma. Injury to this varma causes a bad cold within five nazhigais. The person feels listless and tired. This is to be treated wihin 31 nazhigais. Otherwise the damage becomes irrepairable.

91. மேக வர்மம்

அக்லமென்ற மேகவர்மங் கொண்டு தானால்
    அன்பான செய்குணத்தை அறைகி றேன்கேள்
கமலமென்ற கைகோச்சும் கபாலம் விம்மும்
    கண்டமுடன் கத்திரிக்கோல் அலறி விம்மும்
அகலமென்ற அயதியுடன் அழலு முண்டாம்
    அதுபோது நாழிகைதான் ஒன்ப துக்குள்
கபாலமென்ற நாவதிலே கண்டு செய்யக்
    கனமாகக் கழியுமென்றால் கருத்தாய்ச் செய்யே. (99)

"கூடுமணி பந்தங்கீழ் மேக வர்மம்" (ஒடிமுறிவு - 41)

இது மணிபந்தம் இடம்பெறுகின்ற இடத்திற்குக் கீழே மேவர்மம் அமைகிறது என்கிறது. மணிபந்தம் என்பது வெளிப்புறத்தே அமைவது. ஆனால் மேக வர்மம் அக்காலின் உட்புறத்தே அதாவது மணிபந்தத்தின் நேர் எதிரே அமைவதாகப் படம் சுட்டுகிறது.

மேக வர்மத்தில் அடிபட்டால் கையானது தனது நிலையிலிருந்து தொங்கித் தாழ்ந்து சோர்வடையும். தலையோடு கனத்துப் பருத்துத் தோன்றும். கண்டமும்

கண்டத்தைச் சார்ந்த மார்புப் பகுதிகளும் அலறத் துடிப்பும் வீக்கமும் உண்டாகும். உடல் நெருப்பாய்க் கொதிக்கச் சோர்வும் ஏற்படும். வர்மநோயின் அறிகுறிகளால் நாக்கு நிறம்மாறித் தோன்றும். அக்குறியைக் கண்டு ஒன்பது நாழிகைக்குள் இளக்குதல் வேண்டும்.

கமலமென்றகை - மலர்போன்றகை. கமலம் - தாமரை. கோச்சுதல் தாழ்ந்துபோதல், தொங்கிவிடுதல். கபாலம் - தலையோடு. விம்முதல் கனத்துத்தோன்றுதல். கத்தரிக்கோல் – கத்தரிபோலப் பிணைக்கப்பட்டுள்ள மிண்டிமறுபுறமாதல். அயதி-அசதி, சோர்வு.

91. Mēka Varmam

akalameṉṟa mēkavarmaṅ koṇṭu tāṉāl
    aṉpāṉa ceykuṇattai aṟaiki ṟeṅkēl
kamalameṉṟa kaikōccum kapālam vimmum
    kaṇṭamuṭaṉ kattarikkōl alaṟi vimmum
akalameṉṟa ayatiyuṭaṉ aḻalu muṇṭām
    atupōtu nāḻikaināḷ oṉpa tukkuḷ
kapālameṉṟa nāvatilē kaṇṭu ceyyak
    kaṉamākak kaḻiyu meṉṟāl karuttāyc ceyyē (99)

"kūṭumaṇi pantaṅkiḻ mēka varmam" (Oṭimuṟivu - 41)

This lies below the Manibandha Varma. Manibandha lies on the outer side of the leg, but the Mehavaram lies on the inner side of the leg. The picture shows it to be at the same level.

Injury to the Mehavarmam causes drooping of shoulder from its normal position and makes it weak. The skull looks swollen. There is pain and swelling in the neck and the upper part of the chest. The body temperature increases. The colour of the tongue changes. Treatment of the condition within 9 nazhigais will be helpful.

92. [1]திலர்தவர்மம் (தீத வர்மம்)

கருத்தான [1]திலர்தவர்மங் கொண்டு தானால்
    கனமான செய்குணத்தைக் கருதிக் கேளு
விருத்தமுடன் அங்கமதில் அழலுண் டாகும்
    வெய்யவே தேகமது விறைத்து வெட்டும்
பருத்தவுடம் பதுவிளரிப் பறிதப் பாதே
    பாலகனே [2]கடிகைநாள் எட்டுக் குள்ளே

பா.வே. 1. தீதவர்மம் 2. கடிகைநாளீ ரெட்டுக் குள்ளே.

அருத்தமுடன் கழியுதென்றால் வருந்தி நீயும்
வளமாகச் செய்துவிடு வன்மை தானே. (100)

தீதவர்மம் என்பதே சரியான சொல்லாகலாம். உடல் நெருப்புபோலக் கொதிப்பேறி வருத்துவதும், விறைத்துக் கட்டைபோலக் கிடப்பதும், உடல் வெளுத்துக் காண்பதுமாகிய அறிகுறிகள் இந்த வர்மத்திற்குரியவையாகும். இவை வெளிப்படையானவையாதலின் இது தீதவர்மம் எனப்படுகிறது.

மேகவர்மத்திற்குமேலே எட்டுவிரல் அளவில் நிலைபெறுவது தீதவர்மம் ஆகும். அதாவது முன்னங்காலின் இடைப்பகுதியில் அமைவதாகும்.

"கூடுமணி பந்தங்கீழ் மேக வர்மம்
வாரடா எட்டிறைமேல் பக்கந் தன்னில்
வளமான தீதவர்மம் வருந்திப் பாரே" (ஒடிமுறிவு - 41)

என்பன தீதவர்மத்தானத்தைச் சுட்டுகின்றன. இதனை எட்டு நாழிகைக்குள் இளக்குதல் நன்மைபயக்கும்.

தீதம் - காணக்கூடியது. அதீதம்- எதிர்ச்சொல். எட்டமுடியாத, காணஇயலாத அரிய பொருளைச்சுட்டும். விளருதல் - வெளுத்துக்காணுதல். பறி-அழிவு. அங்கம்-உடல்

92. Tilarta Varmam (Tīta Varmam)

karuttāna tilartavarmaṅ koṇtu tāṉāl
kaṉamāṉa ceykuṉattaik karutik kēḷu
viruttamutaṉ aṅkamatil aḻaluṉ ṭākum
veyyavē tēkamatu viṟaittu veṭṭum
paruttavutam patuvilaṟip paṟitap pātē
pālakaṉē katikaināl eṭṭuk kuḷḷē
aruttamutaṉ kaḻiyuteṉṟāl varunti nīyum
vaḷamākac ceytuviṭu vaṉmai tāṉē (100)

Theetha Varma is the correct name. The body becomes very hot and pale and becomes stiff like a piece of wood. The symptoms are all easy to perceive and indentify. Hence the name. Theetha means that which can be seen.

This lies 8 fingers above the Mehavarmam and medially based in the knee.

"kūtumaṇi pantaṅkiḻē mēka varmam
vārata eṭṭiṟaimēl pakkam taṉṉil
vaḷamāṉa tītavarmam varuntip pārē"
(Oṭimuṟivu - 41)

The condition should be treated within 8 nazhigais.

93. இருதிறை வர்மம் (குதிரை வர்மம்)

வன்மையாய் [2]இருதிறையாம் வர்மங் கொண்டால்
வருங்குணத்தைச் சொல்லுகிறேன் மைந்தா கேளு
நன்மையாய் இருத்திடிகள் கொண்டு தானால்
நாடியே சதித்துவிடும் நடுவே யானால்
பத்ததிலே சன்னிவரும் குலவி றண்ணம்
நாடியே சாத்தியத்தின் குணமி ருந்தால்
[3]பத்துவரே வெண்குன்றி வேரின் தயிலம்
பாலகனே கொடுத்துவிடு பதறி யோடும். (101)

'குதிரைவர்மம்' என்பதே சரியான சொல்லாகும். குதிரைமுகம் எனப்படும் முன்னங்காலின் எதிர்ப்புறத்தில் கால்மூட்டையடுத்து இடம்பெறும் வர்மம் ஆதலின் இது குதிரை வர்மம் எனப்படுகிறது. இது குதிரைமுக வர்மம் என்றும் குறிப்பிடப்படுகிறது. (வர்ம சூத்திரம் - 79)

"வருந்தவே மூட்டின்கீழ் குதிரை வர்மம்" (ஒடிமுறிவு - 42)

இது கால்மூட்டின் கீழ் நிலைபெறுவதே குதிரைவர்மம் என்கிறது.

"தீருமா முழங்காலில் வர்மங் கேளு
திறமான மையமதில் குதிரைமுக வர்மம்"
(வர்மசூத்திரம் - 79)

"நன்றெனவே முழங்காலில் குதிரைமுகக் காலம்"
(வர்மக்கண்ணாடி - 34)

என்பனவும் இதே கருத்தில் அமைன்கிறன.

குதிரை வர்மத்தானத்தில் அடிபட்டால் மிகவும் மோசமான நிலையை உருவாக்கிச் சதிசெய்துவிடும். வர்ம இடம் முழங்காலின் நடுப்பகுதியாதலின் இரணம் தோன்றுதலும், பத்துநாளையில் சன்னி உண்டாதலும் உண்டு.

"நேருமடா அத்தலத்தில் விரண மாகி
நிர்ணயமாய்ப் புண்புரைகள் மாறா தென்றேன்"
(வர்ம சூத்திரம் - 79)

இதனால் இந்தவர்மத்தில் இரணம் உண்டாகிப் புண்ணாகிப் புரையோடிவிடும் என்ற தன்மைகளும் புலனாகின்றன.

வெண்குன்றிவேரின்தயிலம், குழித்தயிலம் ஆகியவற்றைப் பயன்படுத்தி இந்த நோயைக் குணமாக்கலாம்.

---

1. குதிரை வர்மம்.
2. குதிரைவர்மங் கொண்டு தானால்
3. பலவிதமாய்க் குழித்தயிலம் உள்ளுக் கீந்து.

"பாருமடா பராபரத்தின் கிருபை யாலே
விசப்பச்சை எண்ணெயால் தீரும் கண்டாய்"

(வர்மசூத்திரம் - 79)

சதித்தல் - சதிசெய்தல். குலவிறண்ணம்- (குலவிரணம்) இரணக்கூட்டம், மிகுதியாக இரணமாகிப் புண்ணாகிப் புரையோடுதல்.

93. Irutirai Varmam (Kutirai Varmam)

vanmaiyāy irutiraiyām varmaṅ koṇṭāl
varuṅkuṇattaic collukiṟēṉ maintā kēḷu
naṉmaiyāy iruttiṭikaḷ koṇṭu tāṉāl
nāṭiyē catittuviṭum naṭuvē yāṉāl
paṭṭatilē cannivarum kulavi raṇṇam
nāṭiyē cāttiyattiṉ kuṇami ruṇṭāl
paṭṭuvarē veṉkuṉṟi vēriṉ tailam
pālakanē koṭuttuviṭu pataṟi yōṭum (101)

Kuthirai varmam is the right name. As the position is on the knee near the joint.

This is also called Kuthirai mukha varmam.

"varuntavē mūṭṭiṉkil kutirai varmam" (Oṭimuṟivu - 42)

tirumā mulaṅkālil varmaṅ kēḷuṅ
tiṟamāṉa maiyamatil kutiraimuka varmam

(Varmacūttiram - 79)

"naṉṟeṉavē mulaṅkālil kutiraimukak kālam"

(Varmakkaṇṇāṭi - 34)

Injury to the Kuthirai Varmam causes serious illness. Sores appear where the varma is located. Body heat shoots up. The condition develops into a delirious one.

To be treated within 10 nazhigais.

nērumaṭā aṭṭalattil viraṇa māki
nirṇayamāyp puṇpuraikaḷ māṟā teṉṟēṉ

(Varmacūttiram - 79)

At times the sores may putrify and form pus. It does not heal easily, causes an ulcer which takes time to heal.

The oil made of venkundriroots, Kuzhithailam can be of use in the treatment of this condition.

"pārumaṭa parāparattin kirupai yālē
vicappaccai eṇṇaiyāl tirum kaṇṭāy"

(Varmacūttiram - 79)

94. [1] *கரிவர்மம் (கிராயெல்வர்மம்)*

ஓடிடவே [1]கரிவர்மங் கொண்டு தானால்
உத்தமனே சொல்லுகிறேன் உண்மை யாக
நாடியே கண்டித்து முறிந்த தென்றால்
நலமாக அசாத்திய மென்று சொல்லி
போடுமே தலையிடியும் நோவுண் டாகும்
தப்பாது வெள்ளமிட்டுத் தடவிப் போடு
சாடுவது இம்முறையை அறிந்து கொண்டு
தப்பாமல் செய்துவிடு தயவுண் டாமே. (102)

தொடையின் இடைப்பகுதியில் முன்புறத்தில் நிலைபெறுவது கிராயெல்வர்மமாகும். வயிரம்போலும் எலும்பையுடைய தொடைப்பகுதியில் இடம் பெறுதலின் இது கிராய் எல்வர்மம் எனப்படுகிறது. கரிவர்மம் என்பது பிற நூல்களிலும் கிடைக்காத பெயராகிறது.

"வளமான தொடைநடுவில் கிராயெல் வர்மம்"(ஒடிமுறிவு - 42)

இந்த வர்மத்தானத்தில் அடிபட்டால் தலைவலியும் தலையிடியும் மண்டைநோயால் குத்தலுங் குடைச்சலுமாகப் பல அறிகுறிகள் உண்டாகும். தண்ணீர் கொட்டித் தடவி விட்டு இளக்கிவிடலாம். முன்எலும்பானதால் அடிமாத்திரையின் மிகுந்து முறிவு ஏற்பட்டுவிட்டால் குணமாக்க இயலாதநிலையைப் பெற்றுவிடக் கூடும்.

கிராய் – வயிரம். எல்-எலும்பு. வெள்ளம்-தண்ணீர்.

94. Kari Varmam (Kirāyel varmam)

oṭiṭavē karivarmaṅ koṇṭu tāṉāl
uṭṭamanē collukiṟēṉ uṇmai yāka
nāṭiyē kaṇṭittu muṟinta teṉṟāl
nalamāka acāttiya meṉṟu colli
pōṭumē talaiyiṭiyum nōvuṉ ṭākum
tappātu veḷḷamiṭṭut taṭavip pōṭu

பா.வே. 1. கிராயெல் வர்மம்

cātuvatu immuṟaiyai aṟintu koṇṭu
    tappāmal ceytuviṭu tayavuṉ ṭāmē (102)

This lies on the left of the front of the thigh. As it is located on the thigh whose bone is said to be as strong as diamond. Hence the name Kirayel varmam. No text mentions its name as kari varmam.

"valamāna totainatuvil kirāyel varmam"

(Oṭimuṟivu - 42)

Odimurivu - (42) Also locates it on the thigh and calls it Kirayel varmam.

Injury to this varma causes severe head-ache and pain in the skull. Sometimes the victim sustains a fracture too. Then cure becomes difficult.

95. ஆந்தை வர்மம்

ஆமென்ற ஆந்தைவர்மங் கொண்டு தானால்
    உத்தமனே சொல்லுகிறேன் உண்மை யாக
நாடுமே கண்டதெட்டு மூண்டு தானால்
    உத்தமனே செய்குணத்தை உரைக்கி றேனே
ஆமென்று சுவாசமது மேல்வ லிக்கும்
    அப்பனே அசைக்கவுமொட் டாது (கண்டாய்)
ஓமென்ற அழலுடனே அயதி யுண்டாம்
    அப்பனே துயப்பட்டு அடவ செய்தால்
தேமென்ற பனிகுளிரும் போது அப்பா
    செப்புகிறேன் இன்னுமொரு சூச்சம் கேளே. (103)

தொடையின் முன்புறம் இடைப்பகுதியில் இடம்பெறும் கிராயெல் வர்மத்திற்கு மேலே இருவிரலளவில் நிலைபெறுவது ஆந்தை வர்மம் எனப்படும்.

"வளமான தொடைநடுவில் கிராயெல் வர்மம்
அருந்தவே அதனடுவில் ஆந்தை வர்மம்" (ஓடிமுறிவு - 42)

ஆந்தை வர்மம் என்னும் இந்த வர்மத் தானத்தில் அடிஏற்பட்டால் முதலில் தொண்டை கட்டிக் கொள்ளும். எத்திப் பேசுதலாகிய விட்டு விட்டுக் கூவுவது போன்ற நிலைஏற்படும். இதனாலேயே இது ஆமை வர்மம் எனப்படுகிறது. தொண்டையில் கூவும் சத்தம் ஏற்பட மேல் மூச்சு வாங்கத் தொடங்கும். உடம்பை அசைக்க முடியாத நிலை ஏற்பட்டு நெருப்பாய்க் கொதிக்கத் தொடங்கும். சோர்வு

ஏற்படும். இவ்வாறு இருநிலையும் ஏற்பட்டு அவை மிகுதியானால், மிகுதியாகக் குளிரவும் தொடங்கும். இவை இந்த வர்மத்தின் அறிகுறிகளாகும்.

கண்டம் - கழுத்து. தொண்டை. தெட்டு - தெட்டுதல், கட்டிக்கொள்ளுதல், குரல் ஒலியில் தடைஏற்படுதல். மூண்டுது - மூண்டது, ஏற்பட்டது. சுவாசம் - மூச்சு மேல்வலித்தல் - மேல்மூச்சு வாங்குதல். ஒட்டாது - முடியாது. துயப்படுதல் இரண்டும் ஏற்படுதல் (அழலும் அயதியும்). அடவசெய்தல் - மிகுதியாதல்.

95. Āntai Varmam

āmeṉṟa āntaivarmam koṇṭu tāṉāl
uttamaṉē collukiṟēṉ uṇmai yāka
nāṭumē kaṇṭateṭṭu muṇṭu tāṉāl
uttamaṉē ceykuṇattai uṟaikki rēṉē
āmeṉṟu cuvācamatu mēlva likkum
appaṉē acaikkavumoṭ ṭātu (kaṇṭāy)
omeṉṟa aḻaluṭaṉē ayati yuṇṭām
appanē tuyappaṭṭu aṭava ceytāl
tēmeṉṟa paṉikuḷirum pōtu appā
ceppukiṟēṉ innumoru cūccam kēḷē (103)

On the front of the thigh lies the Kirayai Varma. 2 fingers above it lies the Andai Varmam.

valamāṉa toṭainaṭuvil kirāyel varmam
aruntavē ataṉaṭuvil āntai varmam (Oṭimuṟivu - 42)

Injury to this Varma causes a sore throat, voice is affected and stammering settles. Hence the Andai (Andai means owl). The victim finds it difficult to move about and his temperature shoots up. He feels extremely tired.

96. சில்லி வர்மம்

சூச்சமாய்ச் சில்லிவர்மங் கொண்டு தானால்
தொகுப்பாகச் சொல்லுகிறேன் சூச்சம் கேளு
ஆச்சரியங் கொண்டதொரு கால்தூக் காது
அப்பனே அறுமையாய்த் தீரும் பாரு
ஆச்சரியம் ஒரிழைக்கீழ் முறிந்து தானால்
மைந்தனே பதினாறில் மரண மாமே

பாச்சலுடன் செய்யாதே பார்த்து நீயும்
பண்பாக விலகிநீ அகல வாங்கே. (104)

ஆந்தை வர்மத்தை அடுத்த எட்டு விரலளவில் இடம் பெறுவது சில்லி வர்மமாகும்.

"அருந்தவே அதனடுவில் ஆந்தை வர்மம்
அறிந்த எட்டுச் சில்லியதில் சில்லி வர்மம்"

(ஓடிமுறிவு - 42)

காலில் இடம்பெறும் வர்மங்களில் இதுவும் ஒன்றாகும். ஆனால் வாயு வர்மத்திற்கு மேலே சில்லி வர்மத்தை அமைத்துக் காட்டுகிறது படம்.

சில்லி எனப்பெறும் (சவ்வு) சதையில் பிடிப்பு ஏற்பட்டுக் காலைத் தூக்க இயலாத நிலையை உருவாக்குவது இந்த வர்மத்தின் குணமாகும். காலத்தூக்க, மடக்க முடியாத நிலையோடு வர்மத்தானத்தின் கீழ் மாத்திரை மீறி அடிபட்டு முறிவு ஏற்பட்டுவிட்டால் மரணம் ஏற்படக்கூடும். முறிவு ஏற்படவில்லையானால் குணமாக்கிவிடலாம்.

சில்லியில் பிடிப்பை உண்டாக்குவது இவ்வர்மத்தின் குணமாதலின் சில்லிவர்மம் என்றே பெயர் பெறுகிறது.

சில்லி - சவ்வு, சதைப்பற்று. சூட்சம் - நுட்பம், உபாயம், கால்தூக்காது - காலைத்தூக்க இயலாது. ஓரிறை-(ஓர் + இறை) இறை - விரலளவு.

96. Cilli Varmam

cūccamāyc cillivarmaṅ koṇṭu tāṉāl
tokuppakac collukiṟēṉ cūccam kēḷu
āccariyaṉ koṇṭatoru kaltūk kātu
appaṉē arumaiyāyt tirum pāru
āccariyam oriḻaikkiḻ muṟintu tāṉāl
maintaṉē patiṉāril maraṇa māmē
pāccaluṭaṉ ceyyātē pārttu nīyum
paṇpāka vilakiṉi akala vāṅkē (104)

This Eight fingers from andai Varmam to silli varma

aruntavē ataṉaṭuvil āntai varmam
aṟintaeṭṭuc cilliyatil cilli varmam (Oṭimuṟivu - 42)

Though it is listed as one of the Varmas in the leg, the picture shows it above the Vayu varmam.

Injury to this varma causes stiffness (sprain) of the leg and one cannot lift his leg. Hence the name. (silli mean ligaments). In case of a fracture the condition may prove a fatal one.

காலில் வர்மங்கள்

வாங்குவது காலில்வர்மம் சொல்லி விட்டேன்
மைந்தனே செய்குணத்தை வருந்திச் சொன்னேன்
ஓங்குவது மேற்காவும் இதுபோ லாகும்
உத்தமனே குறைவாகும் சில்லி ஒன்று
[1]ஆங்குவது இக்குணங்க ளறிந்து செய்தால்
அருமையுள்ள பாலகமும் பார்க்கும் பாரு
தூங்குவது தொகுப்புஅல செய்யா விட்டால்
தேறுமடா உள்ளுவர்மம் ஆறுஞ் சொல்வேன். (105)

வர்மம் முற்றும்

குருபாதமே துணை

காலில் நிலைபெறும் பதினொரு வர்மங்கள் இப்பகுதியில் கூறப்பெற்றன. அவை –

1. தெட்சணைக்காலம்
2. சுண்டோதறி
3. சூட்டு (சுட்டு)
4. மணிபந்தம்
5. பச்சனி
6. மேகவர்மம்
7. தீதம்
8. குதிரை
9. கிராயெல்
10. ஆந்தை
11. சில்லி

என்பனவாகும். இவற்றுள் சில்லிவர்மம் மட்டும் ஒருபக்கத்திற்குரியது. பிற பத்து வர்மங்களும் மற்றொரு காலிலும் இடம் பெறுவனவாகும்.

அனைத்து வர்மங்களுக்குரிய இடமும் குணமும் காலமும் அறிந்து அடங்கல்முதலான இளக்குமுறைகளையும் மருத்துவ வகைகளையும் ஏற்றவாறு கையாண்டால் சிறந்த தற்காப்பு நிலைகள் வெற்றிபெறும். இறுதியில் உள்வர்மம் ஆறும் சொல்லத்தொடங்கும் குறிப்பு காணப்படுகிறது. இச்சுவடியில் அவை இடம் பெறவில்லை.

மேற்கா-மேல்கால், மற்றொருகால். பாலகம் - பாலகத்துவம், தற்காப்புநிலை.

பா.வே. 1. அங்கமது.


The Varmas on the leg

vāṅkuvatu kālilvarmam colli vittēṉ
    maintanē ceykuṇattai varuntic coṉṉēṉ
ōṅkuvatu mēṟkāvum itupō lākum
    uttamanē kuraivākum cilli oṉṟu
āṅkuvatu ikkunaṅkal aṟintu ceytāl
    arumaiyuḷḷa pālakamum pārkkum pōru
tūṅkuvatu tokuppuala ceyyā viṭṭāl
    teṟumaṭā uḷḷuvarmam āṟuñ colvēṉ (105)

The varmas on the leg are eleven. They are as folows:

1. Decchinaikalam
2. Sundodari
3. Soottu
4. Mani bandam
5. Pacchani
6. Mehavarmam
7. Theetham
8. Kuthirai
9. Kirayel
10. Andai
11. silli

Of the 11 varmas only Silli varmam lies on one leg, the other ten lie on both the legs. Proper understanding of the various aspects concerning these varmas, the resultant ailments and prescribed measures of treatment for a recovery is a must. Presumably the author tries to describe six internal varmas. They are not mentioned in the text.



10
9
11
8
7
6
4
2
1
5
3

(5) காலில் வர்மங்கள் - 11

1. தெட்சணைக் காலம்
2. சுண்டோதறி வர்மம்
3. சூட்டு (சுட்டு) வர்மம்
4. மணிபந்த வர்மம்
5. பச்சணி வர்மம்
6. மேக வர்மம்
7. தீத வர்மம் (திலர்த வர்மம்)
8. குதிரை வர்மம் (இருதிறை)
9. கிராயெல் வர்மம் (கரி வர்மம்)
10. ஆந்தை வர்மம்
11. சில்லி வர்மம்

(5) On the leg - 11 Varmas.

1. Teṭcaṇaik Kālam
2. Cuṇṭōtaṟi Varmam
3. Cūṭṭu Varmam (Cuṭṭu)
4. Maṇipanta Varmam
5. Paccaṇi Varmam
6. Mēka Varmam
7. Tīta Varmam (Tilarta Varmam)
8. Kutirai Varmam (Irutiṟai Varmam)
9. Kirāyel Varmam (Kari Varmam)
10. Āntai Varmam
11. Cilli Varmam


1
2
3
4
5
6
7
8
9
10

(6) கையில் இடம் பெறுவன – 10 வர்மங்கள்

(நூலில் கூறப்பெறவில்லை)

1. ஆந்தை வர்மம்
2. கிராயெல் வர்மம்
3. குதிரை வர்மம்
4. மேக வர்மம்
5. தீத வர்மம்
6. சுண்டோதறி வர்மம்
7. மணிபந்த வர்மம்
8. பட்சணி வர்மம்
9. தெட்சணைக் காலம்
10. சுட்டு வர்மம்

(6) On the arm - 10 Varmas
(Not in the Text)

1. Āntai Varmam
2. Kirāyel Varmam
3. Kutirai Varmam
4. Mēka Varmam
5. Tīta Varmam
6. Cuṇṭōtaṟi Varmam
7. Maṇipanta Varmam
8. Paccaṇi Varmam
9. Teṭcaṇaik Kālam
10. Cūṭṭu Varmam

துணை நூல்கள்

1. *சுவடிகள் (எடுத்தாண்டுள்ள சுவடிகள்)*

1.	வர்மகண்டி	எண். 391	உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை - 113.
2.	வர்மக் கண்ணாடி	எண்.76	ஆசியவியல் ஆய்வு நிறுவனம், சென்னை - 41.
3.	வர்மக்கண்ணாடி	ஆர். 2435, 2436 ஆர்.5398 ஆர்.5405	அரசினர் சுவடி நூலகம், சென்னை - 5.
4.	வர்மக்கண்ணாடி	எண். 45	அண்ணா மருத்துவமனை, சென்னை - 106.
5.	வர்ம சூடாமணி	எண். 391	உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 113.
6.	வர்ம சூட்சம்	எண்.47	அண்ணா மருத்துவமனை
7.	வர்ம சூத்திரம்	ஆர். 2429 ஆர். 5406	அரசினர் சுவடி நூலகம், சென்னை- 5.
8.	வர்ம பீரங்கி	ஆர். 2430 ஆர். 5434	,, ,, ,,
9.	வர்ம பீரங்கி	எண். 86	ஆசியவியல் ஆய்வு நிறுவனம், சென்னை - 41
10.	வர்ம பீரங்கித் திறவு கோல்	ஆர். 2432 ஆர். 5433	அரசினர் சுவடி நூலகம், சென்னை - 5.
11.	வர்ம வைத்தியம்	ஆர்.2428 ஆர்.7336	,, ,, ,,

பயன்பட்ட சுவடிகள்

12.	வர்ம அடங்கல் முறை	ஆர்.2432 ஆர்.4936 ஆர். 5433	அரசிர்னர் சுவடி நூலகம், சென்னை - 5.
13.	வர்ம அளவு நூல்	ஆர்.2433, 7325	,,,,
14.	வர்ம சாத்திரம்	ஆர்.2431	,,,,
15.	வர்ம சூத்திரம்		டாக்டர் ஆ.தசரதன், ஆசியவியல் ஆய்வுநிறுவனம், சென்னை - 41.

2. நூல்கள்

வர்ம நூல்கள்

16. சித்தமருத்துவத்தில் அகத்தியர் ஒடிவுமுறிவுசாரி நிகண்டகராதி -1200, (தொகு) சூ. ராஜமணி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை-106. 1991

17. சித்த மருத்துவம்-சிறப்பு, டாக்டர் ஆர். தியாகராஜன், பழனி தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் சித்தமருத்தவ நூல் வெளியீட்டுக்குழு. 1986

18. சித்த மருத்துவத்தில் வர்மப் பரிகாரமும் சிகிச்சை முறைகளும், எஸ். இராசாமணி, தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம். 1988

19. தொடுவர்மத்திரட்டு, எஸ். சிதம்பரதாணுபிள்ளை, சித்தமகுட பிரசுரம், சென்னை - 30. 1973

20. படுவர்மத்திரட்டு, எஸ். சிதம்பரதாணுபிள்ளை, சித்தமகுட பிரசுரம், சென்னை - 30. 1970

21. போகர் அருளிச்செய்த வருமசூத்திரம் 131, டாக்டர் ஆர். தியாகராசன், தாராபுரம் சித்தவைத்திய சங்கம், தாராபுரம். 1975

22. வர்ம சூட்சம், எஸ். சிதம்பரதாணுபிள்ளை, சித்தமகுட பிரசுரம், சென்னை - 30. 1970

23. வர்மசூத்திரம், செ. ஜான்செல்வராஜ், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை - 113. 1984

24. வர்மவிதி, டாக்டர் இரா. தியாகராசன் (பதி), அருள்மிகு பழநி தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு. 1976

இலக்கிய நூல்கள்

25. கம்பராமாயணம், பாலகாண்டம், எஸ். ராஜம், 5, தம்புசெட்டித் தெரு, சென்னை - 1. 1958

26. திருமந்திரம், பகுதி1, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை - 1. 1992

27. தொல்காப்பியம்,பொருளதிகாரம், அண்ணாமலைப்பல்கலைக்கழகம். 1986

28. பட்டினப்பாலை, சாமி. சிதம்பரனார், சிவகாமி சிதம்பரனார் இலக்கிய நிலையம், சென்னை - 94. 1973

29. பதிற்றுப்பத்து, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1. 1950

30. புறப்பொருள் வெண்பாமாலை, " " சென்னை-1. 1989

31. மாவீரன் அனந்தபத்மநாபன், உதயமார்த்தாண்டன் ரவி, 5, அய்யாசாமி நகர், கிழக்குத்தாம்பரம், சென்னை - 49. 1989

3. ஆய்வேடுகள்

32. ஒடிமுறிவு சரசூத்திரம், நூல்பதிப்பும் ஆய்வும், ஜேம்ஸ் தேவகமல அருமைராஜ், தே. கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை, காரியவட்டம், கேரளம். 1988

33. வர்மகண்டியும் சூடாமணியும், (சுவடிப்பதிப்பு ஆய்வேடு) அ. அன்பெழில், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113. 1993

4. கட்டுரைகள்

34. சித்தவைத்தியத்தில் வர்மப்பரிகாரம், தேவசகாயம், இரண்டாவது உலகத் தமிழ்மாநாட்டு மலர். 1968

35. தமிழும் வர்மக்கலையும், கருத்தரங்கம் 20, வே. தருமலிங்கம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 113. 1992

36. வர்மக்கலை, பி. பொன்னப்பன், தமிழர் வாழ்வுரிமை மாநாடு சிறப்புமலர், பாட்டாளி பதிப்பகம், சென்னை - 18. 1992

37. வர்ம மருத்துவம் 1976, பி. கேசவப்பிள்ளை, தமிழர் கலைகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 113. 1983

38. வர்மம், எம். மரிய லாரென்ஸ், இந்திய மருத்துவக் கல்லூரி ஆண்டு மலர், பாளையங்கோட்டை 1974

5. ஆங்கில நூல்கள்

39. Heritage of Tamils, Siddha Medicine, Dr. S.V. Subramanian, & V.R. Madavan, International Institute of Tamil Studies, Madras- 600 113. 1983

40. History of Kerala, Vol. I., K.P. Padmanabha Menon, Asian Educational Services, New Delhi. 1982

41. Journal of Japan, Essay: Moses Thilok, Founder, Marma adi research, Martial arts Academy, Tamil Nadu.

42. The Travancore State Manual, Vol.I. V. Nagam Aiya, Asian Educational Services, New Delhi. 1989

Bibliography

1. Manuscripts (quoted Manuscripts)

1.	Varmakaṇṭi	N.391	International Institute of Tamil Studies, Madras - 113.
2.	Varmak kaṇṇāṭi	N.76	Insitute of Asian Studies, Madras-41.
3.	Varmak kaṇṇāṭi	R.2435,2436 R.5398 R.5405	Govt. Oriental Manuscripts Library, Madras-5.
4.	Varmak kaṇṇāṭi	N.45	Anna Hospital, Madras-106.
5.	Varma cūṭāmaṇi	N.391	International Institute of Tamil Studies, Madras-113.
6.	Varma cūttiram	N.47	Anna Hospital, Madras-5.
7.	Varma cūttiram	R.2429 R.5406	Govt. Oriental Manuscripts Library, Madras-5.
8.	Varma pīraṅki	R.2430 R.5434	Govt. Oriental Manuscripts Library, Madras-5.
9.	Varma pīraṅki	N.86	Institute of Asian Studies, Madras-41.
10.	Varma pīraṅkit tiṟavukōl	R.2432 R.5433	Govt. Oriental Manuscripts Library, Madras-5.
11.	Varma vaittiam	R.2428 R.7336	Govt. Oriental Manuscripts Library, Madras-5.

Refered Manuscripts

12.	Varma aṭaṅkal muṟai	R.2432 R.4936 5433	Govt. Oriental Manuscripts Library, Madras-5.
13.	Varma aḷavu nūl	R.2436, 7325	Govt. Oriental Manuscripts Library, Madras-5.
14.	Varma cāttiram	R.2431	Govt. Oriental Manuscripts Library, Madras-5.
15.	Varma cūttiram		Dr. A. Thasarathan, Institute of Asian Studies, Madras-41.

2. Books

Varma Books

16. Citta maruttuvattil Akattiyar Otimurivu cāri nikantakarāti - 1200, (Tokuppu)
Cū. Rājamani,
Intiya maruttuvam marrum Omiyopatit turai, Madras-106. 1991

17. Citta maruttuvam - Cirappu,
Dr. R. Tiyākarājan
Palani tantāyutapāni Cuvāmi tirukkōil
Citta maruttuva nūl veliyittukkulu. 1986

18. Citta maruttuvattil Varmap parikāramum cikiccai muraikalum,
S. Irācāmani, Tamilnātu Citta maruttuva vāriyam. 1988

19. Totuvarmat tirattu,
S. Citampara tānu pillai,
Citta makuta piracuram, Madras-30. 1973

20. Patuvarmat tirattu,
S. Citampara tānu pillai,
Citta makuta piracuram, Madras-30. 1970

21. Pōkar arulicceyta varuma cūttiram-131,
Dr. R. Tiyākarācan
Tārāpuram citta vaittiya cankam,
Tārāpuram. 1975

22. Varma Cūtcam,
S. Citamparatānu pillai,
Cittamakuta piracuram, Madras-30. 1970

23. Varma Cūtcam,
Ce. Jān celvarāj,
International Institute of Tamil Studies,
Madras-113. 1984

24. Varma viti,
Dr. R. Tiyākaracan (Editor),
Arulmiku Palani Tantāyutapāni Cuvāmi tirukkōyil,
Citta maruttuva nūl veliyittuk kulu. 1976

Literatures

25. Kamparāmāyaṇam, Pālakāṇṭam, S. Rājam, 5, Tampucetti teru, Madras-1. 1958

26. Tirumantiram, Pakuti.I, Caiva cittānta nūṟpatippuk kaḻakam, Madras-1. 1952

27. Tolkāppiyam, Porulatikāram, Aṇṇāmalaip Palkalaik Kaḻakam. 1986

28. Pattinap pālai, Cāmi citamparaṉār, Civakāmi Citamparaṉār ilakkiya nilaiyam, Madras- 94. 1973

29. Patiṟṟuppattu, Caiva Cittānta nūṟpatippuk Kaḻakam Madras-1. 1950

30. Puṟapporul Venpā mālai, Caiva Cittānta nūṟpatippuk Kaḻakam Madras-1. 1989

31. Māviraṉ Aṉantapatmaṉāpaṉ, ...

Utayamārttāṇṭaṉ Ravi,
5, Ayyācāmi nakar, Kiḻakkut tāmparam,
Madras-49.

3. Āyvēṭukaḷ (Thesis)

32. Oṭimuṟivu Cara cūttiram, Nūl patippum āyvum, Jēms Tēvakamala Arumai Rai. Tē., Kēralap palkalaik Kaḻakat Tamiḻt tuṟai, Kāriyāvattam, Keralam 1988

33. Varmakaṇṭiyum Cūṭāmaṇiyum (Cuvaṭip patippu āyvēṭu) A. Aṉpeḻil, Ulakat tamilārāycci niṟuvaṉam, Madras- 113. 1993

4. Katturaikal (Essays)

34. Cittavaittiyattil Varmap parikāram,
Tēvacakāyam.

35. Tamilum Varmakkalaiyum, Karuttarankam-20
Vē. Tarumalinkam,
Ulakattamilārāycci niruvanam, Madras-113. 1992

36. Varmakkalai,
Pi. Ponnappan
Tamilar Vālvurimai mānātu cirappu malar,
pāttāli patippakam, Madras-18. 1992

37. Varma maruttuvam, P. Kēcavap pillai,
Tamilar kalaikal, Ulakat tamilārāycci
niruvanam, Madras-113. 1983

38. Varmam,
M. Mariya lārens,
Intiya maruttuvak kallūri āntu malar,
Pālaiyankōttai. 1974

5. English Books

39. Heritage of Tamils, Siddha Medicine,
Dr. S.V. Subramanian & V.R. Madhavan,
International Institute of Tamil Studies,
Madras - 113. 1983

40. History of Kerala, Vol.I, K.P. Padmanabha Menon,
Asian Educational Services, New Delhi.

41. Journal of Japan Essay: Moses Tilok,
Founder, Marma adi Research, Martial
arts Academy, Tamilnadu.

42. The Travancore State Manual Vol. I,
V. Nagam Aiya, Asian Educational Services,
New Delhi. 1989

சொல்லடைவு

(எண் – பாட்டு எண்)

இணைப்பு - 1

வர்மத் தானங்கள்

1. ஒடிமுறிவுசாரி

தொகை

1. செய்யவே வர்மமது நூற்றெட் டாகும்
செயலான கண்டமஞ்சா தார மாறு
வையவே யுட்கருவி முப்பத் தாறு
வகையான புறக்கருவி யிருபத் தஞ்சு
துய்யவே மண்டலமூன்று தோஷம் மூன்று
துகையான துள்வர்ம மாற தாகும்
பையவே மானிடர்க ளறிய வேண்டி
பகருவே னிந்நூலில் பகர்ந்து பாரே.

2. பகருவேன் நூற்றெட்டின் விவரஞ் சொல்லப்
பதிப்பான கழுத்தின்மேல் முப்பத் தேழு
நுகருவேன் கழுத்தின்கீழ் மூலா தாரம்
நுணுக்கமாய் வர்மம்முப் பத்து நாலு
தகரவே புறமுதுகில் பதினா றாகும்
தப்பாது காலில்வர்மம் பதினொன் றாகும்
இகரவே கையதிலே ஈரஞ் சாகும்
எண்ணிப்பார் வர்மமது நூற்றெட் டாச்சே.

வகை - கழுத்திற்குமேல் 37

3. கேளப்பா சிரசுநடு கொண்டைக் கொல்லி
கீர்த்திபெற ஒட்டையின்கீழ்ச் சீறுங் கொல்லி
நாளப்பா நால்விரற்கீழ் பிடரிக் காலம்
நாலிறை பக்கம்மேல் முன்சுருதி வர்மம்
பாளப்பா இரண்டிறைக்கீழ் புகச்சை வர்மம்
பகராத தோரிறையில் கொழுந்துக் குற்றி
பாளப்பா செவிக்குற்றிக் காலஞ் சொல்வேன்
பிடரியி னிறைநாலில் முடிச்சு வர்மம்.

Appendix I

Varmat tāṉaṅkal

1. OṬIMUṞIVUCĀRI

Tokai

1. ceyyavē varmamatu nūṟṟeṭ ṭākum
 ceyalāṉa kaṇṭamañcā tāra māṟu
 vaiyavē yuṭkaruvi muppat tāṟu
 vakaiyāṉa puṟakkaruvi yirupat tañcu
 tuyyavē maṇṭalamūṉṟu tōṣam mūṉṟu
 tukaiyāṉa tuḻvarma māṟa tākum
 paiyavē māṉiṭarka ḷariya vēṇṭi
 pakaruvē ṉinnūlil pakarntu pārē

2. pakaruvēṉ nūṟṟeṭṭiṉ vivarañ collap
 patippāṉa kaḻuttiṉmēl muppat tēḻu
 nukaruvēṉ kaḻuttiṉkil mūlā tāram
 nuṉukkamāy varmammup pattu nālu
 takaravē puṟamutukil patiṉā ṟākum
 tappātu kālilvarmam patiṉoṉ ṟākum
 ikaravē kaiyatilē irañ cākum
 eṉṉippār varmamatu nūṟṟeṭ ṭāccē

Vakai - Kaḻuttiṟku mēl - 37 (above the neck)

3. kēḷappā ciracunatu koṇṭaik kolli
 kīrttipeṟa oṭṭaiyiṉkiḻc ciruṅ kolli
 nāḷappā nālviraṟkiḻ piṭarik kālam
 nāliṟai pakkammēl muṉcuruti varmam
 pāḷappā irantiṟaikkiḻ pukaccai varmam
 pakarāta tōriṟaiyil koḻuntuk kuṟṟi
 pāḷappā cevikkuṟṟik kālañ colvēṉ
 piṭariyi niṟaināḷil muṭiccu varmam

4. வர்மமடா கதிர்மேலே பொய்கைக் காலம்
வளமான கண்ணின்கீழ் நட்சத்திர காலம்
கர்மமடா இரண்டிறைக்கீழ்க் காம்பூரிக் காலம்
கருதுமோர் இறைவலத்தே மூர்த்தி காலம்
தர்மமடா அரையிறைக்கீழ் அண்ணான் காலம்
தக்கமுன் றிறைவலமே வெட்டு வர்மம்
கர்மமென்ற விழியருகில் மந்திர காலம்
காணுமே நெற்றிநடு பட்சி வர்மம்.

5. பட்சியென்ற தரையிறைக்கீழ்ப் பால வர்மம்
பகர்ந்தரெண்டில் மின்வெட்டிமேல் சேம வர்மம்
காட்சியென்ற யிரண்டிறைப்பக்கம் பச்சை வர்மம்
கருதுகின்ற கண்ணருகிலாங் காரி வர்மம்
சூட்சமாம் நெற்றிநடுப் புருகந் தன்னில்
துகையிரண் டிறைக்குக்கீழ் திலர்த வர்மம்
ஆட்சிபத்தில் ஒட்டுவர்மம் இரத்த வர்மம்
அமிர்தலாந்தை முன்குறுக்கி யடியி லாமே.

6. அடியான தொட்டையின்கீழ் ஏம னாகும்
அதினோர மஞ்சிறைக்குள் முன்மு டிச்சு
படியான தெட்டிறைமேல் கண்க லங்கி
பாடுகிறேன் நல்லிருப்பு அமிர்த காலம்
துடியான தொட்டையின்மேல் ஆந்தை வர்மம்
தொகையான தறுவிரற்கீழ் உதிர காலம்
வடிவான மூன்றிறைக்குள் உறக்க காலம்
வளமான காக்கோட்டைசுமை வர்ம மாகும்.

7. ஆகுமே கிளிமுகமும் மேல தாகும்
அடங்கியே கழுத்தின்மேல் முப்பத் தேழு
வேகமா யதன்விவரம் பிரித்துச் சொல்வேன்
விதமான கொண்டைக்கொல்லி யொன்ற தாகும்
வாகுமே சீறுகின்ற கொல்லி யொன்று
வளமான பிடரியொன்று சுருதி ரெண்டு
போகுமே புகச்சைரெண்டு குற்றி ரெண்டு
புகழான செவிக்குற்றி யிரண்ட தாகும்.

4. varmamatā katirmēlē poykaik kālam
valamāna kanninkil natcattirak kālam
karmamatā irantiraikkilk kāmpūrik kālam
karutumōr iraivalattē mūrttik kālam
tarmamatā araiyiraikkil annān kālam
takkamūn riraivalamē vettū varmam
karmamenra viliyarukil mantira kālam
kānumē nerrinatu patci varmam

5. patciyenra taraiyiraikkilp pāla varmam
pakarntarentil minvettimēl cēma varmam
kātciyenra yirantiraippakkam paccai varmam
karutukinra kannarukilān kāri varmam
cūtcamām nerrinatup purukan tannil
tukaiyiran tiraikkukkil tilarta varmam
ātcipattil ottuvarmam iratta varmam
amirtalāntai munkurukki yatiyi lāmē

6. atiyāna tottaiyinkil ēma nākum
atinōra mañciraikkul munmu ticcu
patiyāna tettiraimēl kanka lanki
pātukirēn nalliruppu amirta kālam
tutiyāna tottaiyinmēl āntai varmam
tokaiyāna taruvirarkil utira kālam
vativāna mūnriraikkul urakka kālam
valamāna kākkōttaicumai varma mākum

7. ākumē kilimukamum mēla tākum
atankiyē kaluttinmēl muppat tēlu
vēkamā yatanvivaram pirittuc colvēn
vitamāna kontaikkolli yonra tākum
vākumē cirukinra kolli yonru
valamāna pitariyonru curuti rentu
pōkumē pukaccairentu kurri rentu
pukalana cevikkurri yiranta tākum

8. இரண்டான முடிச்சியொன்று பொய்கை யிரண்டு
நலமான நட்சத்திரம் இரண்ட தாகும்
பண்டான காம்பூரிரெண்டு மூர்த்தி ரெண்டு
பகரண்ணான் இரண்டாகும் வெட்டு ரெண்டு
விண்டான மந்திரமாம் காலம் ரெண்டு
விதமான பட்சிவர்மம் ஒன்ற தாகும்
கண்டாயோ பாலமொன்று மின்வெட்டி ரெண்டு
கனமான சேமக்காலம் இரண்ட தாமே.

9. காலமென்ற பச்சையொன்று காரி ரெண்டு
கண்டுகொள் திலர்தவர்மம் ஒன்ற தாகும்
வாலமென்ற வொட்டுவர்மம் ஒன்ற தாகும்
வளரிரத்த மொன்றமிர்த லாந்த மொன்று
பாலமென்ற முன்குறுக்கி வர்ம மொன்று
பகருமேமம் இரண்டுமுன் முடிச்சி யொன்று
சாலமென்றகண் சுலங்கிரெண்டு நல்லிருப்பு மொன்று
தப்பாம லமிர்தகாலம் ஒன்றுண் டாமே.

10. உண்டான தாந்தைவர்மம் இரண்ட தாகும்
உதிரகாலம் இரண்டுறக்க காலம் ரெண்டு
கண்டானகாக் கோட்டைரெண்டு சுமைதான் ஒன்று
குணமான கிளிமுகமும் ஒன்ற தாகும்
மன்றான கழுத்தின்மே லெழுந்த வர்மம்
மகிழவே முப்பத்து ஏழுஞ் சொன்னேன்
பன்றான தொற்றைபதி னேழ தாகும்
பகர்ந்தஇரட்டை இருபதும்பின் வகையைக் கேளு.

கழுத்தின்கீழ் - மூலாதாரம் வரை - 34

11. வகையான கழுத்தின்கீழ் மூலா தாரம்
மட்டுறவே எழுந்தவர்மம் முப்பத்து நாலு
துகையான முப்பத்து நாலுந் தன்னைத்
தொகுப்பாகப் பிரித்துநன் றாய்ச் சூட்சம் சொல்வேன்
நகையணியுங் கழுத்தின்கீழ் கதிர்வர் மந்தான்
நலமான இரண்டிறைக்கீழ் கதிர்காம வர்மம்
பகையான நேரிறைக்கீழ் புத்திர வர்மம்
பகர்ந்ததோ ரிறைக்கீழே சத்தி வர்மம்.

8. irantāna muticciyonru poykai yirantu
 nalamāna natcattiram iranta tākum
pantāna kāmpūrirentu mūrtti rentu
 pakarannān irantākum vettu rentu
vintāna mantiramām kālam rentu
 vitamāna patcivarmam onra tākum
kantāyō pālamonru minvetti rentu
 kanamāna cēmakkālam iranta tāmē

9. kālamenra paccaiyonru kāri rentu
 kantukol tilartavarmam onra tākum
vālamenra vottuvarmam onra tākum
 valariratta monramirta lānta monru
pālamenra munkurukki varma monru
 pakarumēmam irantumun muticci yonru
cālamenrakan kalankirentu nalliruppu monru
 tappāma lamirtakālam onrun tāmē

10. untāna tāntaivarmam iranta tākum
 utirakālam iranturakkak kālam rentu
kantānakāk kōttairentu cumaitān onru
 kunamāna kilimukamum onra tākum
manrāna kaluttinmē lelunta varmam
 makilavē muppattu ēluñ connēn
panrāna torraipati nēla tākum
 pakarntairattai irupatumpin vakaiyaik kēlu

Kaluttinkil - 34 (Below the neck)

11. vakaiyāna kaluttinkil mūlā tāram
 matturavē eluntavarmam muppattu nālu
tukaiyāna muppattu nālun tannait
 tokuppākap pirittunanrāyc cūtcam colvēn
nakaiyaniyuñ kaluttinkil katirvar mantān
 nalamāna irantiraikkil katirkāma varmam
pakaiyāna nēriraikkil puttira varmam
 pakarntatō riraikkilē catti varmam

12. சத்தியென்ற காறையின்கீழ் தோளை வர்மம்
தொகுப்பான தோரிறைவலம் ஏந்தி வர்மம்
குத்தியென்ற தோர்மடக்கில் அனுமார் வர்மம்
கூம்பினிரு விரல்கீழே கொழுந்து வர்மம்
சத்தியென்ற மூவிரலின்கீழ் உறுமி வர்மம்
மார்புமுண்டெல் இருவிரல்மேல் அடைப்பு வர்மம்
சத்தியமாய் விலாமுண்டெல் இருவி ரல்கீழ்
சாற்றுகிறேன் வலியஅத்திச் சுருக்கி வர்மம்.

13. சுருக்கியின்கீ ழிருவிரலிற் சிறிய தாகும்
சொல்லுநால் விரலின்முன் சுருதி வர்மம்
வருதியென்ற நடுமார்பில் முன்க மர்ந்தான்
வாறெலும்பு நிகழ்ந்ததற்றம் பள்ளை வர்மம்
விருதிமுண்டெல் லிடையெல்லி லிடைவர் மந்தான்
விதமான தொப்புளின்மேல் அன்னக் காலம்
மருதியத்திச் சுருக்கியின்மேல் முண்டெல் வர்மம்
மகிழவே முலைமார்பில் துடிவர் மந்தான்.

14. தானென்ற இருவிரல்மேல் கொம்பு குற்றி
தப்பாது கூம்பினகம் கூம்பு வர்மம்
ஏனென்ற தொப்புளின்கீழ் மூத்திர வர்மம்
எட்டுமுனை யெல்லதிலும் வாயுக் காலம்
பானென்ற பதினாறு எல்லி லுந்தான்
பாடுகிறேன் நடுச்சுருக்கி பகர்ந்து பாரு
மானென்ற ததையடுத்து ஜடப்பிர வர்மம்
பகருமோர் இறைமேலே கிளிப்பிற வர்மம்.

15. வர்மமடா அடப்பதில்கை கெட்டி வர்மம்
மருவியே யதன்மேலே எட்டெல் வர்மம்
தர்மமடா உந்தியின்கீழ் கல்லடைய தாகும்
தப்பாது இதையடுத்து வலம்புரியு மென்ன
கர்மமடா வில்லுறுமிரெண் டிறையி லாகும்
கருதிநிறை கண்டதுதான் விசைய தாகும்
அர்ப்பமடா இதையடுத்து நாங்கு குத்தி
அரையிறைக்கீழ் அணியந்த மணியு மாகும்.

12. cattiyenra kāraiyinkil tōlai varmam
tokuppāna tōriraivalam ēnti varmam
kuttiyenra tōrmaṭakkil anumār varmam
kūmpiniru viralkilē koluntu varmam
cattiyenra mūviralinkil urumi varmam
mārpumuntel iruviralmēl aṭaippu varmam
cattiyamāy vilāmuntel iruvi ralkil
cārrukirēn valiyaattic curukki varmam

13. curukkiyinki liruviralir ciriya tākum
collunāl viralinmun curuti varmam
varutiyenra naṭumārpil munka marntān
vārelumpu nikalntatarram pallai varmam
virutimuntel liṭaiyelli liṭaivar mantān
vitamāna toppulinmēl annak kālam
marutiyattic carukkiyinmēl muntel varmam
makilavē mulaimārpil tuṭivar mantān

14. tānenra iruviralmēl kompu kurri
tappātu kūmpinakam kūmpu varmam
ēnenra toppulinkil mūttira varmam
eṭṭumunai yellatilum vāyuk kālam
pānenra patināru elli luntān
pāṭukirēn naṭuccurakki pakarntu pāru
mānenra taṭaiyaṭuttu jaṭappira varmam
pakarumōr iraimēlē kilippira varmam

15. varmamaṭā aṭappatilkai keṭṭi varmam
maruviyē yatanmēlē eṭṭel varmam
tarmamaṭā untiyinkil kallaṭaiya tākum
tappātu itaiyaṭattu valampuriyu menna
karmamaṭā villurumiren ṭiraiyi lākum
karutinirai kanṭatutān vicaiya tākum
arppamaṭā itaiyaṭuttu nāṅku kutti
araiyiraikkil aniyanta maniyu mākum

16. அணியந்த் வர்மத்தி னோடு பின்னே
யப்பனே வர்மம்முப் பத்து நாலு
கணியான கதிர்வர்மம் ஒன்ற தாகும்
கதிர்காம மொன்றுபுத்திர வர்மம் ரெண்டு
பணியான சத்தியொன்று தோளை ரெண்டு
பாங்கான ஏந்திரெண்டு அனுமார் ரெண்டு
சணியான கொமுந்தொன்று உறுமி யொன்று
சாற்றுகிறே னடைப்புவர்மம் இரண்ட தாகும்.

முதுகில் - 16

17. அப்பாகேள் முதுகில்வர்மம் பதினா றாகும்
அதன்விவரம் சொல்லுகிறேன் அறிந்து கேளு
தப்பாமல் மார்பின்கீழ் அரணி வர்மம்
சாற்றுகிறேன் நாலிறைக்கீழ் மேன்மை வர்மம்
மப்பான தேழிறைக்கீழ் விநோத வர்மம்
மகத்தான தஞ்சிறைக்கீழ் அல்லி வர்மம்
ஒப்பான தொட்டையின்கீழ் ஊணெல் வர்மம்
ஒருநான்கு இறையின்கீழ் பின்னல் வர்மம்.

18. பின்னலின் நாலிறைக்கீழ் அரச வர்மம்
பிசகாமல் அஞ்சிறைக்கீழ் அழல்வர் மந்தான்
உள்ளெல்லு நாலிறைக்கீழ் எல்மு டிச்சு
உற்றமூன் றிறைநடுவில் மூளை வர்மம்
முன்னெல்லு ஒட்டையின்கீழ் ஆணிக் காலம்
மூன்றிறையில் பூணூலும் ஒழிந்து பாரு
வன்னெல்லின் ஆறிறைக்கீழ் தப்பிற வர்மம்
மாத்திரையாம் ஒட்டையின்கீழ் மலப்பிற வர்மம்.

19. மாத்திரையாம் ஒட்டையின்கீழ் தும்மிக் காலம்
மருவியே பிணக்குவர்மம் மைந்தா சொல்வேன்
சூத்திரமாய் வர்மம்ஈ ரெட்ட தாச்சு
தொகுப்பான தரணியொன்று மேன்மை ரெண்டு
தோத்திரமாய் விநோதவர்மம் இரண்ட தாகும்
தப்பாத தல்லிரெண்டு ஊணெல் ரெண்டு
பாத்திரமாய்ப் பின்னெல்லு வர்மம் ரெண்டு
பகர்ந்தரச வர்மமிரண் டழலு மொன்றே.

16. aniyanta varmatti nōtu pinnē
yappanē varmammup pattu nālu
kaniyāna katirvarmam onra tākum
katirkāma monruputtira varmam rentu
paniyāna cattiyonru tōlai rentu
pāṅkāna ēntirentu anmār rentu
caniyāna koluntonru urumi yonru
cārrukirē nataippuvarmam iranta tākum

Mutukil - 16 (on the back)

17. appākēl mutukilvarmam patinā rākum
atanvivaram collukirēn arintu kēlu
tappāmal mārpinkil arani varmam
cārrukirēn nāliraikkil mēnmai varmam
mappāna tēliraikkil vinōta varmam
makattāna tañciraikkil alli varmam
oppāna tottaiyinkil ūnel varmam
orunānku iraiyinkil pinnal varmam

18. pinnalin nāliraikkil araca varmam
picakāmal añciraikkil alalvar mantān
ullellu nāliraikkil elmu ticcu
urramūn rirainatuvil mūlai varmam
munnellu ottaiyinkil ānik kālam
mūnriraiyil pūnūlum olintu pāru
vannellin āriraikkil tappira varmam
māttiraiyām ottaiyinkil malappira varmam.

19. māttiraiyām ottaiyinkil tummik kālam
maruviyē pinakkuvarmam maintā colvēn
cūttiramāy varmami retta tāccu
tokuppāna taraniyonru mēnmai rentu
tōttiramāy vinōtavarmam iranta tākum
tappāta tallirentu ūnel rentu
pāttiramāyp pinnellu varmam rentu
pakarntaraca varmamiran talalu monrē

காலில் - 11

20. பாரடா காலில்வர்மம் பதினொன் றாகும்
பண்பான தெட்சணைசுண்டோ தரியு மாகும்
ஆரடா பெருவிரல்மேல் சுட்டு வர்மம்
அப்பனே அஞ்சிறைமேல் மணியின் பந்தம்
கூரடா கிடையின்கீழ் பட்சணி வர்மம்
கூடுமணி பந்தங்கீழ் மேக வர்மம்
வாரடா எட்டிறைமேல் பக்கந் தன்னில்
வளமான தீதவர்மம் வருந்திப் பாரே.

21. வருந்தவே மூட்டின்கீழ் குதிரை வர்மம்
வளமான துடைநடுவில் கிராயெல் வர்மம்
அருந்தவே அதனடுவில் ஆந்தை வர்மம்
அறிந்தளட்டுச் சில்லியதில் சில்லி வர்மம்
வருந்தவே வர்மமது பதினொன் றாகும்
பண்பான தட்சணையொன்று சுண்டோதரி ரெண்டு
வருந்தவே சுட்டுவர்மம் ஒன்ற தாகும்
மணிபந்தம் ஒன்றாம்பட் சணிதா னொன்றே.

2. வர்மக் கண்ணாடி

கண்டத்திற்குமேல் - 25

1. தானான [1]தலையில்கொண்டைக் கொல்லிக் காலம்
[2]சாண்ஒட்டை யதற்குக்கீழ் சீறுங் கொல்லி
[3]ஊனான உறக்ககாலம் நாலங்கு லத்தின்கீழ்
உற்றதொரு பிடரிவர்மம் பாரு பாரு
ஏனான உச்சியிலே யிருந்து எட்டு
விரலின்கீழ் சருதிவர்மம் எனச்சொல் வார்கள்
வானான பாதமிரு விரலின் கீழே
மகிமையுள்ள[4] மூர்ச்சையென்ற காலந் தானே.

பா.வே. 1. தலைநடுவில் கொண்டைக் கொல்லி
2. ஒட்டைச்சாண் நிற்கும்கீழ்ச் சீறுங்
3. ஊனான இதற்குநாலங்குலத்தின் கீழே
4. பொச்சையென்ற; பொற்சை என்ற

Kālil - 11 (On the Leg)

20. pāraṭā kālilvarmam patiṉoṉ ṟākūm
panpāṉa teṭcaṉaicuṇṭō tariyu mākum
ārata peruviralmēl cuṭṭu varmam
appaṉē añciṟaimēl maṇiyiṉ pantam
kūraṭā kiṭaiyiṉkīḻ paṭcaṇi varmam
kūṭumaṇi·pantaṅkīḻ mēka varmam
vāraṭā eṭṭiṟaimēl pakkan taṉṉil
vaḷamāṉa tītavarmam varuntip pārē

21. varuntavē mūṭṭiṉkīḻ kutirai varmam
vaḷamāṉa tuṭainaṭuvil kirāyel varmam
aruntavē ataṉaṭuvil āntai varmam
ariṉtaeṭṭuc cilliyatil cilli varmam
varuntavē varmamatu patiṉoṉ ṟākum
paṉpāṉa taṭcaṉaiyoṉṟu cuṉṭōtari reṇṭu
varuntavē cuṭṭuvarmam oṉṟa tākum
maṇipantam oṉṟāmpaṭ caṇitā ṉoṉṟē

2. VARMAK KAṆṆĀTI

Kaṇṭattiṟkumēl - 25. (above the throat)

1. tāṉāṉa talaiyilkoṇṭaik kollik kālam
cāṉoṭṭai yataṟkukkīḻ ciruṅ kolli
ūṉāṉa uṟakkakālam· nālaṅku lattiṉkīḻ
uṟṟatoru piṭarivarmam pāru pāru
ēṉāṉa ucciyilē yiruntu eṭṭu
viraliṉkīḻ carutivarmam eṉaccol vārkaḷ
vāṉāṉa pātamiru viraliṉ kīḻē
makimaiyuḷḷa mūrccaiyeṉṟa kālan tāṉē

2. காலமாம் அதற்குஒரு இறைக்குக் கீழே
